Koviloor Digital Library



KMM0802.

Koviloor Digital Library

Koviloor Digital Library

2456

802

கம்பன் கண்ட பெண்கள்

சாண்டில்யன்

கம்பன் அடிப்பொடி
KAMBAN ADIPPODI
(SAW. GANESAN)

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

Koviloor Digital Library

முதற் பதிப்பு : அக்டோபர், 1979
Copy rights with the Author

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 10-00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 14.

Koviloor Digital Library

பதிப்புரை

"ஒருவனுடைய வெற்றிகரமான வாழ்க்கைக்கு அஸ்திவாரமாகத் திகழ்பவள் ஒரு பெண்—அதாவது அவன் மனைவி. There is a woman behind every succesful man" இது ஆங்கிலப் பழமொழி. அதைப்போல, ஒரு காவியத்தின் வெற்றிக்கு அடிநாதமாகத் திகழ்பவர்கள் அதில் வரும் பெண்கள். இதன் காரணமாகவே, கம்பன் அவனுடைய காவியத்தில் பெண்களைப்பற்றி அற்புதக் கோலமிட்டுள்ளான்.

கம்பன் எந்த நோக்குடன் இராமகாவியத்தில் பெண்களைப் பார்த்திருக்கிறான்? எப்படியெல்லாம் சித்தரித்திருக்கிறான்? காவியத்தில் வரும் பெண்பாத்திரங்களின் முக்கியத்துவம் என்ன? என்பதை எல்லாம் மிகவும் அற்புதமாக நமக்கு எடுத்துக் காட்டுகிறார் பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் உயர்திரு. சாண்டில்யன் அவர்கள். இதைப் படிப்பதால் தமிழ் மக்களுக்குப் பயன்கள் பல உண்டு. காவியத்தில் புதைந்து கிடக்கும் நுட்பங்களை ஓவியத்தில் புனைந்து காட்டி விளக்குவதைப்போல் பெண் பாத்திரங்கள் இடம்பெறும் பாடல்களை அற்புதமாக விளக்கிக் காட்டுகிறார். அவருடைய விளக்கங்களைப் படிக்கும்பொழுது, காவியம் முழுவதையும் ஊன்றிப் படிக்க வேண்டுமென்ற ஆசை பிறக்கிறது.

கம்ப இராமாயணத்துக்கு எத்தனையோ ஆய்வு நூல்கள் வந்திருக்கின்றன. என்றாலும், கம்பஇராமாயணத்தில் இடம் பெற்றுள்ள பெண்களுக்கென்று தமிழில் வரும் முதல் திறனாய்வு நூல் 'கம்பன் கண்ட பெண்கள்' என்ற இந்த நூல்தான். கம்பன் காவியத்தில் பெரிதும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் இந் நூலை—தமிழ்'வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் இந் நூலை—தமிழ் இலக்கிய உலகுக்குச் சமர்ப்பிக்கும் வாய்ப்பை வானதி பதிப்பகத்துக்கு அளித்த பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் உயர்திரு. சாண்டில்யன் அவர்களுக்கு நன்றி. இதனை வரவேற்கத் துடிக்கும் வாசகர்களுக்கும் நன்றி.

அன்புள்ள,

ஏ. திருநாவுக்கரசு

வானதி பதிப்பகம்

Koviloor Digital Library

முன்னுரை

தமிழகத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கிவரும் பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தைப் பார்க்கச் சென்றேன். அந்தச் சிறப்புநகரை 'புகார்' என்று சொல்லியிருந்தால் போதும். அல்லது 'காவிரிப்பட்டினம்' என்று சொல்லியிருக்கலாம். இரண்டிலும் 'பூம்' என்ற இணைப்புச் சொல்லை ஏன் சொன்னார்கள்? பூவின் மென்மையும் நறுமணமும் கலந்த தமிழின் இன்பத்தைக் குறிக்கச் சொன்னார்களா?

அதைப் பார்த்துவிடலாமென்று நேரில் போனேன். எதிரே பெருங்கடல் சீறி நின்றது. அத்தனை சீற்றத்திலும் ஒரு அழகையும் ஆழத்தையும் காட்டிக் கொண்டு, 'வா' என்றழைக்கவே அதில் நீராட இறங்கினேன். அலைகள் வாரி அடித்து என்னை நனைத்தன. சிறிது ஆழத்துக்குச் சென்றேன். அலைகள் என்னைப் புரட்டின, இழுத்தன. முடிந்த அளவு சென்றேன், நீராடினேன். கரைக்கு வந்து தமிழ் மண்ணில் நின்று கடலையே நோக்கினேன். அதன் ஆழம், சிந்தையைக் கவரும் விரிந்த நீர்ப்பரப்பு, புரண்டு வந்து மடிந்த திரைகள், இவையனைத்தும் மனத்தை அள்ளின. இந்தக் கடலில்தானே முத்துக்களும், ரத்தினங்களும் இருக்கின்றன என்றும் நினைத்தேன். நினைத்தென்ன? அந்த ஆழத்தில் நான் மூழ்கி முத்தெடுக்க முடியுமா?

சற்றுத் திரும்பித் தெற்கே நோக்கினேன். காவிரி கடலில் சங்கமமாகிக் கொண்டிருந்தது. கடலின் உப்பு நீரைப் போக்கிக் கொள்ளச் சங்கமத்துறையில் இறங்கினேன். இன்பமான தெள்ளிய காவிரிநீர் என்னை வேகத்துடன் இழுத்தது கடலை நோக்கி. மேலே பார்ப்பதற்கு பரம அமைதியாகத்

Koviloor Digital Library

தெரிந்த காவிரிக்கு இத்தனை வேகமா? என்று வியந்தேன். கீழே மணல் தெரிந்தது. அதிக ஆழம் இருக்காதென்று நினைத்தேன். திடீரென தலை மூழ்கிவிட்டது. சமாளித்துக் கொண்டு எழுந்தேன். சங்கமத்தின் நீரை வாயால் பருகினேன். சர்க்கரையைத் தோற்க அடிக்கும் இனிப்பு! மற்ற ஆறுகளைப் போல் உப்பங்கழியாக மாறாமல், கடல் நீரின் உப்பையும் இனிக்கச் செய்யும் காவிரியாற்றின் சக்தியை நினைத்து வியந்தேன். கரைக்கு வந்தேன்.

இரண்டையும் நோக்கினேன். ஒரு புறம் உப்பு நீரைக் கொண்ட அகாதமான கடல். அது முத்துக்களையும், வைர வைடூரியங்களையும் கர்ப்பத்தில் வைத்துக் கொண்டிருந்தது. உப்பென்று அந்த நீரை ஒதுக்க முடியவில்லை. உப்பில்லா விட்டால் உயிர் ஏது உலகில்?

இன்னொருபுறம் காவிரியின் புனல். கடலில் பாய்ந்து உப்பையும் இனிக்க வைக்கும் சக்தி வாய்ந்த இன்பப் புனல்! அதன் ஆழத்தில் உயிர் கொடுக்கும் உப்பு இல்லை. ஆனால் அது தானே நமக்கு உணவளிக்கும் பயிர்களுக்கு உயிரூட்ட வண்டல் உரம் கொண்டு வருகிறது!

இப்படி நான் வால்மீகியாகிற கடலிலும் மூழ்க முயன்றிருக்கிறேன்; கம்பனாகிற காவிரியின் வேகத்தையும் சிறப்பையும் அளக்க முயன்றிருக்கிறேன். இரண்டிலும் ஆழந் தெரியாமல் காலை விட்டுக்கொண்டிருக்கிறேன். அதன் பயன் தான் இந்த நூல். எழுதியவன் நான் என்பதை மறந்து இந்த நூலைப் படித்தால் அதிக ஏமாற்றமிருக்காது என்று நினைக்கிறேன்.

இந்த நூல், கட்டுரைத் தொடராக 'தினமணி கதிரில்' வெளிவந்த போது, வாசக அன்பர்கள் பலபடி கடிதங்கள் எழுதியதை 'கதிரி'ல் படித்தேன். 'தமிழ்நாட்டுக் கம்பன்' என்று எழுதினார்கள். 'சாண்டில்யனுக்குத் தங்கத்தால் எழுத்தாணி செய்துகொடுக்க வேண்டு' மென்று எழுதியிருந்தார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் கட்டுரைத் தொடரின் சிறப்போ என்னவோ எனக்குத் தெரியாது, தமிழ் மக்கள்

Koviloor Digital Library

என்னிடம் வைத்திருக்கும் பிரியத்துக்கு அத்தாட்சி என்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இதைத் தொடர்கட்டுரையாகப் போட ஒப்புக்கொண்ட 'தினமணி கதிர்' ஆசிரியர் திரு கே. ஆர். வாசுதேவன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எதை எழுதினாலும் அதைப் புத்தக வடிவில் சிறப்புப் பதிப்பாகக் கொண்டுவரக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் சகோதரர் 'வானதி' திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நூலுக்கு ஒரு தனியோகம் அடித்திருக்கிறது. இந்த நாட்டின் தலை சிறந்த வழக்கறிஞரும், சம்ஸ்கிருத மேதையும், சதா வால்மீகியிலேயே மூழ்கியிருப்பவரும், வழக்குகளை அலசுவது போலவே தனி நோக்குடன் வால்மீகி காவியத்தைத் துருவித் துருவி அலசக்கூடியவரும், 'உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையெல்லாம் ராமனே' என்று வாழ்க்கையை நடத்தி வருபவரும், என் தந்தைக்குச் சமானமானவருமான ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார் இந் நூலுக்கு முகவுரை எழுதியிருக்கிறார்கள். அவருக்குத் தலை வணங்கி எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

மாபெரும் தமிழ்ப்புலவர், எனது மதிப்பிற்குரிய நண்பர் புலியூர்க் கேசிகன் அவர்கள் இந்நூலுக்கு ஒரு அன்புரை எழுதித் தந்திருக்கிறார்கள். அவர் அதிற் கூறியிருக்கும் சிறப்புரைகளுக்கு நான் தகுதியோ என்னவோ தெரியாது, அவர் காட்டியிருக்கும் அன்புக்கு என்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக என்னை விடாமல் ஆதரித்துவரும் தமிழ் மக்களை 'பிழை' பொறுத்து மற்ற நூல்களைப் போலவே இதையும் ஆதரிக்க வேண்டுகிறேன். இங்கு 'பிழை' என்பது அச்சுப் பிழைகளைக் குறிக்கும். அடுத்த பதிப்பில் அவற்றை நீக்கி விடுகிறேன்.

சாண்டில்யன்,

Koviloor Digital Library

ஸ்ரீ:

ஸ்ரீ ராம ஜெயம்

முகவுரை

ஸ்ரீ சாண்டில்யன் அவர்கள் தமது ஸ்ரீமத் ராமாயணக் காப்பியத்துக்கு ஒரு சிறு முகவுரை எழுதித் தரவேண்டுமென்று என்னை நியமித்தபடி அவரது அன்புக் கட்டளையை ஏற்று இதை எழுதத் துணிந்தேன்.

வெகு வருடங்களாக ஸ்ரீமத் வால்மீகி இராமாயணத்தை தொடர்ந்து பாராயணம் செய்துகொண்டு வருகிறபடியால் அந்த மகாகாவ்யத்தில் கொஞ்சம் பரிச்சயம் உண்டு என்று சொல்லிக் கொண்டாலும், தமிழில் கொஞ்சம்கூட ஞானம் இல்லாததால், என்னுடைய நெருங்கிய நண்பர்கள் சிலபேர் கம்பராமாயணத்தையும் நன்ருய்ப் படித்து இராமாயண ஞானத்தை பரிஷ்கரித்து வைத்துக் கொள்ளும்படி சொன்ன புத்திமதியை இதுவரையில் கேளாமல் இருந்துவிட்டேன். இப்போது என் சிநேகிதருடைய ஆக்ஞையினுல் கம்பன் மனப் போக்குப்படி இராமனுடைய கதை எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்று ஓரளவு தெரிந்து கொண்டேன்.

ஸ்ரீ சாண்டில்யன் அவர்களது நூலைப் படித்ததில் வால்மீகி இராமாயணத்தினுல் எனக்கு ஏற்பட்ட ஞானத்துக்கு இந்த நூல் ஒரு மகாபாஷ்யமாக ஏற்பட்டு விட்டதை நினைத்து குதூகலிக்கிறேன். எந்த இடங்களில் கம்பன் ஆதிகாவியத்தை மாறுபடுத்தியிருக்கிருன் என்பதை நன்ருய்த் தெரிந்து கொண்டேன். 'கம்பன் கண்ட பெண்கள்' என்று எழுதியிருந்தாலும் முழு இராமாயணமே பெண்கள் கதையென்று அனுபவத்தினுல் தெரியும்.

Koviloor Digital Library

ஸ்ரீ இராமன் கதையை எழுத ஆரம்பித்த வால்மீகி பகவானுக்கு, 'ஸீதாயா: சரிதம் மகத்' என்ற முடிவு ஏற்பட்டது. ஒரு மந்தரையில்லாமல் இராமன் முடி துறந்து காட்டுக்குப் போகும்படி நேர்ந்திராது. ஸீதையினுடைய கண்டிப்பான ஆசையைப் பூர்த்தி செய்யும்படி இராமன் மாயமானை விரட்டிக் கொண்டு போனபோது மாரீசனுடைய மரண சப்தத்தை இராமனதுபோல் தெரிந்து கொண்டு ஸீதை சுடும் சொற்களால் இலக்குவனை விரட்டியிருக்கா விட்டால், இராவணன் சீதையை எடுத்துக் கொண்டு போக சௌகர்யம் ஏற்பட்டிருக்காது. அது இல்லாது போனுல் இராவணனைக் கொல்வதற்கு ஸீதாபிராட்டியின் "விஞவைரஞ்ச ரௌத்ரதா:" என்ற கொள்கைக்கும் அவள் கிளப்பின ஆட்சேபத்துக்கும் சமாதானம் ஏற்படாது.

கர தூஷண வதம் ஆனதும், அகம்பனன் இராவணனிடம் அதைப்பற்றிச் சொன்னபோது, ஸீதையைத் தூக்கிக்கொண்டு வந்து விடுவதற்கு ஒத்தாசை செய்யும்படி மாரீசனிடம் கேட்டான். அவன் அது செய்வதில் ரொம்ப இடைஞ்சல் உண்டு என்பதை எடுத்துக் காட்டியதும், சமாதானமாக அதை ஒத்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பி விட்டான். மறுபடியும் சூர்ப்பனகை கடுமையான சொற்களால் அவனை அந்தக் காரியத்தில் ஏவி விட்டாள். வால்மீகி இராமாயணத்தில் ஆரண்ய காண்டம் 33, 34 சர்க்கங்களை வாசித்து அனுபவிப்பது பெருமையாக இருக்கும். 34 வது ஸர்க்கம் சூர்ப்பனகையின் வசவு. அதைக் கேட்டதும் உடனே கிளம்பி மாரீசனை நிர்ப்பந்தித்து அழைத்துக் கொண்டுவந்து ஸீதாபஹரணத்தை இராவணன் செய்தான்.

ஆகையால், மந்தரையில்லாமல் இராம வனவாசம் இல்லை; சூர்ப்பனகையில்லாமல் ஸீதாபஹரணம் இல்லை; இவர்கள் இருவரும் இல்லாவிட்டால் இராவண வதத்துக்கும் காரணம் ஏற்படாது.

Koviloor Digital Library

இந்த இரண்டு 'உத்தம' ஸ்திரீகளைப் பற்றி வால்மீகி பின் கதைகளில் விஸ்தரிக்கவேயில்லை. இராம ராஜ்ய பரிபாலன சமயத்தில் மந்தரை இருந்தாளா? விபீஷண இராஜ்யத்தில் சூர்ப்பனகை எங்கு இருந்தாள்? என்பது போன்ற வினுக்களுக்கு விடை நமக்குக் கிடைக்கவில்லை. ஆனுல் ராம சரித்திரத்தின் முக்கிய இரண்டு கட்டங்களும் ஸ்திரீகளாலேயே இயக்கப்பட்டிருக்கின்றன.

போஜ சம்புவில், ராக்ஷஸ குலம் அழிவதற்கு மூலகாரணம் மந்தரைதான் என்று கவி சொல்லுகிருர்.

"யாமேவ ஆகு : நிசிசரகுலோன் மூலனே மூலஹேதும்" கைகேயி தேவி எவ்வளவு பிடிவாதத்துடனும் கொடுமையுடனும் நடந்துகொண்டாள் என்பது அயோத்தியா காண்டம் 12,13 ஸர்க்கங்களில் இருந்து அறியலாம். அவ்வளவு கடுமையில்லாது போனுல் இராம வனவாசம் சித்திக்காது. ஸீதை இலக்குவனிடத்தில் எவ்வளவு சாகஸத்துடனும் கடுமையுடனும் பேசினுள் என்பதை நோக்கவும். வனவாசத்தின் முக்கிய கருத்து வானரர்களுக்கு இராவண வதத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் ஒரு அவகாசம் இராமன் காட்டுக்குப் போனதால்தான் கிடைத்தது.

பட்டாபிஷேகத்தை ஏற்றுக்கொண்டு அயோத்தியிலிருந்தபடியே இராவணவதம் செய்வதற்கு சைன்னியம் திரட்டிக் கொண்டு போனுல் என்ன என்று கேட்கலாம். அதில் பல கஷ்டங்கள் உண்டு. அந்த சைனியத்துக்கு உணவு, படைக்கலங்கள், அவற்றின் உபகரணங்கள் (food, arms & ammunition) திரட்டுவது ரொம்ப கஷ்டம். இலங்கையை முற்றுகை போட படைபலமும் (strength of the army) அதிகமாகத் தேவைப்படும். இவை எல்லாவற்றிற்கும் உயர்ந்த சமாதானமாக வால்மீகியின் வானர சைனியம் ஆச்சர்யமானதாகவும் அபூர்வமானதாகவும் நேர்ந்தது. ஸ்ரீ இராமன் அவர்களை (வானர சைன்யத்தை) "ஜனேயம் ஸ்வஜனேமம" என்று கொண்டாடுகிருன். தனக்காக உயிர் கொடுத்த எல்லாக்

Koviloor Digital Library

குரங்குகளையும் உயிர்ப்பித்து உயிருடன் ஊருக்குப் போகும்படி செய்விக்க இந்திரனிடம் வரம் கேட்கிறான் (யுத்த காண்டம் 123 சர்க்கம்).

ஸ்ரீ சாண்டில்யன் அவர்களின் இந்த சுருக்கமான இராமாயணத்தைப் படித்ததில் காவியம் முழுக்கவே கம்பன் எப்படி அனுபவிக்கிறான் என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டேன். என் மாதிரி கம்பராமாயண மூலத்தை அனுபவிக்க பிராப்தம் இல்லாதவர்களுக்கு இந்த நூல் ஒரு வரப்பிரசாதம் ஆகும். இரண்டிலேயும் (கம்பன், வால்மீகி) அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்களுக்கும், இராமசரிதம் தெரியவேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கும் இதுவே ஒரு பாஷ்யம்.

சுபம்

10, ராமஸ்வாமி தெரு,
தி. நகர், சென்னை-17

ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார்

4 - 10 - 79

Koviloor Digital Library

அன்புரை

தானே நாத சொருபமாகிய மகா சக்தித்தாயின் அருளைப் பெற்று, அந்த சக்தியே உள்ளிருந்து இயக்க, கவிமழை பொழிந்து தமிழை வளப்படுத்திய பெருமை படைத்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

ஆகவே, அவன் கவிதைச் சோலை முழுவதிலுமே அழகும் இனிமையும் வளமும் கொஞ்சிக் குலவி நம்மைக் களிப்பூட்டி மகிழ்வித்து, ஒரு காவியக் கற்பனை உலகத்திலே நம் உள்ளத்தை இழுத்துச் சென்று இன்புறுத்துகின்ற, தெய்வீக சக்தியும் நிரம்பி வழிகின்றது.

இனிமை நயம், எளிமை எழில், பொருள் வளம், கற்பனைச் செறிவு, தார்மீக நினைவுகளை வலியுறுத்தல் என்னும் எல்லா வகையிலுமே கம்பநாடன் கவிச்சக்கரவர்த்தியாகவே விளங்கு கின்றான்.

'தேவர் சிறைமீட்கத் தான் சிறையிருந்த பிராட்டி'யின் கதையாதலால், தூய்மையும் செழுமையும் சிரஞ்சீவித் தன்மையும் பொருந்தி விடுகின்றன.

வான்மீகம் கம்பனிதயத்திலே படிந்து, தமிழாகச் சுரந்து பரவும்போது, அதனிடத்திலே தமிழ் மரபும் இனிமையும் கலந்து மணப்பதையும் கண்டு மகிழ்கின்றோம்.

கம்பநாடன் சோழ மகா சபையிலே சுடர்மணியாக விளங்கிய செழுமையான பெருங்கவிஞன். ஆதலால், அவன் கவிதைகளிலும், அந்த 'ராஜ கம்பீர நாதம்' ஒலித்தபடியே இருக்கிறது.

இதன்மேலும், கம்ப இராமயணத்தைக் கற்றுச் சுவைத்து, தாமும் இன்புற்றுப் பிறரையும் இன்பக் கடலிலே திளைக்கச் செய்த தமிழ்ப் பெரியார்களின் பட்டியலை நோக்கினால், அவர் களிற் பலரும் வளவாழ்வின் உற்சாக மனநிலையிலிருந்தே

Koviloor Digital Library

கம்பனை ரசித்து ரசித்து மகிழ்ந்தவர்கள் என்றும் காணுகின்றோம். இந்த வாய்ப்பு கம்பனுக்கு மட்டுமே தமிழ் நாட்டிற் கிடைத்த பெரிய வாய்ப்பாகும்.

இந்த வரிசை இப்போதும் தொடர்கின்றது. இன்னும் தொடரும் என்பதை உறுதிப் படுத்துவபோல, தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிக் காவிய நயங்களிலும் ஊறித்திளைத்த பெரும் புலமையோடு, ஆயிரமாயிரம் பக்கங்களையும் ஆர்வத்தோடு வாசகர்கள் படிக்கும்படியான சுவையோடு எழுதிவழங்கும் வல்லமையும் இணைந்த பெரியவர் திரு. சாண்டில்யன் அவர்கள், இப்போது, 'கம்ப ராமாயணத்தில் பெண்கள்' என்னும் தம்முடைய சிறந்த மதிப்பீட்டு நூலையும் தமிழுலகுக்கு வழங்குகின்றார்கள்.

மகா ஞானசாகரமாக விளங்கிய உயர்திரு. ரா. ராகவய்யங்கார் சுவாமிகள் அவர்களுக்குப் பின்னால், வால்மீகியின் வாக்கையும் கம்பன் வாக்கையும் ஒப்பிட்டு ஒப்பிட்டு, கம்பன் கவி ஏற்றத்தை நயமாக விளக்கிச் சொல்பவர், அதற்கேற்ற சர்வஞானசிலரான திரு. சாண்டில்யன் அவர்களே என்பதைச் சொல்லும் போது, அதனால் தமிழ் இலக்கியம் அடையும் பயனை நினைக்கும்போது, அவர்களை வியந்து போற்றவே மனம் முந்துகின்றது.

இராம காதையின் இரத்தினச் சுருக்கமாகவும், அதே சமயம் கம்பன் கண்ட பெண்களின் குணாதிசயங்களின் விளக்கமாகவும், இந்த நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளனர். எந்தவொரு காவியத்திற்கும் பெண்களே மூலக்களன்களாக அமைகின்றனர் என்பது உண்மையானாலும், கம்பன் காவியத்தில், இராமகாதையில், ஒவ்வொரு திருப்பத்தையும் பெண்களே உருவாக்குகின்றனர் என்பதையும் நாம் அறிந்து வியக்கின்றோம். தசரதன் தேவியரான கோசலை, சுமித்திரை, கைகேயி என்னும் மூவருடன், இராம பத்தினியாகிய சீதா பிராட்டியுமாக வரும் நால்வரும் உயர்ந்த அரசகுலப் பெண்களாவர். கூனி அரசகுல மாதருக்கு அணுக்கப்பணி செய்யும் அந்தரங்கப் பணிப்பெண். அகலிகையும் அநசூயையும் மாமுனிவர்

Koviloor Digital Library

பத்தினிகள். சபரியும் சுயம்பிரபையும் தபோதினியர். தாரை என்பவள் நிகரற்ற வாலியின் பெருந்தேவி. தாடகை, சூர்ப்ப னகை, திரிசடை ஆகியோர் அரக்கர்குல மாதர். மயன் மகளாகப் பிறந்து, இலங்கேசனின் தர்மபத்தினியாக விளங் கியவள் மண்டோதரி. வேறு வேறு பண்பாட்டிலே தோன்றிய இவர்களின் தனித்தன்மைகள் எல்லாம், இந்நூலிலே சிறப் போடு எடுத்துக் காட்டப் பெற்றுள்ள நயத்தினை, அங்கங்கே கற்றுத்தான் நாம் அநுபவிக்க வேண்டும்.

பெண்களுக்குக் கல்வி கூடாது என்னும் மூட நம்பிக்கை யைச் சாடுவதுபோல, 'பெருந்தடங்கண் பிறை நுதலார்க் கெலாம் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்' என்று பெண்களை அறிமுகப்படுத்துகின்றான் கம்பன்.

'தங்கள் நாயகனின் தெய்வம் பிறிதில் என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போலத் தூயது' என்று தூய்மையின் சிறப்புக்கு உவமை காட்டி மகிழ்கின்றான் கம்பன்.

'பிழைக்குரிய தண்டனையை அநுபவித்தபின், எவரும் அந்தப் பிழையின் பாவச் சுமையிலிருந்து விடுபட்டுத் தூய்மை யடைந்து விடுகின்றார்' என்னும் தர்மத்தின் முடிவை, விசுவா மித்திரன் வாக்கிலே வைத்து, 'நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக' என்று கோதமனிடம் கூறச் செய்கின்றான் கம்பன்.

'ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்ததால் இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' என்று சீதாராமர் காதலன் பைச் சொல்லுவதன் மூலம், காதற் காமத்திற்கே இலக்கணம் வடித்து, அத்துடன் பெண்ணின் சமநிலைக்கும் குரல் எழுப்பு கின்றான் கம்பன்.

'இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?' எனக் கேட்ட சிற்றன்னை, இடையிலே பல துயரங்களுக்கெல்லாம் விதிச் செயலால் காரணமாகியபோதும், அவளுடைய புனிதமான மனமே நிலையானது என்பதைக் காட்டுவான் போல,

Koviloor Digital Library

அயோத்தி திரும்பியதும், 'கைகயன் தனயை முந்தக் காலுறப் பணிந்து' போற்றிய இராமனின் செயலால் எடுத்துரைத்து, அவளை உள்ளபடியே உயர்த்துகின்றான் கம்பன். கணவனின் அரசபதவியிலே, அவன் அருகே அமரும் அரசமாதேவியாகிய உரிமை தனக்குள்ளது போலவே, அவன் காடேகும் போதும் அவனுடன் செல்லும் உரிமை தனக்கு உண்டென்று கூறிப் புறப்படும் சீதாப்பிராட்டியின் மேன்மையை எப்படிப் போற்றுவதென்றே தோன்றவில்லை. அவள் சிறையிருந்து பட்ட வேதனையையும் பாராட்டாமல், வெற்றிபெற்று வீரபுருடனாக நிற்கும் கணவனைக் காணும் ஆவலுடன் வந்த அவளைக் கடுமையான சொற்களால் புண்படப் பேசிய ராகவன் பேச்சிலே, ஆடவரின் மனவியல்பைக் காணும் நாம், அது கேட்டுப் பொருது திக்குளிக்கும் பிராட்டியின் தெய்வீகப் பண்பையும் தொழுது போற்றச் செய்துவிடுகின்றான் கம்பன்.

'ஏங்கி எழுந்து, அவன் பொன் தழைத்த பொருவரு மார்பினைத் தன் தழைக் கைகளால் தழுவித் தனிநின்று, அழைத்து, உயிர்த்து, உயிர் நீங்கிய மண்டோதரி' கற்பறத் தெய்வமாகவே நம் உள்ளத்தில் நிலை பெற்றுவிடுகின்றாள்! கணவன்பால் அவள் கொண்டிருந்த உயிர்க்கலப்பினை வியந்து போற்றிக் கம்பன் காட்டுகின்றான்.

இவ்வாறெல்லாம் கம்பன் காட்டும் பெண்களின் தனித் தன்மைகளை, அணியணியாக, அழகு ததும்பும் தமிழில் ஓவியப்படுத்துகின்றார் ஆசிரியர் திரு. சாண்டில்யன் அவர்கள். படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, சிந்திக்கவும், மேற்கொள்ளவும் அரிய பல தர்மங்களின் சாரமாகவும் இந்நூல் திகழ்கின்றது.

தமிழன்பர்கள் பெரும் பாக்கியசாலிகள்!

ஆசிரியர் அவர்கட்கு என் அன்பும் வணக்கமும்!

புலியூர்க் கேசிகன்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

கம்பன் அடிப்பொடி
KAMBAN ADIPPODI
(SAW. GANESAN)

கம்பன் கண்ட பெண்கள்

1. கம்பனும் நானும்

கரும்பு ரசம் போல் காவிய ரசம் பிழிந்து ''காசில் கொற்றத்து இராமன் கதை''யை காசினிக்கு அளித்த கம்பனை என்னுடன் ஒப்பிட்டுக் கொள்ள முன்வந்திருப்பதிலிருந்தே என் அவையடக்கம் உங்களுக்குப் புரிந்திருக்கும் என நம்பு கிறேன். எந்த காப்பியத்துக்கும் அவையடக்கம் முன்னால் சொல்லப்படுவது மரபு. ஆதலால் இந்த அவையடக்கத்தைக் கூறியே இந்தக் கட்டுரைக் காப்பியப் பகுதிகளை எழுத முற்படு கிறேன்.

இப்பொழுது தமிழில் எழுதும் பலர், தங்கள் எழுத்துக்கு இணை கிடையாது என்று மார்தட்டுகிறார்கள். சில வேளை களில் இது பகிரங்கமாகவும், சில வேலைகளில் சூசகமாகவும் அறிவிக்கப்படுகிறது. அத்தகைய மமகாரம் எதுவும் எனக்குக் கிடையாதாகையாலும், சிறந்த காப்பியத் துவக்கத்துக்கு அகங்கார மமகாரங்கள் விலக்கு என்ற காரணத்தாலும், எனக்கு இணையாக கம்பன் என்ற ஒரு காவியகர்த்தா முன்னு லிருந்திருக்கிறான் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்கி றேன். இது உண்மையானால் ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று பாரதியார் கொடுத் துள்ள பட்டியலில், என் பெயர் ஏன் விட்டுப் போயிருக்கிறது

Koviloor Digital Library

என்று நீங்கள் கேட்கலாம். அதற்குக் காரணம், பாரதியார் அந்தப் பாட்டை எழுதியபோது நான் எழுதத் துவங்கவில்லை யென்பதும், நான் எழுதத் துவங்குமுன்பே என் எழுத்துக்குப் பயந்து பாரதியார் கண்ணை மூடிவிட்டாரென்பதுமே தவிர வேறில்லை என்ற உண்மை, சிந்திப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

கம்பனும் நானும் ஒன்று என்ற சிறு உண்மையை, நான் குடலைப் பிடுங்கிக் காட்டினலும் சரியான ருசு இல்லாமல் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்களாதலால், அதற்கான ருசுக்களை கம்ப காவியத்திலிருந்தே கொடுத்து விடுவதுதான் நியாயம் என்ற நோக்குடன், ஆரம்பப் பகுதிகளுக்கு உங்களை அழைத்துச் செல்வது என் கடமையாகிறது. வாருங்கள், அந்தக் காவியக் கடலுக்குள் இறங்குவோம்.

வால்மீகியின் ராமாயணத்தைப் பெரும் பாற்கடலுக்கு ஒப்பிட்ட கம்பன், தன்னை ஒரு பூனைக்குச் சமானமாகக் கூறுகிறன்:

> ''ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு
> பூசை முற்றவு நக்குபு புக்கென
> ஆசை பற்றி அறைய லுற்றேன்...''

''ஒலி பொருந்திய பாற்கடலை அடைந்த பூனையானது அதை முற்றவும் நக்கிக் குடித்து விடலாமென எண்ணிய கதையாக ராமகாதையைப் பாடி விடலாமென்று நானும் மனப்பால் குடிக்கிறேன். அதைக் கண்டு உலகத்தார் நகைப்பாராயினும் ஆசையால் பாட முற்பட்டேன்'' என்று கம்பன் தனது காவிய ஆரம்பத்தில் அறிவிக்கிறன். இந்த இடத்திலேயே எங்கள் ஒற்றுமை உங்களுக்குப் புலப்பட வேண்டும். வால்மீகியின் ராமாயணம் கம்பனுக்குப் பாற்கடலானல், எனக்கு மட்டும் கம்ப காவியம் சாமானியமானதா என்ன? வால்மீகியின் அக் காவியத்தைப் பூர்ணமாகப் பருகக் கம்பனல் இயலவில்லை யென்றல், கம்ப காவியச் சுவையை முழுவதும் பருகிவிட என்னல் மட்டும் முடியுமா? ஆகவே கம்ப காவியப் பாற்கடலை

Koviloor Digital Library

நக்கிக் குடிக்க முடியாத வரையில், நானும் கம்பனைப் போல் ஒரு பூனைதானே? வால்மீகிக்குக் கம்பன் பூனையானால், கம்பனுக்கு நான் பூனை என்பது வெட்ட வெளிச்சமாகிறதல்லவா? கம்பனும் நானும், இரண்டு பேருமே பூனையாயிருக்க, எங்களுக்குள் வித்தியாசம் ஏது? முன்னாலிருந்த பூனை, பின்னால் வந்த பூனை என்று வேண்டுமானால் பிரித்துச் சொல்லலாம். வேறெந்த வேறுபாட்டையும் சொல்ல முடியாதல்லவா?

நிற்க; இன்னொரு ருசுவையும் கவனிப்போம். வால்மீகியையும் தன்னையும் இணைத்துக் கம்பன் கவிபாடுகிறான்.

வாங்கரும் பாத நான்கும்
வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும்
பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
அன்பெனும் நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்று
லென்ன யான் மொழிய லுற்றேன்''

நாட்டுப் படலத்தைத் துவங்குகையில், இப்பாட்டை எழுதிய கம்பன், ''யாராலும் கூட்டவோ குறைக்கவோ முடியாத நான்கு பாதங்களுடைய சுலோகத்தை வகுத்த வான்மீகி முனிவன், தேவரும் செவிகளாரப் பருகும்படியான தேன்போன்ற கவிதைகளால் ராமாயணத்தைப் பாடினான். அப்பேர்ப்பட்ட காவியத்தில் வரும் கோசல நாட்டை மூங்கையான் (ஊமையன்) பேசுவது போல் நானும் பேசலுற்றேன்'' என்று வால்மீகி, முன்பு தன்னை ஊமையாகவும், தன் கவிதைகளை ஊமையின் உளறலுக்கு இணையாகவும் கூறுகிறான்.

உளறல் சம்பந்தப்பட்ட வரையில் கம்பன் எனக்கு உறை போடக் காணாதவன் என்றாலும், போனால் போகிறதென்று கம்பனை என்னுடன் சேர்த்துக் கொள்கிறேன். இந்த இரண்

Koviloor Digital Library

டாவது ருசு உங்களுக்கு மிகவும் பிடித்திருக்குமென்று நினைக்கிறேன்.

இது மட்டுமல்ல.

''பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ''

என்று கம்பன் கேட்கிறான். ''பைத்தியக்காரன், அறிவில்லாத பேதை, உலகத்தை மறந்த கடவுள் பக்தன், இவர்கள் சொல்லியவற்றில் குண தோஷங்களை ஆராய்தல் பைத்தியக்காரத்தனமாகும்'' என்று திட்டமாக அறிவிக்கிறான் கம்பன். இந்தக் கட்டுரைத் தொடருக்கும் அந்தத் திட்டம் பொருந்தும்.

மேலும் எங்களுக்குள் உள்ள இன்னொரு பெரிய ஒற்றுமையையும் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. கம்பன் ராமாயணம் முழுவதுமே எழுதியிருக்க, அவன் கண்ட பெண்களைப் பற்றி மாத்திரம் நான் எழுதுவானேன் என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம். நான் பெண்களைப் பற்றிய வர்ணனைகளை அளவுக்கு அதிகமாக எழுதுவதாகவும், இன்பச் சுவை என் எழுத்தில் அதிகமிருப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டு என்மீது இருக்கிறது. இது தவிர, இன்பரசத்தைத் தூக்கி எழுதுவதாலேயே நான் பிராபல்யமடைந்து இருப்பதாக, ஒரு பெரிய விமர்சகரும் சமீபத்தில் எழுதியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டு கம்பன்மீதும் உண்டு. கம்பனைக் கண்டித்து ஒருகூட்டமே தமிழகத்தில் எழுந்து, அவன் கவிதை பற்றிக் கண்டன நூல்களையும் வெளியிட்டது. இங்குமட்டுமல்ல அத்தகைய கண்டனம் ஏற்பட்டிருப்பது; வடநாட்டில் இந்தியிலும் இப்படியொரு கண்டன நூல் சமீபத்தில் வெளிவந்திருக்கிறது. அதில் கம்பன் எழுதிய பெண் வர்ணனைப் பகுதிகள் கண்டபடி விளாசப்பட்டிருக்கின்றன.

கம்பன் இறந்து விட்டதால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அவன் பதில் சொல்ல முடியுவில்லை. நான் இன்னும் உயிருடன்

Koviloor Digital Library

இருப்பதால் இதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கம்பன் காவிய ரசத்தை, காவியப் பெண்களை உங்கள் கண் முன்பு கொண்டு நிறுத்த முற்பட்டிருக்கிறேன்.

பெண்களில்லையேல் காவியம் இல்லை. சீதையில்லையேல் ராமாயணமில்லை. திரௌபதியில்லையேல் மகாபாரதம் இல்லை. தமயந்தியில்லையேல் நைடதமில்லை. கண்ணகியில்லையேல் சிலப்பதிகாரமில்லை. மணிமேகலை யில்லையேல் மணிமேகலையேயில்லை. இப்படி ஒவ்வொரு காவியத்துக்கும் அஸ்திவாரமாகப் பெண்ணொருத்தி நிற்கிருள்.

ராம காவியத்தைப்பற்றி ''ஸீதாயா: சரிதம் மகத்''- இது சீதையினுடைய பெருங்கதை என்று வால்மீகி சொல்கிருர். ராமாயணம் என்ற பெயருக்குப் பொருள் 'ராமகதை' என்பதல்ல, ரமாயா: (மகாலட்சுமியினுடைய) அயனம்: கதை, அதாவது பிராட்டியின் கதை என்று வைணவ சமயாச்சாரியர்கள் கூறுகிருர்கள். "ராமாயணம் சிறையிருந்தவள் ஏற்றத்தைச் சொல்லுகிறது, அதாவது தேவர் சிறை மீட்க எவள் சிறையிருந்தாளோ அந்தக் கற்புக்கரசியின் கதையைச் சொல்லுகிறது'' என்று, ஸ்ரீவசனபூஷணம் என்ற வைணவ சமய நூலும் கூறும்.

ஆகவே, பெண்களைப் பற்றி எழுதினுலே காவியத்தைப் பற்றி எழுதியதாகும். இதன் காரணமாகத்தான் கம்பன் எந்த நோக்குடன் இராமகாவியத்தில் பெண்களைப் பார்த்திருக்கிருன் என்பதை விவரிக்க முன் வந்தேன். ''எதற்காகக் காவியங்களையும், புராணங்களையும் வரலாறுகளையும் எழுத வேண்டும்? பழைய குப்பைகளை ஏன் கிளற வேண்டும்? எங்களைப்போல் சமுதாய சீர்திருத்தக் கதைகளை எழுதி உலகத்தை உய்விக்கலாமே'' என்று நவீன கிரந்த கர்த்தாக்கள் கூவுகிருர்கள். பழைய குப்பைகளுக்குள் வைர வைடூரியங்கள் புதைந்து கிடக்கின்றன. அதைக் கிளறுவதில் பலத்த லாபமிருக்கிறது. ஆகவே, இக்கட்டுரைத் தொடரை,

Koviloor Digital Library
2456

குப்பைமேட்டைக் கொண்டே துவங்குவோம். வாருங்கள் கோசல நாட்டுக் குப்பைமேடு நோக்கிச் செல்லுவோம். அதோ நமக்கு முன்பு அந்தக் குப்பை மேட்டில் கோழி யொன்று நிற்கிறது. சும்மாவா நிற்கிறது? இல்லையில்லை, குப்பையைக் கிளறவும் தொடங்கி விட்டதே. அங்கு என்ன தான் இருக்கும்?

2. பெருமையும் சிறுமையும்

கவியின் பார்வைக்கும் சாதாரண மனிதன் பார்வைக்கும் வித்தியாசம் நிரம்ப உண்டு. சாதாரண மனிதன் பார்வை பொருளற்ற பார்வை. கவியின் பார்வையில் பொருள் உண்டு. மற்றவர் கண் பாயாத இடங்களில் அவன் கண் பாய்கிறது. மற்றவர் கண்கள் பார்க்க முடியாதவற்றை அவன் கண்கள் பார்க்கின்றன. மற்றவர்கள் அசட்டை செய்து ஒதுக்கும் இடங்களில், கவி பெரும் உண்மைகளைக் காண்கிறான்.

உதாரணமாக, ஒரு நாட்டு வர்ணனையென்றால், அதன் சிறப்பைச் சொல்வதென்றால், சாதாரணக் கண்கள் மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் பார்க்கும். ஆனால் கவியின் கண்கள் சிறிய விஷயங்களிலிருந்து, நாம் அசட்டை செய்து ஒதுக்கும் இடங்களிலிருந்து பெரிய உண்மைகளை விளக்கும் சக்தி வாய்ந்தவை. அந்த சக்தியால்தான் யாரும் நிராகரிக்கக்கூடிய குப்பைமேட்டைக் கம்பன் ஆராய்கிறான் அதன்மூலம் ஒரு நாட்டின் வளப்பத்தையும், அந்நாட்டுப் பெண்களின் செல்வத்தையும், அவர்கள் உள்ளத்தையும் விளக்குகிறான்.

கோசல நாட்டுக் குப்பைமேட்டுக்கு நம்மை அழைத்துச் செல்லும் கவி, அதைக் கண்டு வியக்கிறான். அந்தக் குப்பை மேட்டின்மீது ஒரு சேவற்கோழி நிற்கிறது. சும்மா நிற்கவில்லை அது. தன் கால்களால் குப்பையைக் கிளறவும் செய்கிறது.

Koviloor Digital Library

அந்தக் குப்பையிலிருந்து வருவது குப்பையல்ல; ஒளி பொருந்திய ரத்தினங்கள் வருகின்றன. அந்த ரத்தினங்களைக் கவி நமது கண்ணுக்கு மட்டும் காட்டவில்லை; குப்பை மேட்டிலிருந்து சிறிது தூரத்திலிருந்த மரங்கள்மீது உட்கார்ந்திருக்கும் குருவிகளின் கண்ணுக்கும் காட்டுகின்றான்.

அப்பொழுது கதிரவன் உதித்த நேரம். கதிரவன் கிரணங்களில் அந்தரத்தினங்கள் பளீரெனப் பிரகாசிக்கின்றன. அதைக் கண்ட குருவிகள் அந்த ரத்தினங்களை மின்மினிப் பூச்சிகள் என்று நினைத்து, ''இவை நம் குஞ்சுகளுக்கு ஆகாரமாகக் கூடும்'' என்று குப்பை மேட்டின்மீது ஜிவ்வென்று பாய்ந்து வருகின்றன. அந்த ரத்தினங்களைக் கொத்தி எடுத்துக்கொண்டு போய்த் தங்கள் கூடுகளில் சேர்க்கின்றன. இதைத்தான் சொல்லுகிறான் கம்பன்:

சூட்டுடைத்தலைச் செந்நிற வாரணம்
தாட்டுணைக் குடையும் தகைசால்மணி
மேட்டிமைப் பன மின்மினி யாமென
கூட்டின் உய்க்கும் குரீஇயின் குழாம்அரோ.''

உச்சிக் கொண்டையைக் கொண்ட செந்நிறக் கோழி, தாள் துணை (தனது கால்களால்) குடைந்ததால், நல்ல மணிகளாகிய ரத்தினங்கள் குப்பை மேட்டில் வெளிப்பட்டதால், குருவிகள் அவற்றை மின்மினியெனக் கருதித் தங்கள் கூட்டுக்குள் கொண்டு சேர்க்கும். அரோ! - என்ன ஆச்சரியம் என்று கோசல நாட்டுச் சிறப்பைக் கண்டு கம்பன் வியக்கிறான்.

இந்தப் பாட்டைக் கேட்டதும் பலருக்குச் சந்தேகம் வரும். குப்பை மேட்டிலாவது மாணிக்கங்கள் கிடப்பதாவது என்று சர்ச்சை வரும் என்பதும், தமிழ் நாட்டில் கவி ரசனையைவிட வீண் சர்ச்சை அதிகமென்பதும் கம்பனுக்குத் தெரியும். ஆகையால் அவன் முத்தும் மாணிக்கமும் மற்ற விலையுயர்ந்த மணிகளும் குப்பை மேட்டுக்குவரும் காரணத்தையும் கூறுகின்றான் நகரப் படலத்தில்,

Koviloor Digital Library

அந்நாட்டு மகளிர் பந்தாடுவார்கள் தங்கள் இல்லங்களில். அப்படிப் பந்தாடும்பொழுது அவர்களின் உடல் அதிர்ச்சியால் அவர்கள் ஆபரணங்களிலுள்ள முத்துக்கள் அவர்களிடையே சிந்தும். அந்த முத்துக்களைப் பணிப் பெண்கள் பெருக்கிக் குப்பையாகச் சேர்ப்பார்கள். அவை சந்திரன் ஒளியையும் மிஞ்சும்.

பந்துகள் மடந்தையர் பயிற்று வாரிடை
சிந்துவ முத்தினம் அவை திரட்டுவார்
அந்தமில் சிலதியர் ஆற்று குப்பைகள்
சந்திர னொளிகெடத் தழைப்ப தண்ணிலா

இப்படிக் குவிந்த முத்துக்குப்பை வெளியே மேடு சேர்க்கப் படும். முத்து, ரத்தின, வைரவைடுரியங்களையும் அலட்சியம் செய்யும் செல்வம் கோசல நாட்டு பெண்களிடம் திரண்டு கிடந்ததை இங்குக் கம்பன் குறிப்பிடுகிறான்.

இந்தக் கவிக்கூற்று சிறிது மிகைப்பட்டதாகத் தெரிய லாம். ஆனால் பழைய சங்ககால மரபையொட்டியே இந்தக் கவிதைகளை இயற்றுகிறான் கம்பன். அவன்கண்கள் பின்னோக்கிச் சென்று சங்ககாலப் பெண்கள் நிலையைப் பார்க்கின்றன. இரண்டு காட்சிகள் அவன் கண் முன்பு தோன்றுகின்றன.

அதோ தமிழகத்தின் கடல் வாயிலான புகார் நகரம் தோன்றுகிறது. அங்கு தெரிகிறது ஒரு பெரிய வீடு. அதன் பரந்த முற்றமாகிய முன்னிடத்தில் நெல் பரவிக்கிடக்கின்றது உலருவதற்காக. அதைச் சில கோழிகள் வந்து கொத்தித் தின்கின்றன. அந்த வீட்டு முகப்பில் நின்ற பெண் அதைப் பார்க்கிறாள். கோழியை விரட்டி நெல்லைக் காக்க அக்கம் பக்கம் பார்க்கிறாள், ஏதாவதொன்றைக் கையில் எடுக்க. எதுவும் கிடைக்காது போகவே தனது காதிலிருந்த பொன்னால் செய்த மகரக் குழைகளை எடுத்துக் கோழிகள்மீது வீசுகிறாள். இப்படிப் பொன்னைவிட நெல்லை அதிகமாக மதித்த புகாரின் மடந்தை யரைப் பற்றிப் 'பட்டினப் பாலை'யில் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார் இந்தக் கதையை.

Koviloor Digital Library

இதனுல் பொன்னைப் பெரும் பொருளாக மதிக்காமல் வாழ்ந்த தமிழ்ப் பெண்களின் சிறப்பைச் சுட்டிக் காட்டும் காட்சி கம்பன் கண்களில் எழுந்தது.

அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளிர் உணங்குணுக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை.

மற்ருேர் இடம். சிற்பத்துக்குப் பெயர்போன மாமல்ல புரம். மாமல்லன் தோன்றுவதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னுல், சங்க காலத்தில் அலைகள் புரளும் அழகிய கடலை அடுத்திருந்ததால், இள மடந்தையர் புனலாடி மகிழ வரும் இடம். அந்தக் கடலிலே இள மங்கையர் பலர் கடலாடி ஒருவர் மீது ஒருவர் நீரை வாரியிரைத்து விளையாடுகிருர்கள். பிறகு களைத்துச் சிரித்துக் கரையேறுகிருர்கள். நனைந்த உடைகள் உடலில் ஒட்டி அவர்கள் மேனி அழகுகளை அளவுக்கு மீறியே புலப்படுத்துகின்றன. அந்த நிலையில் கரையேறிச் செல்லும் அவர்களில், சிலருடைய காதிலிருக்கும் பொன்னுல் செய்த மகரக்குழைகள் கழன்று கீழே விழுந்து விடுகின்றன.

அவற்றைச் சிறிதும் மதியாமல் அந்த மடந்தையர் இல்லம் விரைகிருர்கள். ஆனுல், அவற்றைச் சற்று தூரத்தில் மரக்கிளை களில் உட்கார்ந்துள்ள சிச்சிலிப் பறவைகள் பார்க்கின்றன. அந்த மகரக் குழைகள் காலை வெய்யிலில் பளபளப்பதைப் பார்த்து, அவற்றை மின்மினி இரையென மதித்து, அந்தக் குழைகளை எடுத்துக்கொண்டு போய்க் கடலருகேயுள்ள அந்தணர் வேள்வித் தூண்கள் மீது வைத்துக்கொண்டு கொத்திப் பார்க்கின்றன.

இந்த அற்புதக் காட்சியை, கடலாடு காதையை, செல்வத் தின் மிகுதியை, மிகுதியால் ஏற்பட்ட அலட்சியத்தை உருத்திரங்கண்ணனுர் 'பெரும் பாணுற்றுப்படை'யில் தோற்று விக்கிருர்.

Koviloor Digital Library

வண்டலாய மொடு உண்துறைத் தலை
புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிசிரல் இரைசெத் தெளிந்தென...
வேள்வித் தூணத்தசையவனர்...

இந்த இரண்டு காட்சிகளிலும் சொல்லப்பட்ட தமிழகத்தின் செல்வச்சிறப்பை, சங்க கால மரபையொட்டி, சேவற்கோழியையும் கோசலநாட்டுக் குப்பை மேட்டையும் உவமை காட்டிக் கூறுகிறுன் கம்பன். தமிழர் மரபு தவருத கவியாதலால், அந்த மரபையும் பண்பாட்டையும் ஒட்டியே இந்தக் காவியத்தையும் அவன் இயற்றியிருக்கிறுன். ஆகவே எந்த வான்மீகியின் காவியத்தைப் பாற்கடலுக்கு ஒப்பிட்டானே, அந்தக் காவியத்திலிருந்து கூடப் பல இடங்களில் மாறுபடுகிறுன் கம்பன். அந்தந்த இடங்கள் வரும்போது அவற்றைக் கவனிப்போம்.

இங்கு நாம் முதன் முதலாகக் கவனிக்கவேண்டியது கோசல நாட்டுப் பெண்கள் மூலம் அந் நாட்டுச் செல்வச் சிறப்பையும் கலைச்சிறப்பையும் கற்புச் சிறப்பையும் எப்படி நமக்கு கம்பன் காட்டுகிறுன் என்பதுதான். அந்த நாட்டுப் பெண்களின் ஆபரணங்களிலிருந்து உதிரும் முத்துக்களும் இரத்தினங்களும் குப்பைமேடு சென்றதைக் குறிப்பிட்டு அந் நாட்டுச் செல்வச் சிறப்பைக் காட்டினுன். அவன்காப்பியத்தின் ஆரம்பமே பெண்களின் கற்பு நிலையை வைத்து ஆரம்பிக்கப்படுகிறது.

காப்பியத்தின் முதற் பாட்டிலேயே அவன் அந் நாட்டுப் பெண்களின் நெறியைச் சுட்டியே காவியத்தைத் துவங்குகிறுன். ஆற்றுப் படலத்தைப் பாட முற்பட்டதும் :

ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ஏனும்
பூசலம்பு நெறியின் புறஞ் செலாக்
கோச லம்புனை ஆற்றணிக் கூறுவாம்

Koviloor Digital Library

ஆசலம்புரி - குற்றத்தைப் புரிகின்ற, ஐம்பொறி வாளியும் - ஆடவர்களின் பஞ்ச இந்திரியங்களும், காசுமாலே புரளுகின்ற மார்பகத்தையுடைய கோசல நாட்டுப் பெண்களுடைய கண் எனும் பூசலம்பு (போரிடும் அம்புகளாகிற கண்கள்) முன்பு நிற்க மாட்டா. ஏனென்ருல் கோசல நாடு நெறியிலிருந்து புறஞ்செலாத பெண்களேயுடையது என்று கம்பன் அப் பெண்கள் கற்பு நெறியை விவரிக்கிருன்.

குற்றத்தைப் புரிகின்ற விட புருஷர்கள் வம்பு செய்ய எண்ணிக் கோசல நாட்டுப் பெண்களேப் பார்த்தால், அந்தப் பெண்களின் சீற்றமுள்ள கண்கள் அம்புகளேப் போல் போருக்கு முன்னிற்கும். அவற்றைக் காணும் விட புருஷர்கள் அஞ்சி ஓட வேண்டியதுதான். ஏனென்ருல், அந்நாடு நெறியின் புறஞ் செலாக் கோசலம். அறவழியினின்று மாருத நாடு. கற்பு டைய அந்நாட்டுப் பெண்களின் பார்வையே நெருப்பு.

'சீதாயா: சரிதம் மகத்' என்று சீதையின் கற்புச் சிறப்பை முக்கியமாக வால்மீகி ராமாயணம் துவங்கியது போல், கம்பனும் கோசல நாட்டுப் பெண்களின் கற்பு நெறியை வைத்தே காவியத்தைத் துவங்குகிருன். அப்படித்துவங்கப் பட்ட காவியத்தில் மிக அழகிய பெண்களே நமது கண்முன்பு கொண்டுநிறுத்துகிருன்:

"வேளே வென்ற விழிச்சியர் வெம்முலே
ஆளே நின்று முனிந்திடும்..."

அந்நாட்டு மருதநிலத்துப் பெண்கள் தமது விழிகளால் வேளே அதாவது மன்மதனேயும், வென்றவர். அவர்கள் மார்பகமோ ஆளேநின்று முனிந்திடும் - வீரர்களுக்கு எதிராக முறைத்து நின்று அவர்களேத் தலே குனியச் செய்யும் - என்று அந் நாட்டு அழகிகளின் கண் சிறப்பையும் மார்பின் சிறப்பையும் கவி வலி யுறுத்துகிருன்.

அந்நாட்டுத் தோகை மஞ்ஞைகள் - ஆண் மயில்கள் - பெண்களின் நடையழகைக் கண்டு அவர்களேப் பெண்மயில்

Koviloor Digital Library

களௌன நினைத்துத் தொடர்ந்து சென்றன. அந்தப் பெண்களின் கற்பினுல் பருவ மழைகள் ஒழுங்காகப் பெய்தன. நடனசாலையில் சில மாதர்கள் ஆடுவார்கள். அவர்கள் கண்கள் காமுகர் நெஞ்சங்களைப் பிளக்கும். அதனுல் காமுகர்கள் நாளுக்கு நாள் மனம் உருகி அந்தப் பெண்களின் இடைகளைப் போலத் தேய்ந்து போவார்கள்.

இப்படி உடலழகும் உள்ளத்தழகும் பொருந்திய அந்நாட்டு மாதர்களுக்குப் பொருட் செல்வம் மட்டுமின்றி கல்விச் செல்வமும் சேர்ந்திருந்தது. கல்வியும் செல்வமும் சேர்ந்திருந்ததால் அந்தப் பெண்கள் வெளிநாடுகளிலிருந்து பயணத்தால் வருந்தி வந்தவர்களுக்கு விருந்து படைத்தார்கள்; தானம் செய்தார்கள்.

பெருந்தடங்கண் பிறை நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்து வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.

பெரிய விழிகளுடைய அப் பெண்களுக்குச் செல்வம் கல்வி இரண்டுமே பொருந்தி இருந்ததால், வருந்தி வந்தவர்க்குத் தானம் கொடுப்பதும் விருந்தளிப்பதுமன்றி வேறென்ன நடக்கும்? என்று வியக்கின்ருன் கம்பநாடன்.

இப்படி எல்லாவிதத்திலும் பெருமையடைந்த அந்தநாட்டில் சிறுமையென்பதே கிடையாதா? இருக்கிறது. ஒரே ஒரு சிறுமை என்கிருன் கவி. அது என்ன?

'சிறிய மங்கையர் தேயும்
மருங்குலே'

அந்நாட்டில் சிறுமை என்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அந்த நாட்டுப் பெண்களின் இடை.

Koviloor Digital Library

3. யாசிக்க வந்த எமன்

விம்மிய அழகினுலும் விழுமிய செல்வத்தாலும் விலகாத கற்பினுலும் விவரிக்க இயலாத பெருமையையும், சிறுத்த இடையொன்ருலேயே சிறுமையையும் எல்லாவற்ருலும் திரண்ட அழகையே கோசலநாட்டுக்கு வழங்கிய கம்பன், அழகுக்கு அழகு செய்வது எப்படி என்று சிந்தித்திருக்கிருன். 'எந்த அழகிய முகத்துக்கும் பொட்டொன்று இல்லாவிட்டால் பொலிவிருக்காது, 'எந்த அழகிய கழுத்துக்கும் மங்கலக் கயிறு இல்லாவிட்டால் மஞ்சள் இருக்காது, மங்கலமும் இருக்காது?' என்று எண்ணிய கவி, கோசல நாட்டுக்குப் பொட்டும் இடுகிருன், மங்கல நாணையும் அணிவிக்கிருன். அயோத்தியை வர்ணிக்கும்போது 'நில மகள் முகமோ, திலகமோ, கண்ணே, நிறைநெடு மங்கல நாணே, முலேமேல் புரளும் ஆரமோ, உயிரின் இருக்கையோ' என்று கூறி, 'இப்படி இருந்தது அந்தக் கோசல நாட்டுத் தலேநகர்' என்று கவியாபரணம் சூட்டுகிருன் கம்பன்.

இத்தனே உவமைகளே அயோத்திக்குக் குவித்த கம்பன் 'உயிரின் இருக்கையோ?' என்று ஏன் ஒரு விந்தை உவமையையும் சொல்லுகிருன்? உயிரில்லாவிட்டால் அது ஊராகுமா என்று நாம் கேட்கத் தவறமாட்டோமாகையால், அதில் இன்னெரு உவமையையும் சேர்த்து 'வானேர் உலகின் மேல் உலகோ?' தேவர்களின் உலகத்துக்கு மேலேயுள்ள வைகுண் டமோ என்றும் விவரிக்கிருன். எல்லா உயிர்களுக்கும் யார் ஆதாரமோ, பிரளயத்தில் தன் கர்ப்பத்தில் எல்லா உயிர் களேயும் வைத்துக் காப்பவன் யாரோ, அந்த பகவான், ராமனுக உறைவதால், 'உயிரின் இருக்கையோ' என்று அம் மாநகரை நினேத்து வியக்கிருள் கம்பன்.

அயோத்திதான் அந்த உயிர் இருக்கும் இடம் என்பதை கம்பன் மட்டும் அறிந்திருந்தால், அவனுக்கு முன்பு மூல காவியம் எழுதிய வால்மீகி மட்டும் அறிந்திருந்தால், இந்தக்

Koviloor Digital Library

கதை மேலே ஓடியிருக்காது. அதை ஓர் எமனும் அறிந்து கொண்டான். உயிரைத் தட்டிக் கொண்டு போக, அந்த எமனும் அயோத்திக்குள் ஒரு நாள் நுழைந்தான்.

அவன் பெயர் விசுவாமித்திரன். விடாப்பிடியால் பிரும்ம ரிஷிப் பட்டத்தை அடைந்தவன். 'அந்ய மிந்திரம் கரிஷ்யாமி.' இன்னொரு இந்திரனையும் படைப்பேன் என்று கோபித்து திரிசங்கு மன்னன் ஒருவனுக்காகவே இன்னொரு சொர்க்க லோகத்தையும் படைத்தவன். இப்பேர்ப்பட்டவன் உயிரை நாடி உலகத்தின் உய்வை நாடி அயோத்தியில் தசரதன் சிங்காதனத்திலிருந்த போது அவன் அவைக்குள் நுழைந்தான்.

விசுவாமித்திர முனிவரைக் கண்ட தசரதன் அவர் வந்திருக்கும் காரணத்தை அறியாமல் பூரித்துப் போனான். "பிரும்மரிஷிப் பட்டம் பெற்ற நீர் இங்கு எழுந்தருளியதன் காரணம் என்ன? என் நல்வினையோ? இருக்காது. அத்தனை நற்கருமங்கள் நான் செய்யவில்லை. என் முன்னோர் செய்த தவமாயிருக்கும்" என்று கூறி வணங்கினான் தசரதன்.

விசுவாமித்திரன் பெருமகிழ்ச்சி கொண்டான். உடனே வந்த காரணத்தைச் சொல்லாமல், தசரதனை வானளாவப் புகழ ஆரம்பித்தான். "தசரதா! முனிவர்களாகிய எங்களுக்கும் தேவர்களுக்கும் கஷ்டம் வந்தால் நாங்கள் சிவபிரானிடம் செல்வோம். அங்கு ஏதும் நடக்காவிட்டால் விஷ்ணுவிடம் போவோம். அங்கும் பயனில்லாவிட்டால் பிரமனிடம் வருவோம். அதுவும் பலிக்கவில்லை யென்றால் இந்திரனிடம் வருவோம். எங்கும் பலிக்கவில்லை யென்றால், அயோத்திமா நகரைத்தவிர வேறெங்கு போவோம்?" என்றான்.

தான் எத்தனை உயர்வு என்பதைப் புரிந்துகொண்ட தசரதன் புகழ்ச்சியால் நிலை தடுமாறி, "இனிச் செய்வதருள்க; இனி நான் செய்ய வேண்டியதைப் பணியுங்கள்" என்று பணிவுடன் வினவினான். ஆக, விசுவாமித்திரன் யாசித்தான். எப்படி யாசித்தான்?

எமன் ஒருவன் வீட்டுக்கு வந்தான். 'உன்னிடம் ஒரு பொருளை யாசிக்க வந்தேன்' என்று சொன்னான். எது வேண்டு

Koviloor Digital Library

மானாலும் கேளுங்கள் தருகிறேன்' என்றான் வீட்டுக்குடைய வன். 'அப்படியானால் தயைசெய்து உன் உயிரைக் கொடு' என்று எமன் கேட்டானானால் எப்படி இருக்கும்? அப்படி யாசித்தான் அந்த விசுவாமித்திரன் தசரதனிடம்.

"தசரதா! காட்டில் நான் இயற்றும் யாகம் ஒன்றுளது. தவத்தை எப்படித் தனிமனிதனுடைய காமமும் குரோதமும் அழிக்குமோ அப்படி அரக்கர்கள் அத் தவத்தை அழிக்க வருகிறார்கள். அவர்களைப் போரிட்டுக் காக்க வேண்டும்" என்று கேட்டான் விசுவாமித்திரன்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என, தசரதன் வினவினான்.

"செருமுகத்துக் காத்தியென நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல், ஒருவனைத் தந்திதியென உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்."

"தசரதா! வேறெதுவும் வேண்டாம். அந்த அரக்கர் களுடன் போரிட்டு எங்கள் யாகத்தைக் காக்குமாறு உத்தர விட்டு, உன் மைந்தர் நால்வரில் கறுப்பாயிருப்பானே ஒருவன் அவனை என்னுடன் அனுப்பு" என்று உயிரை யாசிக்கும் கொடிய யமனைப் போல விசுவாமித்திரன், தசரதன் மனம் நொடித்துப் போகும்படி கேட்டான்.

இந்த விபரீத யாசகத்தைக் கேட்ட தசரதன் இடிந்து போனான்.

"கண்ணிலான் பெற்றிழந்தானென உழந்தான் கடுந் துயரம்..." கண்ணில்லாத குருடனுக்குக் கண் கிடைத்து அது மீண்டும் போய் விட்டது போன்ற உணர்ச்சியைத் தசரதன் அடைந்தான். ஆகவே கெஞ்சினான் விசுவாமித்திரனிடம், 'நானே வந்து உங்கள் பெரு வேள்வியைக் காக்கிறேன்' என்று.

இது கேட்ட கௌசிகன் கோபத்தின் வசப்பட்டு எழுந் தான். அவன் கோபத்தைக் கண்ட தேவர்கள். உலகங்களுக்கு

Koviloor Digital Library

இறுதிக்காலம் வந்துவிட்டதென்று அஞ்சினர். அம்முனிவனின் செழுமிய புருவங்கள் மேலே ஏறின, கண்கள் சிவந்தன. அந்த முனிவன் கோபத்தால் நகைக்கவும் செய்தான். திசைகள் இருண்டன.

இதைக் கண்ட வசிஷ்ட முனிவன் இடை புகுந்தான். "நீ பொறுத்தி" — "நீங்கள் சற்றுப் பொறுங்கள்" என்று விசுவாமித்திரனைச் சமாதானப்படுத்தி, "தசரதா! உன் மகனுக்குப் பெருநன்மைகள் வந்து சேரப் போகின்றன. அவற்றைத் தடுக்காதே. அனுப்பு ராமனை!" என்று கூறினன்.

குருதேவனான வசிஷ்டன் இவ்வாறு கூற, விசுவாமித்திரனுடன் இராமனையும் இலக்குவனையும் தசரதன் அனுப்பி வைத்தான். அந்த அரச குமாரர்களை அழைத்துக் கொண்டு சென்ற முனிவன் ஒரு பாலைவனத்து வழியாக நடந்தான். அந்தப் பாலை நிலத்தின் கொடுமையும் வெம்மையும் தாங்க இயலாததாக இருக்கவே, "இந்த இடத்தில் சிவபிரானது நெற்றிக்கண் பட்டுவிட்டதா? அல்லது இப்படித் தீய்ந்து போயிருப்பதற்குக் காரணம் வேறு ஏதாவது உண்டா?" என இராமன் வினவ, அதன் விருத்தாந்தத்தையும், அங்குள்ள ஒரு பெண்ணைப் பற்றியும் ராமன் அவளைக் கொல்லவேண்டிய அவசியத்தையும் விசுவாமித்திரன் வலியுறுத்துகிறான்.

"அப்பா ராம!

......இன்னுயிர்
கொன்றுஉழல் வாழ்க்கையின் கூற்றின் தோற்றத்தள்,
அன்றியும் ஐயிருநூரு மையல்மா
ஒன்றிய வலியினள் உறுதி கேள்."

"இங்கு ஓர் அரக்கி இருக்கிறாள். உயிர்களைக் கொன்று வாழ்பவள். எமனுக்குப் புடவை கட்டினாலெப்படி இருக்குமோ, அத்தகைய அழகிய உருவத்தைப் பெற்றவள். ஆயிரம் யானை பலம் உடையவள். அவள் வரலாறு கூறுகிறேன் கேள்" என்று தாடகையின் வரலாற்றைத் துவங்குகிறான் :

Koviloor Digital Library

"சுகேது என்ற வலிமை பொருந்திய யட்சன் ஒருவன் பிள்ளைப்பேறு இல்லாமையால் பிரமனை நோக்கித் தவம் செய்ய அவனுக்கொரு பெண் பிறக்கப் பிரமன் அருளினான். "தாமரை யில் வாழ்கின்ற மகாலட்சுமியைப் போன்ற அழகுடனும், ஆயிரம் யானைகளின் பலத்துடனும் ஒரு பெண் பிறப்பாள் உனக்கு" என்று அருளிச் சென்றான். அப்படியொரு அழகான பெண் பிறந்தாள். அந்தப் பெண்ணைச் சுகேது, தனது வமிசத் தைச் சேர்ந்த சுந்தன் என்ற யட்சனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். அந்த இருவரும் இரவு பகல் பார்க்காதபடி கலந்து சுகித்தார்கள். அவர்களுக்கு மாயமும் வஞ்சமும் வரம்பு இலா வலிமையும் பெற்ற *மாரீசன், சுபாகு என்ற இரு பிள்ளைகள் பிறந்தார்கள். இதனால் களிப்பு மிகப் பெற்ற சுந்தன், களிப்பை அகஸ்தியர்மீது காட்டினான். அவர் இருந்த ஆசிரமத்தின் மீது மரங்களைப் பிடுங்கி எறிந்தான். அதனால் முனிந்த அகஸ்தியரால் சாம்பலாக்கப்பட்ட சுந்தனைக் குறித்து அகஸ்தியர் மீது தாடகையும் அவள் புதல்வர்களும் சமர் தொடுக்க, அவர்களை அரக்கர்களாகும்படி குறுமுனிவர் சபித் தார். அந்தத் தாடகை, தனது மக்களைப் பிரிந்து இங்கு வாழ் கிறாள்."

அந்தத் தாடகை எப்படிப்பட்டவள் என்பதை விசுவாமித் திரன் வாயால் கம்பன் நமது கண்கள் முன்பு தோற்றுவிக் கிறான் :

பெருவரை யிரண்டொடும்
பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடும்
ஊழித் தீயொடும்

---

* தாடகைக்கு மாரீசன் என்ற ஒரு பிள்ளை மட்டும் பிறந்த தாக வால்மீகி கூறுகிறார். (பால காண்டம், சர்க்கம் 25, சுலோ-25-26) மாரீசன், சுபாகு இருவரும் சுந்தன், உபசுந்தன் இவர்களின் புதல்வர்கள் என்பதும் வால்மீகி ராமாயணம் (பாலகாண்டம் சர்க்கம் 20, சுலோகம் 25-26).

Koviloor Digital Library

இரு பிறை செறிந்தெழு
கடலுண்டா மெனின்
வெருவரு தோற்றத்தள்
மேனி மானுமே.

பெரிய இரண்டு மலைகளுடனும், வெளியிலே தோன்றிய விஷத்துடனும், இடியோசையினும் அதிகமான ஒலியுடனும், பிரளய காலத்து அக்கினியுடனும், இரண்டு பிறைச் சந்திரன்கள் பொருந்தப் பெற்று, எழுந்து நடந்து வருகின்ற கடல் ஒன்று உண்டென்றால், அது தாடகைதான்.

இப்படித் தாடகையின் வடிவழகைக் கூறி, அவள் இருப்பிடத்தை விசுவாமித்திரன் காட்டுமுன், அவளே புறப்பட்டு எதிரே வரத் தொடங்கினாள். "மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்" மையைப் போன்ற பெரிய மலை தீப்பிடித்து எரிந்துகொண்டே நடந்து வந்ததுபோல் தாடகை வந்தாள். அவர்களை நோக்கி:

சிலம்புகள் சிலம்பிடை
செறிந்த கழலொடும்
நிலம்புக மிதித்தனள்
நெளித்த குழிவேலைச்
சலம்புக அனல்தறுகண்
அந்தகனும் அஞ்சி
பிலம்புக நிலைக்கிரிகள்
பின்தொடர வந்தாள்.

மலைகளையே காற்சிலம்புகளின் பரல்களாகப் பெற்றுள்ள கால்கள் நிலத்தில் அழுந்தியதால் ஆங்காங்கு குளங்கள் ஏற்பட்டு, அங்குக் கடல்நீர் பாய, அந்தகனான யமனே அஞ்சிப் பதுங்க, வரும் வேகத்தில் மலைகள் நிலை பெயர்ந்து உடன்வர தாடகை நடந்து வந்தாள். இத்தகைய பயங்கர உருவத்தைத் கண்டும் இராமன் அவளைக் கொல்ல நினைத்தானில்லை. பெண்ணை எப்படிக் கொல்வது என்று தயங்கினான்.

அவன் தயக்கத்தைப் புரிந்துகொண்ட விசுவாமித்திரன், அவள் பெண் அல்ல என்பதற்குக் காரணம் சொல்கிறான்.

Koviloor Digital Library

"தீதென்று உள்ளவை யாவும்
செய்து எமை
கோது என்று உண்டிலள்
....
இக் கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ..."

இராமா "உலகத்தில் தீமை என்று எவையெல்லாம் உள வோ அத்தனையும் செய்தவள் இவள். என் போன்ற முனிவர் களை ஏன் உயிருடன் விட்டு வைத்திருக்கிறாள் தெரியுமா? நாங்கள் எலும்பும் தோலுமாயிருப்பதால், எங்கள் உடலில் சதைப் பற்று சிறிதும் இல்லாமையால் தன் வயிறு நிரம்பாது சாரமற்றது, என்றுதான் எங்களை உண்ணவில்லை. இவளை யாது என்று எண்ணுவது? பெண் என்று எண்ணலாமா?..." என்றுகேட்கிறான்.

பெண் உள்ளம் அன்புள்ளமாயிருக்க வேண்டும். அது தீயதாயிருப்பின் அவள் பெண்ணல்ல என்று கவி இலக்கணம் சொல்கிறான் மேல் பாட்டில்.

அது மட்டுமல்ல. பெண்ணுக்கு இன்னொரு இலக்கணமும் உண்டு. அது நாணம் என்பது. இவள் நாணமற்றவள். ஆண் களே அஞ்சக் கூடியவள். ஆகையால், இவள் ஆண்தான் என்று கூறுகிறான் விசுவாமித்திரன்.

நாண்மையே உடையார்
பிழைத்தால் நகை
ஆண்மையே பெற்ற
வன் திறல் ஆடவர்
தோண்மையே இவள் பேர்
சொலத் தோற்குமால்
ஆண்மை எனும்அது
ஆர்வசத் தாகுமே?

"நாண்மையே உடையார் பிழைத்தால் நகை—நாணத்தை உடைய பெண்களைக் கொன்றால் உலகம் நகைக்கும்.

Koviloor Digital Library

ஆண்மையே பெற்ற வலிமைமிக்க ஆடவர் தோண்மை (தோள்வலி) இவள் பேர் சொலத் தோற்கும். அப்படியிருக்க இப்பொழுது ஆண்யார் சொல்?'' என்று விசுவாமித்திரன் வாயால்கம்பன் கேட்கிறான். நாணமற்றவளும், தீமை நெஞ்சுள்ளவளும், புருஷர்களே கண்டு பயப்படக்கூடியவளுமான பெண் உண்மையில் பெண் அல்ல, ஆண்பிள்ளைதான் என்று விளக்கம் தருகிறான்.

விசுவாமித்திரன் இதை மட்டும் சொல்லவில்லை. பெண்களைக் கொல்லலாமென்பதற்கு ஆதாரங்களும் காட்டுகிறான்.

4. பெண் கொலைப் பட்டியல்

திருடலாமா? ஏன் திருடக் கூடாது? தயிர், பால், வெண்ணெய் இவற்றை கண்ணன் திருட வில்லையா? திருமங்கையாழ்வார் கொள்ளையடிக்க வில்லையா? சிறைக்குப் போகலாமா? ஏன் போகக் கூடாது? கண்ணன் சிறையில் தானே பிறந்தான்?

இப்படி மேற்கோள் காட்டுவதுபோல், விசுவாமித்திரனும் மேற்கோள் காட்டினான். முதலில் இலக்கணம் சொல்லிப் பார்த்தான் விசுவாமித்திர முனிவன். நாணமற்றவர்கள், ஆண்பிள்ளைகளே கண்டு அஞ்சக் கூடியவர்கள், தீமையே செய்பவர்கள், இவர்கள் பார்ப்பதற்குப் பெண்களாயிருந்தாலும் ஆண்கள்தான் என்று இலக்கணம் சொல்லி, ஆகவே 'தாடகையைக் கொல்' என உத்தரவிட்டும், ராமன் மசியாது போகவே, ஏற்கனவே பெண்களைக் கொன்றவர்கள் பட்டியலை அவிழ்க்கிறான், ரிஷி.

''ராமா! உனக்கு முன்னாலேயே மிகப் பெரியவர்கள் உலக நன்மையை முன்னிட்டு பெண்களைக் கொன்றிருக்கிறார்கள்'' என்று கூறிய விசுவாமித்திரன்,

Koviloor Digital Library

பிருகுவென்னும் பெருந்தவன் தன்மனே
வரு கயல்கண் கியாதி வல் ஆசுரர்க்கு
உருகு காதல் உறவு உறவாதலே
கருதி ஆவி கவர்ந்தனன் நேமியான்.

என உவமை காட்டுகிருன். "ராமா! முன்பு தேவாசுர யுத்தத்தின்போது, தோல்வியடைந்த அசுரர்கள் பிருகு முனிவன் ஆசிரமத்துள் போய் ஒளிந்து கொண்டார்கள். அப் பேருந் தவசியின் மனேவி, மீனேப் போன்ற அழகிய கண்களே உடைய கியாதி என்பாள், அவர்களே அன்பினுல் காத்தாள். ஆகவே நேமியான், சக்கிரபாணியான விஷ்ணு, முதலில் அவளேக் கொன்ருன்."

விஷ்ணுவையே உவமையாகக் காட்டியதால், 'நீ ஏற்கெனவே செய்த வேலேதான் இது' என்று மறை பொருளாகக் கூறுகிருன் முனிவன். 'இது மட்டுமல்ல ராமா!

வானகம்தனில் மண்ணினின் மன்னுயிர்
போனகம் தனக்கென்று எணும் புந்தியது
ஆனவள் குமதிப் பெயராள் தனே
ஊன் ஒழித்தனன் வச்சிரத்து உம்பர்கோன்.

வானிலே ஒரு பெண்ணிருந்தாள். மண்ணில் உள்ள உயிர் களெல்லாம் தனக்கு 'போனகம்' அதாவது உணவு என்று நினேத்துக் கொண்டிருந்தாள். அந்தக் குமதியை வச்சிராயுத பாணியான இந்திரன் கொன்ருன்" எனவும் சொன்னுன் ரிஷி.

இந்தக் 'குமதி' என்று கம்பன் சொல்லும் பெண்ணே வால்மீகி 'மந்தரை' என்று அழைக்கிருர். அவள் விரோசனன் என்பவனுக்குப் புத்திரீ யென்றும் சொல்லுகிருர்.

"...விரோசன ஸுதாம்...

...மந்தராம் அப்ய ஸூதயத்" என்பது வால்மீகி வாக்கியம்,

Koviloor Digital Library

ஆகவே இந்த இடத்தில் 'குமதி' என்ற சொல்லைக் காரணப் பெயராகச் சொல்ல வேண்டும். 'கு-மதி' கெட்ட புத்தியுடையவள் என்பது கம்பன் பிரயோகம்.

ஏற்கெனவே பெண்களைக் கொன்றவர்கள் பட்டியலைக் காட்டியதோடு வால்மீகி நின்று விடுகிறார். கம்பன் ஒரு படி மேலே போகிறான். "இப்படிப் பெண்களைக் கொன்றவர்கள் கீர்த்தியும் அடைந்திருக்கிறார்கள்" என்றும் சுட்டிக் காட்டு கிறான்.

ஆதலால் அரிக்கு ஆகண்டலன் தனக்கு
ஓது கீர்த்தி உண்டாய அல்லாது இடை
ஏதம் என்பன எய்தியவோ சொலாய்
தாது அடர்ந்து தயங்கிய தாரினாய்.

தாது அடர்ந்து தயங்கிய தாரினாய்-புஷ்பதாதுக்கள் நெருங்கி விளங்குகின்ற மாலையைத் தரித்த ராமா! பெண் கொலை செய்ததால் அரியெனும் விஷ்ணுவுக்கும் ஆகண்டலன் என்னும் இந்திரனுக்கும், ஓது கீர்த்தி (உயர்ந்த கீர்த்தி) வந்ததே யொழிய, இடையே ஏதம் (பழி) எய்தியதோ சொல்' என்று பெண் கொலையால் தெய்வங்களுக்கு ஏற்பட்ட கீர்த்தியை எடுத்துக் காட்டிய விசுவாமித்திரன், தாடகையைக் கொல்லுமாறு பணிக்கிறான்.

இப்படி முனிவன் தீட்டிய சொல்லோவியத்தின் தூண்டுத லால்கூட ராமன் தாடகையைக் கொல்ல முயன்றானில்லை. தாடகையைக் கொல்ல முற்பட்ட போதுகூட, பழியை ரிஷியின் தலைமீதே போட்டான்.

மெய்ய நின்னுரை வேதமெனக் கொடு
செய்கையன்றோ அறம் செய்யும் ஆறு என்றான்

"மெய்ய- சத்திய சொரூபியானவரே! உங்கள் வார்த் தையை வேதமெனக் கொண்டு செய்வதல்லவா தருமம் செய்யும் முறை" என்று ராமன் விசுவாமித்திரனைப் பார்த்துச் சொன்னான்.

Koviloor Digital Library

இந்த இடத்தில் வால்மீகி காவியம், "என் தகப்பனுர், ஆசார்யர்களின் மத்தியில் உமது ஏவல்களைப் புரியும்படி சொன்னுர். அதனுலும் ஆக்ஞை விசுவாமித்திரருடையது என்பதனுலும் இக்கொலையைச் செய்கிறேன்" என்று ராமன் சொன்னுன் எனக் கூறுகிறது.

இப்படிச் சொன்ன ராமன் தனது நாணை இழுத்து ஒலி செய்தான். 'தீவ்ரம் ஜ்யா சப்தம் அகரோத்', குரூரமான நாணொலியை ராமன் செய்தான், என்கிருர் வால்மீகி.

இத்தனை ஆட்சேபனை சமாதானங்களுக்குப் பிறகு போர் தொடங்கியபோது தாடகை ராமன்மீது பயங்கரமான தன் சூலத்தை ஏவினுள். அந்தச் சூலம் ராமனை நோக்கி,

'உலா மதியின் மேல் வரும் கோள் என வந்ததே'

பூர்ண சந்திரனை விழுங்கவரும் ராகுவைப் போல் வந்தது. அந்தச் சூலத்தை கண்ணிமைக்கும் நேரத்தில் ராமன் துண்டித்தான், 'மகாவிஷ்ணுவின் அவதாரமான ராமன் வாளியைத் தொட்டதும் யாரும் பார்க்கவில்லை; வில்லை வளைத்த விதமும் கண்டிலர்; சூலம் துண்டங்களானதைத் தான் கண்டார்கள்' என்று கம்பன் விளக்குகிருன் ராம பிரான் வில்லாற்றலை.

இந்தப் பெரும் போரில் மாயாவியான தாடகை தனது மாயாஜாலத்தால் மழைமாரி கல்மாரி பெய்தாள். அனைத்தையும் பாணங்களால் தடுத்தான் ராமன்.

மாலை நெருங்கியது. விசுவாமித்திரன் அஞ்சினுன். "அப்பா ராமா! இராக்காலத்தில் அரக்கர் வலிமை அதிகமாகும். இவளை சீக்கிரம் அழித்துவிடு" என்று சொன்னுன். அப்பொழுது எடுத்தான் தனது கடுமையான பாணத்தை ராமன் தாடகையை அழிக்க உறுதி கொண்டு.

அந்த பாணம் எத்தன்மையது? எத்தனை வேகமுடையது? இங்கு அருமையான உவமையொன்றைச் சொல்கிருன் கம்பன்.

Koviloor Digital Library

'சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்'. சொல் எத்தனை வேகமுடையதோ அத்தனை வேகமுடையது. சொல் எத்தனை சுட வல்லதோ அத்தனை சுடவல்லது என்று கம்பன் ராம பாணத்தை வர்ணிக்கிறான்.

சொல்லின் சக்தி அளவிட முடியாதென்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். சொல்லால் ஒரு மனிதனைக் கொல்ல லாம். பல பேர் கொண்ட கூட்டத்தைக் கூடக் கொல்ல லாம். பல சொற்பொழிவுகளைக் கேட்டவர்களுக்கு இது புரியும். அத்தனை வல்லமை சொல்லுக்கு உண்டு.

சொல்லை சக்தியாகவே காளிதாசன் கூறுகிறான். ரகுவம்ச மகா காவியத்தின் முதல் சுலோகத்தில்.

'வாக் அர்த்தாவிவ ஸம்ப்ரக்தௌ...
......பார்வதி பரமேசுவ்ரௌ......

பார்வதியும் பரமசிவனும் அதாவது சக்தியும் சிவனும் 'சொல்லும் பொருளும் போல் இருந்தார்கள்' என்றான். காளி தாஸ மகாகவி, சொல்லை சக்தி சொரூபமாகக் காண்கிறான்.

அத்தகைய சொல்லொக்கும் பாணத்தைத் தாடகை மீது பிரயோகித்தான் ராமன். அது அவள் மார்பில் நுழைந்து முதுகுப் புறமாக ஊடுருவிச் சென்றுவிட்டது.

'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தினாள் மேல் விடுதலும் வயிரக் குன்ற
கல்லொக்கு நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று
அன்றே'

வயிரமே கடினமான வஸ்து. வயிரமலை எத்தனை கடின மானது. அத்தகைய மார்புடையாளின் நெஞ்சில் பாய்ந்து அப்புறம் (பின்புறமாக) கழன்றுபோய் விட்டது ராமனுடைய பாணம்.

எத்தனை சீக்கிரமாகப் போய்விட்டது என்பதை நகைச் சுவையுடன் கூறுகிறான் கம்பன். 'கல்லாப் புல்லர்க்கு

Koviloor Digital Library

நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று'. படிக்காத மூடனுக்கு நல்லவர்கள் நல்ல விஷயத்தைச் சொன்னால், அதை அவன் ஒரு காதில் வாங்கி இன்னொரு காதில் எத்தனை சீக்கிரமாக விடுவானோ அத்தனை சீக்கிரமாகத் தாடகையின் மார்பில் பாய்ந்து முதுகில் ஊடுருவிச் சென்று விட்டது ராமபாணம் என்கிறான் கவிச் சக்கரவர்த்தி. 'நெஞ்சில் தங்காது' என்றும் கூறுகிறான். நல்லவர்கள் வார்த்தை எப்படி முட்டாள் நெஞ்சில் தங்காதோ அப்படி ராமபாணமும் தாடகையின் நெஞ்சில் தங்கவில்லை என்பதும் கம்பன் சொற் சித்திரம்.

இந்தப் பாணத்தால் அடிபட்ட தாடகை நிலத்தில் பயங் கரமாக விழுந்தாள். மார்பிலிருந்து குமிழியாக வந்த ரத்தப் பிரவாகம் அந்தப் பூமி முழுவதையும் நனைத்துச் சிவப்பாக அடித்துவிட்டது. அது எப்படி இருந்தது?

'மாலைத் தோன்றிய செக்கர் வானம்
தொடக்கு அற்று வீழ்வ தொத்தே'

சிவந்துவிட்ட அந்திவானம் பிடிப்பற்று திடீரென பூமியில் விழுந்து விட்டதோ என்னும்படியாயிருந்தது என்று உவமை கூறி வியக்கிறான் கவி.

தாடகையும் வீழ்ந்தனள். தேவர்கள் வானிலிருந்து தூவிய மலர்களும் ஐயன்மீது விழுந்தன.

5. பரந்த கருணை! சிறுத்த திருவடி!

விசுவாமித்திரன் புத்தி பெண் புத்தியாயிருந்திருக்க வேண்டும். பெண் புத்தி பின்புத்தி என்ற வசனம் இருக்கிற தல்லவா? அப்படிப் பின் புத்தியோடுதான் அவன் நடந்து கொண்டிருக்கிறான். தாடகையை ராமன் அடித்து வீழ்த்திய பிறகே, அவனுக்கு திவ்யாஸ்திரங்களை விசுவாமித்திரன்கொடுக் கிறான்.

Koviloor Digital Library

ராமனை விசுவாமித்திரன் தசரதனிடமிருந்து யாசித்து அழைத்து வந்தது எதற்காக? ராட்சஸர்களைக் கொல்ல. ராட்சஸர்கள் மாயையில் வல்லவர்கள், அசகாய சூரர்கள் என்பது முனிவனுக்குத் தெரியும் நீண்ட தூரம் ராமனை அழைத்து வந்திருக்கிறான். வரும் வழியில் ஏதாவதொரு இடததில், 'ராமா! ராட்சஸர்களைக் கொல்ல உனக்குப் பெரும் படைக்கலன்கள் வேண்டியிருக்கும். இந்த அஸ்திரங்களை வாங்கிக் கொள்' என்று சொல்லுவதுதானே நியாயம். அது தானே முன்புத்தியுடைய ஒருவன்செய்யவேண்டிய காரியம்.

அப்படி ஒரு அஸ்திரத்தையும் ராமன் கண்ணில் காட்ட வில்லை விசுவாமித்திரன். தாடகை வந்ததும், "அப்பா! இவளைக் கண்டு எமனும் அஞ்சிப் பதுங்குகிறான். பெண் என்று பார்க்காதே, இவள் ஆண்தான், கொன்றுவிடு" என்று உந்து கிறான் ராமனை. 'இந்தக் குழந்தைகளிடம் என்ன பாண மிருக்கும் இந்த அரக்கியைக் கொல்ல' என்று யோசிக்கவில்லை விசுவாமித்திரன். தாடகை மாண்டு விழுந்த பிறகு, வானவர் பூ மழை பொழிந்த பிறகும், தன்னிடமிருந்த அஸ்திரங்களை உடனடியாகக் கொடுத்தானில்லை ரிஷி. இந்திராதி தேவர்கள்,

"யாமும் எம்மிருக்கை பெற்றோம்
உனக்கு இடையூறுமில்லை
கோமகற்கினிய தெய்வப் படைக்கலம்
கொடுத்து"

"முனிவரே! நாங்களும் எங்கள் இருப்பிடங்களைப் பெற்றோம். உனக்கும் இடையூறு தீர்ந்தது. இனி இந்த அரச குமாரனுக்குத் தெய்வப் படைக்கலன்களைக் கொடும்" என்று வற்புறுத்திய பிறகே விசுவாமித்திரன் தன்னிடமிருந்த திவ்யாஸ்திரங்களைக் கொடுக்கிறான்.

ஏன் முன்னதாகக் கொடுக்கவில்லை? பின் புத்தியினாலா? தாடகை சம்ஹாரம் ஆனபிறகுங்கூட தேவர்கள் சொல்லும் வரை ஏன் காத்திருந்தான்? கருமித்தனத்தினாலோ?

Koviloor Digital Library

இல்லை. ராமனுக்குத் தன்னிடமுள்ள அஸ்திரங்கள் எதுவும் தேவையில்லை என்பது விசுவாமித்திரனுக்கு நன்ருகத் தெரியும். தசரதனிடம் ராமனைக் கேட்ட போது, 'ராமன் குழந்தை! அரக்கருடன் போர் புரிய நானே வருகிறேனே' என்று சொல்கிருன் தசரதன். அப்பொழுது சொல்கிருன் விசுவாமித்திரன்,

'அஹம்வேத்மி மகாத்மானம் ராமம் ஸத்யபராக்கிரமம்'

"தசரதா! நிச்சயமான பராக்கிரமத்தைப் படைத்த ராமன் மகாத்மா வென்பது எனக்குத் தெரியும். எனக்கு மட்டுமல்ல.

'வஸிஷ்டோபி மகாதேஜா யேசேமே தபஸ்வதிதா:'

இதோ இருக்கிற உன் குல குரு, அந்த வஸிஷ்டருக்கும் தெரியும், இங்கிருக்கும் தவசிகளுக்கும் தெரியும்" என்று சீறிஞன் விசுவாமித்திரன்.

"ராமன் யாரென்பது வில்லுங்கையுமான உனக்குத் தெரியாது, புல்லுங் கையுமான எனக்குத் தெரியும். மணிமுடி தரித்த உனக்குத் தெரியாது. சடைமுடி தரித்த எனக்குத் தெரியும். புத்திரகாமேஷ்டி யாகம்செய்த உனக்குத் தெரியாது; மோக்ஷகாமேஷ்டியாகம் செய்த எனக்குத் தெரியும்" என்று பரமாத்மாவை அறியத் தபோஞானம் வேண்டும் என்பதையும் கூறி வேகமாய் சொல்லம்புகளை வீசிஞன்.

ராமன் பரம்பொருள் என்பதை உணர்ந்ததாலும், அதை உலகுக்கு உணர்த்த வேண்டுமென்ற கருத்திஞலுந்தான் விசுவாமித்திரன் முன்னதாக அஸ்திரங்களை ராமனுக்குக் கொடுக்கவில்லையே தவிர, பின்புத்தியும் காரணமல்ல. கருமித் தனமும் காரணமல்ல. இதுமட்டுமல்ல, பரிசுகளைக் கொடுக்க வேண்டுமாஞல், பெறுபவனுக்குத் தகுதியும் வேண்டும், தகுதி யிருப்பதை நாலுபேர் ஒப்பவும் வேண்டும் என்று நினைத் தான் விசுவாமித்திரன். இது மனித ரீதியாஞலும் மனிதஞக வேஷம் போட்டுள்ள ராமன் விஷயத்திலும் அதையே கையாள் கிருன் விசுவாமித்திரன்,

Koviloor Digital Library

தாடகை வீழ்ச்சியெனும் சாதனையை ராமன் புரிந்த பின்பும் வாளாவிருந்த ரிஷியைப் பார்த்து அஸ்திரங்களைப் பெற ராமன் தகுந்தவன் என தேவர்கள் ஒப்புக் கொண்ட பிறகே, பாணங்களை ராமனுக்கு விசுவாமித்திரன் அளித்தான். கொடுக்கப்பட்ட அஸ்திரங்கள் எவையென்பதை கம்பன் கூற வில்லை, பரம்பொருளுக்கு இவர்கள் யார் அஸ்திரம் கொடுப்பது என்ற நினைப்பால். ஆனால் வால்மீகி விவரங்களைக் கூற முற்பட்டு,

"தண்டசக்ரம், காலசக்ரம், சிவனுடைய சூலம், பிரம சிரஸ், ஐஷீகம், பிரும்மாஸ்திரம், தர்மபாசம், வருணபாசம், சுஷ்கம், நாராயணம், ஆக்னேயம், ஹயசிரஸ், கிரௌஞ்சம்" முதலிய ஆயுதங்களை விசுவாமித்திரன் கொடுத்தானென்ற பட்டியலைக் கொடுக்கிறான்.

ஆனால் கம்பன், 'விசுவாமித்திரன் அஸ்திரங்களைக் கொடுத்தான். அஸ்திரங்கள் ராமனைச் சரணடைந்தன' என்று கூறிவிட்டு மேலே கதையைத் தொடருகிறான். அடுத்தபடியாக நூறு கூனிகளின் கதையைச் சொல்கிறான் கம்பன். அந்த நூறு கூனிகளும் விசுவாமித்திரனின் அத்தைமார்கள். இந்த விந்தைக் கதையை விசுவாமித்திரன் வாயினாலேயே சொல் கிறான் கவி.

ராமாயணம் ஒரு கூனியாலேயே படாத பாடுபட்டது. நூறு கூனிகள் இருந்தால் கதி என்ன என்று நீங்கள் வியக்கலாம். ஆனால், இந்தக் கூனிகள் மகா அழகிகள், கற்புக்கரசிகள் அவர்கள் அழகினால் வந்த விபத்துத்தான் அது.

தாடகையைக் கொன்றுவிட்டுப் பயணம் செய்யும்போது கௌசிக நதியை அடைந்த முனிவரைப் பார்த்து, அந்த நதி யின் வரலாற்றைப் பற்றி ராமன் கேட்கிறான். அங்கு தன் சுய புராணத்தை அவிழ்க்கிறான் விசுவாமித்திரன். அதில் வாயுவின் வரலாறும் வருகிறது.

ஒருவன் நொண்டுகிறான். 'ஏனப்பா நொண்டுகிறாய்?' என்று கேட்டால், 'பிடிப்பு' என்கிறான் பதிலுக்கு. ஒருவன்

Koviloor Digital Library

நிமிர முடியாமல் கூனிட்டு நடக்கிறான். ஏன் என்று வினவினால் இடுப்பிலே வாய்வு பிடித்திருக்கிறது என்கிறான். வாய்வுக்கு யார்மீது காதல் ஏற்பட்டுப் பிடித்துக் கொண்டாலும் கதி இது தான். இந்தக் கதி விசுவாமித்திரன் அத்தைமார்களுக்கும் ஏற்பட்டது.

விசுவாமித்திரன் சொல்கிறான்: "ராமா! என் பாட்டனார் குசநாபனுக்கு நூறு அழகிய பெண்கள் இருந்தார்கள். அவர்கள் நந்தவனத்தில் பூக்கொய்து விளையாடிக் கொண்டிருக்கையில் அவர்களைப் பார்த்து வாயுதேவன் அவர்களை அடைய ஆசை கொண்டான். அவர்களை அணுகித் தன் ஆவலையும் தெரிவித் தான். அந்தப் பெண்கள் கற்பிழக்கச் சம்மதிக்கவில்லை.

"எந்தை அடித்தலத்து உரைத்து நீரோடு
அளித்திடில் அணைத்தும் என்ன"

எங்கள் தந்தையை அடிபணிந்து எங்களை யாசித்து, அவர் உங்களுக்கு எங்களை நீரோடு தாரை வார்த்துத் திருமணம் செய்துகொடுத்தால் எங்களைக் கூடலாம் என்று சொல்லிவிட, வாயு கோபங் கொண்டு அவர்கள் இடைகளைப் பிடித்து ஒடித்தான். அந்த நூறு அழகிகளும் கூன் அடைந்தனர். அதையறிந்த குசநாபன் அவர்களை பிருமதத்தன் என்ற பெருந் தவசிக்குக் கொடுக்க, அவன் கைபட்ட மாத்திரத்தில் அந்த நூறு பேரும் கூன் நிமிர்ந்து பழைய அழகைப் பெற்றார்கள்."

அந்தக் குசநாபனுக்கு காதி எனும் மகன் இருந்தா னென்றும், அந்த காதிக்குத் தானும் கௌசிகியும் பிறந்த தாகவும் கூறிய விசுவாமித்திரன், அந்தக் கௌசிகிதான் நதி யாகி இந்தப் பூதலத்தைச் சிறப்பிக்கிறாள் என்றும் சொன்னான். இங்கிருந்து வாமனாசிரமம் வருகிறார்கள் அம்மூவரும்...அந்த வாமனாவதாரச் சிறப்பை கௌசிக முனி சொல்கிறான். இந்த இடத்தில் கம்பன் கவிநயத்தின் உச்சியை எட்டுகிறான். ஒருபெரிய சோலையை அடைந்ததும் அதைப் பற்றி ராமன் வினவ, சொல்கிறான் முனிவன்.

Koviloor Digital Library

"தங்கள் நாயகனின் தெய்வம் பிறிதில் என்று எண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது"

"ராமா! தங்கள் கணவனைப் பார்க்கிலும் தெய்வம் வேறு கிடையாது என்று எண்ணும் மங்கையர் மனம் போல இந்த வனம் தூய்மையானது" என்கிறான். தூய்மைக்கு இதைவிடச் சிறந்த உவமையை எப்படிக் காட்ட முடியும்?

இத்தகைய தூய்மையான வனத்திலே,

"நான் மறைக்கும் தேவர் அறிவிற்கும்
பிறர்க்கு மெட்டாச்
செங்கண் மால் இருந்து மேநாள்
செய்தவம் செய்ததன்றே"

நாலு வேதங்களுக்கும் தேவர் அறிவிற்கும் எட்டாத அழகிய கண்களுடைய திருமால் தவம் செய்த இடம் என்று இடத்தின் பிறப்பைச் சொல்லி மாவலி யாகத்தையும் வாமனாவதாரச் சிறப்பையும் கூறுகிறான்.

வாமன உருக்கொண்ட திருமால் மாவலியை மூவடி மண் வேண்ட, 'இவர் திருமால் கொடுக்காதே' என்று தடுக்கிறார் சுக்கிர பகவான். அப்பொழுது சொல்கிறான் மாவலி :

"மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர் காண் மாயாது
ஏந்திய கைகொடு இரந்தவர் எந்தாய்
வீந்தவர் என்பவர் வீந்தவரேனும்
ஈந்தவ ரல்லாது இருந்தவர் யாரே"

எந்தாய்! என் தந்தை போன்றவரே! இறப்பவரெல்லாம் சிறப்பவர் அல்ல. ஏந்திய கையொடு யாசகத்துக்கு வருபவர் தான் இறந்தவர். மரணத்தினும் கொடியது யாசகம் செய்தல். தவிர இறந்தவரில் நிலையாயிருந்தவர்கள் கொடுத்தவர்களல்லாது வேறு யார்?

இப்படிக் கேட்ட மாவலி, கொடுத்தான் மூவடி மண். உடனே வாமனன் விக்ரமனாகி மூவுலகையும் இரண்டு அடிகளால் அளந்தான். மூன்றாவது அடிக்கு மாவலி தலையைக்

Koviloor Digital Library

காட்ட அவன் பெரிய மனத்தால் மாவலியின் கருணை விரிந்தது. திருவடி சிறுத்தது. மாவலியின் சிரத்தின் அளவுக்கு.

இலைகுலாம் துழாய் ஏக நாயகன்
சிலை குலாம் தோளினுய் சிறியவன் சாலவே

மாவலி தன் சிரசைக் காட்டியதும் திருத்துழாய் இலைகளை மாலையாக உடைய ஏக நாயகனை திருமால் மாவலியின் முன்பு 'சிறியவன் சாலவே' சாலச் சிறியவன் ஆனுன் என்று கூறுகிருன் கவி.

'பத்துடை அடியவர்க்கு எளியவன்' என்ற நம்மாழ்வாரது பாடல் இங்கு தொனிக்கிறது. கொடுத்தவன் சிறப்பும் இரத்தலின் சிறுமையுங்கூடத் தெளிவாகப் புலனுகிறது கம்பர் பிரான் கவிதையில்.

இந்த வாமனுசிரமே தனது யாக சித்திக்குத் தகுந்த இடமென்று விசுவாமித்திரனும் தீர்மானிக்கிருன்.

6. நெஞ்சினுல் பிழைப்பிலாள்

மூட நம்பிக்கை என்று இன்று நாம் பல விஷயங்களைச் சொல்கிறேம். பழைய நம்பிக்கைகளை நாம் மூடநம்பிக்கை என்று சொல்வதற்குக் காரணம் நமக்குச் சமீப காலத்தில் கிடைத்த 'பகுத்தறிவு' தான். ஆனுல் விசுவாமித்திரனுக்கு நமக்குக் கிடைத்துள்ள 'பகுத்தறிவு' கிடைக்காததால் பழைய நல்லறிவுடனேயே விளங்கினுன். ஆகவே பழைய விஷயங்களில், நம்பிக்கைகளில் அவனும் திளைத்தான்.

நாம் ஏதாவது ஒரு வீட்டை வாங்குவதானுல் அது ஆவி வந்த வீடா என்று கேட்கிறேம். ஒரு இடத்தில் நல்ல விஷயத்தைத் தொடங்குவதானுல் அது ஆவி வந்த இடமா என்று விசாரிக்கிறேம். உண்மையில் ஆவிக்கும் இடத்துக்கும் சம்பந்தமில்லை. ஆகி வந்த இடமா என்பதுதான் சரியான தமிழ்ச் சொல். நல்ல விஷயங்களாகவே ஆகிவந்த இடமா என்பது

Koviloor Digital Library

தான் சரியான கேள்வி. இதை இந்தக் காலத்தில் நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம் 'பகுத்தறிவு' வந்துவிட்ட காரணத்தினுல். நம்மைவிட நன்ருக வாழ்ந்த பெரியோர்கள் நம்பினுர்கள். அந்த வழியில் விசுவாமித்திரனும் சென்ருன். வாமனுசிரம மகிமையையும் வாமனுவதாரத்தையும் ராம லட்சுமணர்களுக்குச் சொன்ன விசுவாமித்திரன் அதே இடத்தில் திருமாலும் காசியபனும் தவம் செய்து சித்தியடைந்திருப்பதால், தனது சித்திக்கும் அந்த ஆசிரமமே தகுதியென்று கருதினுன்.

"வேத நூல் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு
ஈது அலாது இல்லே வேறு இருக்கற்பாலதே.

'வேத நூல் முறைப்படி யாகத்தை முடிக்க விரும்பும் எனக்கு இந்த இடமே சிறந்தது அல்லாது வேறு உரிய இடம் யாதுமில்லே' என்று சங்கல்பித்துக் கொண்ட விசுவாமித்திரன், மற்ற ரிஷிகளோடும் அந்த சித்தாசிரமத்திலேயே யாகத்தைத் தொடங்கினுன். அந்த யாகத்தை,

'எண்ணுதற்கு ஆக்க அரிது இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினேக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினேக் காக்கின்ற இமையிற் காத்தனர்.

விண்ணவர்களான தேவர்களின் நன்மையையொட்டி எண்ணுதற்கும் அரிதான யாகத்தைச் செய்ய, அந்த யாகத்தை மண்ணேக் காக்கும் மன்னனுன தசரதன் மைந்தர்கள் கண்ணே இமை காப்பதுபோல், இரண்டு, மூன்று நாள் அதாவது ஆறு நாட்கள் காத்தனர்.

இந்த இடத்தில் விசுவாமித்திரன் தவத்தின் உச்சியை எட்டினுனென்ருல், உவமையின் உச்சியைக் கம்பன் எட்டுகின்ருன். யாகத்தை ராம லட்சுமணர்கள் கண்ணே இமை காப்பது போல் காத்தனர் என்ற உவமை கூறுகிருன்.

இமையில் மேற்பகுதி பெரியது; கீழ்ப் பகுதி சிறியது. கீழ்ப் பகுதி அசையாமல் நிற்கும்; மேற்பகுதி கொட்டிக் கொட்டிக் கண்ணேப் பாதுகாக்கும். அதே போல் இளேய

Koviloor Digital Library

பெருமாளை ராமன் ஆசிரம வாயிலில் நிற்கவைத்தான் காவலுக்கு. தான் மட்டும் ஆசிரமத்தைச் சுற்றிவந்து, 'லட்சுமணு, ஜாக்கிரதை' என்று மேலிமை கொட்டுவதைப் போல் எச்சரித்து வந்தான். இப்படிக் காத்தனர் ராஜகுமாரர்கள் அந்த யாகத்தை என்று கூறுகிறுன் கவி.

இப்படி யாகத்தைக் காத்த ராமன் அந்த யாகத்தை அழிக்கவந்த தாடகையின் இரு மைந்தர்களில் சுபாகுவை ஒரு வாளியால் அடித்துக் கொன்றுன். மற்ருெரு வாளியால் மாரீசனைத் தொலைவிலுள்ள கடலில் கொண்டு தள்ளினுன். மற்ற அரக்கர் பொழிந்த ரத்த மழையை ஆகாயத்திலேயே பாணங்களைப் பந்தலாகப் போட்டுத் தடுத்தான். இப்படி நிறைவேறிய யாகத்தால் சித்தியடைந்த விசுவாமித்திரன்,

> புவனமாக்கி மற்றவை அகிலமும் மணிவயிற்றடக்கிக்
> காக்கும் நீ யொரு வேள்வி காத்தனை

"ராமா! எல்லாவுலகங்களையும் சிருஷ்டித்து பிரளயத்தில் அவைகளனைத்தையும் உன் மணிவயிற்றில் வைத்துக் காக்கும் நீ எனக்கு ஒரு யாகத்தையும் காத்தாய். இது என் பாக்கியம்" என்று சொன்னுன்.

மனிதனுக வந்த ராமன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. 'இன்று யான் செய்யும் பணி என்கொல்?' என்று கேட்டான். 'ஐய! இன்று நான் செய்ய வேண்டிய பணி என்ன?' என்று வினவினுன்.

விசுவாமித்திரன் சாதாரணமாக என்ன சொல்ல வேண்டும்? 'என் யாகம் முடிந்தது. உன் நகருக்குச் செல்வோம்' என்று சொல்லவேண்டும். அதைச் சொன்னுனில்லை. ஒரு யாகத்திலிருந்து இன்னெரு யாகத்திற்குத் தாவினுன். 'மிதிலையில் ஜனகன் ஒரு யாகம் செய்கிறுன்; அங்கு போவோம்' என்று கூறினுன்.

மிதிலையை நோக்கி அரச குமாரர்களுடன் நடந்த விசுவாமித்திரன், வழியில் கங்கையின் வரலாறு, சகர புத்திரர்

Koviloor Digital Library

கள் வரலாறு எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு, மிதிலேக் கருகே வந்தான். அங்கு கௌதம பத்தினியான அகல்யை கல்லாய்க் கிடந்த மேட்டைக் கண்டான். அந்த மேட்டி லிருந்த கல்மீது ராமன் கால் தூசி பட்டதும், அகல்யை பழைய வடிவம் பெற்று எழுந்து நிற்கிருள்.

'கண்ட கல்மிசை காகுத்தன் கழல்துகள் கதுவ
....
....
பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்

கண்ட அந்த கருங்கல்லின் மீது காகுத்தனுன ராமன் கால்களின் துகள் (தூசி) படவே, அகலிகை பழைய உருவங் கொண்டு நின்ருள். அவள் வரலாற்றை விசுவாமித்திர மாமுனி (பணிப்பான்) சொல்லுகிருன்.

அகல்யை கல்லாகக் கிடந்தாளென்று கம்பன் கூறுகிருன். பத்ம புராணமும் 'சிலாமயி'—கல்லானுள்—என்று கூறுகிறது. காளிதாசனும் ரகுவம்ச மகா காவியத்தில்,

ப்ரத்ய பத்யத சிராய யத்புன : சாரு கௌதம வது சிலாமயி

'கல்லின் வடிவத்திலிருந்த கௌதமன் மனைவி வெகு காலத்திற்குப் பிறகு மீண்டும் தனது அழகிய உடலேப் பெற்ருள்' என்று கூறுகிருன்.

ஆனுல் வால்மீகி அவள் அருவமாகக் கிடந்ததாகவே சொல்கிருர்.

வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்ம சாயினி
அத்ருச்ய ஸர்வபூதானும் ஆச்ரமே அஸ்மின் நிவத்ஸ்யஸி

'இந்த ஆசிரமத்தில் ஆகாரமில்லாமலும், தரையில் படுப்பவளாகவும், தவம் செய்கிறவளாகவும், காற்றை உட் கொண்டும், எந்தப் பிராணிகளின் கண்களுக்கும் புலப்படாத

Koviloor Digital Library

வளுமாக வசிக்கக் கடவாய்' என்பது வால்மீகி ராமாயணத்தில் கௌதமரின் சாபம்.

அழகிற் சிறந்த அகல்யையை இந்திரன் கெடுத்த விதத்திலும் வால்மீகியிலிருந்து கம்பன் மாறுபடுகிருன். வால்மீகி சொல்கிருர்:

ஆயிரம் கண்களையுடையவனுன இந்திரன், கௌதமர் வெளியே சென்ற சமயம் பார்த்து அவர் வேடம் தரித்து ஆசிரமத்துக்குள் வந்தான். வந்து அகல்யையைப் பார்த்து "அடீ! சரியாக இயற்றப்பட்ட அழகான தேகமுடையவளே! காமத்தினுல் போகத்தைக் கோருகிறவர்கள் ருதுகாலத்தைப் பார்க்க மாட்டார்கள். ஸுமத்யமே! (நுண்ணிய இடையை உடையவளே) நான் உன்னுேடு சேர விரும்புகிறேன்" என்ருன்.

வந்தவன் கௌதமன் வேடத்திலிருந்தாலும், அவன் இந்திரன்தானென்பதை அகல்யை உணர்ந்தாள். இருப்பினும், உற்சாகத்துடன் கூடினுள்.

> முனிவேஷம் ஹைஸ்ராக்ஷம் விக்ஞாய ரகுநந்தன
> மதிம் சகார துர்மேதா தேவராஜ குதூஹலாத்

வந்தவன் இந்திரனென்று தெரிந்திருந்தும், துர்மேதா (துஷ்டபுத்தியையுடைய அகல்யை), தேவராஜ குதூஹலாத் (தேவராஜனே வந்துவிட்டான் என்ற குதூஹலத்தால்), மதிம்சகார (அவனுடன் கூடுவதற்குப் புத்தியைச் செலுத்தினுள்.)

இப்படித் தெரிந்தே திட்டமாகவே அவள் இந்திரனுடன் கூடினுள் என்பது வால்மீகி ராமாயணம். அவனுடன் கூடிய பிறகும் அகல்யை சொல்கிருள், 'தேவர் கோனே! கிருதார்தாஸ்மி (நிறைவேறின காரியமுடையவளானேன்), அவர் வரப்போகிருர், விரைவில் போய்விடும்' என்று.

Koviloor Digital Library

இந்திரனும் அவளைப் பார்த்து சந்தோஷித்து, 'அடீ, சுச்ரோணி! (சிறந்த பின்பாகத்தை உடையவளே), பரி துஷ்டோஸ்மி (உன்னால் நன்கு சந்தோஷித்தவனாக ஆனேன்)' என்று சொல்லிவிட்டுப் போனான்.

இதுவரை வால்மீகியின் அகல்யை. இந்த இடத்தைக் கம்பன் மாற்றுகிறான். முன்னாள் வச்சிராயுதத்தைத் தாங்கிய அமரர்கோன்,

'நவ்விபோல் விழியினாள்தன் வனமுலை நணுகலுற்றான்'

மானைப் போன்ற விழிகளை உடைய அகல்யையின் அழகிய தனங்களைச் சேர விரும்பினான். அதற்காகக் கௌதம வேடம் தரித்து வந்தான். முதலில் அவன் இந்திரனென்று அறியாத அகல்யை, பாதிக் கூடலில் அவன் இந்திரனென்று உணர்ந் தாள். பின்னும் காம வேகத்தால் தாழ்ந்து இருந்தாள்.

'புக்கவனோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டிருத்தலோடும் உணர்ந்தனள் உணர்ந்தபின்னும்
தக்கதன்று என்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்ப'

"வேற்றுருவங் கொண்டு சென்று காம இன்பமாகிய புதிய சுவையைத் தேனைப்போல் அனுபவித்த இந்திரனுடன் உடன்பட்டு இருந்தபோது, அவன் யாரென்ற உண்மையை உணர்ந்தவள், உணர்ந்தபின்னும் இது தகுதியற்ற செயல் என (ஓராள்) விலகாள்; உடன்பட்டு இருந்தாள்."—இது கம்பன் வாக்கியம். "முன்னால் கௌதமன் என்று நினைத்தே சேர்ந்தாள். பாதியில் உண்மையை உணர்ந்தாள். இருந் தாலும், காம வேகத்தால் பிரிய முடியாதவளானாள். 'மீறி விட்ட நிலை, விலக இயலாத நிலை!" என்று அகல்யை தவறுக் குச் சமாதானம் காட்டுகிறான் கம்பன்.

இது மட்டுமல்ல. அகல்யை தெரிந்து பிழை செய்ய வில்லை என்றும் கூறுகிறான் கம்பன். கௌதமனிடம் விசுவாமித்திரன் சொல்லுகிறான்:

Koviloor Digital Library

'அஞ்சன வண்ணத்தான் அடித்துகள் கதுவாமுன்னம்
வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தாள் ஆகிநின்ருள்
நெஞ்சினுல் பிழைபபிலாளை நீ அழைத்திடுக வென்னக்
கஞ்சமா முனிவனன்ன முனிவனும் கருத்துட் கொண்டான்.

"அஞ்ஞானம் போன்ற, அதாவது மையைப் போன்ற திருமேனியை உடைய ராமபிரானுடைய திருவடித் தூசி பட்டதும் அகல்யை முன்னை அழகுடனும் தூய்மையுடனும் எழுந்து நின்ருள். இவள் (நெஞ்சினுல் பிழைப்பிலாள்) மனத்துக்குத் தெரிந்து தவறு செய்தவளில்லை, அழைத்துக் கொள்" என விசுவாமித்திரன் கூற, கௌதமனும் ஒப்புக் கொண்டான்.

இது கம்பன் வாக்கு. கற்பிழந்தவளை ஏற்றுக் கொள் எனச் சொல்வது பண்பாட்டுக்குக் குறைவு என்று நினைத்த கம்பன், 'நெஞ்சினுல் பிழைப்பிலாள்' என்று சப்பைக்கட்டுக் கட்டுகிருன். வால்மீகி - 'தேவராஜ 'குதூஹலாத்', 'மதிம் சகார' - தேவராஜன் என்ற குதூகலத்தில் மனத்தை அவனிடம் செலுத்தினுள் என்கிருர். இப்படி சற்று மாறுபட்டுப் பேசிய கம்பன், பின்னுலும் சில இடங்களில் அவன் காலத்துத் தமிழர் பண்பாட்டை யொட்டி மூல நூலிலிருந்து மாறுபட்டுப் பேசுகிருன்.

7. மன்மதன் பைத்தியம்

ஒரு சமயம் மன்மதனுக்குப் பைத்தியம் பிடித்தது. தானும் ஒரு பெரிய ஓவியனுக வேண்டுமென்ற பித்து ஏற்பட்டது. இந்தப் பேராசையின் விளைவாக, ஒரு கிண்ணத்தில் அமிருதத்தை கையில் எடுத்துக் கொண்டான். சித்திரம் வரையும் கோலையும் எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டான். சீதையின் உருவத்தை, அவயவங்களை, அழகு நுட்பங்களை சித்திரமாகத் தீட்ட முற்பட்டான். ஆனுல்

Koviloor Digital Library

ஒவ்வொரு அவயவத்தைப் பார்த்ததும் பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டான். சித்திரத்தைத் தீட்ட முடியாமல், அவனே சித்திரமாய், சிலையாய் அமைந்து விட்டான். இப்படி மன்மதனையும் மண்ணைக் கவ்வவைத்த திருமகளான சீதாப்பிராட்டியை உடையதாலேயே, பொன் மதிலுடன் பொலிந்து விளங்கும் மிதிலை நகரத்துக்குள், விசுவாமித்திர முனிவனும், ராமனும், லட்சுமணனும் புகுந்தனர். அந்நகரச் சிறப்பைச் சீதையின் அழகுடன் இணைத்து மேற்கண்டவாறு கற்பனை செய்கிறான் கவி.

ஆதரித்து அமுதத்தில் கோல் தோய்த்து அவயவம்
அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்குமல்லால் மதனற்கும் எழுதவொண்ணு
சீதையைத் தருதலாலே திருமகள் இருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதில் மிதிலை புக்கார்.

அமுதத்திலே கோல் தோய்த்து மதனனுக்கும் சித்திரத்தை வடிக்கவொண்ணாத அவயங்களின் அழகைப் பெற்ற சீதையைப் பெற்றதாலேயே பொலிவைப் பெற்ற, பொன் மதிலையுடைய மிதிலைக்குள் முனிவனுடன் நம்பியும் தம்பியும் நுழைந்தனர். இங்கு கம்பன், 'சீதையைப் பெற்றதாலே' எனக் கூறாமல் 'சீதையைத் தருதலாலே'' எனக் கூறி, ''உனக்குத் தருவதற்காகச் சீதையை வைத்திருக்கிறேன், வா'' என்று ராமனை அம்மாநகர் அழைப்பதாக, பின்வரும் கட்டத்தை முன்கூட்டிச் சொல்கிறான்.

மிதிலைக் காட்சிப் படலத்தின் முதற் பாட்டிலேயே,

''மையறு மலரில் நீங்கி யான்செய் மாதவத்தில்வந்து
செய்யவள் இருந்தாள்......''

'ஐயனே! யான் செய்த மாதவத்தில் திருமகள் தனது தாமரைப் பூவை விட்டு இங்கு என்னிடம் வந்து உறைகிறாள். ஆகையால் வா வா'' என்று அந்நகரின் கொடிகள் அழைப்பதாகவும் கவி கூறுகிறான்.

Koviloor Digital Library

இப்படிச் சீதை இருப்பதைக் காட்டி ராமனைக் கவி இழுக்க, காந்தத்தால் இழுக்கப்பட்ட ஊசியென ராமன் அந்த நகர வீதியிலே நடந்தான். இளையவனுடனும் முனிவனுடனும் அப்படிச் செல்கையிலே, நகரத்தில் மாதர்கள் நடனமாடும் அரங்குகளை அம்மூவரும் கண்டார்கள். மாதர்கள் ஊஞ்சலாடும் காட்சிகளைக் கண்டார்கள். சில இடங்களில் பெண்களைப் பார்க்க முடியாவிட்டாலும் மாளிகைக் குள்ளிருந்து வந்த கீதங்களைச் செவிகளாற் பருகினார்கள்.

சில இடங்களில் அழகிய பெண்கள் பந்தாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆடிய பந்துகள் அவர்கள் மைக்கண் பார்வை பட்டபோது மைபோல் கறுத்தும், கையில் பிடிபடும் போது அக்கையின் நிறம்போல் சிவந்தும் காணப்பட்டன. இதனால் பந்துகளின் உண்மை நிறம் தெரியவில்லை. விலைமாதர்கள் ஆடவர்களுடன் கூடும்போது, தமது குணத்தைக் காட்டாமல் அவர்களிடமிருந்து செல்வத்தைப் பறிப்பது போல, அந்தப் பந்துகளும் தமது வண்ணத்தைக் காட்டாது, மாதர்களின் விழியின் கருமையையும், கையின் சிவப்பையும் கவர்ந்துகொண்டன என்று சிறப்பிக்கிறான் கவி.

மற்றும் சில இடங்களில் மிதிலை நகரத்து மாதர்கள் நீராடிக் கொண்டிருந்தார்கள். அதையும் கண்டார்கள் மூவரும். இப்படி அந்த மாநகரின் சிறப்பைப் பார்த்துக் கொண்டு, அரண்மனைப் புறத்தை அடைந்த அம்மூவரும், அரண்மனையிலுள்ள கன்னி மாடத்தையும் கண்டனர். அந்தக் கன்னி மாடம் எப்படியிருந்தது?

பொன்னும் அது வீசும் ஒளியும் கலந்த நிலை என்ன? பூவும் அதன் நறுமணமும் கலந்த நிலை என்ன? அந்தப் பூவில் வண்டுகள் உண்ணும் தேன் இருக்கிறதே, அந்தத் தேனும் அதன் இனிய சுவையும் இணைந்திருக்கும் நிலை என்ன? செஞ்சொல கவி இன்பம்-செம்மையான சொற்களினால் அமைக்கப் பட்ட கவியும் அதன் ரசமும் சேர்ந்திருக்கும் நிலை என்ன?

Koviloor Digital Library

இந்த நிலையில் அந்தக் கன்னிமாடம் இருந்தது. பொன்னும் ஒளியும் போல, மலரும் மணமும் போல, தேனும் சுவையும் போல, எல்லாவற்றையும்விடச் சிறந்த கவியும் ரசமும் போல சீதை உறையும் அக்கன்னி மாடம் இருந்தது என்று, கவிச் சிறப்பால் கன்னிமாடச் சிறப்பை வர்ணிக்கிறுன் கவிச் சக்கரவர்த்தி.

பொன்னின் சோதி போதின் இன் நாற்றம் பொலிவே போல்
தென் உண் தேனின் தீஞ்சுவைச் செஞ்சொல் கவியின்பம்
கன்னிம் மாடத்து உம்பரின் மாடே களிபேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு ஆங்கு அயல் நின்ருர்

இத்தகைய கன்னி மாடத்தின் மேலிடத்தின் முன் பாகத்தில் களிப்புடைய பேடுகளோடுடாடும் (பெண் அன்னங்களோடு) ஆண் அன்னங்கள் கூடி விளையாடிக் கொண்டிருந்தன. அந்த இடத்தைக்கண்டு அசந்து அங்கு மூவரும் நின்ருர்கள். அந்தக் கன்னி மாடத்துள்ளே இருக்கிற சீதையைப்பற்றி என் சொல்ல? பிராட்டி எப்படித்தான் இருப்பாள்?

இந்த இடத்தில் கவி தன் சாதுரியம் முழுவதையும் காட்டுகிறுன். சமஸ்கிருதத்தில் கவியமைப்பில் உபமானம் உபமேயம் என இரண்டு சொற்கள் உண்டு. உபமானம் என்பது உவமை; உபமேயம் என்பது எதற்கு உவமை சொல்லப்படுகிறதோ அந்தப் பொருள் அந்த உபமேயம் சீதை எனச் சொல்கிறுன் கம்பன். ஒரு பெண்ணின் அழகை, சிறப்பைச் சொல்ல வேண்டுமானுல் மகா லட்சுமி போலிருக்கிருள் என்று உவமை சொல்லலாம். மகாலட்சுமி யாரைப் போலிருக்கிருள் என்ருல் மகா லட்சுமியைப் போலிருக்கிருள் என்று தான் சொல்ல முடியும். உபமேயத்துக்கு உபமானம் கிடையாது. அப்படியிருந்தாள் சீதை.

செப்புங்காலே செங்கமலத்தோன் முதல் யாரும்
ஒப்பு எண்பால் உம் கொண்டு உவமிப்போர் உவமிக்கும்
பெண்தானே ஆயினபோது இங்கு அயல் வேறு ஓர்
ஒப்பெங்கே கொண்டு எவ்வகை நாடி உரை செய்வோம்

Koviloor Digital Library

செப்புங்காலே-சீதாப் பிராட்டியின் அழகுக்கு உவமை சொல்லப் புகுந்தால், செங்கமலத்தில் தோன்றிய பிரும்மா முதல் சாதாரண மனிதர் வரை பெண்களுக்கு ஒப்புச் (உவமை) சொல்லும்போது பெரிதும் ஆராய்ந்து ஓர் உவமை சொல்வார்கள். அந்த ஆராய்ச்சியின் மூலப் பொருளான திருமகளே சீதையானபோது, அவளுக்கு 'எவ்வகை நாடி உரை செய்வோம்', எதைப் பார்த்து உவமை சொல்வோம் என்று திகைக்கும்படியாகச் சீதை இருந்தாள் என்கிருன் கவி.

இருப்பினும், கவிக்குச் சபலம் தட்டுகிறது. ஆகவே அடுத்த பாடல்களில் வர்ணிப்புக்கு அப்பாற்பட்ட சீதையின் அழகை வர்ணிக்கவே செய்கிருன்.

உமையா ளொக்கும் மங்கையர் உச்சிக்கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர்...

பார்வதிதேவியும் அவளைப் போன்ற மற்ருேரும் பார்த்த மாத்திரத்தில் சிரத்தின்மீது கை குவிக்கும் கமையாள் (பொறுமை நிறைந்தவளான) சீதாப்பிராட்டியின் மேனி அழகைக் கண்டவர் நிலையென்ன? அவர்கள் தேவர்களா யிருந்தால் வருந்துவார்கள். ''இமை கொட்டாததாலே தொடர்ந்து பார்க்க முடிந்தாலும், சீதாப்பிராட்டியின் அழகைக் காண இரண்டு கண்கள் போதாவே'' என்று அமரர்கள் வருந்துவார்கள், என்கிருன் கம்பன்.

இமையா நாட்டம் பெற்றனம் என்ருல்
இருகண்ணுல் அமையாதென்ருர் அந்தர வானத்தவர் எல்லாம்

'இமைக்காத கண்ணைப் பெற்ருல் என்ன பயன்? சீதாப் பிராட்டியின் அழகைப் பார்க்க இரு கண்கள் போதாவே என்பர் அந்தரத்துள்ள வானவர்' என்பது பாட்டு.

இதே பொருளை அருணுசலக் கவியும் ராமநாடகத்தில் சொல்கிருர். ''ராவணு! சீதையைக் காண உந்தன் இருபது

Koviloor Digital Library

கண் போதுமோ? காண வேணும் லட்சம் கண்கள், சீதா தேவியின் காலுக்கு நிகரோ பெண்கள்'' என்கிறார் நாடகக் கவியும்.

அந்தச் சமயத்தில் கன்னி மாடத்தின் முகப்பிலே தோன்றினாள் சீதை. அந்த முன் மாடத்திலே அவள் நின்ற அழகைக் கண்டு வியக்கிறான் கவி.

கொல்லும் வேல், கொல்லும் கூற்றுவனான யமன், இப்படிக் கொலைத் தொழில் புரிகின்ற எல்லாவற்றையும் வெல்லும் விழிகளைப் படைத்த சீதை வந்து நின்றாள். சொல்லுக்கும் அப்பாற்பட்ட சீதை சுவர்களும், மலைகளும், புல் பூண்டுகளும் கண்ட மாத்திரத்தில் உருகும் அழகுடன் நின்றாள்.

கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்னுமதற்கே விழி கொண்டாள்
சொல்லும் தன்மைத் தன்றது குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லும் கண்டு உருகப் பெண் கனி நின்றாள்.

இப்படி நின்றாள்—பெண்ணாகிய கனி. கனி என்றதாலே அனுபவிப்பதற்கு உரிய நிலையையும் சீதை எய்தியிருந்தாள் என்று கவி சூசகமாகச் சொல்கிறான். அப்படி நின்ற கனியைக் கவ்வின ராமனின் கமல நயனங்கள். அவள் நயனங்கள் மட்டும் வாளாவிருந்தனவா என்ன? இல்லை. இல்லை!

8. கூடுவிட்டுக் கூடு பாய்தல்

கன்னி மாடத்து உப்பரிகை முகப்பிலே நின்ற பிராட்டியை ராமபிரான் நோக்கியபோது, அவள் விழிகளும் வாளாவிருக்கவில்லை. 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்கிறான் கவி. அந்த நோக்கு எப்படி இருந்தது? மனத்தினாலும் நினைக்க முடியாத அழகைப் பெற்ற ஜானகியின்

Koviloor Digital Library

கண்கள் ராமன் கண்களைக் கவ்வ, இருவர் கண்களும் ஒன்றை யொன்று கவ்வி உண்ண, 'உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட, அக்கண்களின் ஒன்றுபட்ட நிலையிலே இருவர் உணர்ச்சிகளும் ஒன்றுபட்டன.'

கண்கள் ஒன்றுபட்டதால் உணர்ச்சிகள் ஒன்றுபட்ட நிலையில், நோக்கும் சாதாரண நோக்காயில்லாமல் காதல் நோக்காயிற்று. பிராட்டியின் கண்கள் ராமபிரான் கண்களை விட்டுச் சற்று அகன்றதும், வலிமையான ராமனது தோள் களிலே பதிந்தன. ஆனால் ராமன் பார்வையோ,

வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே

ஒளி பரப்பக்கூடிய வீரக்கழலை அணிந்த வீரனான ராமனின் செங்கண்களும், மோகினியை யொத்த பிராட்டியினது தனங்களில் (கொங்கைகளில்) அம்புகளெனத் தைத்தன. அப்படிக் கூர்ந்து நோக்கினான் ராமபிரான்.

இப்படி ஒருவரை யொருவர் கண்டதால் ஏற்பட்டது மாறிய ஒரு நிலை. இருவரும் கூடு விட்டுக் கூடுபாய்தல் நிலையை எய்தினார்கள்.

பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை யொருவர் தம்முள்ளம் ஈர்த்ததால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்.

சீதையும் ராமனும் ஒருவரையொருவர் நோக்கி, பரஸ் பரம் அழகைப் பருகியதால், அன்புப் பாசம் இருவரையும் பிணிக்கவே, ஒருவர் உள்ளம் இன்னொருவர் உள்ளத்தை இழுத்தது. அப்படி ஈர்த்ததால், சிறந்த வில்லையுடைய ராம பிரான் இதயத்துக்குள் சீதை புக, சீதையின் இதயத்துக்குள் ராமன் புகுந்தான். இப்படிக் கூடுவிட்டுக் கூடு பாய்வது போல்

Koviloor Digital Library

இருவரும் 'மாறிப்புக்கு இதயம் எய்தினர், இதயங்களிலே மாறிப் பாய்ந்து விட்டார்கள்.

இப்படி மாறிவிட்ட நிலையில், இருவரும் மௌனமாக ஒருவர் அழகை ஒருவர் பருகினர்களே யொழியப் பேசவே முற்படவில்லை. பேச்சு எதற்கு என்று கேட்கிறான் கவி.

கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினல் பேசல் வேண்டுமோ?

ஏற்கனவே இருவரும் கடலில் அரவணைப் படுக்கையில் கலவி செய்து பிரிந்தவர்கள்; மீண்டும்.சந்திக்கிறார்கள் இங்கே. அப்படிப் பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ? என்று கேட்ட கவி, இருவருடைய அவதார விசேஷத்தையும் விளக்கு கிறான்.

இந்த நிலையிலே முனிவன் அழைக்க, ராமன் அவன் பின் சென்றான். அந்தமில்லாத அழகையுடைய ராமனை அணைய முடியாததால் பைங்கொடியான சீதை ஓவியப் பாவையானுள், சிலையென நின்றுவிட்டாள். ஏனென்றால் அவள் சிந்தையும் மன உறுதியும் முனிவன் பின்னே சென்று, கண்களுக்கு மறைந்து விட்ட ராமன் பின்னே சென்று விட்டன.

இப்படி நினைவையெல்லாம் ராமனிடம் பறி கொடுத்து நின்றாள் சீதை. எங்கிருந்தோ வந்தானொரு கட்டழகன். அவனைப் பார்த்தாள் சீதை. காதலும் கொண்டாள்; நிலையிழந்தாள். அப்படியானல் அவள் கற்பு என்ன ஆவது? அவன் யாரோ? வில்லை விளைக்க முடியுமோ என்னவோ அப்படிச் சுல்கத்தை வளைக்கா விட்டால் கடிமணம் புரிய முடியாது. இப்படியிருக்கச் சீதை எப்படி மனத்தை அவனிடம் செலுத்தினள்?

பிறைநுதல் அவள் பெண்மை என்படும்
நறைகமழ் அலங்கலான் நயனகோசரம்
மறைதலும் மனம் எனும் மத்த யானையின்
நிறை எனும் அங்குசம் நிமிர்ந்து போயதே.

Koviloor Digital Library

"நறை கமழ் அலங்கலான் - நறுமணம் கமழும் மாலைகளை அணிந்த ராமனின் - நயனங்கள் மறைந்தவுடன், சீதையின் மனம் எனும் மதம் பிடித்த யானை, நாணமெனும் அங்குசத்தை உதறித்தள்ளி ராமனுடன் போய் விட்டதால், இனி அவள் பெண்மை என் படும்?" என்று கவி கேட்கிறான்.

இந்த இடத்தில் கவி சீதையின் முக அழகைச் சொல்லும் போது, 'பிறைநுதலவள்' என்று குறிப்பிடுகிறான். முழுச் சந்திரனுக்குத்தான் களங்கம் உண்டு. பிறைச் சந்திரனில் களங்கம் கிடையாது. ஆகையால் நாணம் எனும் அங்கு சத்தை அவள் உதறித் தள்ளினாலும், உள்ளம் களங்கம் பெறவில்லை என்பதை உணர்த்த ('பிறைநுதலவள்') பிறைச் சந்திரனைப்போன்ற நுதலை உடையவள் என்று சிறப்பிக்கிறான் கவிச் சக்கரவர்த்தி.

ராமனின் அழகைப் பார்த்ததால் சீதை அவள் இடையைப் போல் தளர்ந்து போனாள். கண் எனும் வாய்க்கால் வழிப் பாய்ந்த காமநோய் அவள் உடலெங்கும் பரந்தது. எப்படிக் கலந்தது;

பால் உறு பிரை எனப் பரந்தது எங்குமே

பாலில் சிறிய மோர்த்துளியை விட்டால், அது பால் முழுவதும் பரந்து எப்படிப் பாலையே மாற்றி விடுமோ அப்படி மாற்றி விட்டது. சீதையை ராமன் பார்வை என்று, கவி உவமை கூறுகிறான்.

இந்த விரகதாபத்தால் தனது மேகலாபரணங்களையும், மன உறுதியையும், சங்கு வளையல்களையும், அறிவையும், அனைத்தையுமே இழந்தாள் ஜானகி.

இமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறியள் ஆயினள்

அமரர்கள் கடைந்த மாத்திரத்தில் தன்னிடமிருந்த சகலத்தையும் கொடுத்துவிட்ட கடலைப்போல் வறுமையுடை

Koviloor Digital Library

யவளானுள் பிராட்டி. படுக்கையிலே விரக தாபத்தால் துவண்ட சிதையின் மார்பிலே வியர்வைத் துளிகள் தோன்றின. அவை,

> மலை மிசை தடத்தகு மழைக்கண் ஆவி போல்
> முலை முகட்டு உதிர்ந்தன

மலைமீது சிந்துகிற மழைத் தூற்றலைப் போல், அவள் மார்பின் வியர்வை, மார்பின் முகடுகளில் முத்துக்களைப் போல் தோன்றின.

இந்தச் சமயத்திலே சந்திரன் வேறு சாளரங்கள் வழியாக அந்தப் பெண்பாலின் பூவுடலின்மீது தனது பால்கிரணங்களை ஏவினுன். அதனுல் அவள் வெப்பம் அதிகமாயிற்றே தவிரக் குறைந்த பாடில்லை. அந்தக் காம உஷ்ணத்தைத் தவிர்க்கச் சிதையின் தோழிகள் சந்தனத்தை எடுத்து அவள் உடம்பின் மீது பூசினுர்கள்.

> பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
> வீச வீச வெதும்பினள் மென்முலை
> ஆசை நோய்க்கு மருந்தும் உண்டு ஆம்கொலோ?

அப்படி அவர்கள் சந்தனம் பூசப்பூசச் சீதை வெதும்பித் தவித்தாள். பிறகு கவரி கொண்டு வீசினுர்கள். அவர்கள் வீச வீச அவள் மென்மையான முலைத்தடங்களில் வெப்பம் அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. ஆசை நோய்க்கு மருந்தும் உண்டா? என்று கவி கேட்கிருன்.

இவள் நிலை இப்படியிருக்க, இவளை மனச்சிறையில் வைத்துச் சென்ற இராமபிரான் நிலை எப்படியிருந்தது? அன்றிரவில் முனிவனுடனும் தம்பி இலக்குவனுடனும் படுக்கையில் படுத்த இராமபிரான் திருவுள்ளம் தனிமை பெற்றது. மற்ற இருவரையும் மறந்தான் இராமபிரான். அந்த இடத்திலே தானும் சிதையும் தனித்துப் படுத்திருப்பதைப் போல் எண்ணினுன்.

Koviloor Digital Library

தானும் அத் தையலும் ஆயினன்

அப்படி ஆனதாலே ஏங்குகிறான், 'அவள் பொற் கலசங்கள் என் மார்பில் பதியவில்லை யானாலும், புன் சிரிப்பையுடைய அதரங்களுடைய அவள் முகத்தை நான் மீண்டும் பார்க்கும் காலம் வருமா?'' என்று.

வண்ண மேகலை தேர் ஒன்று வாள் நெடுங்
கண்ணிரண்டு கதிமுலைதாம் இரண்டு
உள் நிவந்த நகையும் என்று ஒன்று உண்டால்
எண்ணும் கூற்றினுக்கு இத்தனை வேண்டுமோ?

''அவள் அழகிய மேகலாபரணம், தேர்த்தட்டுப் போன்ற அல்குல், வாளைப் போன்று நீண்ட கண்கள், பருத்த இரண்டு தனங்கள், வாயினுள்ளே அடங்கிய சிரிப்பு. அடடா எத்தனை ஆயுதங்கள்! என்னைக் கொல்ல எண்ணும் யமனுக்கு இத்தனை ஆயுதங்கள் வேண்டுமோ?'' என்று தவிக்கிறான் அண்ணல்.

இப்படி நினைத்த ராமபிரான் எண்ணத்தில் இன்னொரு தர்மசிந்தனையும் தோன்றுகிறது. 'இப்படி என்மனம் இன்னொரு பெண்ணிடத்தில் ஈடுபடுகிறதே, அவள் யாரோ என்னவோ? இது தருமமா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

ஆகுநல்வழி அல்வழி என்மனம் ஆகுமோ...

''எனக்குத் தகுதியல்லாத பெண்ணிடம் என் மனம் எப்படி ஈடுபடும்? நல்வழி அல்லாத தீயவழியில் என் மனம் ஆகுமோ? ஆகாது. ஆகையால் அவள் நான் கைப்பிடிக்கக்கூடிய ராஜ கன்னிகைதான்; சந்தேகமில்லை'' என்று நினைக்கிறான்.

காளிதாஸன் 'சாகுந்தல'த்திலும் இப்படியொரு நிலையையே காட்டுகிறான். துஷ்யந்தன் சகுந்தலையிடம் மனத்தைப் பறி கொடுத்தான். அது சரியா என்று ஆலோசிக்கிறான். அப்பொழுது தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான் இப்படி.

Koviloor Digital Library

ஸகாம்ஹி ஸந்தேகபதேஷு வஸ்துஷு
ப்ரமாணம் அந்தக் கரண ப்ரவ்ருத்தய:

'சத்புருஷர்களுக்குச் சிறந்த பிரமாணம் அவர்கள் அந்தக் கரணமே. சத்துக்களின் மனம் சந்தேக வழியில் செல்வதில்லை. ஆகவே இந்தப் பெண்ணை அடைய எண்ணியதில் தவறில்லை' என்று துஷ்யந்தன் எண்ணியதாக காளிதாஸன் சொல்லுகிருன்.

எண்ணம் தவறில்லை என்பதை அடுத்த நிகழ்ச்சிகள் நிருபிக்கின்றன. இராகவன் வில்லை முறிக்க, தசரதர் முதலானேர் கூடிய மண்டபத்தில் சீதையை ராமனிடம் கையைப் பிடித்துக் கொடுக்கிருன் ஜனகன்.

இராமபிரான் முன்னின்று ஜனகன், "நீயும் இவளும் திருமகளும் திருமாலும் போல் வாழ்க" எனச் சீதையைத் தாரைவார்த்துக் கொடுத்தான். இராமனும் சீதையின் தளிர்க்கை பிடித்தான். அவன் அவள் கைத்தலம் பற்றி அக்னியை வலம் வந்தாள். அப்பொழுது சீதை அவனைத் தொடர்ந்து நடந்தாள்.

மடம்படு சிந்தையின் மாறு பிறப்பில்
உடம்பு உயிரைத் தொடர்கின்றதை ஒத்தாள்

மாறி மாறி வரும் பிறப்புகளிலே உடம்பு உயிரைத் தொடருமாயின் அது எப்படியிருக்குமோ, அப்படித் தொடர்ந்தாள் சீதை இராமபிரானை. உயிர் அவனிடம் ஆட்பட்டு விட்டதாலே, அவள் உடல் அவனைத் தொடர்ந்து சென்றது என்கிருன் கவி.

வால்மீகி சீதா கல்யாண கட்டத்தில், ஜனகன் சொல்கிருன் ராமனைப் பார்த்து,

இயம்ஸிதா மமஸுதா ஸஹதர்ம சரீதவ
ப்ரீதச்சதைநாம் பத்ரந்தே பாணிம் க்ருண்ஹீஷ்வபணிஞ

"இராமா! என் பெண்ணுன இந்த சீதை தர்மத்தைப் பின் பற்றுபவள்; உன்கையால் இவள் கையைப் பிடித்துக் கொள்" என்கிருன்.

Koviloor Digital Library

பதிவ்ரதா மஹபாகா சாயேவ அனுகதாஸதா

"இவள் பதிவிரதை. நிழல் எப்படி உடம்பைத் தொடருமோ அப்படி உன்னைச் சகலத்திலும் தொடர்ந்து வருவாள்" என்றும் கூறுகிறுன் ஜனக சக்கரவர்த்தி.

'உடம்பைத் தொடரும் நிழலைப் போல்' என்று உவமை சொன்னுர் வால்மீகி. 'உயிரைத் தொடரும் உடம்புபோல் உன்னைத் தொடருவாள்' என்று கம்பர் சிறிது மிகையாகவே சொல்கிறுர். பரம்பொருள் ஒன்றுதான் உயிர், மற்றவை எல்லாம் சரீரம் என்ற தத்துவத்தையும், கம்பன் காவியம் எடுத்துக் காட்டுகிறது.

இப்படி நடந்த சீதாராம விவாகத்தை வானிலிருந்து கண்ட வானவர் பூ மழை பொழிந்தனர்.

9. கூனி தோன்றினுள்

ஓங்காரத்தின் மெய்ப்பொருளான ராம பிரானுக்கு ஓவியத்தில் எழுதவொண்ணு உருவத்தாளான சீதாப் பிராட்டியையும், இலக்குவனுக்கு ஜனகனின் இன்னெரு மகளான ஊர்மிளையையும், ஜனகன் தம்பி குசத்வஜன் பெண்களான மாண்டவி, சுருதகீர்த்தி இருவரையும் முறையே பரத, சத்ருக்கனர்களுக்கும் திருமணம் புரிந்துகொண்டு அயோத்தியை நாடிய தசரதன், முதன்முதலாக பரதனையும் சத்ருக்கனையும் பரதன் மாமன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். இராமாயணம் மேற்கொண்டு நடக்கவும் அமரர்கள் அபீஷ்டம் நிறை வேறவும் தசரதனுக்கு இந்தப் புத்தி முதன் முதலாகத் தோன்றியது. இரண்டாவதாக தசரதன் தனது அழகைக் கண்ணுடியில் பார்த்துக் கொண்டான். தேவ காரியம் நிறைவேற விதி வகுத்த இரண்டாவது நிகழ்ச்சி இது.

Koviloor Digital Library

முதல் நிகழ்ச்சியைக் கொண்டு வால்மீகி தமது அயோத்தியா காண்டத்தைத் தொடங்குகிருர் :

கச்சதா மாதுலகுலம் பரதேன ததானக :
சத்ருக்னே நிச்ய சத்ருக்ன : நீத : ப்ரீதீ புரஸ் க்ருத :

''மாமன் வீட்டுக்குப் போகின்ற பரதனுல், நித்ய சத்ருக்களான இந்திரியங்களை ஜயித்தவனும் பாபமில்லாதவனுமான சத்ருக்னன், ப்ரீதியின் காரணமாக உடனழைத்துச் செல்லப்பட்டான்'' எனறு மகரிஷி, தமது அயோத்தியா காண்டத்தை ஆரம்பிக்கிருர். அதுவும் 'கச்சதா'— போகின்ற என்ற சொல்லைக் கொண்டு துவங்குகிருர். கவிச்சொல் தெய்வச் சொல் என்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை. அயோத்தியா காண்டத்தில் எல்லாமே 'கச்சதா'தான், அதாவது 'போன' விஷயந்தான். ராமனுக்கு அரசு போயிற்று; தசரதனுக்கு உயிர் போயிற்று; ராஜ மகரிஷிகளுக்கு மங்கலம் போயிற்று; மக்களுக்கு மகிழ்ச்சி போயிற்று. ஏன்? அயோத்தியே காலியாகி நந்திக் கிராமத்துக்குப் போய் விட்டது!

இப்படிப் 'போகும்' நிலை கொண்டு மகரிஷி அயோத்தியா காண்டத்தைத் துவங்கினுரென்ருல் 'வந்த' ஒரு நிலைகொண்டு கம்பன் அதே காண்டத்தைத் துவங்கினுன். என்ன வந்தது? தசரதனுக்கு அது வந்தது எப்படித் தெரிந்தது? யாருக்கு? ஒரே ஒரு நரை மயிர் வந்தது. தசரதன் கண்ணுடி பார்த்ததால் தெரிந்தது. இந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்காவிட்டால், தசரதன் ராம பட்டாபிஷேகத்தைப் பற்றி நினைத்திருக்கப் போவதில்லை. அதை நினைக்கவில்லையானுல், இராமாயணம் அடுத்த கட்டத்திற்குப் போயிருக்காது.

மன்னனே அவனியை மகனுக்கு ஈந்து நீ
பன்னரும் தவம்புரி பருவம் ஈதெனக்
கன்ன மூலத்தினில் கழற வந்ததென
மின்னெனக் கருமைபோய் வெளுத்ததோர் மயிர்.

Koviloor Digital Library

"மன்னனே தசரதா! நீ ஆளும் பூமியை மகனுக்குக் கொடுத்துவிட்டுச் சொல்லுக்கும் மீறிய சிறப்புடைய தவத்தைச் செய்வதற்கு ஏற்ற பருவம் இது என்று சொல்ல வந்ததுபோல், காதுக் கருகில் கருமை போய் மின்னலைப்போல் வெளுத்தது ஒரு மயிர்" இது எப்படித் தெரிந்தது தசரதனுக்கு?

தீங்கிழை இராவணன் செய்த தீமைதான்
ஆங்கொரு நரையது அணுகிற்ரும் எனப்
பாங்கில் வந்திடு நரை படிமக் கண்ணுடி
ஆங்கதில் கண்டனன் அவனி காவலன்.

"தீங்கை இழைக்கும் தன்மையையுடைய ராவணன் செய்த பாவமே அங்கு ஒரு நரையாக அணுகிற்று எனத் தோன்றும்படி, 'பாங்கில் வந்திடு' (தன்னிடத்தே வந்து சேர்ந்த) நரையை, படிமமாகிற கண்ணுடியில் தசரதன் பார்த்தான்" என்கிருன் கம்பன்.

இதே கருத்தை காளிதாசனும் ரகுவம்ச மகா காவியத்தில் கூறுகிருன் :

தம் கர்ண மூலம் ஆகத்ய ராமே ச்ரீ : ங்யஸ்யதாம் இதி
கைகேயி சங்கயா இவாஹ பலிதச் சத்மனு ஜரா

"கிழப் பருவம் கைகேயி இடத்தில் பயந்ததுபோல, நரை என்ற ரூபத்தில் அரசனது காதுக்கருகில் தோன்றி ராமனிடத்தில் ராஜ்யஸ்ரீயைக் கொடுத்துவிடு என்று சொல்லிற்று."

நரை சம்பந்தமான கருத்து இரு கவிகளுக்கும் ஒன்ருனலும் கம்பன் தன் கற்பனையில் ஒரு கண்ணுடியையும் கொண்டு வருகிருன். வயதானவர்கள் கண்ணுடி பார்ப்பது எத்தனை அனர்த்தம் என்பதை உணர்த்துகிருன் கவி. ஆனல் கம்பன் காலம் நம் காலத்துக்கு மிக முற்பட்டதாகையால், நரைத்த கிழவர்களுக்குள்ள கண்ணுடி மோகத்தையும், அழகு பார்க்கும்

Koviloor Digital Library

ஆசையையும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. நன்ருக வழுக்கை விழுந்து தலையில் தங்கியுள்ள ஓரிரு மயிர்களையும் சீப்பால் இழைய வாரிவிட்டுக் கொள்வதைக் கம்பனல் பார்க்க முடியவில்லை. வாரிய பின்பு அந்த மயிர்களைப் படிய வைக்க இடது கையால் அழுத்திக் கொடுப்பதைப் பார்க்கும் அதிருஷ்டமும் கம்பனுக்கு இல்லை. தவிர கம்பன் காலத்தில் வயதான வர்களுக்கு மட்டுமே நரை உண்டென்பதையும், இளம் காளை களுக்கும், இளநங்கையர்க்கும் அந்தச் சிறப்பு இல்லையென் பதையும் நாம் உணர்ந்து கொண்டால், கம்பன் நரையை ஒரு பொருட்டாக மதித்து தனது காவியத்தில் தனியிடம் கொடுத் ததன் காரணத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்படியாகக் கண்ணுடி பார்த்து, நரை பார்த்து, முதுமை வந்து விட்டதை உணர்ந்து, தனது இளவலுக்கு ராஜ்ய பட் டாபிஷேகம் செய்யத் தசரதன் தீர்மானித்தான். தீர்மானித் ததும் செயலிலும் இறங்கி, மந்திரி சபை கூட்டி, வசிட்ட முனி வனுடனும், மந்திரிகளுடனும் ராம ராஜ்யாபிஷேகத்தைக் குறித்து கலந்காலோசித்தான் "அறுபதினுயிரம் ஆண்டுகள் நான் உங்கள் துணை கொண்டு அரசு புரிந்தேன். இனி ராம னுக்கு அரசை நல்கி மாதவம் செய்ய வனம் புகுவேன். உங்கள் கருத்தென்ன?" என்று வினவினுன் தசரதன்.

இதைக் கேட்ட வசிஷ்டன்......

"புண்ணியம் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ணலே இனி அருந்தவம் இயற்றவும் அடுக்கும்"

"அண்ணலே! புண்ணியம் தொடரும் யாகங்கள் பல வற்றையும் நீ செய்திருக்கிருய். இனி நீ தவம் புரிவதும் சரியாகும்" என்று சொன்னுன். மந்திரிமார் கருத்தும் அவ்வித மேயெனச் சுமந்திரன் கூறவும், ராம பட்டாபிஷேகத்தை மறு நாளே நடத்தத் தசரதன் தீர்மானித்தான்.

இச் செய்தி கேட்ட மங்கையர் நால்வர் கோசலைக்கு அதனை அறிவிக்க விரைந்தனர்.

Koviloor Digital Library

ஆண்டு அந்நிலை ஆக அறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட ஓடினர் இட்டிடை இற்றிலர்

அவர்கள் எப்படி ஓடினார்கள் என்பதைக் கவி விவரிக்கிறான் அங்கு பட்டாபிஷேகச் செய்தியை அறிந்த நான்கு மங்கையர், அன்பு பூண்டவர்களாகவும், கச்சின் முடி அவிழ்ந்ததால் தத்தளிக்கும் தனங்களுடனும், இடையிலே தங்காத ஆடையுடனும், இட்டிடை (சிறுத்த இடை) இற்றுவிடும் போலவும் ஓடினார்கள், கோசலையிடம் மகிழ்ச்சி சேதி சொல்ல.

மங்கையரின் நிலை இப்படி; ஜகத் காரணனான ராமனுடைய தாயான கோசலையின் நிலை என்ன?

சிறக்கும் செல்வம் மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவகைக் கடல் பெட்பு அற
வறக்கும் ஆ வடவைக் கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்குமே.

மகன் பட்டாபிஷேகச் செய்தி கேட்ட கோசலைக்கு முதலில் சிறிது அச்சம் ஏற்பட்டது, தனது கணவன் அரசு துறக்கிறானே என்பதால். அதனால் ஏற்பட்ட துன்பத்தை மகன் செல்வம் சிறக்குமென்ற எண்ணத்தின் மகிழ்ச்சிக் கடல் மூழ்க அடித்தது, வடவாக்னியைப் பிரளயம் மூழ்கடிப்பது போல!

இந்தக் கவிதையில் கோசலையின் கற்பின் சிறப்பைச் சொல்கிறான் கவி. மகன் சாம்ராஜ்யாதிபதியாகப் போகிறான் என்ற செய்தியைக் கேட்டபோதுகூடப் பதிவிருதையான கோசலைக்குத் தனது கணவன் அரசு துறக்கிறானே என்ற அச்சம் ஏற்பட்டது என்பதால், கற்புடைய மாதரின் மன நிலையைக் கம்பன் எடுத்துக் காட்டுகிறான்.

இப்படி முதலில் எண்ணி, பிறகு ஏற்பட்ட மகிழ்ச்சியால் மங்கலச் செய்தி கொண்டு வந்தோர்க்கு வெகுமதி அளித்

Koviloor Digital Library

தாள். பிறகு சுமத்திரையோடு திருமாலின் கோயிலுக்குச் சென்று, மகனுக்குத் திருவருள் புரியப் பிரார்த்தித்தாள். தவசியர்க்குக் கோதானங்களைச் செய்தாள்.

இராமபிரான் பட்டாபிஷேகச் செய்தி கேட்டதும் மக்கள் மகிழ்ச்சியின் எல்லையை அடைகிறார்கள்.

"ஆர்த்தனர் களித்தனர் ஆடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம் மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்

என்றபடி மக்கள் ஆர்ப்பரிக்க நகரமும் அலங்கரிக்கப் பட்டது.

மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தென கமுகம் ஆர்ந்தன
தங்கொளி முறுவலில் தாமம் நான்றன
கொங்கையின் நிறைத்தன கனக கும்பமே.

மங்கையரின் தொடை போன்ற வாழை மரங்கள் கட்டப் பட்டன. அவர்கள் கழுத்துப்போல் கமுகும் (பாக்கு மரங்கள்) எங்கும் நிறைந்தன. அவர்கள் ஒளி தங்கும் சிரிப்புப் போல தாமம் (முத்து மாலைகள்) தொங்கின. அவர்கள் கொங்கை களைப் போல எங்கும் தங்கக் கலசங்கள் நிரப்பப்பட்டன.

இப்படிப் பல வகையிலும் சிங்காரிக்கப்பட்ட அந்நகரைக் கண்டாள் ஒருத்தி.

அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இயல்புஎனப் பொலியும் எல்லையில்
இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடும் மனக் கூனி தோன்றினாள்.

அந்நகர் அலங்கரிக்கப்படுகிற பேராரவாரத்தால் அது தேவலோகமோ என நினைக்கும்படி விளங்கியதால், உலகத்

Koviloor Digital Library

துக்கு இன்னல் செய்கின்ற இராவணனது தீமையே உருவெடுத்து வந்தது போல், (துன் அரும் கெடும் மனம்) இணையற்ற கொடுமையுள்ள மனத்தைப் பெற்ற கூனியானவள் தோன்றினுள். தன் தீயகண்களை அந்த மாநகரத்தின் மீதும் ஒருமுறை சுற்றவிட்டாள்,

10. கரைப்பார் கரைத்தால்...

அமைதியாயிருக்கும் குளத்து நீர் கலங்க வேண்டுமானுல் அது அந்த நீரால் கலங்குவதில்லை. ஒரு கல்லை எடுத்து அதில் போடவேண்டும். அதே போல் அமைதியாயிருக்கும் குடும்பமோ அரசோ கலங்க வேண்டுமானுல், அதற்குச் சம்பந்தப்படாத மூன்ருவது ஒரு சக்தி அவற்றுள் புகுந்து கலக்க வேண்டும். தசரதன் குடும்பத்தையும் அரசையும் கலக்க அப்படி ஒரு கூனி வந்து சேர்ந்தாள். அவள் எங்கு பிறந்தாள், எங்கிருந்து வந்தாள் என்பது யாருக்கும் தெரியாது. "யாதோ ஜாதா"—எங்கோ பிறந்தவள்—என்று வால்மீகி கூறுகிருர்.

> ஞாதி தாஸி யாதோ ஜாதா கைகேய்யாஸ்து ஸஹோஷிதா
> ப்ரஸாதம் சந்த்ரஸங்காசம் ஆருரோஹ யத்ருச்சயா

"கைகேயின் பந்துக்களின் வேலைக்காரியும், எங்கோ பிறந்தவளும், கைகேயின் கூடவே வசித்துக் கொண்டிருப்பவளுமான (மந்தரை என்பவள்) சந்திர மண்டலத்திற்கொப்பான (அரசமாளிகை) உப்பரிகையின் மேல் தற்செயலாக ஏறினுள்" என்பது வால்மீகி சுலோகம்.

விதி மனிதனுடைய வாழ்க்கையில் நுழையும்போது ஏன் நுழைகிறது, யார் மூலமாக நுழைகிறது என்பது தெரியவில்லை. யார் மூலமாகவோ தோன்றுகிறது; தற்செயலாகத் தோன்றுகிறது. அப்படியே விதியின் கரம் போன்ற ஊர்

Koviloor Digital Library

பேர் தெரியாத கூனியும் தற்செயலாக அரச மாளிகையின் உப்பரிகையின்மீது ஏறி அயோத்தியின் வீதிகளில் நடக்கும் அலங்காரங்கள்மீது தன் தீய கண்களை ஓடவிட்டாள். அந்த அலங்காரங்களின் காரணத்தை அறியமாட்டாமல் சற்று எட்ட இருந்த கோசலையின் செவிலித் தாயை நோக்கி, "இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு என்ன காரணம்?" என வினவினுள்.

"நாளை புஷ்ய நக்ஷத்திரத்தில் ராமனுக்கு யுவ ராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய சக்கரவர்த்தி முடிவு செய்திருக்கிருர்" என்று சொன்னுள் கோசலையின் செவிலி.

இதைக் கேட்ட கூனி, துடிக்கும் நெஞ்சுடனும் உள்ளத் திலே நிலைத்த கோபத்துடனும் உப்பரிகையினின்று சரசர வென்று இறங்கி கைகேயியின் அந்தப்புரத்துக்கு வெகு வேக மாக வந்தாள்.

நாற்கடல் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடல் படுதிரைப் பவளவல்லியே போல்...

"நான்கு சமுத்திரங்களிலும் உண்டாகும் ரத்தினங் களோடு கூடி, தாமரை போலவும், பாற்கடலிடையே விழுந்து கிடக்கும் பவளக் கொடி போலும், பஞ்சணையில் படுத்துக் கிடந்த கைகேயியை விரைவில் அடைந்த கூனியான வள், அவள் நித்திரையைக் கலைக்க அவள் பாதங்களை மெல்ல வருடினுள், அதனுல் கைகேயி சிறிது துயில் நீங்கவும், மந்தரை—

அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்
குணங்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணலும்
உணங்குவா யில்லை நீ உறங்குவாய் என்ருள்.

'அணங்குவாள்விட அரா!-துன்பம் செய்கின்ற வாள் போன்ற கடும் விஷத்தை உடைய பாம்பாகிய ராகு சமீபிக்கும் எல்லை வந்தும், குளிர்மதி எப்படி அசங்காமலிருக்கின்றதோ,

Koviloor Digital Library

அந்த மாதிரியே பெரிய இடர் அணுகும்போதும் நீ வருந்த மாட்டாய்; உறங்குவாய்'' என்று குற்றம் சாட்டினுள்.

கொடிய நஞ்சை யொத்த கூனி இவ்விதம் சொல்ல, ''பகைவரை வெல்லுகின்ற என் மைந்தர் நால்வரும் தருமம் தவருதிருக்க எனக்கு என்ன துன்பம் வர முடியும்?'' என்று கைகேயி வினவினுள். அறம் இருக்கும் வரையில் இடர் வராது என்பது அந்தக் கால நினைப்பு. தவிர வேறென்றும் சொன்னுள் கைகேயி:

பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவரும் துயரைவிட்டு உறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேதமே யென
இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ

என்ருள்.

''அடி மந்தரை! புகழ்வதற்குரிய் புதல்வரைப் பெற்ற யாவரும் வருவதற்கரிய துன்பமாயினும் அதைவிட்டு உறுதி காண்பார்கள். அப்படியிருக்க விராவரும் புவிக்கெல்லாம் (பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் தோன்றும் பூமிக்கெல்லாம்) வேதமேயெனத் திகழும் இராமனைப் பெற்ற எனக்கு இடர் உண்டோ?'' என்ருள்.

இப்படி இராமனைத் தன் புதல்வனுகவே கூறிய கைகேயியை நோக்கி—

வீழ்ந்தது நின்நலம் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியினல்...

''உன் நலம் வீழ்ந்தது; செல்வம் வீழ்ந்தது; கோசலை புத்திசாலித்தனத்தினுல் வாழ்ந்தனள்'' என்று இடித்துக் கூறினுள் கூனி.

இந்தக் குத்தலுக்கும் மசியவில்லை கைகேயி. கோசலைக் குக் கணவன் சக்கரவர்த்தி, மைந்தனே புகழ்தற்கும் அரிய கீர்த்தியை உடைய பரதன், அப்படியிருக்கக் கோசலைக்கு

Koviloor Digital Library

இன்னும் அதிகப்படியாக என்ன வாழ்வு வேண்டும்?" என்று கேட்டாள். ராமனைத் தன் மைந்தனுகக் கூறிய கைகேயி பரதனைக் கௌசல்யையின் மகனுகக் கூறி, தனது பரந்த மனத்தைக் காட்டினுள்.

இதைக் கேட்ட கூனி, "அடி பைத்தியக்காரி! நாளை இராமன் முடிசூடப் போகிறுன். கோசலைக்கு வந்த வாழ்வு இது. புரிந்து கொள்" என்ருள்.

கைகேயியின் மகிழ்ச்சியை இராம பட்டாபிஷேகச் செய்தி வானளவாகப் பெருகச் செய்யவே கூனிக்கு ஒளி வீசுகின்ற பெரிய ரத்தின மாலையை, "இந்தா இதை வாங்கிக் கொள்' என்று பரிசாக அளித்தாள் கேகயன் மகள்.

அந்த மாலையைக் கையில் வாங்கிய கூனி நெருப்புப் பொறி பறக்க கைகேயியைப் பார்த்தாள்.

அழித்தனள் அழுதனள் அப் பொன்மாலையால்
குழித்தனள் நிலத்தை அக்கொடிய கூனியே

அது மட்டுமல்லாமல் கைகேயியை வைதனள். தன் அலங்காரத்தை அழித்தனள். அழுதனள். அந்தப் பொன் மாலையைத் தரை குழிபடும் வகையில் வேகமாய்க் கீழே எறிந்தாள், அந்தக் கொடிய கூனி என்பவள்.

மேலும் கூனி, "இனி கோசலைக்கு நீ வேலைக்காரியாக வேண்டும். ஆனுல் அவள் வேலைக்காரிகளுக்குப் பணிவிடை செய்ய நான் விரும்பவில்லை. இராமன் சிங்காதனத்திருக்க உன் மகன் தரையில் நிற்பான். அதைக் காண எனக்கு இஷ்டமில்லை. கோசலை மைந்தன் சிறந்தனன். ஆனுல் உன் மகன் சாகவும் மாட்டாமல், பிழைக்கவும் மாட்டாமல் நடைப் பிணமாய் வாழப் போகிறுன். இதைவிட உன் மகனும் சத்துருக்கனும் காட்டுக்குப் போய்த் தவம் செய்யலாம்" என்று துர்ப்போதனை செய்தாள்,

Koviloor Digital Library

இப்படிப் பல சொல்லியும் மாருத கைகேயி கூனியைக் கடுங்கோபத்துடன் நோக்கி,

எனக்கு நல்லேயுமல்லே நீ என்மகன் பரதன்
தனக்கு நல்லேயுமல்லே அத்தருமமே நோக்கின்
உனக்கு நல்லேயுமல்லே வந்து ஊழ்வினே தூண்ட
மனக்கு நல்லன சொல்லினே மதியிலா மனத்தோய்

"மதியிலா மனத்தையுடைய கூனியே! நீ எனக்கு நன்மை செய்பவளுமல்ல; என் மகன் பரதனுக்கு நல்லது செய்பவளுமல்ல. தருமத்தை நோக்கினுல் உனக்கும் நல்லது இல்லே. ஊழ்வினே தூண்ட உன் மனத்துக்கு நல்லதாகத் தோன்றியவற்றைச் சொன்னுய்" என்று கடிந்து கொண்டாள்.

போதி என்னெதிர் நின்று நின் புன்பொறி நாவை
சேதியாது இது பொறுத்தனன்...

"என் எதிரிலிருந்து போய்விடு. அல்பமான பேச்சுப்பேசும் உன் நாவை அறுத்தெறியாமல் ·விட்டேன்" என்றும் சினந்து கூறினுள், தூய மனதையுடைய கைகேயி.

ஆனுல் மந்தரை விட்டாளில்லே. கைகேயியின் காலில் விழுந்து கதறினுள். "நீ சினந்தாலும் உனக்கு நல்லதைச் சொல்லாமல் விடேன்" என்ற மந்தரை, "மூத்தவருக்குத்தான் மகுடம் என்ருல் மூதுமை பூண்ட சக்கரவர்த்தி இருக்க இராமனுக்கு இப்போது முடிசூட்டுவானேன்? இராமனுக்கு முடி சூட்டினுல் உன் சக்களத்திக்குத்தானே பெருமை? தவிர மகுடம் பூண்ட பின் அவன் பார்த்துக் கொடுக்கும் சிறிய செல்வத்தில்தானே பரதன் பிழைப்பை நடத்த வேண்டும்? வேறு உரிமை பரதனுக்கு என்ன இருக்கிறது? இப்படி பரதனே வறுமை சூழ்ந்து கொண்டால், உன்னிடம் யாசிக்க வருபவர்களுக்கு நீ எதைக் கொடுப்பாய்? கோசலேயிடமிருந்து பிச்சை வாங்கிக் கொடுப்பாயோ? ஒரு வேளே பிச்சை வாங்க நாணி, இரப்பவர்களுக்கு இல்லேயெனப் போகச் சொல்வாயோ?" என்று வினவினுள்.

Koviloor Digital Library

இதற்கும் கைகேயி மசியாதிருக்கவே ஒரு தந்திரத்தைக் கையாண்டாள் மந்தரை. பிறந்தகத்திற்குத் தீங்கு வந்தால் பெண்கள் பொறுக்க மாட்டார்களாதலால், கைகேயியின் தந்தைக்கு நேரக்கூடிய ஆபத்தை எடுத்துரைத்தாள் :

காதல் உன் பெருங்கணவனை அஞ்சி அக்கனிவாய்
சீதை தந்தை உன் தாதையை தெறுகிலன் ராமன்
மாதுலன் அன்னவன் நுந்தைக்கு வாழ்வினி உண்டோ
பேதை உன் துணை யாருளர் பழிபடப் பிறந்தார்

"உன்னிடம் காதல் கொண்ட உன் பெருங்கணவனுக்கு அஞ்சி, சிவந்த அதரத்தையுடைய சீதையின் தந்தை உன் தந்தையை அழிக்கவில்லை. இனி உன் தந்தைக்கு வாழ்வு ஏது? உன்னைப்போல் நிந்தைப்படப் பிறந்தவர் யார்?" என்று கூறினாள். இனிமேல் சனகன் துணிவுடன் கைகேயியின் தந்தையை அழிக்கலாமெனவும் சுட்டிக் காட்டினாள்.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்றபடி கைகேயியின் மனமும் கரைந்தது. அதனால் 'சிறையிலிருந் தவள் ஏற்றத்தைச் சொல்லும்' இராமாயண காவியமும் உலகிற்கு கிடைத்தது.

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துறக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்

அரக்கர் செய்த பாவமும், தேவரும் முனிவரும் செய்த நல்லறமும் ஏவியதால், பரிசுத்தமான சொற்களைப் பேசும் மடமான் போன்ற கைகேயியின் மனமும் இரக்கத்தை இழந்தது.

Koviloor Digital Library

11. கோல் பிடித்த கை, கால் பிடித்தது

தூய மன முடையவளான கேகயன் மகள், கூனியின் துர்ப்போதனையில் மாறிய மனத்தினளாய் கூனியைக் விருப்பத்துடன் பார்த்தாள். "என் மகன் பரதனுக்கு நீள் முடி கிடைக்கும் வழியைச் சொல்" என்று கேட்டாள். அதைக் கேட்ட கூனி, "என் தோழி வல்லவள்" என்று கைகேயியைப் புகழ்ந்து, "என் சொற்படி கேட்டால் ஏழு உலகங்களையும் உன் மகனுக்கு உரிமையாகும்படி செய்வேன்" என்று கூறி, அதற்கான வழியையும் மொழியலுற்றாள். "குளிர்ந்த முத்துப் போல வெள்ளிய புன்முறுவலுடையவளே! முன்பு சம்பராசுரன் வதத்தின்போது சக்கரவர்த்தியான தசரதர் உனக்கு அருளிய இரண்டு வரங்களையும் இப்பொழுது கேள்" என்று சொல்லிக் கொடுத்தாள், உடலன்றி உள்ளமும் கோணிய கொடியவளான மந்தரை. மேலும் அவள் சொல்லுவாள் :

> இருவரத்தில் ஒன்றினால் அரசு கொண்டு இராமன்
> பெருவனத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
> திரிதரச் செய்வது ஒன்றினால் செழுநிலமெலாம்
> ஒருவழிப்படும் உன்மகற்கு உபாயம் ஈதென்றாள்

"அந்த இரு வரங்களில் ஒன்றினால் அரசை உன் மகனுடையதாகச் செய்து கொண்டு, இராமன் ஏழ் இரு பருவங்கள் (பதினான்கு வருடங்கள்) பெரு வனத்திடை திரிந்து அலையும்படி செய்தால், செழுமையான ராஜ்யமெல்லாம் உன் மகன் கைக்கு வரும். இதுதான் உபாயம்" என்றாள்.

இதைக் கேட்ட கைகேயி உள்ளம் பூரித்தாள். நல்ல மனசு கெடும்போது எத்தனை விபரீத நிலைக்குப் போக முடியும் என்பதற்கு கைகேயி ஓர் உதாரணமாக விளங்கினாள். எந்தக் கூனியை, "நீ எனக்கும் நல்லவளில்லை, என் மகனுக்கும் நல்ல

Koviloor Digital Library

வளில்லை'' என்று ஏசினுளோ, அந்தக் கூனியை இறுகத் தழுவிக் கொண்டாள். விலை மிகுந்த நவரத்தின மாலையையும், நிதிக் குவியலையும் கொடுத்தாள். ''கடல் சூழ்ந்த உலகத்தை யெல்லாம் என் மகனுக்குக் கொடுத்தாய். ஆதலால் தரைக்கு நாயகன் தாய் இனி நீ! உலகத்துக்கு அரசனுன பரதனுக்கு நீ தாய்; ராஜ மாதா'' என்றும் பாராட்டினுள் கைகேயி. ''பரதனுக்கு முடி சூட்டலும், ராமனைக் கானகத்துக்கு அனுப்புதலுமாகிய நல்ல யோசனையைச் சொன்னுய். அரசர் இவற்றுக்கு இணங்கவில்லையானுல் என் உயிரைத் துறப்பேன். இனி நீ போ''' என்று கூனிக்கு விடையும் கொடுத்தனுப்பினுள்.

கூனிபோன பின் குலமலர் குப்பை நின்று இழிந்தாள்
சோனைவார் குழல் கற்றையில் சொருகிய மாலை
வான மாமழை.நுழைதரும் மதி பிதிர்ப்பாள் போல்
தேன் அவாவுறு வண்டினம் அலமரச் சிதைத்தாள்

''கூனி சென்றபின் குலமலர்க் குப்பை நின்று (சிறந்த மலர் களால் நிரப்பப்பட்ட பஞ்சணையிலிருந்து) இறங்கினுள் கைகேயி. நீருண்ட மேகம்போல் கரியதாயிருந்த தனது வார்குழலில் சூட்டியிருந்த பூமாலையை மழைக் காலத்து மேகத்திலிருந்து சந்திரனைப் பிடுங்கி எறிபவள்போல் சிதைத்து எறிந்தாள்.'' இதனுல் தன் சௌபாக்கியம் போவதற்கான முதல்படியை கைகேயி தானே நிறைவேற்றிக் கொண்டாள். பிறகு மணியாரங்களை அறுத்து மணிகள் தனித் தனிச் சிதறும் படி எறிந்தாள். அவற்றுடன் தரைமீது தானும் வீழ்ந்து புரண்டாள்.

கைகேயியின் அந்த நிலையைக் கம்பன் மிக அழகாக, ஏன், சற்றுக் கடுமையாகக்கூட வர்ணிக்கிறுன்:

நவ்வி வீழ்ந்த தென நாடகம் மயில் துயின்று என்ன
அவ்வை கூர்தர சனதியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்குமென்று அயோத்தி வந்து அடைந்த
தவ்வையாம் எனக் கிடந்தனள் கேகயன் தனயை

Koviloor Digital Library

"கேகயன் மகள் நவ்வி (மான்) விழுந்து விட்டது போலவும், நாடகம் மயில் துயின்று என்ன (குலாவும் குணமுள்ள மயிலானது ஒடுங்கிக் கிடந்தாற் போலவும்) தரையிலே கிடந்தாள்." அந்த நிலை எப்படியிருந்தது? "கடிகமழ் கமலத்து-நறுமணம் வீசுகின்ற-தாமரைப் பூவிலே இருக்கின்ற சீதாதேவியாகிய மகாலட்சுமி ,அயோத்தியிலிருந்து காட்டிற்குப் போய்விடுவாள் (அவ்வை நீங்கும்) என்ற எண்ணத்தால் இலக்குமியின் அக்காள் (மூதேவி) அயோத்திக்கு வந்துசேர்ந்து விட்டாள் என்பது போலிருந்தது-கைகேயியின் அந்தக் கோலம்" என்கிறுன் கவி. சீதேவி ,போய்விட்ட இடத்தில் மூதேவி புகுவது இயல்பு என்பதால், இந்தக் கடுமையான உதாரணம் கவியால் கைகேயியின்பால் கையாளப்பட்டது.

கைகேயியின் மாளிகைக்கு வந்த தசரதன் இந்த நிலையில் கண்டான் தன் கடைசி மனையாளை. அவளிருந்த நிலையால் மனத்தில் வருத்தம் புரண்டோட அவளை அணுகி,

மடந்தையை மானை எடுக்கும் ஆனையே போல்
தடங்கைகள் கொண்டு தழீஇ எடுக்கலுற்றுன்

அம்மடந்தையைப் பெண் மானை எடுக்கும் யானையைப் போல் தன் தடங்கைகள் கொண்டு தழீஇ (தழுவி) எடுக்கத் தொடங்கினுன் தசரதன்.

ஆனுல் கைகேயி அவன் கைகளை விலக்கித் தள்ளி மீண்டும் தரையில் வீழ்ந்தாள். இதைக் கண்ட மன்னன் அஞ்சினுன். "அடி வஞ்சியே! உன்னை யார் என்ன செய்தார்கள் சொல்? நடந்தது என்ன சொல்? நீ சொன்னபின் நான் செய்வது என்னவென்பதையும் பார்" என்று கெஞ்சினுன்.

அரசனது வார்த்தையைக் கேட்ட கைகேயி தன் சாகசத்தை முழுவதும் காட்டினுள். தனது நீண்ட விழிகளிலிருந்து நீலிக்கண்ணீர் கொங்கைகளை நனைக்க அழுது கொண்டே சொன்னுள்; "என்னிடத்தில் உனக்குக் கருணை

Koviloor Digital Library

இருந்தால் முன்னே கொடுத்த வரங்களை இப்பொழுது கொடு'' என்று.

பெண்ணின் கண்ணீரில் கரையாத மனமுடைய ஆடவன் யார்? தசரதனும் கரைந்தான். அந்த வேகத்தில், மோகத்தில், ஆணையும் இட்டான். 'நீ கேட்டதைத் தருவேன்' என்று.

''வள்ளல் இராமன் உன் மைந்தன்ஆணை யென்றான்''

''வள்ளலான உன் மகன் இராமன் இருக்கின்றானே அவன் மீது ஆணை'' என்று ராமன்மீதே ஆணையிட்டான் அயோத்தி மன்னன்.

ஏயவரங்கள் இரண்டில் ஒன்றினால் என்
சேய் உலகாள்வது சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்
தீயவை யாவையினும் சிறந்த தீயாள்

''தீயதான எல்லாவற்றிலும் அதிகக் கொடியவளான கைகேயி, இரண்டு வரங்களிலொன்றினால் என் சேய் (மகன்) அரசாள வேண்டும், சீதை கேள்வனான இராமன் வனம் ஆள வேண்டும்'' எனக் கேட்டாள்.

இதைக் கேட்ட தசரதன் சர்ப்பந் தீண்டினாற்போல் கீழே விழுந்தான். மன்னவன் நா உலர்ந்தது. பிராணன் போகத் தொடங்கியது. மனம் தளர்ந்தது. கண்கள் ரத்தத்தைச் சிந்தின. ஐம்புலன்கள் தடுமாறின. சுருங்கச் சொன்னால், வயதானவன் இளையாளை மணந்த வேதனையைப் பூரணமாக அனுபவித்தான் தசரதன். இரண்டாந்தாரம் கொண்டாலே கடுமை; மூன்றாந்தாரமானால் அது யமவேதனையைத் தவிர வேறில்லை என்பதற்கு தசரதன் உதாரணமாக விளங்கினான். அப்படியிருப்பவன் எதையும் செய்வானாதலால் தசரதன் தான் சக்கரவர்த்தி என்பதை மறந்து கைகேயியின் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

Koviloor Digital Library

கால்மேல் விழுந்தான் கந்து கொல் யானை களிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கிமிடை தாளான்.

"கட்டுத் தறிமுறிக்கும் யானைகள் போன்ற செருக்குடைய அரசர்கள் நான் நீ என்று முந்திக்கொண்டு, நெருக்கியடித்துக் கொண்டு வணங்கும் தாள்களையுடைய (கால்களையுடைய) தசரதன், கைகேயியின் கால்மீது விழுந்தான்" என்று கவி தசரதன் நிலையைக் கண்டு பரிதபிக்கிறான்.

மன்னன் காலைப் பிடித்ததற்கும் இறைஞ்சியதற்கும் இரங்க வில்லை கைகேயி. "நீயே சொல்பிசகினால் இனி வாய்மையை யார் நிலை நாட்ட முடியும்?" என்று கேட்டாள் இரக்கமற்ற கைகேயி. "அப்படியானால் பரதன் அரசாளட்டும்; ராமன் காட்டுக்குப் போகும்படி வலியுறுத்தாதே" என்றும் கெஞ்சிப் பார்த்தான் கோசலத்தின் காவலன். அதற்கும் அவள் மசியாது போகவே, மன்னன் மூர்ச்சித்து மண்ணில் வீழ்ந்தான். "நீ உன் சொல் தப்பினால் நான் உயிரை மாய்த்துக் கொள்வேன்" எனக் கைகேயி அந்த நிலையிலும் மன்னனை மிரட்டினாள்.

வீந்தாளே இவ்வெய்யவள் என்ன மிடல்வேந்தன்
ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள
மாய்ந்தே நான் போய் வானுலகு ஆள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின் மகனொடும் நெடிது என்றான்.

இவ் வெய்யவள்-இந்தக் கொடியவள், வீந்தாள்-கேட்ட வரத்தைக் கொடுக்காவிட்டால் இறந்து போவாள் என்று எண்ணிய, மிடல் வேந்தன்-வலிமையுடைய சக்கரவர்த்தி, "ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்" என்றான். "என் மகன் வனமாள, நான் மாண்டுபோய் வானுலகம் ஆள, நீயும் உன் மகனும் நெடுங்காலம் உலகத்தில் வசை வெள்ளத்தில் நீந்த முடியாமல் ஆழ்ந்தே போவீர்கள்" என்று தசரதன் கூறினான். இந்த இடத்தில், தசரதன் இராமனை என்மகனென்றும், பரதனை நின் மகன் என்றும் பிரித்துக் கைகேயிக்குச் சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது. கைகேயியின் கொடிய செய்கையால் அவள்

Koviloor Digital Library

மகனையும் வெறுத்தான் தசரதன். இதற்குப்பின் மன்னன் மூர்ச்சிக்க, கைகேயியும் தன் எண்ணம் நிறைவேறியதென்று நிம்மதியாக உறங்கலுற்றுள். இரவு கழிந்து பொழுதும் புலர்ந்தது.

பாபமுற்றிய பேதை செய்த பகைத் திறத்தினில் வெய்யவன்
கோபமுற்றி மிகச்சிவந்தனன் ஒத்தனன் குணக் குன்றிலே.

பாபம் முற்றியவளான கைகேயி தன் வமிசத்துக்குச் செய்த பகையின் தன்மையினுல் கோபம் முற்றிச் சிவந்து எழுந்தான் கதிரவன் கிழ்த் திசையிலே.

12. பின்னவன் பெற்ற செல்வம்

விழிக்கும் போது விளைவது என்னவென்பது மனிதனுக்குப் புரிவதில்லை. துயிலுக்குச் செல்லும் போது உள்ள கதை துயிலெழும்போது இருப்பது சந்தேகமென்ற அறிவும் அவனுக்குக் கிடையாது. இருந்தால் அதிகப்படியான எதிர்பார்ப்பினுலோ ஏமாற்றத்தாலோ அவன் பாதிக்கப்பட மாட்டான். முதல் நாள் துயிலுக்குச் செல்லும் போது இராமன் முடி சூடுகிருனென்ற மகிழ்ச்சியுடன் அயோத்தி மக்கள் கண்ணை மூடினுர்கள். மறுநாள் காலை கண்ணை விழித்த போதும் அந்த உற்சாகத்திலேயே இருந்தார்கள். அதனுல் அவர்கள் நிலை இப்படி இருந்தது :

"மாதர்கள் கற்பின் மிககார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வதிட்ட னெத்தார் வேறுள மகளிரெல்லாம்
சீதையை யொத்தார் அன்னுள் திருவினை யொத்தாள் அவ்வூர்ச்
சாதுகை மாந்தரெல்லாம் தயரதன் தன்னை யொத்தார்

இராமபிரான் முடி புனைவதை எண்ணி, அவ்வூர் 'சாதுகை மாந்தரெல்லாம்' சத்குணமுள்ள முதியோரெல்லாம் தங்களைத் தசரதனுக நினைத்துக் கொண்டார்கள். கற்புடைய மாதர்கள்

Koviloor Digital Library

கோசலை மனத்தை ஒத்தார்கள்; அதாவது தங்கள் தங்கள் மகனுக்கே முடிசூட்டு விழா நடப்பதாக எண்ணிக் கொண்டார்கள். வேதியர்கள் தங்களை வசிஷ்டனென்று நினைத்துக் கொண்டார்கள். மற்றப் பெண்களெல்லாம் தங்களைச் சீதைக்கு ஒப்பாக மனப்பால் குடித்தார்கள். சீதையோ தன்னைத் திருமகளான லட்சுமியாக நினைத்துக் கொண்டாள்.

பட்டாபிஷேகம் தங்கள் தங்கள் இல்லங்களிலே நடக்கப் போகும் உவகையுடன் மக்கள் எழுந்தார்கள். அண்ணல் அரியாசனம் ஏறும் வைபவத்தைக் காணவந்த அரசவெள்ளம் அயோத்தியின் தெருக்களில் திரண்டது. அந்தப் பொன்னகர் வீதியெல்லாம் செம்பவழம் போன்ற இதழ்களுள்ள பெண்களாலும் ஆடவர் கூட்டத்தாலும் யாரும் நகர இடமின்றி நெருங்கிக் கிடந்தன. 'நம்பியின் பட்டாபிஷேகம்காண வராதவர் இலங்கையிலிருந்த ராட்சதரும், உலகத்தின் மலைகளும், பூமியைத் தாங்கி நிற்கும் எட்டுத் திக்கு யானைகளுமே என்று கம்பன் அயோத்தியின் பட்டாபிஷேகக் கூட்டச் சிறப்பை வர்ணிக்கிறன்.

இப்படித் திரண்ட கூட்டத்தில், மன்னரெல்லாம் பட்டாபிஷேக மண்டபத்தில் பிரவேசித்தனர். வசிஷ்டனும் வேதியரோடு அங்கு வந்து சேர்ந்தான். வந்த அந்த முனிவன் பட்டாபிஷேகத்திற்கான சடங்குக்கு சகலத்தையும் சித்தம் செய்தான். பிறகு மன்னனை அழைத்துவர சுமந்திரனை ஏவினன். அந்தச் சுமந்திரன்,

'விண்தொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் தன்னை
கண்டிலன் வினவக் கேட்டான் கைகேயி கோயில் நண்ணி
தொண்டைவாய் மடந்தைமாரில் சொல்ல மற்று அவரும் சொல்லப்
பெண்டிரில் கூற்றம் அன்னள் பிள்ளையைக் கொணர்க என்றுள்'

விண்ணைத் தொடும்படியாக உயர்ந்த அரண்மனையில் மன்னர் மன்னனை தசரதனைக் கண்டிலன் சுமந்திரன். மன்னர் எங்கே என்று விசாரித்து, கைகேயியின் அரண்மனை சென்று,

Koviloor Digital Library

தொண்டைக் கனிபோல் (கோவைப்பழம் போல்-இப்பொழுது தொண்டங்காய் என்று அழைக்கப்படுகிறது.) சிவந்த வாயை யுடைய தூதியரிடம் சொல்ல, அவர்களும் கைகேயியிடம் சுமந்திரன் வந்திருக்கும் விஷயத்தைச் சொன்னார்கள். அப்பொழுது வெளியே வந்து சுமந்திரனைப் பார்த்த - 'பெண்டிரில் கூற்றம் அன்னாள்' - பெண்களில் யமன் போன்றவளான கைகேயி 'பிள்ளையைக் கொணர்க-பிள்ளையை அழைத்து வா' என்று கூறினாள்.

இதைக் கேட்ட சுமந்திரன் மனத்தில் உவகை பெருகிற்று. பட்டாபிஷேகத்துக்காகவே இராமனை அழைத்து வரக் கைகேயி கூறுகிறாள் என்று நினைத்து மிகுந்து மகிழ்ச்சியோடு இராமனிடம் சென்று, ''அரசர்களும் முனிவர்களும் உலகத்திலுள்ள அத்தனைபேரும் உன் மகுடாபிஷேகம் காண அவாவுடன் இருக்கிறார்கள். உன் சிற்றன்னையும் உன்னை அழைத்து வரச் சொன்னாள். ஆகவே 'பொன்தட மகுடம் சூடப் போதுதி விரைவில்' என்றான். 'பொன் மகுடத்தைப் புனைய சீக்கிரம் வா' என்று அழைத்தான் சுமந்திரன். இதைக் கேட்ட இராமனும் தேரிலேறிக் கைகேயின் அரண்மனை சேர்ந்தான். மகுடாபிஷேகக் கோலத்துடன் உள்ளே நுழைந்த மைந்தனைக் கைகேயியே எதிர்கொண்டாள்.

"நாயகன் உரையான் வாயால் நான் இது பகர்வன் என்னா
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

சொல்ல வேண்டாத செய்தியை என் நாயகன் உரையான், ஆகையால் நானே சொல்கிறேன் என்று எண்ணிக் கொண்டு, அவளைத் தாயென நினைத்து எதிரே வணங்கிநின்ற இராமன் முன்பு, யமன் வருவது போல், கைகேயி வந்தாள். அவளை நோக்கிய இராமனும் சித்திரப் பவளவாய்ச் செங்கையில் புதைத்து, மற்றொரு சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்.

நின்றவன் தன்னைநோக்கி இரும்பினால் இயன்ற நெஞ்சில்
கொன்றுழல் கூற்றும் என்னும் பெயரின்றிக் கொடுமைபூண்டாள்

Koviloor Digital Library

இன்றெனக்கு உணர்த்தல் ஆவது ஏயது உன்னில் ஆகும்
ஒன்றுஉனக்கு உந்தை மைந்த உரைப்பது ஓர் உரை
உண்டென்றாள்.

அப்படி வணங்கியவனை நோக்கி இரும்பினால் செய்யப் பட்ட நெஞ்சினளாகிய கைகேயி, கொன்று உழல் கூற்றம் என்னும் பெயரின்றி-கொன்று திரிகின்ற யமன் என்று பெயர் இல்லாமலே - கொடுந்தொழில் புரிபவளாய் "உன் தந்தை ஒன்று உனக்குச் சொல்ல இஷ்டப்படுகிறார், அது எனக்கும் தெரியும். சொல்லலாமென்றால் சொல்கிறேன்" என்றாள்.

'என் தந்தை சொல்வதை நீர் சொன்னால் அதைச் செய்ய மாட்டேனா?' என்று வினவினன் இராமன் பதிலுக்கு.

வந்ததென் தவத்தினாலாய பயன்
மற்றென்று உண்டோ
தந்தையும் தாயு நீரே தலை நின்றேன்
பணிமின் என்றான்.

"நீங்கள் சொல்வதைத் தவிர என் நல்வினையாலான பயன் வேறென்று உண்டோ? தந்தையும் தாயும் நீரே. ஆகையால் பணிமின்-கட்டளையிடுங்கள், தலைமேற்கொண்டு செய்கிறேன்" என்றான் அண்ணல் இராமன். அப்பொழுது சொல்வாள் கைகேயி:

ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே
ஆள நீ போய்
தாழிரும் சடைகள் தாங்கி தாங்கரும்
தவம் மேற்கொண்டு
பூழி வெம் கானம் நண்ணி புண்ணியப்
புனல்களாடி
ஏழிரண்டு ஆண்டில் வா என்று
ஏவினன் அரசன் என்றாள்

Koviloor Digital Library

"கடல் சூழ்ந்த உலகமெல்லாம் பரதனே ஆள, நீ தாழ்ந்த சடைமுடி தரித்து, தவநிலை பூண்டு, பூழிவெம்கானம் நண்ணி-புழுதியையுடைய கொடுமையான காட்டை அடைந்து, புண்ணிய நதிகளில் நீராடி, பதினுன்கு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வா என்று அரசர் கட்டளையிட்டார்'' என்ருள் கைகேயி.

இதைக் கேட்ட இராமன் முகம், 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா'- அப்பொழுது மலர்ந்த செந்தாமரையைப்போல் மலர்ந்தது மட்டுமல்ல, அதன் அழகையும் வென்றது. அப்படி மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்துடன் கைகேயியை நோக்கிய இராமன்,

மன்னவன் பணியன்ருகில் நும்பணி
மறுப்பனே என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன்
பெற்றதன்ரே
என்இதில உறுதி அப்பால் இப்பணி
தலைமேற் கொண்டேன்
மின்ளெளிக் கானம் இன்றே போகின்றேன்
விடையும் கொண்டேன்.

"தாயே! இது மன்னவன் இட்ட கட்டளை அல்ல என்ருலும், நும் பணி மறுப்பேனே?—உன் கட்டளையை மறுப்பேனே? பின்னவன்—என் தம்பி பரதன்—பெற்ற செல்வம் நான் பெற்றதல்லவா? இதனிலும் மேலான நன்மை என்ன இருக்கின்றது? மின்னல்போல் ஒளிவிடும் காட்டிற்கு இன்றே போகின்றேன். இப்பொழுதே விடையும் கொள்கிறேன்'' என விடை பகர்ந்தான் பிரபு.

எந்தக் கோலத்துடன் அரண்மனையிலிருந்து புறப்பட்டானே, அந்தக் கோலத்துடன் தனது அன்னையான கோசலையின் இருப்பிடம் எய்தினன் இராமன். அவனைக் கண்ட கோசலையின் மனத்தில் சந்தேகம் உதயமாயிற்று.

Koviloor Digital Library

13. நின்னிலும் நல்லவன்

வந்த மைந்தனை நொந்த விழிகளால் நோக்கினாள் கோசலை. சந்தேகம் அவள் மனத்தைச்சூழ்ந்து நின்றது. 'இவன் தலையிலே கிரீடத்தைக் காணோம்; தலை மயிரும் மஞ்சனப்புனித நீரால் நனையவில்லை. என்ன காரணமோ?' என்று ஐயுற்ற தாயை வீரக் கழல்களை அணிந்த இராமன் வணங்கினான். அப்படி வணங்கிய நம்பியைக் குழைந்த மனத்துடன் வாழ்த்திய கோசலை,

நினைத்தது என் இடையூறுண்டோ நெடுமுடி புனைதற்கென்றாள்

"அப்பா! உன் தந்தையான சக்கரவர்த்தி நினைத்த காரியம் என்ன ஆயிற்று? நீ நெடுமுடி புனைதற்கு - மகுடம் சூடிக் கொள்வதற்கு- இடையூறு ஏதேனும் உண்டோ?" என்று வினவினாள்.

தாயான கோசலை அப்படிக் கேட்டதும் இராமன் தனது இரு கைகளையும் கூப்பிக் கொண்டான். "அம்மா! உன் ஆசை மகனும் எந்தக் குறையுமில்லாதவனுமான என் தம்பி பரதனே முடி சூடுகிறான்" என்று பதிலும் சொன்னான்.

இதைக் கேட்ட கோசலை அதிர்ச்சி யுற்றாளில்லை. சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினாள். பிறகு சொன்னாள் :

முறைமையன்று என்பது ஒன்று உண்டு அதுஅல்லது
நிறைகுணத்தவன் நின்னிலும் நல்லனால்
குறைவிலன் எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

மறுவில் அன்பினில்-குற்றமற்ற அன்பைச் செலுத்துவதில் - நான்கு குமாரர்களுக்கும் வேற்றுமை காட்டாத கௌசல்யை யானவள், "அப்பா! இக்ஷ்வாகு வம்சத்தில் முதல்வனிருக்க இளையவன் முடி சூடுவது முறையல்ல என்ற வழக்கம் உண்டு. அதைத்தவிர பரதன் முடி சூடுவதில் தவறேதுமில்லை. பரதன் நல்லவன், குறையென்பது அவனிடம் ஏதுமே யில்லை.

Koviloor Digital Library

"தவிர இராமா! சக்கரவர்த்தி யிட்ட ஆணையை மீரு திருத்தல் உனக்குத் தர்மமாகும். ஆகவே உன் தம்பிக்கு நானிலம் கொடுத்து -உலகத்தைக் கொடுத்து- அவனுடன் ஒற்றுமையுடன் நீண்ட காலம் வாழ்வாயாக!" என்று ஆசியும் கூறினுள், தூய மனத்தினளான கோசலை.

முன்பு கைகேயி இராமனைத் தன் மகன் என்று கூறியது போலவே, இராமனும் "உன் காதல் திருமகன்" என்று கோசலை யிடம் பரதனைப்பற்றிக் கூறுகிறுன். அதை ஒப்பிய கோசலையும், "உன்னைவிட, பரதன் நல்லவன்" என்று பாராட்டுகிறுள். ஆனுல் கைகேயிபோல் மனம் திரும்பினுளில்லை, அவளிடம் கூனி யெனும் பிசாசு ஒன்று இராத காரணத்தால். "பரதன் அரசாளட்டும்; அவனுடன் நீ கூட இருந்து வாழ்வாயாக" என்றே சொன்னுள் கோசலை.

அப்பொழுது மெல்ல அவிழ்க்கிறுன் இராமன் தந்தையின் அடுத்த கட்டளையை.

நாயகன் என்னை நன்னெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு ஓர் பணி என்று இயம்பினுன்

"அம்மா! நாயகன்-அரசனுன என் தந்தை-என்னை நல்ல நெறியில் செலுத்துவதற்கு ஒரு கட்டளையும் இட்டிருக்கிறுர்" என்று நிதானமாக வரத்தின் இரண்டாவது பகுதியை எடுத்துச் சொன்னுன்.

அப்பொழுது கோசலை அந்தப் பணி என்னவென்று கேட்க, "பதினுன்கு வருஷங்கள் என்னை வனத்திலுள்ள சிறந்த மகரிஷி களுடன் சேர்ந்து வசித்தபின் திரும்பி வரவேண்டும் என்று தந்தை கூறினுர்" என இராமன் பதிலிறுத்தபோது, அசையாத கோசலையின் நெஞ்சமும் அசைந்தது. இதென்ன கட்டளை என்று நெஞ்சுருகிய கோசலை விம்மினுள், கீழே விழுந்தாள்.

வஞ்சமோ மகனே உனை மாநிலம்
தஞ்சமாக நீ தாங்கு என்ற வாசகம்
நஞ்சமே இனி நான் உயர் வாழ்வெனே
அஞ்சும் அஞ்சும் என ஆருயிர் அஞ்சுமால்

Koviloor Digital Library

இம் மாநிலம் தஞ்சமாக நீ தாங்க—இந்த உலகம் உன் அடைக்கலமாக அதை நீ தாங்கி—அரசாள்வாய் என்று சக்கர வர்த்தி சொன்ன சொல் வஞ்சமோ மகனே? வஞ்சனைச் சொல்லா! இல்லை! இல்லை! அது வெறும் விஷம்! இனி நான் உயிர் வாழ்வேனே! இதைக் கேட்ட எனது பிராணன் அஞ்சி அஞ்சிச் சாகுமே?' என்று கதறினாள் கோசலை.

அழுதாள்; துக்கச் சிரிப்பு சிரித்தாள். சக்கரவர்த்தியின் கருணை மிக நன்றாயிருக்கிறதென்று நகைத்தாள். துன்பத்துக் கிடையே துடிதுடித்து, "இனி நீ காட்டிற்குப் போவது எப்போது?" என்றும் கேட்டாள்.

"தெய்வங்களே! எனக்குத் தருமம் என்பது துணை நிற்காதோ? கன்றைப் பிரிந்து கதறும் பசுவைப்போல் என்னைக் கதறவைக்க நான் செய்த தீவினைதான் என்ன?" என்று தெய்வங்களைக் கேட்டாள். அப்படிக் கேட்டு தரையில் கிடந்த தாயை இரு கைகளாலும் எடுத்த இராமன்,

.......................அரும் கற்பினோய்
பொய்த் திறத்தினன் ஆக்குதியோ புகல்
மெய்த் திறத்து நம் வேந்தனை நீ என்றான்

"அரிய கற்புடைய தாயே! சத்தியத்தில் சிறந்த நம் வேந்தனை பொய்யின் வசப்பட்டவராக நீ ஆக்குதல் தகுதியோ சொல்?" என்று இராமன் சமாதானப்படுத்த முயன்றான். "அம்மா! சிறந்த என் தம்பி ராஜ்ய லட்சுமியை அடையச் செய்து, என் தந்தையைப் பொய்யற்றவராகச் செய்து, வனம் சென்று மீளுவேன். இதைவிட எனக்கு ஏற்படும் பாக்கியம் என்ன இருக்கிறது?" என்று வினவினான். "அம்மா! உலகமும் கடலும் பஞ்ச பூதங்களும் அழிந்து போவதாயிருந்தாலும் அரசன் கட்டளையை நான் ஏற்க மறுப்பது தகுமோ? ஆகையால் இதற்காக நீ மனம் வருந்தாதே" என்று சொன்னான் அண்ணல்.

இப்படிச் சொல்லித் தேற்றிய மகனைக் கண்ட கோசலை, "இராமா! அப்படியானால், அரசனது கட்டளையை மீற நான்

Koviloor Digital Library

சொல்ல மாட்டேன். நீயின்றி என்னல் உயிர் தங்க முடியாது. என்னையும் காட்டுக்கு அழைத்துப் போ'' என்ருள்.

பிறகு தர்மம் காக்க வந்த இராமபிரான், தர்மம் என்ன வென்பதைத் தாயாகிய கோசலைக்கு எடுத்துரைக்கிருன்.

என்னை நீங்கி இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற் புறுத்தாது உடன்
துன்னு கானம் படரத் துணிவதே
அன்னையே அறம் பார்க்கிலை பால் என்ருன்

"அம்மா! என்னை நீங்கிய மன்னர் மன்னனுன என் தந்தை துன்பக் கடலில் மூழ்கும்போது, நீ கூட இருந்து அவரைத் தைரியப்படுத்தாமல் என்னுடன் அடர்ந்த கானகத்திற்கு வரத் துணிவது தகுமா உனக்கு? நீ தர்மம் என்ன என்பதைப் பார்க்க வில்லை போலும்?'' என்று சொன்னுன் இராமன். "நீ செய்ய வேண்டியது கணவன் பணிவிடையாயிருக்க, நீ சித்தம் திகைப்பது ஏன்? இந்தப் பதினன்கு ஆண்டுகள் எனக்குப் பதினன்கு தினங்கள் அல்லவா?'' என்றும் அன்னைக்குத் தைரியம் சொன்னுன், உலகத்திலே இணையற்ற அந்தப்பிள்ளை.

இதைக் கேட்ட கோசலை, 'பரதன் அரசாளட்டும். எனது மகன் கானகம் செல்லாது காப்பேன். எனது கணவரைக் கெஞ்சுகிறேன் இதற்கு' என்று எண்ணி, தனது மாளிகை யிலிருந்து கிளம்பிச் சுமித்திரையின் மாளிகைக்குச் சென்று, அவளையும் உடன் அழைத்துக் கொண்டு, கைகேயியின் அந்தப் புரத்துக்குச் சென்ருள்.

அங்கு கண்ட காட்சி அவளை மயக்கமுறச் செய்தது. தசரதன் வீழ்ந்து கிடந்தான், பிராணன் போனவனைப்போல. அதைக் கண்ட கோசலையும் மூர்ச்சை போட்டு விழுந்தாள். பிறகு மூர்ச்சை தெளிந்து கதறினுள். அவள் கதறலைக் கேட்டு, அங்கு வந்த வசிஷ்டன் மன்னன் மாண்டு விட்டானே என்று ஒரு கணம் நினைத்தான். பிறகு மன்னன் இறக்கவில்லை யென்பதை அறிந்து, மன்னன் நிலைக்குக் காரணம் கேட்டான். அப்பொழுது பதில்சொல்லக் கைகேயியே வசிஷ்டன் முன்வந்து

Koviloor Digital Library

நின்ருள். அது மட்டுமல்ல- தன்னுல் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னுள்- தன்னுல் விளைந்த அந்தத் தீமையைத் தன் வாயாலேயே எடுத்துச் சொன்னுள். வசிஷ்டன் மன்னனை யும் நோக்கி கைகேயியையும் நோக்கினுன்.

14. இருமுடி

மன்னவன் மூர்ச்சையுற்ற காரணத்தை முனிவனும் குலகுருவுமான வசிஷ்டன் கேட்டதும், காரணத்தை கைகேயி உரைக்க, அரசன் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்தும், விசிறி கொண்டு விசிறியும் மன்னனை விழிக்கச் செய்தான் வசிஷ்டன். விழித்த மன்னன் முனிவனை நோக்கி "இராமனுக்கு முடி சூட்டுவித்து என் வார்த்தையும் பொய்யாதிருக்க அருள் செய்ய வேண்டும்" என்று தழுதழுத்த குரலில் வேண்டினுன்.

வசிஷ்ட முனிவனும், கொடிய செய்கையைப் புரிபவளான கைகேயியை நோக்கி, "இராமனுக்கு அரசளித்து, வைவசுவத மனுவின் குலத்தோன்றலான உன் கணவனுக்கும் உயிரளித்து உனக்கும் புகழைத் தேடிக்கொள்" என்று உபதேசித்தான். ஆனுல் கைகேயி மசிந்தாளில்லை. வசிஷ்டன் தன் அறிவுரையை முடிக்கு முன்பே, "மன்னவன் சத்தியத்தினின்றும், கொடுத்த வாக்கினின்றும் மாறுவானுனுல், என் வார்த்தையும் நான் கேட்ட வரமும் பொய்யாமலிருப்பதற்காக நான் உடனே உயிர் துறப்பேன்; இவ்வுலகில் வாழமாட்டேன்" என்று திட்டமாக மறுமொழி கூறினுள் கைகேயி. இதற்குப் பிறகு, வசிஷ்டன் கைகேயியை காரசாரமாகக் கண்டித்தான்.

கொழுநன் துஞ்சும் எனவும் கொள்ளாது உலகம் எனவும்
பழி நின்று உயரும் எனவும் பாவம் உளது எனவும்
ஒழிகின்றிலை அன்றியும் ஒன்று உணர்கின்றலையால் இனிமேல்
மொழிகின்றன என் என்னு முனியும் முறையன்று என்ருன்

"அடீ கைகேயி! கொழுநன் இறப்பான் என்றும், உன் சொல்லை உலகம் ஏற்காது எனவும், உன்மீது பழி நிலைத்து

Koviloor Digital Library

அதிகப்படும் என்பதும், இத்தனை பாவமும் உனக்கு விளையும் என்பதும், இத்தனையும் உணர்ந்தும் நீ பிடித்த பிடியிலிருந்து ஒழிகின்றலை (மாறவில்லை), ஒன்று உணர்கின்றலை (பிறர் சொன்னாலும் கேட்பதில்லை), இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நீ செய்யும் இது முறையல்ல'' என்று வசிஷ்டன் வருந்திக் கூறினான்.

குல குருவின் அறிவு நிரம்பியதும், குலத்துக்கு இதமானது மான வார்த்தையைக் கைகேயி சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாததால், கண் விழித்து அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த தசரதன்,

கண்டேன் நெஞ்சம் கனிவு ஆய்கனிவாய் விடம் நெடுநாள்
உண்டேன் அதனால் நீ என் உயிரை முதலோடு உண்டாய்
பண்டே எரிமுன் உன்னைப் பாவீ தேவியாகக்
கொண்டேன் அல்லேன் வேறோர் கூற்றம் தேடிக் கொண்டேன்.

''அடி பாவி! - நெஞ்சம் கனிவு ஆய் கண்டேன்- உன் எண்ணத்தை (இப்பொழுது) நன்றாக அறிந்து கொண்டேன். கொவ்வைக் கனி போன்ற உன் வாயின் விஷத்தை நெடுநாள் பருகினேன். அதனால் நீ என் உயிரை அடியோடு பருகுகிறாய். பண்டு (முன்னாள்) எரிமுன் (அக்கினி சாட்சியாக) உன்னைத் தேவியாகக் கொண்டேன். அல்ல அல்ல இன்னொரு யமனைத் தேடிக் கட்டிக்கொண்டேன்!'' என்று சொன்னான். அத்துடன் நிற்கவில்லைஅரசன்! ''கபடத்தால் என் ராமனை கானகம்செல்ல ஏற்பாடுசெய்தாய். என்னையும் பிளந்து விட்டாய். உன் கழுத்தில் நான் கட்டிய மங்கலக்கயிறு உன்மகன் பரதன் என் கருமச் சடங்கு செய்யக் கையில் கட்டிக்கொள்ளும் கயிறு ஆகும்'' என்றான். வசிஷ்டனை சட்சியாகக் கொண்டே மேலும் செல்வான் தசரதன், ''இவள் என்க்குப் பத்தினி அல்லள். இவள் பிள்ளைபரதனும் எனக்கு மகன் அல்லன். என் ஈமச்சடங்குகளை அவன்செய்ய உரிமையுள்ளவன் அல்ல'' என்று.

இந்தச் சமயத்தில் கோசலை இடை புகுந்து, தான் எத்தகைய பதிவிருதை என்பதை உணர்த்துகிறாள்.

Koviloor Digital Library

தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா வழுவா வகை நின்று
எள்ளா நிலைகூர் பெருமைக்கு இழிவாம் என்றால் உரவோய்
விள்ளா நிலைசேர் அன்பால் மகன் மேல் மெலியின் உலகம்
கொள்ளாதன்றே என்றாள் கணவன் குறையக் குறைவாள்

"கணவன் குறையக் குறைவாள்-கணவன் துயழருந்து உடல் மெலிந்தால். தானும் துயருற்று மெலியும் சுபாவமுள்ள கோசலை, (தசரதனைப் பார்த்து) உரவோய் வலிமையுடைய அரசனே! தள்ளா நிலை கால் மெய்ம்மை - தவறத் தகாத சத்தியத்தை; தழுவா-ஏற்றுக்கொண்டு, வழுவா நிலை நின்ற பின்பு, மகன் மேல் அன்பால், மெலியின் (சோர்வடைந்தால்) உலகம் கொள்ளாது-உலகம் ஏற்காது'' என்று சொன்னாள் கோசலை. 'சத்தியத்தில் வழுவாது நின்ற நீ, மகன் மேல் உள்ள அன்பால் அதிலிருந்து மாறினால் உலகம் ஏற்றுக் கொள்ளாது' என்று தன் கணவனுக்கு மாசு வரக்கூடாது என நினைத்தாள். கணவன் செத்தால் சாகட்டும், தன் பிள்ளை வாழ்ந்தால் போதும் என்று நினைத்த கைகேயிக்கு மாறுபட்ட கோசலையின் குணத்தை உரைக்கின்றான் கவி.

இதைக் கேட்டும் தசரதன் மனம் தேறவில்லை. கானகம் செல்லும் மகனை நினைத்துப் புலம்பினான். புலம்பிய மன்னவனை வசிஷ்டன் தேற்றினான். அத் தேற்றலால் சிறிது கண்விழித்த மன்னவன், மீண்டும் புத்திரனை நினைத்து மூர்ச்சித்தான். கோசலையின் சைத்தியோபசாரத்தால் கண்விழித்த தசரதன் தனக்கு முன்னால் நேர்ந்த சாபத்தை அவளுக்கு எடுத்துரைத்தான். "யானை என்று நினைத்து சப்தவேதி என்ற பாணத்தால் முனிவன் மகனொருவனைக் கொன்றேன். அந்த முனிவனும் என்னைப்போல் நீயும் புத்திர சோகத்தால் இறப்பாய் எனச் சபித்தான். அந்தத் தருணம் வந்துவிட்டது' என்று பழைய கதையை விளக்கினான். இதனால் அடுத்து வரும் கேட்டைக் கோசலை உணர்ந்தாள்.

Koviloor Digital Library

மக்களும் உணர்ந்தனர். இராமன் வனம் புகுவானென்றதைக் கேட்டதும் அயோத்தியே துயரத்தில் ஆழ்ந்தது. அழுதது.

கிள்ளையொடு பூவை அழுத கிளர் மாடத்து
உள்ளுறையும் பூசை அழுத உரு அறியாப்
பிள்ளை அழுத பெரியாரை என் சொல்ல
வள்ளல் வனம் புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்

"வள்ளலான இராமன் வனம் புகுவான் என்ற வார்த்தையைக் கேட்டதால், அயோத்தியின் மாளிகை மாடங்களிலிருந்த கிள்ளையோடு பூவையும் (கிளிகளோடு நகணவாய்ப் பறவைகளும், வீடுகளில் வசிக்கின்ற பூசையும் (பூனைகளும்), உருவத்தை அறியமாட்டாத சிறு பிள்ளைகளும் அழுதன என்றால், அறிவுள்ள பெரியோர்கள் நிலை பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?" என்று மக்களின் துயரத்தை விவரிக்கிறான் கவி.

மக்கள் நிலை அப்படியிருக்க, தம்பி இலக்குவன் நிலை வேறாயிருந்தது. "சிங்கத்துக்கு வைத்த மாமிசத்தை நாய்க்கு வைக்கப் பார்க்கிறாளா சிற்றன்னை?" என்று சீறி, யார் வந்தாலும் எதிர்த்து இராமனுக்குப் பட்டமளிக்க போர்க் கோலம் பூண்டான். வில்லின் நாணையும் இழுத்து ஒலி செய்தான். அந்த நாண் ஒலி கேட்ட நம்பியும் தம்பியை அழைத்து, "அப்பா! இது விதியின் பிழை; அதற்கு நீ சினங் கொள்ளுதல் தகாது" என்று ஆறுதல் சொல்ல, "அண்ணா! அந்த விதிக்கும் விதியாக நான் மாறுகிறேன்- அதை மாற்றுகிறேன்" என்று சீறினான், வீரனான இலக்குவன்.

தம்பியின் சீற்றத்தை நல்லுரைகளால் தணித்து, அவனுடன் சுமித்திரையின் இல்லமேகினான் இராமபிரான். வனத்திற்குச் செல்லச் சித்தமாக வந்த இரு புதல்வர்களையும் பார்த்த சுமித்திரை.

புண்தாங்கு நெஞ்சத்தினளாய்
படிமேற் புரண்டாள்

Koviloor Digital Library

உண்டாய் துன்பக்கடற்கு எல்லை
உணர்ந்திலாதாள்

"புண்பட்ட மனத்தினளாய், கோசல நாட்டுக்கும் தனக்கும் ஏற்பட்ட துன்பத்திற்கு எல்லை அறியாதவளாய் படிமேல் புரண்டு அழுதாள்." அப்படிச் சோர்ந்துவிட்ட சிறிய தாயின் திருவடிகளைத் தொழுது இராமன் தேற்றினான்.

போர்வாள் அரசர்க்கு இறை பொய்த்தனன் ஆக்க இல்லேன்
கார்வான் நெடுங்கான் இறை கண்டு பின் மீள்வேன் என்றான்

"போரில் வாளைத்திறமையுடன் சுற்றும் என் தந்தையான அரசனைப் பொய்யானவராக அடிக்க மட்டேன்! மேகம் சூழ்ந்த நீண்ட கானகத்தை சுற்றிப் பார்த்த பின் வருவேன்" என்று ஏதோ சுற்றுலாச் செல்பவனைப்போல் இராமன் அவளுக்கு தைரியம் சொன்னான். தந்தை சொல்லை மீற முடியாதென்ற தருமத்தையும் விளக்கினான்.

அப்படி சுமித்திரையைத் தேற்றும் இராம இலட்சுமணர் கள் முன்பு, கைகேயி தந்த மரவுரிகள் இரண்டைத் தாதியர் கொண்டு வந்தனர்.

நோய் ஆற்றுகில்லா உயிர் போல நுடங்கு இடையார்
மாயாப் பழியாள்தர வற்கலை ஏந்தி வந்தார்.

மாயாப் பழியைப்பெற்றவளான கைகேயி இராமனுக்காக அளித்த வற்கலையை (மரவுரியை) கையில் ஏந்தி வந்தார்கள். அந்த மாதர்களுக்கு ஓர் உவமையை இங்கு கவி சொல்கிறான். "நோயைத் தாங்காத உயிர் எப்படி ஒடுங்குமோ அப்படி ஒடுங்கிப்போன சிற்றிடையை உடைய தாதிகள்" என்றுஅவர் களை வர்ணிக்கிறான், இந்தத் துயரம் தோய்ந்த கட்டத்திலும்.

கைகேயி இங்கு சற்று முன்யோசனையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் இரு மரவுரிகளை அனுப்பியிருந்தாள். முதன் முதலில் இலக்குவனே மரவுரியை வலிய எடுத்து அணிந்துகொண்டான். இராமனும் மரவுரியை அணிந்தான்.

Koviloor Digital Library

அண்ணல் இராமன் மரவுரி புனைந்த கோலத்தை அருணாசலக்கவி தனது இராம நாடகத்தில் மிக அழகாக வர்ணிகிறார். இரண்டு கண்களிலுமிருக்கிற கருமணி போல் ஒளி பெறும் கறுப்பான உருவத்தை உடைய இராமனுக்கு தந்தை ஒரு முடியைக் (கிரீடத்தை) கொடுத்தார். தாயார் (கைகேயி) ஒரு முடியை (சடா முடியை) கொடுத்தாள். தாய் கொடுத்த முடியைத் தான்புனைந்து தந்தைகொடுத்த முடியை பரதனுக்குத் தந்தான் இராமன் என்று கூறுகிறார் இராம நாடகக்காரர்.

இரு விழியிலுமுள்ள கருமணி என வந்த
திருவுருவினில் ஒளிபெருகிட தாய் முந்த
விரதம் கொடுத்த முடி சிரசினில் கொண்டு சொந்த
அரசன் கொடுத்தமுடி பரதனுக்கு அன்று தந்த(இராமனை)

என்ற பாட்டை விபீஷண சரணாகதியின்போது எழுதுகிறார். இப்படித் தந்தை கொடுத்த முடியை உதறித் தாய் கொடுத்த சடாமுடி புனைந்து மரவுரி தரித்து சீதையின் இருப்பிடத்தை அணுகுகிறான் இராமன். கணவன் கோலத்தைக் கண்ட சீதை துணுக்குற்று ஆசனத்தினின்றும் எழுந்தாள்.

15. கம்பன் சீதையும்—வால்மீகி சீதையும்

மணிமகுடம் புனையாமல் சடைமுடி புனைந்து, பட்டாடை அணியாமல், மரவுரி அணிந்து, தாய்மாரும், தவசியரும் வருந்திச் சூழ்ந்துவரத் தன்னெதிரே வந்து நின்ற கணவனை நோக்கிய பாவை சீதை துணுக்குற்று அச்சத்துடன் எழுந்து நின்றாள். அப்பொழுது,

எழுந்த நங்கையை மாமியர் தழுவினர் ஏங்கிப்
பொழிந்த உண் கண்ணீர்ப் புதுப்புனல் ஆட்டினர் புலம்ப
அழிந்த சிந்தையள் அன்னம் ஈதென்றறியாள்
கழிந்த நீர் நெடுங் கண்ணினள் வள்ளலை நோக்கி

Koviloor Digital Library

அச்சத்துடன் எழுந்த சிதையை மாமிமார்கள் கோசலே யும், சுமித்திரையும்) ஏங்கிய வண்ணம், அவர்கள் உள்ளத்தி லிருந்து கண்கள் வழியாகப் பெருகிய புது நீரால் குளிப்பாட்டிஞர்கள். அவர்கள் துயரத்தைக் கண்ட சிதை, அழிந்த சிந்தையள் (வருந்திய மனத்தினள்) ஆனுள். அந்த நிலேயில் அன்னம் போன்ற ஜானகி அவர்கள் துயரத்திற்குக் காரணம் அறியாமல் தன்னுடைய நெடுங்கண்களிலிருந்து நீர் பெருக, வள்ளலான இராமபிரானே ஏறெடுத்து நோக்கினுள்.

நோக்கியது மட்டுமின்றி, பின்னலேயொத்த நடுக்கத்தை யடைந்த மேனியுடன், 'அழகிய வீரக்கழலே அணிந்தவனே! ஏன் இவர்கள் இப்படித் துன்பப்படுகிருர்கள்? சக்கரவர்த்திக்கு என்ன ஏற்பட்டுவிட்டது?' என்று வினவவும் செய்தாள், மைவிழி மைதிலி.

இதைக் கேட்ட அண்ணல், "சிதே!

பொருவு இல் எம்பி புவி புரப்பான் புகழ்
இருவர் ஆணேயும் ஏந்தினென் இன்று போய்க்
கருவி மாமழை கல்தடம் கண்டு நான்
வருவென் ஈண்டு வருந்தலே நீ என்ருன்.

"பொருவு இல் எம்பி-ஒப்பிலாத என் தம்பி பரதன், புவி புரப்பான்-இந்தநாட்டை ஆள்வான். புகழ் இருவர் ஆணேயும் ஏந்தினென் - புகழ்பெற்ற இருவர், என் தாய் தந்தையர் ஆணேயை ஏற்று, உலகம் உய்யக் காரணமாகிய கருமேகங் ளுள்ள கானகத்தைக் கண்டு மீண்டும் வருவேன். நீ வருந்து தாதே" என்று கூறிஞன்.

இப்படிக் கணவன் சொல்லக் கேட்ட சீதை மனம் நொந் தாள். அவள் மனம் எப்படித் தேறும் என்றும் கம்பன் வினவு கின்ருன்.

துறந்து போம் எனச் சொற்ற சொல் தேறுமோ
உறைந்த பாற்கடல் சேக்கை உடன்ஓர்
அறம் திறம்பும் என்று ஐயன் அயோத்தியில்
பிறந்த பின்பும் பிரியலள் ஆயினுள்.

Koviloor Digital Library

"அறம் திறம்பும் என-தருமம் நிலை கெட்டுவிடுமே என்று அதை ஸ்தாபிப்பதற்காக பாற்கடலில் சேர்ந்திருந்ததை விட்டு ஐயன் அயோத்தியில் பிறந்த பின்பும், பிரிவாற்றுமை தாங்காத சிதை, தன்னைத் துறந்து போகிறேன் என்று கணவன் சொன்ன சொல் கேட்டதும் அவள் மனம் தேறுமோ? என்ன பாடுபடும்?" என்கிருன் கவி.

பிரிந்து செல்கிறேன் என்று இராமன் சொன்னதைக் கேட்டுத் துடித்த அன்னம் போன்ற சீதை, "என்ன காரணத் தால் என்னை இங்கு இரு என்று சொல்கிறீர்?" என்று, உயிரையே இழப்பவள்போல் நொடிந்து ஒடிந்து பேசினுள்.

ஜானகி உரை கேட்ட இராமன், கானகத்தின் கொடுமை களை எடுத்து உரைக்கலானுன்:

வல் அரக்கரின் மால்வரை போய் விழுந்து
அல் அரக்கின் உருக்கு அழல் காட்டு அதர்க்
கல் அரக்கும் கடுமைய அல்ல நின்
சில் அரக்கு உண்ட சேவடிப் போது என்ருன்

"சிதே! நின் சில் அரக்கு உண்ட-(உனது குளிர்ந்த செம் பஞ்சுக் குழம்பு ஊட்டிய) (சிவந்த அடிகளான தாமரைகள்), வலிமையுள்ள அரக்கர்களைப் போன்ற மலைகளில் பரவி உருக்கின அரக்கு போல் உஷ்ணத்தைக் கக்கும் காட்டு வழியி லுள்ள கற்களின் கடுமையை எப்படித் தாங்கும்? தாங்கும் கடுமையுடையவனல்ல உன் மென்மைக் கால்கள்" என்று இயம்பினுன் இராமபிரான்.

இதைக் கேட்ட சிதை பொறுமை இழந்தாள். வெகுண் டாள். "உனது பிரிவுத் துயரைவிட காடு எப்படி எனக்குச் சுடும்?" என்று வினவினுள்.

பரிவு இகந்த மனக்கொடு பற்றிலாது
ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ஈண்டுநின்
பிரிவினும் சுடுமோ பெரும் காடு என்ருள்.

Koviloor Digital Library

"பரிவு இகந்த மனத்தோடு-இரக்கும் இல்லாத இதயத்தோடு, ஒருவுகின்றனை-என்னை விட்டுச் செல்ல நினைக்கிறாய். ஊழி அருக்கனும் எரியும் என்பது யாண்டையது-ஊழிக்கால சூரியன் உலகைச் சுட்டெரிக்கும்போது ஏற்படுகிற உஷ்ணம் எத்தன்மையது? உன் பிரிவைவிடக் கொடியதா? அப்படியிருக்க, ஈண்டு நின் பிரிவினும் சுடுமோ பெரும் காடு-இங்கு உன் பிரிவு அளிக்கும் சூட்டைவிட அதிகமாகக் காடு சுடுமோ?" என்று கேட்டாள், திருமாலை என்றும் பிரியா திருமகள்.

அத்துடன் நிற்கவில்லை அவள். விடுவிடு என்று உட்சென்று கணவனைப் பின்தொடர மரவுரியும் புனைந்து வந்தாள். வழவழத்த பட்டு உடுக்க வேண்டிய பாவை கரகரத்த மரவுரி தரித்ததைக் கண்டு மாமிமார் அழுதனர்; மாந்தர் அழுதனர். இப்படி உலகமே வருந்த, சீதையுடனும் இலக்குவனுடனும் வனமேகினான் இராமபிரான்.

சீதைக்கும் இராமனுக்கும் ஏற்பட்ட சம்வாதத்தை, உரையாடலைக் கம்பன் இத்துடன் விட்டுவிட்டான். ஆனால் வால்மீகி மிகக் கடுமையான சொற்களை சீதையின் கனிவாயிலிருந்து கக்கவைக்கிறார். இராமன் துக்கத்துடன் வருகிறான் சீதையின் கிருகத்துக்கு. அதைப் பார்த்த சீதை, "பிரபோ! சந்தோஷப்படவேண்டிய காலத்தில் இந்தத் துக்கத்திற்கு என்ன காரணம்? சுவர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டு வேகமுள்ள நான்கு குதிரைகள் பூட்டிய புஷ்ய* ரதமானது ஏன் உமக்கு முன்னால் வரவில்லை? வீரனே! அழகுள்ளதாய், லட்சணங்கள் பொருந்திய பட்டத்து யானை உமக்கு முன்னால் ஏன் வரவில்லை?" என்று பலவித வினாக்களைத் தொடுத்தாள்.

இந்தக் கேள்விகளைக் கேட்ட இராமன், தந்தை தன்னை வனவாசம் செய்யும்படி இட்ட கட்டளையைச் சொன்னான்.

---

* 'புஷ்யரதம்' என்பது யுத்தத்திற்கு உபயோகப்படாதது. விசேஷ காலங்களில் மகாராஜாக்கள் ஊர்வலம் வருவது

Koviloor Digital Library

கைகேயிக்கு மகாராஜா முற்காலத்தில் கொடுத்த இரண்டு வரங்களின் பிற்கால விளைவு இது என்றும் கூறினுன். மேலும் சொன்னுன், "சீதே! பரதனை அநுசரித்து இரு. அவன் எதிரே என்னைப் புகழ்ந்து பேசாதே. செல்வத்தோடு கூடிய மனிதர்கள் பிறர்களைப் பற்றிய ஸ்தோத்திரத்தைப் பொறுக்கமாட்டார்கள். நீ விடியற்காலையில் எழுந்திருந்து எனது பிதாவையும் எனது தாயாரையும் மற்ற இரு சிற்றன்னைகளையும் அடி வணங்கி இரு" என்று.

இந்த அறிவுரைகளைக் கேட்ட சீதை,

கிமிதம் பாஷஸே ராம வாக்யம் லகுதயா த்ருவம்
தவயா யதபஹாஸ்யம் மே ச்ருத்வா நரவராத்மஜ

"நரர்களுக்குள் சிரேஷ்டனுன ஏ ராமா! பெண் பிள்ளையான நானே கேட்டு நகைக்கத் தகுந்ததாயிருக்கிறது உமது சொற்கள். என்ன இது? துச்சமென்று மதிக்கத் தகுந்த வார்த்தையைப் பேசுகிறீர்?" என்று வினவினுள் சினத்துடன்.

மேலும் சொன்னுள், "பர்த்தாவினுடைய சுகதுக்கங்களைப் பார்யை பகிர்ந்துகொள்ள வேண்டியவள். 'அர்த்தோவா ஏஷ ஆத்மன : யத் பத்னீ' என்ற சுருதி வாக்கியத்தின்படி பார்யை பர்த்தாவில் பாதி. ஆகவே உமக்கிடப்பட்ட அரசரின் கட்டளையில் எனக்கும் பாதி உண்டு. ஆகவே நானும் காட்டுக்கு வருவேன்" என்றுள்.

அப்பொழுது ராமன் காட்டின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னுன் : "சீதே! வனவாசம் செய்வதான எண்ணத்தை விட்டுவிடு. வனமானது எவராலும் பிரவேசிக்கத் தகாதது. புலி, கரடிகள், சர்ப்பங்கள் முதலான துஷ்ட ஜந்துக்களும் முள் முதலியனவும் நிறைந்தது. ஜனசஞ்சாரமில்லாத இடத்தில் புலி, சிங்கங்கள் நம்மை எதிர்த்து வரும். நதிகளும் முதலைகளோடு கூடியதாயிருக்கும்" என்று பயமுறுத்தினுன் ராமன்.

இதைக் கேட்டு மிகவும் வெகுண்ட ஜானகி ராமனை நோக்கிக் கடும் வார்த்தைகளைச் சொன்னுள். நடுக்கத்துடன் ஸ்ரீராமனைப் ப்ரளய கோபத்தினுல் கண்டபடி நிந்தித்தாள்.

Koviloor Digital Library

கிம் த்வா மன்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப:
ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்

"ராமனே! விதேய குலத்திற் பிறந்தவரும், மிதிலைக்கு அதிபதியுமான என் தந்தை, மனைவியை விட்டுச் செல்கிற உம்மைப்பற்றி என்ன நினைப்பார்? புருஷ வேஷம் போட்ட பெண் என் பெண்ணை மணந்துகொண்டு எனக்கு மாப்பிள்ளை என்ற முறையை அடைந்துவிட்டான் என்றல்லவா எண்ணு வார்?" என்று கேட்டாள்.

இதைவிட மிக உக்கிரமான வார்த்தையும் சொன்னாள். "உம்மை விட்டுப் பிரிந்தால் என் பிராணன் போய்விடு மென்பது உமக்குத் தெரியாதா? அப்படிப்பட்ட என்னை இங்கு விட்டுப் போகிறேன் என்று சொல்கிறீரோ?" என்று கேட்டாள்.

ஸ்வயம்து பார்யாம் கௌமாரீம் சிரம் அத்யுஷி தாம் ஸதீம்
சைலூஷ இவ மாம் ராம ப்ரேப்யோ தாது மிச்சஸி

"ராமா! குமாரியாயிருக்கும் காலத்திலிருந்து பரிபக்குவ மாய் பதிவ்ரதையாய் நெடுங்காலமாக உம்முடனே இருக் கின்ற பார்யையான என்னை, மனைவியை விற்று ஜீவிப்பவன் போல், நீராகவே பிறரிடம் தள்ளிவிட்டுப் போவதற்கு இஷ்டப் படுகிறீர்!" என்று, காதால் கேளத்தகாத வார்த்தையைச் சொல்லி, ராமனைக் கட்டிக்கொண்டு கோவென்று அழுதாள். இதைத் தாங்காத ராமன், "சீதே! உன் அபிப்பிராயத்தை அறியாமல் பேசிவிட்டேன்" என்று தேறுதல் சொல்லி, அவளை இரு கைகளாலும் இறுக அணைத்து சாந்தப்படுத்தி, அவளையும் அழைத்துக்கொண்டு வனத்திற்குப் புறப்பட்டான்.

Koviloor Digital Library

16. பரத சபதம்

தம்பி இலக்குவனுடனும் தையல் சீதையுடனும் அயோத்தி நகர் நீங்கிய நம்பி, உடன் வந்த மக்கள் அனைவரும் உறங்குகையில் வனம் புகுந்து விட்டான் என, திரும்பி வந்த சுமந்திரன் கூறிய செய்தி கேட்ட மாத்திரத்தில் தசரதன் உயிர் வானுலகை நோக்கிப் பறக்கவே, கோசலை கோவென்று கதறினள். சுமித்திரையும் மற்ற மனைவிமாரும் பெருங்கூச்சலிட்டு அழவே அயோத்தியே, துன்பக் கடலில் ஆழ்ந்தது. நகரத்தவரின் வருத்தத்தை, துடிப்பை தனது அரிய நெறி கலந்த உரைகளால் ஓரளவு அடக்கினன் வசிஷ்டன். அயோத்தி இப்படி அல்லற்பட்டுக் கிடந்த நேரத்தில்,

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனன்
மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்பது அழியா அழகுடையான்

இவன் வடிவு மையோ மரகத மணியோ மறிகடலோ (மடக்குந் தன்மையுள்ள கடலோ) மழை பொழியும் நிலையிலுள்ள கர்ப்ப மேகமோ, ஐயோ என்ன விந்தை என்று வியக்கும்படியான அழியா அழகுடைய இராமபிரான், இடையிருப்பது பொய்யோ என்று நினைக்கும்படியான சிற்றிடை ஜானகியுடனும், இளையவனான இலக்குவனுடனும் வெய்யோன் ஒளி (சூரியனின் ஒளி) தன் மீது பட்ட போதும் தன் உடலின் சோதியில் மறைந்து போகும்படியான காந்தியுடனும் வனம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். இடையே எதிர்ப்பட்ட முனிவர்கள் இராமபிரானைப் புகழ்ந்தனர். முனிவர்கள் மட்டுமென்ன, உலகத்தோர் பாவங்களையெல்லாம் போக்கும் கங்கையும் மகிழ்ந்தாள்.

கன்னி நீக்கரும் கங்கையும் கை தொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னின் நீக்குவர் யானும் இன்று என் தந்த
உன்னின் நீக்கினென் உய்ந்தனென் ஆல் என்றாள்

Koviloor Digital Library

கன்னி நீக்கும் அரும் கங்கையும் (அழியாத் தன்மையிலிருந்து என்றும் நீங்காத ஜீவ நதியான கங்கையும்) இராமனைக் கையெடுத்துத் தொழுது, "பிரபு! பாருளோர் (உலகத்தில் உள்ளவர்) தங்கள் பாவங்களையெல்லாம் என்னிடம் வந்து நீக்கிக் கொள்வார்கள். திரிவிக்ரம அவதாரத்தின் போது உன் பாத கமலத்திலிருந்து என்னைத் தந்த நீ, இன்று என்னிடம் மூழ்குவதால் என் பாவத்தையெல்லாம் நான் நீக்கிக் கொண்டேன்" என்று துதித்தாள்.

அப்படித் தொழுத கங்கையில் சீதையும் மூழ்கினாள். அப்படி பிராட்டி மூழ்கியதால் கங்கையும் சீதையின் கூந்தலின் நறுமணத்தைப் பெற்றாள்.

தேவதேவன் செறிசடைக் கற்றையுள்
கோவை மாலை எருக்கொடு கொன்றையின்
பூவும் நாறலள் பூங்குழல் கூந்தலின்
நாவி நாண்மலர் கங்கையு நாறினாள்.

தேவதேவனான பரமசிவன் சடைமுடியில் வந்திறங்கிய கங்காதேவியானவள், அப்பெருமானின் சடையுள் புதைந்து கிடந்த கோவை மாலை (தொடுக்கப்பட்ட மாலையிலிருந்த) எருக்கம்பூ, கொன்றை மலர் இவற்றின் வாசனையைப் பெற்றாளில்லை. ஆனால் அன்று சீதை நீராடியதால் சீதையின் குழலிலிருந்த பூவின் மணத்தையும், நாவி (கஸ்தூரி எண்ணெயின்) நறுமணத்தையும் பெற்று, கங்கை பெரிதும் வாசனையடைந்தாள். பரமசிவன் தலைப் பூக்களிலிருந்து பெறாத வாசனையைக் கங்கை, சீதை மூழ்கியதால் பெற்று விளங்கினாள் என்று கவி வியக்கிறான்.

கங்கையில் மூழ்கிய பின்பு மூவரும் முனிவரின் ஆசிரமங்களில் உண்டு, சிருங்கிபேரபுரம் அடைந்து குகனை நட்புப்பூண்டு அவன் உதவியால் கங்கையையும் கடந்து வனத்தில் புகுந்தனர். வழி நெடுக வனத்தின் அரிய காட்சிகளை இராமன் சீதைக்குக் காட்டியும் சென்றான். இடையே பரத்வாஜ முனிவரை வணங்கி, அவர் உரைத்தபடி சித்ரகூட பருவதத்திற்குச்

Koviloor Digital Library

சென்று, அங்கு பர்ணசாலை அமைக்கும்படி இலக்குவனுக்குக் கூற, இளவலும் பர்ணசாலை அமைத்தான். அங்கு மகிழ்ந்து வாழ்ந்த காலையில் அயோத்தியின் நிலைமை மிக விபரீதமாயிருந்தது.

வசிஷ்டர் அழைப்புக்கிணங்க கோசலை நாட்டிலிருந்து அயோத்தி திரும்பிய பரதன், தன் தாயார் இல்லம் எய்தி அவள் முன்பு அஞ்சலி செய்து, "என் தந்தையை வணங்க வேண்டும். அவர் எங்கே?" என்று வினவினன். அப்பொழுது கைகேயி,

ஆனவன் உரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிதப நிமிர்ந்த தானையத்
தேன்அமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினன் வருந்தல் நீ என்றாள்

ஆனவன் உரைசெய-பரதன் இப்படிக் கேட்க, வழிவில் சிந்தையாள்-சிறிதும் வருத்தமடையாத மனத்தையுடைய கைகேயி, தானவர் வலிதப-அசுரர் வலிமையை அழிக்கக் கூடிய, தானை-சேனையையுடையவனும், தேன் அமர் தெரியலான்-தேனைச் சிந்துகின்ற மலர் மாலையணிந்தவனுமான (உன் தந்தை), தேவர் கைதொழ, வானகம் எய்தினன் (மேல் உலகம் சென்று விட்டான்) அதற்காக நீ வருந்தல் (நீ வருத்தப் படாதே)" என்றாள்.

"உன் தந்தை மேலுலகம் போய்விட்டான். அதற்காக நீ வருத்தப்படாதே அப்பா!" என்றாள் கைகேயி. தசரதன் மரணத்தைக் கேட்ட பரதன் கோவென்று கதறினன். அத்துடன்,

எந்தையும் தாயும் எம்பிரானும் என் முன் உம்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால்
வந்தனை அவன் கழல் வைத்த போது அலால்
சிந்தைவெம் கொடுதுயர் தீர்கலாது என்றான்

Koviloor Digital Library

என் தந்தையும், தாயும், எனது கடவுளும், எனது முன்னவனுமான, எல்லேயில்லாத கல்யாண குணங்களேயுடையவனும் இராமனேயாகையால், அவன் கழல் (திருவடிகளில்) வணங்காவிட்டால் என் சிந்தையிலுள்ள கொடும் துயர் தீராது என்று கூறினுன் பரதன், கைகேயியை நோக்கி.

அதைக் கேட்ட கைகேயி சிறிதும் சளேக்காமல், 'அப்பா! இராமனே நீ பார்க்க இயலாது, அவன், தம்பி இலக்குவனுடனும் மனேவியுடனும் காட்டிலிருக்கிருன்'' என்று, ''செவ்வுரை வல்லவள் மீட்டும் கூறுவாள்'' (கொடிய சொற்களேக் கூறுவதில் வல்லவளான கைகேயி மறுபடியும் சொன்னுள்). அத்துடன், தசரதன் மரணத்திற்கும் இராமன் வனம் சென்றதற்கும் காரணத்தையும் சொன்னுள், ஈவிரக்கமில்லாத கைகேயி.

இந்தச் சொற்களே வாங்கிய பரதன் கைகளால் காதைப் பொத்திக் கொண்டான். அவன் கபோலங்கள் துடித்தன மயிர்க் கால்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன கைகள் ஒன்றையொன்று இடிபோல் அறைந்து கொண்டன. பரதன் சினத்தைக் கண்டு வானவரும் அஞ்சினர். அந்தச் சினத்துடன் கைகேயியை நோக்கி,

நீ இனம் இருந்தனே யானும் நின்றெனென்
ஏ எனும் மாத்திரத்து எற்று கின்றிலன்
ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாய் எனும் பெயர் எனேத் தடுக்கற் பாலதோ.

''நீயும் இங்கு இருக்கின்ருய். நானும் நிற்கின்றேன். ஏ என்று சொல்லும் மாத்திரத்துக்குள் எற்று கின்றிலன் (உன்னே அடித்து வீழ்த்தாது இருக்கின்றேன்) இதற்குக் காரணம் தெரியுமா உனக்கு? ஆயவன் (உலகிற்கெல்லாம் தாய் போன்று) இராமன் கோபிப்பான் என்று அஞ்சினேன். இல்லாவிட்டால் நீ தாய் என்று பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிருயே அது, என்னேத் தடுக்க வலிமை உள்ளதா? இல்லே, இல்லே'' என்ருன்.

Koviloor Digital Library

இப்படிப் பலவாறு சினந்து சீறிய பரதன் நேராகக் கோசலை இல்லம் புகுந்து வெட்டிச் சாய்த்த மரம் போல அவள் கால்களில் விழுந்தான்.

கடியவள் வயிற்றினில் பிறந்த கள்வனேன்
முடிகுவன் அருந்துயர் முடிய என்னுமால்

"அம்மா! கொடியவளான கைகேயியின் வயிற்றிற் பிறந்த கள்வனான நான் என் துயர் தீர முடிகுவன், (இறந்து போவேன்)" என்று கதறவும் செய்தான்.

பரதன் நிலை கண்ட கோசலை அவன் குற்றமற்றவனென்று புரிந்து கொண்டதால்,

கைகயர் கோன்மகள் இழைத்த கைதவம்
ஐய நீ அறிந்திலை போலும் ஆல் என்றாள்

"அப்பா பரதா! கேகய நாட்டரசன் மகள் இழைத்த வஞ்சகச் செயலை நீ முன்னமே அறிந்திலை போலும்" என்று கூறினாள்.

கோசலையின் சொற்கள் பரதன் மனத்தை அறுக்க, அவன் சபதங்கள் பலவற்றைச் செய்யலானான்.

"அம்மா! நான் அறிந்து இராமன் கானகம் சென்றிருந் தானானால், பெண்ணை வாளினால் சீவியவன் பாவத்தில் செல்லுவேன்!" என்றான். அது மட்டுமல்ல தாயே...

தழைத்த தண் துளவினோன் தலைவன் அல்லனென்று
அழைத்தவன் அறநெறி அந்தணாளரில்
பிழைத்தவன் பிழைப்பிலா மறையைப் பின்னின்று
இழைத்தவன்
இழைத்தவர் உளர் எனும் இழுதை நெஞ்சினேன்

தழைத்த தண்துளவினோன் தலைவன் அல்லனென்று அழைத்தவன்-நன்றாகத் தழைத்துச் செழித்துக் குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்துள்ள திருமால் தலைவன் அல்லனென்று (பரம்பொருள் அல்லவென்று) கூறுபவன் எவனோ, அறம் தவறாத அந்தணரிடம் பிழை செய்தவன்

Koviloor Digital Library

எவனோ, குற்றமில்லாத அபௌரேஷ்யமான மறையை (வேதங்களை) பின்னால் யாரோ செய்தார்கள் என்று பழிப்பவன் எவனோ, இத்தனை பேரும் போகிற பாவத்தில் நானும் போவேன்'' என்றான். இப்பாட்டினால் தான் வைணவன் என்பதை உணர்த்துகிறான் கவி.

பரதன் சபதம் மேலும் தொடருகிறது:

கன்று உயிர் ஓய்ந்து உகக் கறந்து பாலுண்டோன்

''கன்று உயிருக்கு மன்றாட, அதற்கு பால் விடாது தானே பாலைக் கறந்து குடிப்பவன் எவனோ அவன் போகும் பாவத்திலும் போவேன்''-என்றும் சொன்னான், பிற்காலத்தில் கன்றுக் குட்டியைக் கொன்று அதன் தோலில் வைக்கோலை அடைத்துப் பாலைக் கறந்து சாப்பிடும் சமுதாயம் எழப் போகிறது என்பதை அறியாத பரதன். இப்படிப் பலபடி சபதம் செய்து அரற்றிய பரதனை எடுத்து அழுதவண்ணம் அன்பினால் அணைத்துக் கொண்டாள் கோசலை.

17. குகனும் ஒரு மகன்

கோசலையின் அன்புப் பிணைப்பிலிருந்து விடுபட்டு அரசன் சடலமிருக்கும் இடத்தை நாடிப் புலம்பிய பரதன், அதற்கு மேலும் கிடைத்த அடிகளையும் தாங்கி, நம்பிக்குத் தம்பி அறத்தில் இளைத்தவனல்ல என்பதை நிருபித்தான். ஈமக் கடன் செய்ய வந்த பரதனை, ''உன் தந்தையின் விருப்பம் இது வல்ல'' என்று கூறி, சத்ருக்கனனைக் கொண்டு ஈமக் கடனை வசிஷ்டன் நிறைவேற்றிய போது, பரதன் தன் இழிந்த நிலையை நினைத்து வருந்தினான். பிறகு இராமனைப்போல் அவனும் மரவுரி தரித்து சடைமுடி புனைந்து, வசிஷ்டர் முதலான புரோகிதர்களுடனும், மந்திரிகளுடனும், சேனை களுடனும் தாய்மார்களுடனும் தமையனைத் திரும்ப அழைத்து வர அடவி நோக்கிக் கிளம்பினான்.

Koviloor Digital Library

இப்படித் துறவிவேடத்தில் வந்த பரதனை இன்னரென்று அறிந்த குகனும் பரதன் வந்த காரணத்தை அறிந்து வியப்பிலும் வியப்படைந்து,

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினேய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா.

''புகழினேய்-உலகம் உள்ளளவும் புகழமைந்தவனே, தாயான கைகேயியின் வார்த்தையைக் கேட்டு, தாதை உதவிய தன் தந்தை தசரதன் கொடுத்த, தரணி தன்னை-இராஜ்ய பாரத்தை, தீவினை என்ன நீத்து-இது தீயது என்று எண்ணி விட்டுவிட்டு, சிந்தனை முகத்தில் தேக்கிப் (கவலையை முகத்தில் படர விட்டுக் கொண்டு) போயினை என்ற போழ்து-இங்கு வந்தாய் என்று நினைத்து, தன்மை கண்டால்-ஆராய்ந்து பார்த்தால் தெரிவது என்னவென்ருல், ஆயிரம் இராமரும் நின் கேழ் ஆவாரோ - ஆயிரம் இராமர்கள் உனக்கு இணை ஆவார்களோ என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?'' என்று புகழ் பாடினுன் குகப்பெருமான்.

பிறகு பரதன் விருப்பப்படி எல்லோரையும் நாவாய்களில் ஏற்றிச் செல்லுங்கால் குகன் தாய்மார்களைப் பற்றிப் பரதனை வினவ, பரதன் ஒவ்வொருவராகக் குகனுக்கு அறிமுகப்படுத்துகிருன். முதலில் கோசலையை யாரென்று குகன் கேட்க—

சுற்றத்தார் தேவரோடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார் குரிசில் இவர் ஆரென்று
குகன் வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகும்
ஈன்ருனை முன் ஈன்ருளைப்
பெற்றத்தால் பெறும் செல்வம் யான்
பிறத்தலால் துறந்த பெரியாள் என்ருன்.

Koviloor Digital Library

"சுற்றத்தாரும் தேவர்களும்கூடத் தொழுது நின்ற கோசலையைத் தொழுது நோக்கிய குகன், கொற்றத்தார் குரிசில் வெற்றி மாலையுடைய அரசனே! இவர் யார் என்று வினவ அதற்குப் பரதன் பதில் சொல்லுகிறான். கோக்கள்- அரசர்கள் ,வைகும் முற்றத்தான் - தங்கும் தலைவாயிலுடைய தசரதனுடைய, முதல்தேவி - மூத்த பட்ட மகிஷி - மூவுலகை யும் படைத்த பிரமனை முதலில் படைத்த திருமாலாகிய இராமபிரானைப் பெற்றதால், பெறும் செல்வம் - பெற வேண்டிய செல்வத்தை, யான் பிறத்தலால் - நான் பிறந்த தனால், துறந்த பெரியவள்,' என்று, துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான். இப்பாட்டில், ''தேவும் எப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப் படைத்த தேவன்'' என்ற நம் மாழ்வார் பாடல் தொனிப்பதையும் காணலாம்.

இதைக் கேட்ட குகன் கோசலையை வணங்கினான்; வருந் தினான்; தேம்பினான். கண் கலங்கி நின்ற குகனையும் பரதனை யும் பார்த்த கோசலை, குகனையும் தன் பிள்ளையாகச் சேர்த்துக் கொண்டு அவர்கள் துயர் துடைத்தாள்.

நைவீர் அலீர் மைந்தீர் இனித்துயர்
நாடு இறந்து காடு நோக்கி
மெய்வீர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றும்
அன்றே விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறுஅனைய கானையிவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்
காலம் அளித்தி ரென்றாள்.

''மைந்தீர் - மைந்தர்களே! இனித் துயரால் நலிய வேண்டாம். இராமன் நாடு துறந்து காடு நோக்கி பெயர்ந் ததும் நன்மையாயிற்று, இந்தக் களிறு அனைய (யானையைப் போன்ற) வலிய தோள்களையுடைய கானை, இவன் தோழமை கிடைத்ததல்லவா? இனி நீங்கள் ஐவரும் ஒருவராகி ஒற்றுமை யுடையவர்களாய் இந்த மாநிலத்தை வெகுகாலம் பாதுகாப்

Koviloor Digital Library

பீர்'' என்ருள். இங்கு வேடனுன குகனையும் தன் மகனுக வரித்த கோசலையின் பெரிய மனத்தைச் சுட்டிக் காட்டுகிருன் கவி.

பிறகு பரதன் சுமித்திரையை அறிமுகம் செய்து வைத்தான். அடுத்தபடி கைகேயியை யாரென்று காட்டிக் குகன் கேட்கிருன்.

சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க்கடலில் ஏக
கடுமை ஆர் கானகத்து கருணையார்
கலி ஏகக் கழல்கான் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகு
தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை யார் இவர்
உரை என்னக் குரிசில் கூறும்

''சுடுகின்ற மயானத்திடை தன் கணவன் போக! தான் பெற்ற பிள்ளை துன்பக் கடலில் போக, கருணைமிக்க மாயன் அன்று நெடுமையால் (உயர்ந்து) அளந்த மூவுலகங்களையும் தன் கொடுமையால் அளந்த கைகேயியை, இவர் யாரென்று?' குகன் கேட்க, ''சொல்கிறேன் கேள்'' என்று பரதன் விளக்கு கிருன்.

படர் எலாம் படைத்தாளை பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடல் எலாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இவர் முகத்தாளை அறிந்திலையேல்
இங்நின்ருள் என்னை ஈன்ருள்

'குகனே!, படர் எல்லாம் படைத்தாளை - துன்பங்கள் எல்லாவற்றையும் படைத்தவளும், பழிவளர்க்கும் செவிலியை

Koviloor Digital Library

வளர்க்கும் செவிலித் தாயானவளும், தன் பாழ்ந்த பாவிக் குடலிலே - பாழாய்ப் போன் தன் வயிற்றிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்-வெகு காலம் தங்கியிருந்த எனக்கும் உயிராகிய சுமை குறைந்து தேய்வதால் உடல்களெல்லாம் உயிரற்றது போலக் காணப்படும் இவ்வுலகத்தில் ஒருத்தி அன்றோ, இடர் இலா முகத்தாளை - தான் ஒருத்தி மட்டுமே துன்பக் குறியில்லாத முகத்தை உடையவளுமான இவளை, யார் என்று உனக்கு தெரியவில்லையானுல், இப்பொழுது தெரிந்து கொள். இந்நின்ருள் என்னை ஈன்ருள் - இதோ நிற்கும் இவள் தான்என்னைப் பெற்ருள்'' என்ருன் பரதன்.

இப்படி அறிமுகத்திற்குப் பிறகு, கங்கையைத் தாண்டி பரத்வாஜ முனிவனை வணங்கிய பரதன் தன் பரிவாரங் களுடனே சித்ரகூட பர்வதத்தை அடைந்து இராமன் காலில் வெட்டிச் சாய்த்த மரம்போல் விழுந்தான். தந்தை இறந்த செய்தியும் சொன்ஞன். சீதையின் காலிலும் விழுந்து புலம் பிஞன். பிறகு தசரதனுக்குத் தர்ப்பணம் செய்த இராமனை, பரதன் திரும்பி நாட்டுக் கழைக்க எம்பிரான் வந்தானில்லை. ஆனுல் திருவடி சோடு மட்டும் அளித்தான் தம்பிக்கு. அதைத் தாங்கி துன்பச் 'சுமையையும் தாங்கித் திரும்பிஞன் பரதன். ஆனுல் அயோத்தி புகவில்லை. நந்தி கிராமத்தில் தங்கிஞன். அண்ணன் திருவடிச் சோடுகளுக்கு முடி சூட்டிஞன்.

அயோத்தியா காண்டம் முற்றும்

Koviloor Digital Library

18. சூர்ப்பனகை வந்தாள்

மகாபலியிடம் மூவடி மண்வேண்டி ஈரடியால் மூவுலக மளந்த எம்பிரானின் திருவடி சோடுகளுக்கு நந்திக் கிராமத்தில் தம்பி பரதன் திருமுடி சூட்டுங்கால், அண்ணல் இராமன் கல்லும் முள்ளும் நிறைந்த அடவிக்குள் நடந்து கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து மலர் மகள் சானகியும் தன்கமல பாதங்கள் சிவப்ப நடந்தாள். "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பன்ன:" என்ற வால்மீகி வாக்கியத்தின்படி கைங்கர்ய லக்ஷ்மியை உடையவனுன படியாலே லக்ஷ்மணன் என்று பெயர்பெற்ற இலக்குவனும், அவ்விருவரையும் தொடர்ந்தான். இந்த மூவரின் வருகையால் அரக்கர் துன்பம் தீர்ந்ததென்று மகிழ்ந்த முனி ஜனங்கள் ஆங்காங்கு இராமபிரானைப் பூசித்தனர். தங்கள் குறைகளைச் சொல்லவும் செய்தனர். அவர்களைக் காப்பதாக உறுதிகூறிய இராமபிரான், மெள்ள அத்திரி முனிவரின் ஆசிரமத்தை அடைய, அங்கு அம்முனிவன் பத்தினியும் மகா பதிவிரதையுமாகிய அனுசூயை சீதைக்கு ஆபரணங்களைப் பூட்டினுள்.

> அன்ன மாமுனியொடு அன்று அவண் உறைந்துஅவன் அரும்
> பன்னிகற்பின் அநசூயை பணியால் அணிகலன்
> துன்னு தூசினெடு தந்து இவை சுமந்த சனகன்
> பொன்னேடு ஏகி உயர் தண்டக வனம் புகுதலும்

அந்த மகா முனிவனுடன் அன்று அவண் (அந்த ஆசிரமத்தில்) தங்கியிருந்து அம்முனிவனது - அரும் பன்னி - அரிய பத்தினியாகிய கற்பில் மிகுந்த அனுசூயையின், பணியால் (கட்டளையால்), பொருத்தமான ஆடைகளும்)சந்து (சந்தனமும் தரித்த சனகன் பொன் எனும் சீதாப் பிராட்டியுடன், அண்ணல் அடர்ந்த தண்டகவனத்துள் பிரவேசித்தான். அங்கு முதன் முதலாக அம்மூவரையும் எதிர் கொண்டான் விராதன் எனும் அரக்கன்.

Koviloor Digital Library

விராதன் அங்கு வர வேண்டியவனே அல்ல. எங்கோ போக வேண்டியவன் அவர்கள் இருந்த வழி வந்தான். 'விராதம் விதி சோதிதம்' என்று ராமோதந்தம் என்ற கிரந்தம் கூறுகிறது. விதியால் உந்தப்பட்டு வந்தான் விராதன் என அந்த நூல் தெளிவு படுத்துகிறது. அந்த விராதன்—

பன்னக அதிபர் பணமணி பறித்து அவை பகுத்து
என்ன விண்ணவர் விமானம் இடை இட்டு அரவிடை
துன்னு கோளினொடு தாரகை தொடுத்த துழனிச்
சன்ன வீரம் இடைமின்னு தட மார்பினோடுமே.

பன்னக அதிபர் பணமணி- சிறந்த பாம்புகளின் படங்களிலிருந்து ஜொலிக்கின்ற மணிகளை, பறித்து- பிடுங்கிக் கொண்டு வந்து, அவற்றை ரக வாரியாகப் பகுத்து, அரவிடை- மலைப்பாம்புகளின் உடலிலே விண்ணவர் விமானங்களையும் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் சேர்த்து மாலையாகத் தொடுத்து அதை இடையில் மின்ன, சன்ன வீரம் - அத்தகைய வெற்றி மாலைகள் துலங்க, தட மார்பினொடு - விசாலமான மார்போடு பயங்கரமாக வந்தான்.

அந்த அரக்கன் பார்வை முதலில் விழுந்தது பாவை சீதையின் மேல். அடுத்த கணம், அம்மூவரையும் விராதன், "நில் லுங்கள் நில் லுங்கள்" என்று கூவினன் பயங்கரமாக.

நில்லுநில்லுமென வந்து நிணம் உண்ட நெடுவெண்
பல்லும் வல் எயிறும் மின்னு பகுவாய் முழைதிறந்து
அல்லிபுல்லும் மலர் அன்ன மனையாளை ஒருகைச்
சொல்லும் எல்லையின் முகந்து உயர் விசும்புதொடர.

நிணம் உண்ட - மாமிசத்தை சாப்பிட்ட, நெடு வெண்பல்லும் - நீண்ட வெண்மையான பற்களும், வல் எயிறும் - கோரைப் பற்களும் உடைய, முழை - குகை போன்ற, பெரிய வாயைத் திறந்து, நில்லும் நில்லுமெனக் கூறிக்கொண்டு வந்த அந்த அரக்கன், அல்லி புல்லும் மலர்-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அன்னம் போன்ற

Koviloor Digital Library

இராமன் மனையாளை, சொல்லும் எல்லையின்-ஒரு சொல்லை உச்சரிக்கும் நாழிக்குள், அதாவது கணப்பொழுதில் ஒரு கையால் தூக்கிக்கொண்டு, ஆகாச மார்க்கத்தில், தொடர - செல்லும் போது, இராம லக்ஷ்மணர்கள், "எங்கே போகிறாய். நல்" என்று தடுத்தார்கள். அதற்கு அவ்விராதன் சொன்னான்!

ஆதிநான்முகன் வரத்தின் எனதாவி அகலேன்
ஏதியாவதுமின்றி உலகில் யாவும் இகலில்
சாதியா தனவும் இல்லை உயிர் தந்தனன் அடா
போதிர் மாது இவளை உந்தி இனிதென்று புகல

"ஆதியில் நான்முகன் கொடுத்த வரத்தினால் என் உயிர் போகாது. ஏதியாவதும் இன்றி (ஆயுதம் எதுவும் இல்லாமலே). உலகத்தில் நான் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. இருப்பினும் உங்கள் உயிரைக் கொடுத்தேன். மாது இவளை விட்டுப் போய் விடுங்கள்."

இதைக் கேட்ட இராமபிரான், அண்ட சராசரங்களும் நடுங்க தனது வில்லில் நாணேற்றி ஒலி செய்தான். அத்துடன் விராதன் எறிந்த சூலத்தையும் வாளியால் துண்டித்தான். விராதன் பிடுங்கி விசிய மலைகளையும் தடுத்து, விராதன் மீதே திருப்பினான். இத்தனைக்கும் அவன் சளைக்காது போரிடவே, அவன் தோள்களை வெட்ட இராமன் இலக்குவனோடு அவன் தோள்களில் ஏறினான். அந்த விராதன் சீதையைவிட்டு இராம லக்ஷ்மணர்களைக் கையில் பற்றிக் கொண்டு முன்னைவிட வேகமாகச் செல்லவே, சீதை அந்நிலை கண்டு அலறினாள். ஆண் அன்னம் பிடிக்கப்படும் போது, பெண் அன்னம் துடிப்பது போல் துடித்து, துவண்டு விழுகின்ற பூங்கொம்புபோலப் புழுதியில் விழுந்தாள்.

பின்னை ஏதும் உதவும் துணைபெறாள் உரைபெறாள்
மின்னை ஏய் இடை நுடங்கிட விரைந்து தொடரா
அன்னையே அனைய அன்பின் அறவோர்கள் தமைவிட்டு
என்னையே நுகர்தி என்றனள் எழுந்து விழுவாள்.

Koviloor Digital Library

அங்ஙனம் விழுந்தவள் மீண்டும் எழுந்து எந்தத் துணையும் பெறுதவளாய், உரையும் பெருள் (சொல்லுவது இன்னதென்றும் அறியாதவளாய்), மின்னலையொத்த இடை துவண்டிட விரைந்து அவ்விராதனைத் தொடர்ந்து, ''உலகுக்கெல்லாம் தாய் போன்ற அந்த தருமசொரூபிகளை விட்டுவிட்டு என்னையே நுகர்தி (என்னையே சாப்பிட்டு விடு'') என்று கூறி மீண்டும் தரையில் விழுந்தாள் பிராட்டி.

இது கண்ட இலக்குவன் சீதையின் துயரத்தை இராமனுக்கு எடுத்துச் சொல்ல, இராமன் பதில் கூறினன்: ''லக்ஷ்மணு! இவன் மீதே ஏறிப் போனுல் நாம் போக வேண்டிய இடத்துக்கு வேகமாய்ப் போய்ச் சேரலாமென்று எண்ணினேன். இவனைக் கொல்லுதல் பெரிய காரியமன்று'' எனக் கூறி, விராதனைக் காலால் உதைத்துத் தள்ளினன். அத்துடன் இலக்குவனுடன் சேர்த்து இரு தோள்களையும் வெட்ட, விராதன் மேலும் அவர்களைத் தொடர்ந்தான், ஆகவே இலக்குவனைப் பெரும் பள்ளம் வெட்டச் சொல்லி, அதில் போட்டு அப்பெரு உடலை இராமன் புதைத்து விட, தனது சாபம் தீர்ந்த விராதன், தெய்வ சரீரம் பெற்று விண்ணில் தோன்றினன். தத்துவ ஞானம் பெற்று இராமபிரானைத் துதிக்கவும் செய்தான்.

தாய் தன்னை அறியாத கன்றில்லை தன் கன்றை
ஆயும் அறியும் உலகின் தாயாகின் ஐய
நீ அறிதி எப்பொருளும் அவை உன்னை நிலைஅறியா
மாயை இது என் கொலோ வாராதே வரவல்லாய்.

''ஐயா! வாராதே வரவல்லாய் - மனத்திற்கு எட்டாமலிருந்தும் எளிமைக் கோலத்திலே வரவல்லவனே! தாயை அறியாத கன்று இல்லை. கன்றை ஆயும் (தாயும்) அறியும். உலகத்துக்குத் தாயாயிருப்பதால் எல்லா பொருளையும் நீ அறிந்து கொள்கிருய். ஆனுல், அப்பொருள்களெல்லாம் உன்னை அறிவதில்லையே. இதென்ன மாயை?'' என்று வியக்கிருன் விராதன். கன்று போலிருக்கும் உலக ஜீவன்கள்

Koviloor Digital Library

தாயாகிய உன்னை எப்படி அறியாதிருக்கின்றன?" என்று வினவியதிலேயே மாயா தத்துவத்தை உணர்த்துகிறான்.

இப்படிப் பலபடத் துதித்து சரபங்க முனிவரின் ஆசிர மத்துக்குச் செல்லும் வழியையும் அவன் கூறவே, சரபங்க ஆசிரமம் சென்ற இராமன், அங்கு அம்முனிவருக்கு மோட்ச மளித்து, சுதீக்ஷ்ணாசிரமத்துக்குச் சென்று, அவரால் பூஜிக்கப் பெற்று, ராக்ஷஸர்களைக் கொல்லுவதாக அங்கிருந்த முனிவர் களுக்கு உறுதி கூறுகிறான்.

இங்கு கம்பராமாயணத்துச்கும் வால்மீகிக்கும் சிறிது வேறுபாடு இருக்கிறது. அரக்கர்களைக் கொல்வதாகச் சபதம் செய்த இராமனைத் தடுத்துப் பேசவில்லை சீதை, கம்பன் காவி யத்தில். ஆனால் வால்மீகியின் சீதை இராமனைக் கேட்கிறாள்: "உன்னிடம் அபராதம் செய்யாத ராக்ஷஸர்களைக் கொல்வ தாக நீர் எப்படி சபதம்செய்யலாம்? பகையின்றி, காரணமின்றி ராக்ஷஸர்களை எப்படிக் கொல்லலாம்? இது தர்மமல்லவே" என்று "அபராதமின்றி வீணாகப் பிராணிகளை அழிப்பதை நான் விரும்பமாட்டேன்" என்றும் கூறினாள். "எந்தக் கார ணத்தைக் கொண்டும் தர்மத்தை விடக் கூடாது" என்றும் உபதேசிக்கிறாள்.

தர்மாத் அர்த்தப்ரபவதே ப்ரபவதே தர்மாத்ஸுகம்
தர்மாத் லபதே ஸர்வம் தர்ம ஸாரம் இதம் ஜகத்.

"தர்மத்தினால் செல்வம் உண்டாகிறது. தர்மத்தினால் சுகம் உண்டாகிறது. எல்லாம் தர்மத்தினால் தான் உண்டா கிறது. இந்த உலகமே தர்ம சாரமாயிருகிறது" என்றும் சொன்னாள்.

இது கம்பனில் கிடையாது. கணவன் சென்ற வழி அவளும் சென்றாள். ஸுதீக்ஷ்ண ஆசிரமத்தினருகில் முனி ஜனங்களுக்கிடையில் பத்து வருஷங்களைக் கழித்த இராம

Koviloor Digital Library

பிரான், தம்பியொடும் மனேயாளோடும் அகஸ்தியாசிரமம் சென்ருன். அங்கிருந்து அகஸ்தியர் உத்தரவுப்படி கோதாவரி தீரத்தில் சீதையும் ராமனும் உல்லாச வாழ்க்கை நடத்தினுர் கள்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதை தன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு வந்து நீர் உண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

"கோதாவரியின் அருகே ஓதிமம் (அன்னப் பறவை) ஒதுங் கியதைக் கண்ட இராமன் சீதையின் நடையை நோக்கிப் புன் முறுவல் கொண்டான். அங்கு வந்து நீர் உண்டு சென்ற போதகம்—(யானேயின்) நடையை நோக்கிப் புதிதாக ஒரு புன் முறுவல் பூத்தாள் ஜானகி. இப்படி ஒருவர் அழகை ஒருவர் ரசித்து வாழ்ந்த அவர்கள் ஆனந்த வாழ்க்கைக்கு இடையூருக வந்தாளே சூர்ப்பனகை!

19. வஞ்ச மகள்

இராமாயண மகா காவியத்தில் பெண்கள் பலர் வந்தா லும், சூர்ப்பனகையிடம் எல்லாக் கவிகளும் ஒரு தனிப் பற்றைக் காட்டியிருக்கிருர்கள். கைகேயி இல்லாவிட்டால் எப்படி இராம காவியத்தின் முதல் பாதி முன்னேறியிருக்காதோ, அப்படியே சூர்ப்பனகை தோன்ருதிருந்தால் பின்பகுதி முன் னேறியிருக்காது. இராமன் அவதார காரியமும் நிறைவேறி யிருக்காது. தவிர, இராமாயணத்தில் எத்தனேயோ ரசங்கள் இருந்தும், நவரசங்களில் ஒன்ருன ஹாஸ்ய ரசத்துக்கு சூர்ப்ப னகை மூக்கும் காதும் அறுபட்ட கட்டத்தைத் தவிர, வேறு கட்டங்கள் இல்லாத காரணத்தால், இராமாயண காவிய கர்த்தாக்களும், வியாக்கியானவர்த்தாக்களும் சூர்ப்பனகை யைப்பற்றி மிக விரிவாக எழுதியிருக்கிருர்கள்.

Koviloor Digital Library

இராமாயண நவரசங்களைப் பற்றி 'இராம கர்ணு மிருத தில், ஆதி சங்கரர் (''ஹாஸ்யம் சூர்ப்பணகா முகே'') இராமாயணத்தில் நகைச்சுவைக் கட்டம் சூர்ப்பனகையின் முகாந்திரமாகக் கிடைக்கிறது என்று கூறுகிறார்.

காளிதாசன் இரகுவம்ச மகாகாவியத்தில் சூர்ப்பனகை யின் வருகையைப்பற்றிச் சொல்லும் போது—

ராவணு வரஜா தத்ர ராகவம் மதனுதுரா
அபிபேதே நிதார்த்தா வ்யாலீவ மலயத்ருமம்

தத்ர - அங்கு, மதன ஆதுரா - காமத்தின் வசப்பட்ட, ராவணுவரஜா-ராவணன் தங்கையானவள் (சூர்ப்பனகை), ராகவம்-இராமனை, நிதார்த்தா - கோடையினுல் வருந்திய, வ்யாலி - பெண் பாம்பானது, மலயத்ருமம் இவ - சந்தன மரத்தை அடைவதுபோல, அபிபேதே-அடைந்தாள்.

"கோடையின் உக்கிரத்தால் பீடிக்கப்பட்ட பெண் பாம்பு எப்படிக் குளிர்ச்சியான சந்தன மரத்தை நாடிச் செல்லுமோ அப்படியே ராவணன் தங்கையான சூர்ப்பனகை, காமாக்னி யால் பீடிக்கப்பட்டவளாக இராமனிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள்'' என்று காளிதாசன் சூர்ப்பனகையின் வருகையை வர்ணிக்கிறுன். சர்ப்பங்கள் நல்ல வாசனையில் ஈர்க்கப்படும் என்பதால் சந்தன மரத்தைக் கவி சுட்டிக் காட்டுகிறுன். சர்ப்பம் என்பதாலே சூர்ப்பனகையின் குணமும் தெளிவாக்கப் படுகிறது.

சூர்ப்பனகையின் வருகையை வால்மீகியும், ''இராமன் பர்ணசாலையில் சிதைக்குப் பலவிதக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கையில், ராட்சஸி ஒருத்தி திடீரென்று அவ்விடம் வந்தாள். அவள் சூர்ப்பனகையெனும் பெயருடையவள். பத்துத்தலைகளுடைய ராவணன் எனும் ராட்சஸனுக்கு உடன் பிறந்தவள்'' என்று கூறுகிறுர். அவள் மாயா ரூபம் தரித்து அழகாக வந்ததாக வான்மீகி நேரிடையாகச் சொல்லவில்லை. இராமன் அவளை நோக்கிக் கேட்ட கேள்விகளிலிருந்து, அவள்

Koviloor Digital Library

அழகிய ரூபத்தைத் தரித்து வந்தாள் என்று நாம் ஊகிக்கிறோம். ''நீ யார்? யாருடையவள்? இவ்வளவு மனோகரமான ரூபத்தையுடைய நீ எனக்கு ராட்சஸியாகத் தோன்றவில்லை'' என்ற இராமன் வாக்கிலிருந்து, நாம் அவள் காமரூபம் தரித்தவள் என்பதை உணருகிறோம்.

இத்தகைய எந்த ஊகத்துக்கும் கம்பன் இடம் வைக்கவில்லை. சூர்ப்பனகை முதலில் மறைவிடத்திலிருந்து இராமனைக் காண்கிறாள்.

நீல மாமணி நிற நிருதர் வேந்தனை
மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்
மேலை நாள் உயிரொடும் பிறந்துதான் விளை
காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் அனாள்.

"சிறந்த நீல ரத்தினம் போன்ற கறுத்த நிறத்தையுடைய நிருதர் (அரக்கர்) வேந்தனை, மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள் (வேரோடு அழிக்கப் போகிற இயல்பையுடையவளும்), பிறக்கும்போதே உயிருடன் கூடப்பிறந்து, தகுதியான காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு உடலுடன் வாசம் செய்து, கடைசியில் உயிரை உறிஞ்சிவிடுகின்ற கொடிய நோய் போன்ற விஷமான சூர்ப்பனகை, இராமனிருக்குமிடம் வந்து சேர்ந்தாள்'' என்று கூறுகிறான் கம்பன்.

இங்கு கம்பன் உவமை ஔவையாரிடமிருந்து பெற்றது எனக் கொள்வது தவறாகாது. உடலுடன் பிறந்து கொல்லும் வியாதியைப் போல், ராவணனுக்கு உடன் பிறந்தவளான சூர்ப்பனகை கம்பனால் வர்ணிக்கப்படுகிறாள் மேற்கண்ட பாட்டில்.

ஔவையாரும் ''வாக்குண்டாம்'' என்ற அறிவு நூலில்

''உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி...''

என்று உவமை காட்டியிருக்கிறார். இதே உவமை சூர்ப்பனகை விஷயத்தில் கம்பனால் கையாளப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

அப்படி ராவணன் உயிரைக் குடிக்கும் வியாதி போல் வந்த சூர்ப்பனகை மிகப் பயங்கர ரூபத்துடன் வந்தாள் முதலில்.

செம்பு அராகம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்ப ராகுத் தனி விளைந்த மெய்யினள்
உம்பர் ஆனவர்க்கும் ஒள்தவர்க்கும் ஓதநீர்
இம்பர் ஆனவர்க்கும் ஓர் இறுதி ஈட்டுவாள்

"உலோகமான செம்பின் நிறத்தைப் போல அடர்ந்த செம்பட்டை மயிருடையவள். ராகுவெனும் கொடிய கிரகம் வாடும்படியான வளர்ந்த சரீரத்தையுடையவள். மேலேயுள்ள தேவர்களுக்கும், தவசிகளுக்கும், ஓதநீர் இம்பர் ஆனவர்க்கும் (கடலின் நீர் சூழ்ந்த இவ்வுலகில் உள்ளவர்க்கும்) முடிவு கட்ட வல்லவள்" என்று அவள் கொடிய உருவத்தையும், குணத்தையும் வர்ணிக்கிறான் கம்பன்.

இத்தகைய சூர்ப்பனகை இராமனைக் கண்டாள். "சூர்ப்பநகா" என்பது வடமொழிச் சொல். 'சூர்ப்பம்' என்றால் முறம். 'நகா' என்றால் நகம். முறத்தளவு நகத்தைப்பெற்றவள் என்பது அவள் பெயர். ஒரு நகம் முரம் போலிருந்தால், அதற்குத் தகுந்த விரல் எத்தனை பெரிதாயிருக்கும்? விரல்களைத் தாங்கிய கை எத்தனை பெரிது? அதற்குத் தகுந்த உடல் எப்படி மலைபோல் இருக்கும்? இதை நாம் ஊகித்துக் கொள்ளவேண்டியது. இத்தகைய பயங்கர உருவத்தைப் பெற்ற சூர்ப்பனகை இராமனைக் கண்டாள். நேர் எதிர்மாறாக இருக்கிறான் இராமபிரான்.

கற்றை அம்சடையவன் கண்ணில் காய்தலால்
இற்றவன் அன்று தொட்டு இன்றுகாறும் தான்
நல்தவம் இயற்றி இவ் அனங்கன் நல்உருப்
பெற்றனனும் எனப் பெயர்த்தும் எண்ணுவாள்.

"கற்றை அம்சடையவன் கண்ணில் காய்தலால் - அடர்ந்த அழகிய சடையுடையவனான சிவபிரான் நெற்றிக் கண்ணால் காய்தலால் (எரிக்கப் பட்டதால்), இற்றவன் -

Koviloor Digital Library

(அழிந்து விட்டவனுன), அனங்கன் (மன்மதன்), அன்று தொட்டு நல்ல தவத்தைச் செய்து, இந்த நல்ல உருவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று எண்ணுவாள்'' என சூர்ப்பனகை இராமன் அழகைக் கண்டு மயங்கியதைக் கூறிய கம்பன், மேற்கொண்டு அவள் இராம பிரானின் ஒவ்வொரு அவயவத்திலும் மயங்கியதை விளக்குகிறுன்.

இராமனது கையழகு, தோளழகு, மார்பழகு, திருமுக மண்டலத்தின் அழகு, தவ வடிவழகு, திருவடி அழகு, ஆகரத்தின் அழகு, இடையழகு, முடியழகு இப்படி ஒவ்வொரு அழகிலும் ஈடுபட்ட சூர்ப்பனகை இராமனிடம் காம வசப்பட்டுக் கலங்கினுள். அப்பொழுது சூர்ப்பனகையின் நிலையிருந்த வகையைக் கவி வர்ணிக்கிறுன்.

வான்தனில் வரைந்தது ஓர் மாதர் ஓவியம்
போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்
தோன்றல் தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள்
ஊன்றினள் பறிக்க ஓர் ஊக்கம் பெற்றிலள்.

அப்பொழுது சூர்ப்பனகை வானத்தில் எழுதப்பட்ட பெண் வடிவமான சித்திரத்தைப் போல் திகைத்து நின்றுள்- புலர்ந்தனள் - மனம் வாடினுள், புழுங்த நெஞ்சினள்- விரக தாபத்தால் துடித்த நெஞ்சினை உடையவளானுள். இராமனுடைய சுடர் மணித்தோளில், நாட்டங்கள் ஊன்றினள்—கண்களை நிலைக்க விட்டாள். ஆனல் அக் கண்களைத் திரும்ப இழுக்க ஊக்கம் பெற்றிலள் - சக்தியற்றவளானுள்.

இராமபிரான் தோளின் அழகைக் கண்டு அவற்றில் பதித்த கண்களை ஈர்க்க மாட்டாதவளானுள் சூர்ப்பனகை என்ற இப்பாட்டுக்கு மூலம் கம்பன் பால காண்டத்திலேயே இருக்கிறது. "தோள் காண்டார் தோளே கண்டார்' என்று அக் காண்டத்திலும் கவி இராமபிரான் தோளழகில் ஈடுபட்டிருக்கிறுன்.

இப்படி இராம பிரானது சௌந்தர்யத்தில் ஈடுபட்டதால் சூர்ப்பனகையின் விரக தாபம் மேலிட்டு அவனைச் சேரக் கருதி

Koviloor Digital Library

அதற்கான மார்க்கத்தையும் யோசிக்க முற்பட்டாள். அப்படி யோசித்து ஒரு முடிவுக்கும் வந்து அழகிய உருவத்தை எடுக்க மந்திரம் செபித்தாள்.

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அம்கையின் ஆய மந்திரத்தை ஆய்ந்தனள்
திங்களின் சிறந்து ஒளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கு ஒளி விசும்பினில் பொலியத் தோன்றினுள்

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா- செங்கமலச் செல்வியான திருமகளை மனத்தில் தியானித்தாள். அம் கையின் ஆய மந்திரத்தை ஆய்ந்தனள் - தன் கைவசப் பட்ட லட்சுமி மந்திரத்தை செபித்தனள். அதன் விளைவாக திங்கள் (சந்திரன்) போன்ற சிறந்த ஒளியுடைய முகத்தையும் சிவந்த மேனியையும் பெற்றுள். பொங்கிய அவள் மேனி அழகு வானத்திலேயும் பள பளக்க மிக அழகுடன் தோன்றினுள் .

இப்படித் தோன்றிய அந்த சூர்ப்பனகை இராமன் எதிரில் வந்தாள்.

பஞ்சி ஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடி பெயர்ப்பாள்
அஞ்சொல் இள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்ச மகள் வந்தாள்.

பஞ்சி ஒளிர்- செம்பஞ்சுக் குழம்பு பூசியதால் ஒளிவிடு கின்ற, விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க- செழித்த தளிர்கள் கொண்ட கொடியும் வருந்தும்படி, செம்செவிய கஞ்சம் நிமிர்- சிறந்த அழகுள்ள தாமரை மலர்போன்ற, சீறடி பெயர்ப்பாள்- சிறந்த அடிகளை எடுத்து வைப்பவளாய், அம் சொல் இள மஞ்ஞை என- அழகிய சொல்லையுடைய இனிய மயில் போலவும், அன்னமென- அன்னம் போலவும், வஞ்சியென— வஞ்சிக் கொடி போலவும், நஞ்சம் என - விஷம் போலவும், வஞ்சமகள் வந்தாள்- வஞ்சனைக் குணமுடைய சூர்ப்பனகை வந்தாள்.

Koviloor Digital Library

செம்பஞ்சுக் குழம்பு பூசிய பாதத்துடனும், தளிர் விரல்களுடனும், மயிலைப் போல் சாயலையும், அன்னம் போன்ற நடையையும் பெற்ற விஷம் போன்ற சூர்ப்பனகை இராமன் எதிரில் வந்தாள். இங்கு அம் சொல் இளமஞ்ஞை- அழகிய சொல்லையுடைய இளமயில் என்று கவி வர்ணிக்கிறான். மயிலின் குரல் அழகாயிருக்காது; ஆனால் சூர்ப்பனகை குரலையும் மாற்றிக் கொண்டாள் என்பது கருத்து.

இப்படி இனிய தோற்றத்துடனும் குரலுடனும் அன்ன நடை நடந்து வந்த சூர்ப்பனகையை இராமனும் கண்டான்.

20. சூர்ப்பனகையின் சொல் திறன்

சூர்ப்பனகையிடம் பல கவிகளும் அதிக ஈடுபாடு காட்டியிருந்தாலும், முக்கியமாக வால்மீகியும், கம்பனுமே அவள் விருத்தாந்தத்தை அதிகமாக எழுதியிருக்கிறார்கள். இந்த இரு கவிகளில் கம்பன் வால்மீகியைவிட அதிக இடத்தை சூர்ப்பனகைக்காக கொடுக்கிறான். ஆரண்ய காண்டம் பதினேழு பதினெட்டு ஆகிய இரு சர்க்கங்களில் வால்மீகி சூர்ப்பனகையின் வரவையும் அங்கஹீனப்படுவதையும் முடித்துவிடுகிறார். ஆனால் சூர்ப்பனகை-ராமன் சம்வாதமும், சூர்ப்பனகையை சிட்சை செய்தலும் கம்பனால் மிக விரிவாக எழுதப்படுகிறது.

சூர்ப்பனகை- ராம சம்வாதத்தை வால்மீகி ஹாஸ்யமாக எழுதுகிறார். கம்பன் அங்கு தர்மசாஸ்திரங்களையும் கொண்டு வருகிறான்.

மாறுவேடத்துடன், அழகாய் வந்து, ராமனுடைய வடிவழகைப் பார்த்து மயங்கிய சூர்ப்பனகை, “நீ தவசிகளைப்போல் ஜடை தரித்திருக்கிறாய். ஆனால் காமுகன்போல் மனைவியோடு கூடியவனாயிருக்கிறாய். மேலும் க்ஷத்திரியனைப்போல வில்லையும் பாணங்களையும் ஏந்தியிருக்கிறாய். இப்படிப்பட்ட நீ ராக்ஷஸர்

Koviloor Digital Library

கள் நிலவும் இந்தக் காட்டிற்கு எப்படி வந்தாய்? ஏன் வந்தாய்?'' என்று வினவுகிருள்.

அதற்கு சத்தியத்தைத் தவிர வேறெதையும் பேசாத ராமன், கதையை உள்ளபடி சொல்லிவிட்டு சூர்ப்ப னகையைக் கேட்கிருன்: "உன்னைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீ யார்? யாருடையவள்? இத்தனை மனேகரமான உருவத்தையுடைய நீ எனக்கு ராக்ஷஸியாகத் தோன்றவில்லை. நீ இங்கு எதற்காக வந்தாய்?'' என்று.

அந்த ராக்ஷஸியும் காமவெறி மீறப்பெற்று யதார்த் தத்தைச் சொல்கிருள்: "நான் சூர்ப்பனகை என்னும் ராக்ஷஸி. நினைத்தபடி வடிவங்கொள்ள வல்லவள். வீரனும் விச்ரவசுவின் குமாரனும் ராக்ஷஸ ராஜாவுமான ராவணன் எனக்கு உடன் பிறந்தவன். எப்பொழுதும் தூங்கும் கும்பகர்ணனும், எனக்குச் சகோதரன். தர்மாத்வான விபீஷணனும் என் உடன் பிறந்தவன். போர்களில் பிரஸித்தமான கர தூஷணர்களும் எனக்குச் சகோதரர்கள் என்பதற்காக நீ பயப்படாதே. நான் என்னிஷ்டப்படி அவர்கள் எல்லோரையும் மீறி நடப்பவள். அப்படிப்பட்ட எல்லோரையும் விட்டு என்றும் காணப்படா தவனும் புருஷ சிரேஷ்டனுமான உன்னை என் மனத்தில் கணவஞக வரித்துவிட்டேன்'' என்ருள் சூர்ப்பனகை.

இதற்கு ராமன், " அம்மா! நான் ஒருத்தியை மணந்திருக் கிறேன். உன்னைப் போன்ற பெரும் பெண்களுக்கு சக்களத்தி இருப்பது துக்கத்திற்கு இடமாகும். இதோ இருக்கிருனே என் தம்பி, இவன் மனைவியை அழைத்துக் கொண்டு வரவில்லை. வெகுகாலமாகப் பார்யையின் சுகத்தை அனுபவிக்கவில்லை. யௌவனமுடையவன். அழகிய உருவமுடையவன். உன் உருவத்துக்குத் தகுந்தவன்'' என்று தம்பியின்மீது சூர்ப்ப னகையை ஏவினுன்.

சூர்ப்பனகை லட்சுமணனை அணுகி, "நான் உன் அழகுக்குத் தகுந்த மனைவி. எனது அங்கம் உஷ்ண காலத்தில் குளிர்ந்தும், குளிர் காலத்தில் உஷ்ணமாகவும்

Koviloor Digital Library

இருக்கும். என்னுடன் கூடி தண்டகாரண்யம் முழுவதும் விளையாடுவாயாக'' என்று அழைத்தாள்.

லட்சுமணன் புன்னகை கொண்டு, ''தாமரைப் பூவை யொத்த தேக காந்தியுடையவளே! நான் இவர்களுக்கு தாஸன். நீ எனக்கு மனைவியானால் நீயும் அடிமையாக வேண்டும். ஆகையால் எனக்கு நாதனாகிய என் தமையனுக்கு இளைய பார்யையாக இருப்பாயாக'' என்றான்.

இப்படி இருவராலும் பரிகசிக்கப்பட்ட சூர்ப்பனகை, சீதையிருப்பதால்தான் தொல்லை என எண்ணி, அவளைச் சாப்பிட்டுவிடுகிறேன் என்று, ராக்ஷஸ ரூபத்தை எடுத்துக் கொண்டு சீதையின் மீது பாயப்போனாள். அதைக் கண்ட ராமன் குறுக்கே நின்று மிருத்யுபாசம் போல் அவளைத் தடுத்து, "இந்த ராக்ஷஸியை விரூபையாக்கி விடு'' என்று உத்தரவிட்டான். லட்சுமணனும் ராமன் சொல்லைக் கேட்டு, ராமன் பக்கத்திலிருந்த கத்தியை எடுத்து சூர்ப்பனகையின் மூக்கையும், காதுகளையும் அறுத்துவிடுகிறான். சூர்ப்பனகை ரத்தம் பெருக அலறிக்கொண்டு அரண்யத்துக்குள் ஓடிவிடுகிறாள்.

இது வால்மீகியின் சூர்ப்பனகைப் படலம். இதில் நாம் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று, ராமனும், லட்சுமணனும் அவளை ராக்ஷஸி என்று அறிந்து விளையாடுகின்றனர். இரண்டு, ராமன் உத்தரவின் மேல் மூக்கு, காதுகளை மட்டும் அறுத்துவிடுகிறான் லட்சுமணன்.

இனி இந்த கட்டத்தைக் கம்பன் எப்படிக் கையாளுகிறான் என்பதைக் காண்போம். "பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க'' பூங்கொடி போல் எதிர்வந்த சூர்ப்பனகையைப் பார்த்து, இராமன் அவளைக் கண்டு வியக்கிறான்.

பேர் உழைய நாகர் உலகில் பிறிதின் வானில்
பார் உழையின் இல்லது ஒரு மெல் உருவமான
ஆர் உழை அடங்கும் அழகிற்கு அவதி உண்டோ
நேரிழையர் யாவர் இவர் நேரென நினைந்தான்

Koviloor Digital Library

பெரிய பிரதேசத்தையுடைய நாகர்கள் வசிக்கும் பாதாளத்திலும், வானுலகத்திலும், பூலோகத்திலும் இல்லாத, ஒப்பற்ற மெல்உருபு (மென்மையான பெண்வடிவத்தை) பார்த்த ராமன், "இவள் யாராகும்? இவளிடத்தில் தங்கிய அழகுக்கு ஓர் எல்லை உள்ளதோ? தக்க ஆபரணங்களை அணிந்த மகளிருள் யார் இவளுக்கு ஒப்பாவார்?" என்று எண்ணினான்.

அப்படி இவள் அழகைக் கண்டு வியந்த ராமனிடம் வந்து சூர்ப்பனகை வணங்கி நின்றாள். 'வேதங்களில் சித்தாந்தம் செய்யப்பட்ட முதற்கடவுளான ஸ்ரீராமன்' அவளை நோக்கி தனது மனுஷ்யாவதாரத்துக்கு ஏற்ப நடிக்கிறான். "திருமகள் போன்றவளே! சிவந்த நிறமுடையவளே! உனது வருகை தீங்கில்லாத நல்வரவாயிருக்கட்டும். நீ வந்திருப்பது எங்களது ஒப்பற்ற புண்ணியமன்றோ?" என்றான்.

"ஏது பதி, ஏது பெயர், யாவர் உறவு" என்றான்.

உன் ஊர் எது? என்ன பெயர்? உனக்கு உறவினர் யாவர்?" என்று வினவினான்.

சூர்ப்பனகை பதில் கூறுகிறாள். தனது உயர்ந்த குலத்தைச் சொல்கிறாள். உடன் பிறந்தோர் பெருமையையும் சொல்கிறாள்.

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னான செங்கையோன் தங்கை திக்கின்
மா எலாம் தொலைத்து வெள்ளி மலை எடுத்து உலக மூன்றும்
காவலோன் பின்னை காம வல்லியாம் கன்னி என்றாள்.

"தாமரைப்பூவில் தோன்றிய பிரமனுடைய புதல்வனான புலஸ்தியருடைய மைந்தன் (விச்வாவசுவின்) புதல்வி, முப்புரம் எரித்த சேவலோன் (விருஷபாரூடனான சிவபிரானின்) துணைவனான செங்கையோன் (சிவந்த கைகளையுடைய குபேரனின்) தங்கை, திக்கின் மா எலாம் தொலைத்து (அஷ்ட திக்கு கஜங்களையும் வலிமை யொடுக்கி) வெள்ளிமலையான

Koviloor Digital Library

கைலாயத்தை எடுத்து விளையாடியவனும், மூவுலகங்களையும் காக்க வல்லவனுமான இராவணனுக்குப் பின் பிறந்தவள், காமவல்லி யென்று சொல்லப்படுகிற கன்னி'' என்று மரபை யும் பெருமையையும் விளக்கினுள் சூர்ப்பனகை.

இதைக்கேட்ட இராமன் ''அரக்கிக்கு இப்படிப்பட்ட அழகு எங்ஙனம் அமைவது?' என்று சிந்தித்து, ''சினத்தினுல் சிவந்த கண்களையும் கொடிய வடிவத்தையும் பெற்ற இராவண னுக்கு நீ தங்கை என்பது உண்மையானுல், இந்த அழகிய உருவம் வந்த விதத்தையும் உள்ளபடி கூறுவாய்'' என்று கேட்டான்.

அதற்கு மிகத் தந்திரமாகப் பதில் சொல்கிருள் சூர்ப்ப னகை. ''கொடிய குணமுள்ள இராவணன் போன்ற அரக்கர் களோடு கூடி வாழ இஷ்டமில்லாமல் அறவழியில் நிற்க விரும்பி,

தீவினை தீய நோற்று தேவரில் பெற்றதென்ருள்

தீவினைகள் அழியும்படியாகத் தவமியற்றி, தேவர்கள் அனுக்கிரகம் பெற்று இவ்வுரு அடைந்தேன் என்ருள்.

அப்படியும் இராமன் விட்டானில்லை. ''தேவேந்திரனும் குற்றேவல் புரியும் இராவணனது தங்கையானுல், மிகுந்த செல்வச் சிறப்போடு வராமல் துணையின்றித் தனியாக வரக் காரணமென்ன?'' என்று கேட்டான் இராமபிரான்.

''நான் ராவணன் தங்கையானுலும் நற்குண மில்லாத அரக்கரிடம் சேரவிருப்பமில்லாமல் முனிவர்களிடம் சேர்ந்து கொண்டேன், இதில் ஓர்

காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன் என்ருள்.

''ஒரு காரியம் உண்மை. உன்னைக் காணும் பொருட்டு வந்தேன்'' என்று கூறினுள். அதற்கு இராமன்.

என்ன காரியத்தை சொல் அஃது
இயைவு மேல் இழைப்பல் என்ருன்

Koviloor Digital Library

"அப்படி என்ன காரியமாக வந்தாய் சொல். முடியுமானுல் செய்கிறேன்" என்று சொன்னுன்.

மிகத் திறமையாக இராமன் கேள்விக்குப் பதிலிறுத்தாள் சூர்ப்பனகை.

தாம் உறு காமம் தன்மை தாங்களே உரைப்பது என்பது
ஆம் எனல் ஆவது என்ருல் அருங்குல மகளிர்க்கு அம்மா
ஏம் உறு உயிர்க்கு நோவேன் என் செய்கேன் யாரும் இல்லேன்
காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்ருள்.

"தாங்கள் அடையும் காமத்தின் தன்மையைத் தாங்களே சொல்வதென்பது அருங்குல மகளிர்க்கு (பெரிய குடும்பத்தி லுதித்த பெண்களுக்கு) தக்கது அல்ல. எனக்கு யாருமில்லை. என்ன செய்வேன்? காமன் என்ற ஒருவன் செய்யும் தன்மையை (கொடுமையை)த் தடுத்து, என்னைக் 'காத்தி' (காப்பாயாக) என்ருள்.

அவள் சொல்லைக் கேட்ட இராமன், அவள் தன்மையை நிச்சயிக்கிருன்.

பூண் இயல் கொங்கை அன்னுள் அம்மொழி புகறலோடும்
நாண் இலள் ஐயன் நொய்யள் நல்லளும் அல்லள் என்ருன்.

ஆபரணங்கள் பொருந்திய கொங்கைகளை யுடைய சூர்ப்பனகை அம்மொழி சொன்ன மாத்திரத்தில், ஐயன் இராமன், "இவள் நாணம் இல்லாதவள், நொய்யள்(இழிகுண முடையவள்), நல்லளும் அல்லள்" என்று எண்ணினுன்.

அப்பொழுது சூர்ப்பனகை வேறு விதமாகத் தனது கருத்தை வெளியிட்டாள். "எழுதருமேனியாய்! (சித்திரத்தில் எழுதுவதற்கும் அருமையான மேனியைப் பெற்றவனே!) நான் இத்தனை நாட்களாக முனிவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்ததால் என் பெண்மையும் இளமையும் இதுவரை வீணுகக் கழிந்தது" என்று குறிப்பால் கருத்தை உணர்த்தினுள்.

Koviloor Digital Library

இராமன் தான் அவளை மணம் புரியாததற்கு முக்கிய காரணத்தைக் கூறினான்.

சுந்தரி மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிற்று அன்று ஆல்
அந்தணர் பாவை நீ யான் அரசரில் வந்தேன் என்றான்.

''சுந்தரி! நீ சொல்வது தொன்மையான சாதி முறைக்கு ஏற்றதன்று. நீ அந்தணர் பாவை (பார்ப்பன மகள்); நான் அரசரில் வந்தேன் (க்ஷத்திரிய சாதியில் பிறந்தவன்)'' என்று காரணம் காட்டினான்.

இதற்குச் சூர்ப்பனகை மசியவில்லை. வாதத்துக்கு வாதம் தொடுத்தாள்.

''என் தந்தை அந்தணனாயினும், தாய் அரச குலத்தில் பிறந்தவள்'' என்று கூறினாள்.

மேலும் உரையாடல் தொடர்ந்தது.

21. சூர்ப்பனகையின் விரக தாபம்

"பார்ப்பன மாதாகிய உன்னை நான் எப்படி மணம் புரிய முடியும்?'' என்று ராமன் கேட்க, சூர்ப்பனகை சொல்கிறாள்:

ஆரணம் மறையோன் எந்தை அருந்ததி கற்பின் எம்மோய்
தாரணி புரிந்த சால கடங்கடர் மரபின் தையல்
போர்அணி பொலம்கொள் வேலாய் பொருந்தலை இகழ்தற்கு ஒத்த
காரணம் இதுவே ஆயின் என்னுயிர் காண்பென் என்றாள்.

"போர் அணி பொலம் கொள் வேலாய்-போரிடுவதையே அணியாகக் கொண்ட அழகிய வேலாயுதத்தை உடையவனே! என் தந்தை ஆரண மறையோன் (வேத வித்தான பிராம்மணன்); என் தாய் அருந்ததிக் கொப்பான கற்புடையவள். தரணி ஆண்ட சாலகடங்கடரென்னும் அரக்கர் குலத்

Koviloor Digital Library

தில் பிறந்த பெண். அதனுல் க்ஷத்திரிய ஸ்த்ரீ. ஆகவே, நாமிருவரும் பொருந்தலே இகழ்வதற்கு (கூடுதலேத் தவிர்ப் பதற்கு) இதுவே காரணமாயின், என் உயிர் பிழைத்தது. நீ என்னே மணக்கலாம்'' என்ருள் சூர்ப்பனகை.

சாலகடங்கடர் என்பவர்-வித்யுத்கேச னென்பவன் சந்தியை யின் மகளான சாலகடங்கை என்பவளே மணந்தான். அவர் களுக்கு சுகேசன் என்ெருரு பிள்ளே பிறந்தான். அந்த வமிசத் தில் பிறந்த கேகசி இராவணன் முதலியோரது தாய். இதனுல் தானும் அரச வம்சத்தில் பிறந்தவளென்பதை வலியுறுத்தினுள் சூர்ப்பனகை.

மேலும் இராமன் ஆட்சேபணே எழுப்பி, ''அரக்கியாகிய உன்னே மனிதன் மணப்பது பொருத்தமாகாதென்று அறிவுடையோர் கூறுவார்கள்'' என்ருன்.

அதற்கும் விடவில்லே அவள். ''நான் இப்பொழுது வித்தியாதரப் பெண்ணுகி விட்டேன். தேவர்கள் அனுக் கிரகத்தால் பழிக்கப்படுகிற அரக்கர் பிறவியிலிருந்து நீங்கி விட்டேன்'' என்று பதில் சொன்னுள்.

அதற்கு இராமன் சொன்னுன்:

ஒருவனே உலக மூன்றிற்கு ஓங்கு ஒரு தலேவன் ஊங்கில்
ஒருவனே குபேரன் நின்னேடு உடன் பிறந்தவர்கள் அன்னுர்
தருவரேல் கோடும் அன்றேல் தமியை வேறிடத்துச் சார
வெருவுவென் நங்கை என்ருன் வேதத்தின் அறிவை
வென்ருன்.

வேதத்தின் அறிவுக்கும் அப்பாற்பட்ட 'இராமன், ''பெண்ணே! உன்னேடு உடன் பிறந்தவரின் ஒருவன் மூவுலகங் களுக்கும் ஒரே தலேவனுன இராவணன். இன்னெருவனே அஷ்டதிக்குப் பாலகர்களில் ஒருவனுன குபேரன். அவ்விருவரில் யாராவது மணம் செய்து கொடுத்தால் கோடும் (மணஞ் செய்து கொள்வேன்); இன்றேல் அவர்கள் வலிமையை எண்ணி அஞ்சுவேன். ஆகவே தனிமையாக வந்த நீ வேறிடம் செல்''

Koviloor Digital Library

என்று கூறினன். 'உரிமையுள்ளவர் தாரை வார்த்துக் கொடா மல் எப்படி உன்னை மணப்பேன்' என்று பொருள்பட மடக்கிப் பார்த்தான் இராமன்.

அதற்கும் அவள் பின்வாங்கவில்லை.

"காந்தர்ப்பம் என்பது உண்டாம் காதலில் கலந்தசிந்தை
மாந்தர்க்கு..."

"அரச குலத்தில் பிறந்தவர்களுக்குக் காதலால் சிந்தை கலந்துவிட்டால் காந்தர்வ விவாகம் அனுமதிக்கப்படுகிறது. ஆகையால் நாம் மணக்கலாம்" என்ருள்.

அதைக் கேட்ட இராமன் நகைத்தான். "உன்னை அடைவ தால் அரக்கர் கருணையை அடைகிறேன். பெரும் செல்வ வாழ்க்கையும் கிடைக்கிறது. அயோத்தியைவிட்டு வந்த பிறகு நான் செய்த தவத்தின் பயன் போலிருக்கிறது இது!" என்று பரிகாசமாகக் கூறுகிருன்.

அவன் நகைத்ததைக் கேட்டு, பர்ணசாலைக்கு உள்ளிருந்த சீதாப்பிராட்டி வெளியே வந்தாள். அவளைக் கண்ட சூர்ப்பனகை, அவள் அழகையும் கண்டு வியந்தாள்.

.........அரக்கரென்னும்
கான் சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்.

'அரக்கர்கள் என்னும் காட்டைச் சுட்டுப் பொசுக்க வந்த கற்பு எனும் கனலியைக் கண்களாலே சூர்ப்பனகை கண்டாள்' என்று பின்வரப் போவதை முன்கூட்டிச் சொல்கிருன் கம்பன்.

பிராட்டியைக் கண்ட சூர்ப்பனகை அவளைத் திருமகளோ என்று ஐயமுற்ருள். சீதைக்கும் இராமனுக்கும் இருந்த பொருத்தத்தையும் பார்த்துப் பிரமித்தாள். இருப்பினும், தனது காலவியாதியால் சீதையும் தன்னைப்போல் இடையில் வந்தவளே யென்று நினைத்து, "வீரனே! இவள் உருவம் உண்மையன்று. இவளும் ஓர் அரக்கி. இவளை விலக்கிவிடு" என்று கூறினுள். அத்துடன் சீதையை வெருட்டவும் முயன்ருள்.

Koviloor Digital Library

சூர்ப்பனகை வெருட்டியதால் அஞ்சிய சீதை, பயத்தால் இராமனைத் தழுவிக் கொண்டாள். இராமன் அரக்கியை வெறுத்துப் பர்ணசாலையுள் சென்றான். அதனால் தவித்த சூர்ப்பனகை அப்பால் சென்றாள். சூரியனும் அஸ்தமித்தான். சூர்ப்பனகை அன்றிரவுமுழுவதும் விரகதாபத்தால் தவித்தாள். தாடகை நெஞ்சில் ராமபாணம் தைத்ததைப்போல், சூர்ப்பனகை நெஞ்சில் ராமனை நினைத்ததால் மன்மதபாணம் தைத்து அவளை வருத்தியது.

இரவு முழுவதும் காமதாபத்தால் துடித்த சூர்ப்பனகை மறுநாள் சூரியன் உதித்ததும் மீண்டும் பர்ணசாலைக்கு வந்தாள். அந்தச் சமயம் இராமன் காலைச் சந்தியாவந்தனம் செய்யக் கோதாவரிக்குப் போயிருந்தான். பக்கத்துச் சோலை யிலிருந்த லட்சுமணனை அவள் பார்க்கவில்லை. ஆகையால் சீதையை எடுத்துப் போகத் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கையைத் தொடங்கினாள். அவள் எண்ணத்தைச் சோலை மறைவிலிருந்து பார்த்த லட்சுமணன், 'நில்லடி' என்று சொல்லி வந்தான். அவள் தலைமயிரையும் பிடித்து வயிற்றிலும் உதைத்துத் தள்ளினான்.

ஊக்கித் தாங்கி விண்படர்வென் என்று உருத்து எழுவாளை
நூக்கி நொய்தினில் வெய்து இழையேல் என நுவலா
மூக்கும் காதும் வெம்முரண்முலைக் கண்களும் முறையால்
போக்கி போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

அப்படி வந்த லட்சுமணன், வலிமை கொண்டு இவளைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றிடுவேன் என்று எண்ணி, அப்படிச் செய்ய முயன்ற அவளை, எளிதில் கீழே தள்ளி, இனி இப்படிப்பட்ட கொடிய தொழிலைச் செய்யாதே என்று புத்தி சொல்லிக்கொண்டே, அவள் மூக்கையும், காது களையும், உரமான முலைக் காம்புகளையும் ஒவ்வொன்றாக முறைப்படி அறுத்து, அதனால் தணிந்துவிட்ட கோபத்தினால், தன் கையில் சுற்றிப் பிடித்த அவள் குழலை விட்டான்."

Koviloor Digital Library

இங்கும் வால்மீகிக்கும் கம்பனுக்கும் வித்தியாசம் இருக்கிறது. வால்மீகி இலட்சுமணன் அரக்கியின் காது முக்குகளை அறுத்தானென்கிறுர், அதுவும் இராமன் கட்டளையின்மேல்.

சூர்ப்பனகையின் காது மூக்குகளோடு முலைக் காம்புகளையும் லட்சுமணன் அறுத்தான் என்று கம்பன் கூறுகிருன். தவிர, இராமன் இல்லாதபோது இதைச் செய்தான் என்பது கம்பன் கற்பனை. கருணு மூர்த்தியான இராமன் அவ்விதம் கட்டளை இடுவதைக் கம்பன் விரும்பவில்லை போலும்!

இப்படி அங்க ஹீனப்படுத்தப்பட்ட சூர்ப்பனகை பெரிதாக அலறினுள். தன் இனத்தவரைக் குறிப்பிட்டுப் புலம்பினுள். அச்சமயத்தில் அங்கு வந்த இராமன், அவளைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்டான். அவள் மீண்டும் தன்னைப் பற்றிய விவரங்களைக் கூற, "நேற்று வந்தவளோ நீ?" என்று வினவினுன். அவள் ஆமென்று கூறி, "குழையணிந்த என் காதுகளையும், கொடி போன்ற என் மூக்கையும் அறுத்து விட்டால், ஒருவர் அழகு குலைந்து போகாதோ?" என்றும் கேட்கிருள்.

அவள் நிலைகண்ட இராமன் அனுதாபங் கொண்டு, "இவள் இழைத்த பிழையென்ன?" என்று லட்சுமணனைக் கேட்க, 'சீதைக்கு ஹானி விளைவிக்க வந்தாள்' என்று சமாதானம் கூறினுன் லட்சுமணன். அரக்கி அதற்குக் காரணம் சொன்னுள்.

"மற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம் என்ருள்." லட்சுமணன் சொன்னதும், சூர்ப்பனகை ராமனை நோக்கி, "சக்களத்தியைக் கண்டால் பெண்கள் மனம் கோபம் கொள்ளாதோ?" என்று கேட்டாள். சீதையைத் தனது சக்களத்தியாக நினைவு கொண்டாள்.

மேலும் தன்னை மணம் செய்து கொள்ளும்படி இராமனைச் சூர்ப்பனகை வேண்டுகிருள். இதற்குக் கம்பன் பதினெரு கவிகள் இயற்றியிருக்கிருன். இதனைக் கேட்ட இராமன்

Koviloor Digital Library

அவளை வெருட்டவே, கரனை வரவழைப்பேனென்று பயமுறுத்திக் கரன் இருப்பிடத்தை நோக்கி ஓடினாள். அங்குச் சென்று கரன் காலில்

"...செக்கர்மேல்
விரிந்த மேகம் என விழுந்தாள் அரோ"

இரத்தப் பெருக்கும் செம்பட்டை மயிரும் விரியச் செவ்வானம் படரப்பெற்ற மேகம் போல் விழுந்தாள்.

அங்கஹீனப்பட்டு கோரமாக விழுந்துகிடந்த சூர்ப்பனகையைப் பார்த்த கரன், "உன்னை இங்ஙனம் செய்தது யார்?" என்று வினவினான்.

அந்த நிலையிலும், இராமன் மேல் காமம் போகவில்லை சூர்ப்பனகைக்கு. "பும்ஸாம் மோஹன ரூபாய" என்று புருஷர்களே மோகிக்கும்படியாக அழகைப் படைத்த அண்ணல் இராமனிடம் மையல் போகாதவளும், அங்கஹீனம் செய்த லட்சுமணனை மறக்காதவளுமான சூர்ப்பனகை,

இருவர் மானிடர் தாபதர் ஏந்திய
வரிவில் வாள்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவில் நேரும் நிருதரைத் தேடுவார்.

"இரண்டு மானிடர்கள், தாபதர் (தவவேடம் கொண்டவர்கள்). கட்டான வில்லையும் வாளையும் கைகளில் ஏந்தியவர். மன்மதனைப் போல் அழகு படைத்த மேனியுடையவர்கள், தருமத்தை நிலை நிறுத்துபவர். தசரதன் மைந்தர்கள். போரில் எதிர்ப்படும் அரக்கரைத் தேடித் திரிபவர்கள்" என்று கூறினாள்.

இங்கு வால்மீகியின் ஈடுபாடும் கம்பன் ஈடுபாடும் சமநிலையிலிருக்கிறது.

தருணௌ ரூபஸம்பன்னௌ
ஸுகுமாரௌ மகா பலௌ
புண்டரீக விசாலாக்ஷௌ
சீரக்ருஷ்ண ஜினம்பரௌ

Koviloor Digital Library

என்பது வால்மீகி ஸ்லோகம். "என்னை இப்படிச் செய்தவர்கள் சரியான வயதுடைய வாலிபர்கள். நல்ல அழகு படைத்தவர்கள். சுகுமாரர்கள். நல்ல பலமுள்ளவர்கள். தாமரை போல் விசாலமான கண்களையுடையவர்கள். மரவுரியையும் மான் தோலையும் உடுத்திருப்பவர்கள்" என்று கரன் கேள்விக்கு, சூர்ப்பனகை பதில் சொல்கிறாள்,

22. புண்ணுக்கு மருத்துவம்

"உன்னை இப்படி அலங்கோலம் செய்தவர் யார்?" என்று கரன் கேட்க, "இரண்டு பாவிகள் நமது குலத்தை வேரறுக்க வந்தவர்" என்று முறையிடுவது முறையாயிருக்க. "மன்மதன் மேனியர்" என்று சூர்ப்பனகை தன்னைக் கோரம் செய்தவர்களின் அழகைக் குறிப்பிடுகிறாள். அதுவுமல்லாமல், அவளை அங்கஹீனம் செய்தது லக்ஷ்மணன் ஒருவனுயிருக்க, "மன்மத மேனியர்" என்று இருவரையும் சேர்த்தே பேசுகிறாள்.

வால்மீகியும் இந்த இடத்தில், "தருணௌ" என்றும், "ஸுகுமாரௌ" என்றும் இரண்டு பேரையுமே அவள் வர்ணித்ததாக எழுதுகிறார்.

இந்தச் சுலோகத்துக்கு ராமாயண தனிச்லோகீ என்ற விமர்சன காவியத்தில், வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை, "சூர்ப்பனகைக்கு ராம-லக்ஷ்மணர்களில் இரண்டுபேருக்கும் அதிக வித்தியாசம் தெரியாததால் தருணௌ என்று இரண்டு பேரையும் சேர்த்தே சொல்கிறாள்" என்று விமர்சிக்கிறார். அதுமட்டுமல்லாமல், "புனர்பூசம் பூசமாய், பின்னுளும் முன்னுளுமானுல் அத்தனை வாசி தெரியாதிரே" என்றும் கூறுகிறார். 'புனர்பூசம் பூசம் என்ற நட்சத்திரங்கள் அடுத்தடுத்து வருவதால் எப்படி வித்தியாசம் தெரிவதில்லையோ, அப்படியே ராமலக்ஷ்மணர்களைப் பற்றிய வித்தியாசமும் அதிகமாகத் தெரிவதில்லை" என்றும் எழுதுகிறார்.

Koviloor Digital Library

சூர்ப்பனகை அவர்கள் வாலிப வயதை "தருணௌ" என்று குறிப்பிட்டதுமல்லாமல், அழகை "ஸுகுமாரௌ" என்றும் குறிப்பிடுகிருள்.

"ஸுகுமாரன்" என்று மன்மதனுக்குப் பெயர். "ஸுகுமாரௌ" மன்மதனைப் போன்றவர்கள் என்று வால்மீகி சொல்கிருர். "மன்மதன் மேனியர்" என்று கம்பன் வர்ணிக்கிருன்.

விமர்சனச் சக்கரவர்த்தி ஒரு படி மேலே போகிருர். "மன்மதன் ஒருவன் தானே, "ஸுகுமாரௌ" என்று இரண்டு மன்மதர்களை சூர்ப்பனகை சொல்கிருளே?" என்று வினவிய பெரியவாச்சான் 'பிள்ளை, காமுகர்கள் கண்ணுக்கு எல்லாம் இரட்டையாகத் தோன்றுவதுபோல் இவர்களுக்கும் தோன்றிற்று' என்கிருர். "திவ்யனுன காமன் ஒருவனிரே: இவர்கள் பௌமராயிருப்பார். இரண்டு காமராய்க் கண் தோன்றுகிறது" என்பது வியாக்கியான வாக்யம். காமன் ஒருவனுலும் ராமலக்ஷ்மணர்களின் ஒன்றுபட்ட அழகில் சூர்ப்பனகை இரண்டு மன்மதர்களைக் கண்டாள் என்பதும் வியாக்கியான சக்கரவர்த்தியின் வாதம். "தருணௌ ரூபஸம்பன்னௌ" என்ற சுலோகத்துக்கு, விமர்சகப் பெரியவர் நீண்ட வியாக்கியானம் எழுதிப் பல வழியிலும் அதைப் பார்த்திருக்கிருராலுைம், இந்தக் கட்டுரைத் தொடரின் நோக்கம் அதில் முழுதும் புகுவதல்லாத காரணத்தால், இந்த முக்கியப் பகுதியைமட்டுமே குறிப்பிடுகிறேன்.

ஆக, சகல லோகங்களும் ராமனுடைய சௌந்தர்ய விசேஷத்தில் ஈடுபட்டது போல, சூர்ப்பனகையும் ஈடுபட்டுப் பேசினுள்.

கம்பன் சூர்ப்பனகை ராம லக்ஷமணர்களின் இளமையையும் அழகையும் வர்ணித்துவிட்டு, தன்னை அவர்கள் அங்ஙனம் அங்கஹீனப்படுத்தியதற்குக் காரணமும் சொல்கிருள்.

கண்டு நோக்க அரு காரிகை யாள்தனை
கொண்டு போவல் இலங்கையர் கோக்கு எனு

Koviloor Digital Library

விண்டு மேல் விழுந்தேனை வெகுண்டு அவர்
துண்டம் ஆக்கினர் மூக்கு எனச் சொல்லினாள்.

''அவர்களுடனிருந்த காண்பதற்கு இணையில்லாத அழகுடைய காரிகையொருத்தியை இலங்கைக் கோமானான அண்ணன் ராவணனுக்கு எடுத்துச்செல்ல எண்ணி, அவள் மேல் விழுந்தேன்—அவர்கள் கோபித்து என் மூக்கை அறுத்தார்கள்'' என்று சூர்ப்பனகை சொன்னாள்.

அதைக் கேட்ட கரன் மிகக் கோபம் கொண்டு போருக்கு எழுந்திருக்க, அவனைப் பதினான்கு வீரர்கள் தடுத்தனர். ''நாங்கள் பணியாட்கள் இருக்க, நீங்கள் இச்சிறு காரியத்துக்குச் செல்வது தகுதியன்று'' என்று தடுத்துத் தாங்களே செல்ல உத்தரவு கேட்டனர். கரனும் உத்தரவு கொடுக்க, சூர்ப்பனகை அவர்களை அழைத்துச் சென்றாள்.

''என்ன லோடும் விரும்பி இறைஞ்சினார்
சொன்ன நாண் இலி அந்தகன் தூது என
அன்னள் பின்படர்வார் என ஆயினார்
மன்னன் காதலர் வைகு இடம் நண்ணினார்.''

''அந்த மானிடரைக் கொன்று அந்தப் பெண்ணைக் கொண்டு வாருங்கள்'' என்று கரன் சொன்ன மாத்திரத்தில், அந்தப் பதினான்கு பேரும் இறைஞ்சினர். மகிழ்ச்சி கொண்டு வணங்கினார்கள். வணங்கிவிட்டு, ''சொன்ன நாண் இலி-செய்தியைச் சொன்ன வெட்கங் கெட்டவளான சூர்ப்பனகை, அந்தகன் தூது என—யமன் அனுப்பிய தூதரைப்போல முன் செல்ல, அந்தப் பதினான்கு பேரும் பின் படர்வார் ஆயினார்—அவள் பின்னாலே சென்றனர். தயரத மன்னன் பிள்ளைகளான ராமலக்ஷ்மணர்கள் இருக்குமிடத்தை அடையவும்செய்தார்கள்.

அந்தப் பதினான்கு அரக்கரைக் சூர்ப்பனகை அழைத்துச் சென்றதை நகைச் சுவை ததும்ப வர்ணிக்கிறான் கம்பன். முடிவையும் முன்னிட்டுச் சொல்கிறான். யமன் அனுப்பிய தூதுவனைப்போலச் சூர்ப்பனகை முன்செல்ல அவளைப் பின்

Koviloor Digital Library

தொடர்ந்தார் பதினுன்கு பேரும் என்பதாலே அவர்கள் முடிவையும் கம்பன் கூறுகிறுன். விரும்பி இஷ்டத்துடன் யம தூதர்களேப் பின் தொடர்வார் கிடையாது. ஆனுல் சூர்ப்ப னகையை விருப்பத்துடன் அந்தப் பதினுன்கு ராட்சதர்களும் பின் தொடர்ந்தார்கள் என்று கம்பன் நகைச்சுவை கூட்டு கிறுன்.

முடிவும் அப்படியே ஆயிற்று. பதினுன்கு பேரையும் ராமன் கொன்றுவிட, மீண்டும் சூர்ப்பனகை கரனிடம் ஓடிச் செய்தி சொல்கிறுள். அது கேட்டுக் கரன் கோபித்துத் தனது பெரும் சேனேயைத் திரட்டுகிறுன். இப்படித் திரட்டப்பட்ட சேனே, பதினுன்காயிரம் என்பது வால்மீகியின் கணக்கு. ஆனுல் கம்பன் கணக்கு வேறு.

''பல் பதினுயிரம் படைக்கை வீரரே''

பல பதினுயிரம் வீரர்களுடன் கரன் கிளம்பினுன் என்பது கம்பன் கணக்கு.

இப்படி லட்சக்கணக்கான வீரர்களுடன் வந்த கரன் சேனேயைக் கண்ட இராமன், சீதைக்கு லக்ஷ்மணனேக் காவல் வைத்துவிட்டுப் போருக்கு எழுந்தான். தன் வரிசிலே வளேத்துப் பாணங்களே எய்து தன்னேச் சூழ்ந்த அரக்கர்களேயும் தூர நின்ற அரக்கர்களேயும் அடித்தான். வேகமாகப் பாய்ந்து வந்த அந்த அம்புகளுக்கு ஈடுகொடுக்க மாட்டாமல் அரக்கர்கள் மாய, கரதூஷணத் திரிசிரர்களின் தலேகளேயும் இராமன் துண்டித்தான்.

தனியொரு வீரனுன இராமன், இப்படித் தனியொருவ னுகவே கர தூஷணர்களின் பெரும் படையைக் கொன்று குவித்து, மீண்டும் பர்ணசாலேக்குத் திரும்பினுன். அப்படித் திரும்பிய இராமன் திருவடியைச் சீதையும் லக்ஷ்மணனும் வணங்கினுர்கள்.

விண்ணில் நீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணின் நீரும் பொடிகளும் போய் உக

Koviloor Digital Library

அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினர்.

"விண்ணில் நீங்கிய-போரில் இறந்து வீர சுவர்க்கம் போய் விட்ட, வெய்யவர்-கொடிய அரக்கர்களது, இரத்தமும் பொடிகளும் (தூசிகளும்) போகும்படியாக, வீரனான அண்ணலின் பாதங்களை, தம்பியும் அன்னம் போன்ற சீதையும் தங்கள் கண்ணீரினால் கழுவினர்" என்று லக்ஷ்மணனுக்கும் சீதைக்கும் அதுகாறும் இருந்த கவலையையும் அவை போனபின் எழுந்த ஆனந்தக் கண்ணீரையும் கம்பன் விவரிக்கிறான்.

இந்த இடத்தில் வால்மீகியின் கதையமைப்புச் சிறிது மாறுபடுகிறது.

தம் த்ருஷ்ட்வா சத்ரு ஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம்
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே.

சத்ருக்களை அழித்தவரும் மகரிஷிகளுக்கு சுகத்தைச் செய்தவருமான அந்த ராமனைப் பார்த்த ஜானகி மிக சந்தோஷத்தை அடைந்தாள். பர்த்தாவை இறுகத் தழுவிக் கொண்டாள்.

"பதினான்காயிரம் ராக்ஷஸர்களையும் காந்தர்வ அஸ்திரத்தினால் அழித்து, மேனியெல்லாம் அரக்கர் அம்புகள் விளைத்த புண்களுடனும், புண்களிலிருந்து சொரிந்த ரத்தத்துடனும் தனிமையாகப் பர்ணசாலைக்குள் வந்த கணவனை, பிராட்டி மகிழ்ச்சியால் மார்புறத் தழுவினாள்" என்கிறார் வால்மீகி.

இந்த சுலோகத்தில் ஆசார்யர்கள் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். "ஸஸ்வஜே" என்றால் தழுவினாள் என்பது பொருள். 'பரிஷஸ்வஜே' என்றால் இறுகத் தழுவினாள். இப்படித் தழுவியது இராமனுக்கு மிக இதமாயிருந்தது என்று பெரியவாச்சான் பிள்ளை எழுதுகிறார்.

"சரவ்ரணங்களாலே வந்த தழும்பெல்லாம் மாறுமளவும் திருமுலைத் தடத்தாலே வேது கொண்டாள்" என்று கூறுகிறார் வியாக்கியான சக்ரவர்த்தி.

Koviloor Digital Library

இராமன் உடல் புண்களுக்கு தனது மார்பகத்தாலே ஒத்தடம் கொடுத்தாள் பிராட்டி என்பது வியாக்கியானம். ஆனுல் அது மருந்து என்பதற்குக் காரணமும் சொல்கிருர். பஞ்சேந்திரியங்களில் பஞ்சபாணங்களால் அந்தரங்கத்தில் தாக்கப்பட்ட ராமன் புண்ணுக்கு இந்தத் தழுவல் மருந்தா யிருந்திருக்க, தோல்மீது பட்ட புண்ணுக்கு மருந்தாயிருப்பதில் என்ன வியப்பு என்று கேட்கிருர். அங்கு ஐந்து பாணங்கள் தானே. இங்கு ஆயிரம் பாணங்கள் பாய்ந்திருக்கின்றனவே என்ருல், "ஆலிங்கனமாமிடத்தில் ஐந்தோடு ஐந்நூருேடு வாசியில்லையிரே" என்கிருர். 'ஐந்து புண்ணுக்கு ஆகும் மருந்து ஐந்நூறு புண்ணுக்கு ஆகாதோ?' என்று வினவுகிருர் பெரியவாச்சான் பிள்ளை.

இப்படிக் கரதூஷண வதத்தால் சீதா ராமலக்ஷ்மணர்கள் இன்புற்றிருக்க, வேதனையடைந்த சூர்ப்பனகை, இலங்கையை நோக்கி ஓடுகிருள், அடுத்தபடி இராவணனுக்கு முடிவு கட்ட.

"பாவம் செய்யும் நிர்முடி
ராவணன் குடிகேடி
வந்தாளே சூர்ப்பனகை"

என்று, இராம நாடகத்தில் அருணுசலக் கவிராயரும் சூர்ப்பனகையின் முயற்சியை வர்ணிக்கிருர்.

23. இராவணன் மதிமயக்கம்

ஜனஸ்தானத்தின் காவலனுன கரன் தூஷணனேடு பதினுன்காயிரம் அரக்கர்களையும் ராமன் பாணங்களுக்குப் பலி கொடுத்த சூர்ப்பனகை இராவணன் இருக்குமிடத்தை நோக்கி ஓடினுள். அப்படி ஓடியவள், "இரைக்கும் நெடுங்கடல் அரக்கர் இறந்ததனை மறந்தாள்" —அதாவது ஆரவாரம் செய் கின்ற பெரிய கடல் போன்ற கரன் முதலாய அரக்கர்கள் இறந் தொழிந்த செய்தியை மறந்தாள், போரில் வல்ல இராம பிரானது உயர்ந்த மலைகள் போன்ற தோள்களிடத்து உள்

Koviloor Digital Library

டான ஆசை மனத்தை வருந்தியதால். காமமே மேற்கொண்டு இலங்கையை அடைந்தாள். அவள் இலங்கையில் புகுந்த சமயத்தில், பிரும்மாவினுலும் அமைக்க முடியாத அற்புதமான கொலுமண்டபத்தில் வீற்றிருந்தான் தசகண்ட இராவணன். இலங்கையில் வடக்குக் கோபுரவாயில் மூலமாகத் தலையில் கையை வைத்துக்கொண்டு இரத்தப் பிரவாகத்துடன் கூடியவளான சூர்ப்பனகை இலங்கையுள் புகுந்து, இராவணன் இருக்குமிடம் வந்து அவனடியில் விழுந்து புரண்டாள். அந்தச் சில நிமிடங்களில் மூவுலகங்களிலும் பெரும் உற்பாதங்கள் உண்டாயின. இருள் எங்கும் மூடியது. பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனும் தனது ஆயிரந்தலைகளையும் நெளித்தான். பர்வதங்கள் ஆடின; சூரியனும் ஒளிகுன்றினுன். திக்கஜங்கள் ஓடின. எப்பொழுதும் ஓடும் தேவர்களும் ஓடினர்.

இந்த உற்பாதங்களுக்கிடையே, தன் முன் விழுந்து கிடந்த தங்கையை நோக்கிய இராவணன்.

மடித்த பில வாய்கள் தொறும் புகை முந்தத்
துடித்த தொடர்மீசைகள் சுறுக்கொள உயிர்ப்ப
கடித்தகதிர் வாள் எயிறு மின்கனல் மேகத்து
இடித்த உரும் ஒத்து உரறியாவர் செயல் என்றுன்

உதடு மடித்த பிலத்வாரங்கள் போன்ற பெரிய வாய்கள் ஒவ்வொன்றிலும் புகை வந்து முந்த, துடித்த தொடர்ச்சியான மீசைகள் கோபத்தினுல் தீப்பற்றும்படி எழுந்து நிற்க, கடித்த வாள்கள் போன்ற பற்கள் ஒளிவிட, மேகத்திலிருந்து இறங்கிய இடியைப்போல், ''யார் செயல்?'' ''இதை யார் செய்தது?'' என்று கேட்டான்.

அப்பொழுதும் இராமனிடமிருந்த காமவேட்கையால் சூர்ப்பனகை கூறுகிருள் :

மன்மதனை யொப்பர் மணிமேனி வடமேரு
தன் எழில் அழிப்பர் திரள்தோளின் வலிதன்னுல்
என்னதனை இப்பொழுது இசைப்பது உலகு ஏழின்
நன்மதன் அழிப்பர் ஓர் இமைப்பில் நனி வில்லான்

Koviloor Digital Library

என்னை இப்படி உருக்குலைத்தவர் தங்கள் மணிமேனி (அழகிய) தங்கள் வடிவத்தால் மன்மதனை நிகர்த்தவர்கள். திரண்ட தோள்களின் வலிமையால் வடக்கிலுள்ள மேரு மலையின் அழகைப் பழிப்பவர்கள். ஓர் இமைப்பின்-ஒரு இமைப் பொழுதில், தங்கள் வில்லின் வலிமையால் ஏழு உலகங்களின் வலிமையும் 'அழிக்க வல்லவர்கள் என அதனை இப்பொழுது இசைப்பது -இப்பொழுது அதை எவ்வாறு சொல்வது?'' என்றாள்.

மேலும் சொன்னாள்: ''அவர்கள் முனிவர்கள் பால் வணக்க முள்ளவர்கள். சந்திரன்போன்ற முகமுடையவர்கள். வற்கலை உடுத்தவர். மார்பில் பூணூலைத் தரித்தவர். சொற்களின் வடிவங்களான சாஸ்திரங்கள் போல் அழிவில்லாத அம்பறுத் தூணிகளைத் தாங்கியவர்கள். உலகத்தில் இரு மன்மதர்போல் விளங்குகிறார்கள். அவர்களுக்குச் சமானமானவர் யாருமில்லை.

இப்படிப் பல சொல்லிய சூர்ப்பனகையை நோக்கிய இராவணன், தான் அப்பொழுதும் அரசனென்பதை நிருபித் தான்.

நீயிடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து அவர் கொய்ய என்றான்.

''சூர்ப்பனகே! உன்னுடைய காதுகளையும் மூக்கையும் அவர்கள் வலிந்து கொய்யுமாறு நீ என்ன குற்றம் செய்தாய்?'' என்று இராவணன் கேட்டான்.

அண்ணன் விசாரணையைக் கேட்ட சூர்ப்பனகை அவனுக்கு மிகத் தந்திரமாகப் பதில் சொன்னாள். ''செந் தாமரை மலரைவிட்டு இராமனுடன் வந்தவளும், மின்னல் போன்ற இடையுடையவளும், மூங்கிலைப் போன்ற மெல்லிய தோளையுடையவளும், பொன்னிடத்திலிருந்த மேனியைப் பெற் றவளுமான ஒரு பெண் நிமித்தமாக இந்த அவக்கேடு எனக்கு நேர்ந்தது'' என்று பூர்வ பீடிகைபோட்ட சூர்ப்பனகை, சீதை யின் அழகைப் பலபடி வர்ணிக்கலானாள், இராவணனுக்குக் காமத்தீ மூட்ட.

Koviloor Digital Library

வில்லொக்கும் நுதலென்ருலும் வேலொக்கும் விழியென்ருலும்
பல்லொக்கும் முத்தென்ருலும் பவளத்தை இதழ் என்ருலும்
சொல்லொக்கும் பொருள் ஒவ்வாதால் சொல்லலாம் உவமை உண்டோ
நெல்லொக்கும் புல்லென்ருலும் நேருரைத் தாகவற்றே

அவள் நெற்றிக்கு வில்லேயும், விழிக்கு வேலேயும், பல்லுக்கு முத்தையும், இதழுக்கு பவழத்தையும் உவமை சொன்ஞல் சொல்லளவில் பொருத்த மிருக்குமேயொழிய அவற்றில் பொருளிருக்காது. உதாரணமாக நெற்பயிர் புல்லேப் போலிருக்கிறதென்ருல் நிற ஒற்றுமையிருக்கலாம். ஆஞல் புல் நெல்லாகுமா? இதுபோல்தான் இந்த உவமைகள் அவள் அங்கங்களுக்கு உவமை உண்டோ? உலகத்தில் உவமை கிடையாது'' என்ருள் சூர்ப்பனகை.

பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னே
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னே வென்ற நுண்ணிடை யிஞளே
மாகத்தோள் வீர பெற்ருல் எங்ஙனம் வைத்து வாழ்தி?

''மா கம் தோள் வீர- பெரிய வானத்தை அளாவி ஓங்கியுள்ள தோள்களேயுடைய வீரனே! சிவபிரான் உமையாளே பாகத்தில் (தன் உடலில் பாதியில்), வைத்தான்; பங்கயத்தில் இருந்த மகாலட்சுமியை விஷ்ணு மார்பில் வைத்தான். அந்தணஞன பிரும்மா சரஸ்வதியை நாவில் வைத்துக்கொண்டான். மேகத்தின் மின்னலே வென்ற நுண்ணிடையுள்ள சீதையைப் பெற்ருல் எவ்விடத்தில் வைத்துக்கொண்டு வாழ்வாய்?'' என்று உரமூட்டிஞள். இந்தக் கவிதையில் சீதை வந்தால், நீ வாழமுடியாது என்று கவி மறைபொருளாகக் கூறுகிருன்.

இங்ஙனம் பலபடி சீதையை வர்ணித்த சூர்ப்பனகை, ''இவளே உனக்காக எடுக்கப்போகையில் இப்படி பங்கப் படுத்தப்பட்டேன்'' என்று முறையிட்டாள்.

சூர்ப்பனகையின் வர்ணனேயால் காமவெறி தலேக்கேறிய இராவணன், விரகவேதனேக்குள்ளாகி, சிம்மாசனத்திலிருந்து

Koviloor Digital Library

எழுந்து, தன் மனையுள்ளே சென்முன். அங்கும் உடல் நிலை பெருது போகவே சோலைக்குள்ளே போனுன். அங்கு அவன் நுழைந்ததும், அவனுக்கு அஞ்சிப் பறவையினங்கள் சப்தம் செய்யாதிருந்தன. பனிக்காலம் சட்டென்று மறைந்து வேனிற் காலம் வந்தது. அப்பருவமும் இராவணனது தாபத்தைத் தணிக்க முடியாததால் ''சரத்காலத்தைக் கொணர்க'' என்று இராவணன் உத்தரவிட்டான். சரத்காலம் வந்தும் தாபம் அதிகமாகவே, ''எல்லாப் பருவங்களும் ஒழிக'' என்று கூறினுன். பருவங்களும் ஒழிந்தன. இராவணன் தாபம் மட்டும் ஒழிய வில்லை. ஆகவே ஏவலாளரைவிட்டு, ''சந்திரனை அழையுங்கள்'' என்முன். சந்திரன் வந்தும் அவன் உடலெரிச்சல் போகவில்லை. ஆகவே கூறினுன் இராவணன், ''சூரியனை எதற்குக் கொணர்ந் தீர்கள்?'' என்று. அதற்கு ஏவலாளர்கள் ''ஐயோ! இவன் சூரியனில்லை, சந்திரன்தான்'' என்முர்கள்.

உடனே இராவணன் சூரியனையும் பகலையும் கொணரப் பணித்தான். சூரியன் வந்தான். பகல் பரந்தது எங்கும். அப் பொழுதும் காமதாபம் தகித்ததால், ''இவன் சூரியன் அல்ல சந்திரனே'' என்முன் இராவணன். ஏவலர் இவன், ''சூரியன் தான்'' என்முர்கள். பிறகு பிறைமதியையும் இருளையும்கூட வர வழைத்தான் இராவணன். எதுவும் அவன் தாபத்தைத் தணிக் கவில்லை. போதாதற்கு சிதையையும் உருவெளித் தோற்றத் திலே கண்டான், கண்டதும் சூர்ப்பனகையை அழைத்து, ''இவள்தானே சிதை?'' என்று கேட்டான். ''இல்லை, இல்லை இது இராமன்'' என்முள் சூர்ப்பனகை, தனது உருவெளித் தோற்றத்தின்படி.

மேற்படி கவிதைகளில் காமவெறி கொண்டவர்களின் மதிமயக்கத்தை நகைச்சுவை ததும்ப வர்ணிக்கிருன் கவி. இப்படி மதிமயக்கம் கொண்ட இருவரில் சூர்ப்பனகை சிதையைத் தூக்கி வருமாறு இராவணனுக்கு உபதேசித்தாள். அதைக்கேட்டுக் கொண்ட இராவணன் மந்திரிகளுடன் ஆலோசித்து மாரீசனை அணுகினுன் உதவிக்கு. அவன் என்ன தடுத்தும் கேளாததால் அவனுடன் மாரீசன் சென்முன்.

Koviloor Digital Library

மாயமான் ஆவதற்கும் உடன்பட்டான். பொன்மான் உருவம் எடுத்துச் சீதையின் எதிரே நடமாடினன். அப்பொழுது சீதை மலர் கொய்ய வந்தாள். மானைவிட அழகிய கண்களையுடைய சீதை அந்தப் பொன்மானைக் கண்டாள்.

24. கொடியைத் தூக்கிச் சென்ற கொடியவன்

பெண்மான் அந்தப் பொன்மானைக் கண்டு மதிமயக்க முற்று நின்றாள், மலர் கொய்ய வந்த வேளையிலே. "தீங்கு நேரும்படியான நிலைமையை அடைந்தவர்கள், நித்திரையில் கெட்ட சொப்பனத்தைக் காண்பதுபோல, முன்பு எவரும் அடையாத துன்பம் அருகில் நெருங்கப்பெற்ற சீதை, அம் மானைக் கண்டாள்" என்று, கம்பன் அவள் மானைக் கண்டதற் குக் காரணம் கூறுகின்றான். அந்த மானிடத்தில் அளவிலாத விருப்பமும் கொண்டாள் ஜனகன் மகள்.

காணா இது கைதவம் என்று உணராள்
பேணாத நலம் கொடு பேணினளால்
வாணாள் அவ்விராவணன் மாளுதலால்
வீணாளின் அறம் புவி மேவுதலால்

காணா இது கைதவம் என்று உணராள்-அந்த மானைக் கண்டு இது வஞ்சனை என்று உணரவில்லை சீதை. பேணாத நலம் கொண்டு பேணினாள்-விரும்பத்தகாத அதன் அழகையே விரும்பினாள். ஏனென்றால், வாழ்நாள் அவ் இராவணன் மாளுதலால்-அந்த இராவணன் ஆயுள் ஒழிந்தாலும்; வீழ் நாளின் அறம், புவி மேவுதலால்-ராவணன் வீழ்ந்து பூமியில் தருமம் நிலைபெற வேண்டுவதாலும், இத்தகைய விருப்பத் தைச் சீதை பெற்றாள்.

இப்படி ராவணவதத்திற்கும், தருமம் நிலைபெறுவதற் காகவும் மாயமானின் அழகென்னும் மாயையில் சிக்கிய சீதாப் பிராட்டி, அந்த மானைப் பிடித்துத் தரச் சொல்லும் பொருட்டு,

Koviloor Digital Library

மலர் கொய்வதை விட்டு இராமபிரானிடம் வந்தாள். வந்தவள், இராமனை நோக்கிக் கைகூப்பி "ஆணிப் பொன்னின் (மாற்றுயர்ந்த பொன்னாலான) மானொன்று வந்திருக்கிறது. அது நீங்கள் பார்க்கத் தக்கது" என்று கூறினாள்.

பரந்தாமனும் அதைப் பார்க்க விரும்பினான். தன் மனைவி கூறியதால், 'இது விரும்பத்தக்கதன்று' என்று மறுத்துரைக்காமல், 'அப்படியானால் அதைப் பார்ப்போம்' என்று கூறிய இராமனை, இலக்குவன் தடுத்தான். "பொன்னிறமான உடம்பும், மாணிக்கமயமான கால்களும், காதுகளும், வாலும், இத்தனையோடும் பாய்கின்ற இயல்பு அந்த மானுக்கு இருப்பதால், அது மாயவடிவம் என்று எண்ண வேண்டும்" என்று கூறினான் தம்பி லட்சுமணன் அதை இராமன் மறுத்துக் கூறினான்:

நில்லா உலகின் நிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர் மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்து உள ஆதலால்
இல்லாதன இல்லை இளங் குமரா.

"இளங்குமரா! நில்லாத இந்த உலகத்தின் தன்மையை ஒழுங்கான அறிவுடைய வல்லவர்கள் கூட உணரவில்லை. மன் உயிர் .தாம்-நிலைபெற்ற பிராணிகள், (இந்த உலகில்) பல் ஆயிரம் கோடி வகைகள் பரவியிருக்கின்றன. ஆகையால் இல்லாதன என்று சொல்லக்கூடிய எதுவும் இந்த உலகத்தில் இல்லை" என்று கூறிவிட்டுச் சீதையைத் தொடர்ந்தான் மானைப் பார்க்க. மானை நோக்கிய இராமன், அதைக் கொண்டாடினான். ஏன் கொண்டாடினான் என்பதற்குக் கவி காரணம் காட்டுகிறான்.

சேர்க்கையின் அரவு நீங்கிப்
　　பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடமையன்றோ
　　அன்னது பழுது போமோ?

Koviloor Digital Library

"திருப்பாற்கடலில் பாம்பணையிலிருந்து நீங்கி இங்குப் பிறந்தது தேவர்கள் செய்த பாக்கியமன்றோ? அந்த பாக்கியம் பழுது போகுமோ?" என்று கேட்கிறான் கவி.

இதன் காரணமாக, அந்த மானின் சிறப்பையெல்லாம் இராமன் தன் தம்பிக்கு எடுத்துச் சொன்னான். லட்சுமணன் அதை ஏற்காமல் பராமுகமாயிருப்பதைப் பார்த்த பிராட்டி, மானைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டினாள். இராமன் அதைப் பிடிக்க உடன்பட்டபோது, மீண்டும் லட்சுமணன் தடுத்தான்.

வெய்யவல் அரக்கர் வஞ்சம் விரும்பினர்
    வினையில் செய்த
கைதவம் மான் என்று அண்ணல் காணுதி
    கடையில் என்றான்.

"அண்ணா, இது கொடிய வல்லமையுள்ள அரக்கர், வஞ்சகத்தினால் விரும்பி வினையில் செய்த (தந்திரத்தினால் செய்த) கைதவம் மான் என்று (மாயமான் என்று) கடைசியில் காண்பாய்!" என்று கூறினான் லட்சுமணன்.

இருப்பினும், இராமன், சீதைக்கு லட்சுமணனைக் காவல் வைத்து மாயமானைப் பிடிக்கச் சென்றான். மானும் அம்மாயப் பிரானுக்குப் பாய்ச்சல் காட்டிப் பறந்தது. நெடுந்தூரம் சென்ற பின்பு, அதன் போக்கினால் அதை மாயமானென்று உணர்ந்த இராமபிரான் அதன்மீது அம்புத் தொடுக்க முயல, மாரீசன் தப்பி ஓடப் பார்த்தான். ஆனால் இராமபாணம் மாரீசனின் வஞ்சநெஞ்சில் வேகத்துடன் புகுந்து விடவே, மாரீசன் பர்வதம் போல் விழுந்து, தனது வஞ்சகக் குரலை இராமன் குரல் போலாக்கி அபயக் குரலெழுப்பி மாண்டான். மாயமானின் அக்குரல் கேட்ட பிராட்டி,

குயில் தலத்திடை உற்றதோர் கொள்கையாள்
வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள்

Koviloor Digital Library

ஒரு குயிலானது மரத்திலிருந்து விழுந்துவிட்டது போன்ற தன்மையுடையவளாய், வயிற்றலடித்துக் கொண்டு நிலத்திலே விழுந்து மயக்கமுற்றுள். அதற்கும் அசையாமல் நின்ற லட்சுமணனை நோக்கிக் கொடிய சொற்களைக் கூறினுள். "குற்ற மில்லாத திருக்கல்யாண குணங்களையுடைய என் கணவன் அரக்கர் மாயையினுல் அபாயமடைந்து வீழ்ந்து விட்டான். அப்படியிருக்கத் தம்பியாகிய நீ என் பக்கத்தில் இருப்பது தகுதியோ?" என்று தூற்றினுள்.

"இந்த உலகத்தில் இராமனுக்கு மேலான ஆற்றலை உடையவர் யாரிருக்கிறுர்கள்? பெண்மையினுல் இப்படிப் பேசுகிறீர்கள்!" என்று லட்சுமணன் பதில் சொன்னுன். "இராமன் கோபித்தால் பூமியும் காற்றும் நீரும் வானமும் அக்னியும், இப்படி எத்தனை உண்டோ அனைத்தும் நிலை குலையும். அப்பேர்ப்பட்ட இராமனை யாரென்று நினைத்து நீங்கள் இப்படித் துன்பததில் ஆழ்கின்றீர்கள்?" என்றும் கேட்டான்.

அதை கேட்ட சிதை, மேலும் இலக்குவனைப் பழித்தாள்:

ஒரு பகல் பழகினுர் உயிரை ஈவர் ஆல்
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டு நீ
வெருவலை நின்றனை வேறு என் யான் இனி
எரியிடை விழுந்து உயிர் இறப்பென் ஈண்டு என.

"என் இராமனிடம் ஒரு பகல் பழகினுலும் மற்றவர் உயிரைக் கொடுப்பார்களே. அப்பேர்ப்பட்ட பெருமகன் அலறுவதைக் கேட்டும் கூடப்பிறந்த நீ இங்கு அஞ்சாமல் நின்று கொண்டிருக்கிறுய். வேறு எனக்கு கதி என்ன இருக் கிறது? எரியிடை வீழ்ந்து (எரிகின்ற நெருப்பில் விழுந்து) உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்றுள் சீதை.

அதற்குமேல் நல்லுரைகளால் பயனில்லை என்பதை உணர்ந்த லட்சுமணன், சிதையைக் காவல் புரிவதை விட்டு அண்ணனைத் தேடிச் சென்றுன்.

Koviloor Digital Library

சீதையின் பிடிவாதம் கம்ப ராமாயணத்தில் இத்துடன் நிற்கிறது. வால்மீகி சீதை இதைவிடப் பல மடங்கு கடுமையாகப் பேசுகிருள். சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொல்கிருள்.

"லட்சுமணு! உன் தமையனுக்கு இப்படிப்பட்ட துர் அவஸ்தை வந்தும்கூட அவனை ரட்சிக்கப் போகாதிருக்கிருய்! ஆனுல் நீ உன் பிராதாவுக்கு மேலுக்கு மித்திரனேயொழிய வாஸ்தவத்தில் சத்ருவே. லட்சுமணு! நீ எனக்காக இராமன் நாசமடைய வேண்டுமென்று விரும்புகிருய். என்னிடத்தில் ஆசை வைத்திருக்கிரு யாகையால் இராமனுக்கு என்ன கதி நேர்ந்ததென்று பார்க்கப் போகாதிருக்கிருய்" என்று கொடுஞ் சொற்களைக் கொட்டுகிருள் வால்மீகியின் சீதை. இந்த குற்றச்சாட்டைத் தாங்காத லட்சுமணன் அவளைக் காப்பதை விட்டுச் செல்கிருன், இராமன் குரல் வந்த திசை நோக்கி.

இலக்குவன் பாதுகாப்பு இலக்குமிக்கு அகன்றதும், இராவணன் சந்நியாசி வேடம் பூண்டு பர்ணசாலைக்கு வந்தான்.

''இளையவன் ஏகலும் இரவு பார்க்கின்ற
வளை எயிறு இராவணன் வஞ்சம் முற்றுவான்
முளைவரி தண்டு ஒரு மூன்று முப்பகைத்
தளை அரி தவத்தவர் வடிவம் தாங்கினுன்

இளையவனுன இலக்குவன் ஏகலும் (போய்விட்ட பிறகு), இரவு பார்க்கின்ற (அவன் நீங்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த) (வளைஎயிறு இராவணன்) வளைந்த கோரப் பற்களை உடைய இராவணன், வரிமுளை தண்டு ஒரு மூன்று உம் (கட்டமைந்த மூங்கில் தண்டு மூன்றையும், அதாவது திரிதண்டத்தையும்), முப்பகைத்தளை அரி தவத்தவர் (காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று உட்பகைகளை அறுத்த தவத்தராகிய முனிவர்களின்), வடிவம் தாங்கி (வேடம் பூண்டு) சீதையின் எதிரே தோன்றினுன்.

Koviloor Digital Library

தர்மாத்மாவான இலக்குவனைப் கொடிய சொற்களால் விரட்டிய சீதை, அதர்மத்தின் இருப்பிடமான இராவணன் வந்ததும், அவனை எதிர்கொண்டு உபசரித்து உட்கார ஆசனமும் கொடுத்தாள்.

அவள் தந்த ஆசனத்தில் அமர்ந்த இராவண முனிவர், "நீர் யார்?" என்று சீதையை வினவ, சீதை கபடமில்லாமல் பதில் சொன்னாள். 'தசரதன் குலத்துத் தலைமகன் தாய் சொல்லை முன்னிட்டுத் தம்பியோடும் இங்கு வந்திருக்கிறார். அவர் பெயர் நீர் அறிவீர்" என்றாள்.

"அப்படியானால் நீர் யார் மகள்?" என்று இராவணன் வினவ, "நான் சனக மகாராஜன் மகள்; காகுத்தன் மனைவி" என்றாள். "நீங்கள் யார்? காட்டு வழியில் வருத்தமுற்று நடந்து எந்த இடத்திலிருந்து இங்கு வந்தீர்?" எனச் சீதையும் கேட்டாள்.

இராவண சந்நியாசி தனது வரலாற்றை மறைமுகமாகக் கூறினான். தனது பெருமைகளையும் சொன்னான். "அப்பேர்ப்பட்ட இராவணன் அரசு செய்யும் இலங்கா நகரத்தில் ·சிலகாலம் தங்கி, அவனைப் பார்த்துவிட்டு இங்கு வந்தேன்" என்றான்.

"நல்லவர்கள் வசிக்கும் ஊரிலே வசிக்காமல் அரக்கர்கள் ஊரிலே என்ன செய்தீர்?" என்று சீதை கேட்டாள். 'தீயவரைச் சேர்ந்தவரும் தீயரே' என்றும் சொன்னாள். அத்துடன் நிற்கவில்லை சீதை; அரக்கர் அனைவரும் விரைவில் அழிவார்கள் இராம பாணத்தினால் என்றும் சொன்னாள்.

இதனால் இராவணன் வெகுண்டான். மாயத்துறவி வேடத்தைக் களைத்துச் சுயரூப மெடுத்தான், சீதையிடம் தனக்குள்ள ஆசையையும் தெரிவித்தான். இதைக் கேட்ட சீதை இராவணனை நிந்தித்தாள்.

மின் உயர்த்து உருமின் சீறும்
வெங்கணை விரவா முன்னம்

Koviloor Digital Library

உன் உயிர்க்கு உறுதி நோக்கின்
ஒளித்தியால் ஓடி என்றாள்

"மின் உயிர்த்து-மின்னல் போல் ஒளி பெற்று, உருமின் சீறும்-இடிபோல் முழங்கும், இராமனுடைய பாணம் உன் மேல் பாய்வதற்கு முன்பு, உன் உயிரின் மேல் ஆசை இருந்தால் ஒடி ஒளிந்து கொள்" என்று பிராட்டி கூறவும் செய்தாள்.

அதையும் மீறிப் பிராட்டியை இராவணன் அணுகவே, சீதை அலறினாள். இராவணன் சீதையைத் தரையுடன் பெயர்த்து எடுத்துத் தேரில் வைத்துக் கொண்டு ஆகாய மார்க்கத்தில் கிளம்பினான்.

25. சபரீ! உன் பாக்கியம்!

இராவணன் சீதையின் தலை மயிரை இடக்கையினாலும், தொடைகளை வலக்கையினாலும் பிடித்துத் தூக்கிக் கொண்டு போனான் என்பது வால்மீகி இராமாயணம். அந்தத் துஷ்டனின் கை துடியிடையாளின்மீது படக்கூடாதென்ற நினைப்பால், சீதையைத் தரையுடன் சேர்த்துப் பெயர்த் தெடுத்துப் போனான் என்று கம்பன் கூறுகின்றான்.

இப்படிக் கொடிய இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதை, மலைகளையும், மரங்களையும், மயில்களையும் குயில்களையும், ஆண் யானைகளையும், பிடிகளையும் கோதாவரியையும் பார்த்து "தீவினையுடைய எனது நிலையை என் கணவனிடம் சொல் லுங்கள்" எனக் கதறினாள். பிராட்டியின் கதறலை நோக்கி இராவணன் நகைத்தான். அந்த நகைப்பைக் கேட்ட சீதை, "நீ வல்லவனாயின் தேரை நிறுத்து" என்று கூறினாள்.

....பொருது நின்னைக்
காக்கும் ஆகண்டி ஆயின் கடவல் உன் தேரை

என்றாள்,

Koviloor Digital Library

"இராமனேடு பொருது (போரிட்டு) உன்னைக் காத்துக் கொள்ள முடியுமானுல் உன் தேரைக் கடவல்' (செலுத் தாதே)" என்ருள்.

மீட்டும் ஒன்று உரைசெய்வாள் நீ வீரனேல்
விரைவின் மற்று உன்
கூட்டராம் அரக்கர் தம்மைக் கொன்று உங்கை
கொங்கை மூக்கும்
வாட்டினுர் வனத்தில் உள்ளார் மானிடர்
என்ற வார்த்தை
கேட்டும் இம்மாயம் செய்தது அச்சத்தின்
கிளர்ச்சி யன்ரே

சீதை மீண்டும் ஒன்று உரை செய்வாள்: "இராவணு! உன் கூட்டத்தாராகிய அரக்கரையெல்லாம் கொன்று, உன் தங்கையின் மூக்கும் கொங்கையும் அறுத்தவர் மானிடர் என்பதைக் கேட்டும், நீ இந்த மாதிரி வஞ்சனை செய்து என்னைத் தூக்கிச் செல்வது, அச்சத்தினுல் ஏற்பட்ட விளைவல்லவா?" என்றும் இழித்துரைத்தாள்.

அதைக் கேட்ட இராவணன் பதில் சொல்கிருன்:

விழிதரு நெற்றியான் தன்
வெள்ளி வெற்பு எடுத்த தோட்கு
பழிதரும் அதனில் சாலப்
பயன்தரும் வஞ்சம் என்ருன்.

"சீதே! நெருப்பைக் கக்குகின்ற நெற்றிக் கண்ணைப் பெற்ற சிவபிரானுடைய வெள்ளிமலையைப் பெயர்த்தெடுத்த தோள்களுக்கு (மனிதரோடு போர் செய்தால்) பழி உண்டாகும். அதைவிட வஞ்சகமே சிறந்தது."

சீதை மேலும் நிந்திக்க, அதைச் சட்டை செய்யாது சென்ற இராவணனைச் சடாயு தடுத்தான். பட்சிராஜனுக்கும் ராக்ஷஸப் பிரபுவுக்கும் பலத்த போர் நடக்க, சடாயுவின் சிறகு களைக் கழித்து, அவரை வீழ்த்திவிட்டு, இராவணன் தேரைச்

Koviloor Digital Library

செலுத்திச் சென்று விட்டான். போகும் வழியில் சீதை தனது ஆபரணங்களை முடிந்து விட்டெறிந்தாள் பூதலத்தில். இராவணன் சீதையைக் கொண்டு போய் அசோக வனத்தில் சிறைவைத்தான்.

இப்படி சீதாபகரணத்தை முடித்த கவிச்சக்கரவர்த்தி, "இனி இராம லக்ஷ்மணர்களின் நிலையைப் பேசுவோம்" என்கிறுன். சீதையை விட்டுச் சென்ற லக்ஷ்மணன் அவள் தனிமையை நினைத்துச் சிந்தை நொந்தவனுய் இராமனைத் தேடிச் சென்றுன். மாரீசனைக் கொன்று திரும்பி வந்த இராமனும் இலக்குவனைச் சந்தித்தான். இலக்குவனை மார்புடன் தழுவிய இராமன், 'நீ வந்த காரணம் என்ன?' என்று வினவினுன். இலக்குமணன் தான் வந்த காரணத்தைக் கூற, இராமன் அதற்குமேல் தாமதம் செய்யலாகாதென்று பர்ணசாலைக்குத் தம்பியுடன் விரைந்தான். அங்கு சீதையைக் காணுத இராமன் பெருந்துயருற்று, லக்ஷ்மணனுடன் அவளைத் தேடிக்கொண்டு தேர்ச்சுவடு சென்ற வழியே நடந்தான். மரணமடையும் தறுவாயிலிருந்த சடாயுவைக் கண்டு, அவரால் சீதை அபகரிக்கப்பட்ட செய்தியை அறிந்து, அவரது சடலத்தைத் தகனஞ் செய்து, தண்டகாரண்யத்தைக் கடக்கையில், இருவரும் அயோமுகியென்ற ராக்ஷஸியைக் கண்டனர். முன்னுல் வந்து கொண்டிருந்த லக்ஷ்மணனைக் கண்ட அயோமுகி அவன்மீது காதல் கொண்டு :

> பின்னும் உரைப்பவள் பேர் எழில் வீரா
> முன்னம் ஒருத்தர் தொடா முலையோடும்
> பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்துஎன்
> இன் உயிரைக் கடிது ஈகுதி என்ருள்

"பெரும் எழிலையுடைய வீரா! முன்னம் யாரும் தொட்டறியாத என் தனங்களுடனே, உனது பொன்னிறமான அழகிய மார்பை இணைத்துப் புணர்ந்து, (போய்விடும் போலிருக்கிற) என் இன் உயிரை விரைவில் காத்துக் கொடுத்துவிடு" என்று கூறினுள்.

Koviloor Digital Library

லக்ஷ்மணன் அதற்கு உடன்படாது போகவே, அவனை எடுத்துச் செல்லத் தொடங்கினாள். தன் கையில் சிக்குண்ட லக்ஷ்மணனை மார்புறத் தழுவினாள். அதனால் சினங்கொண்ட லக்ஷ்மணன், அவள் மூக்கு முதலிய உறுப்புகளை அறுத்து, அங்கபங்கப்படுத்தி இராமபிரானை அடைந்தான்.

அயோமுகிப் படலத்துக்குப் பிறகு மேற்கொண்டு நடந்த இருவரும் வழியில் கவந்தனுடைய கைகளைத் துண்டித்து அவனை அக்னியில் எறிந்ததும் அவன் திவ்ய சரீரம் பெற்றான். இராமனைத் தொழுது அவன் மேல்உலகம் செல்லும்போது, சீதையைத் தேட உபாயம் சொல்லி, சுக்ரீவன் உறையும் ரிச்யமுக பர்வதத்திற்கு வழியையும் சொன்னான். அதைக் கேட்டுக் கொண்ட இராம லக்ஷ்மணர்கள் மதங்கருடைய ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தனர். அந்த ஆசிரமம் புண்ணியம் செய்தவர்கள் அடையும் சுவர்க்க லோகத்தைப் போன்றிருந்தது. அந்த ஆசிரமத்திலிருந்த சபரியைக் கண்ட இராம -லக்ஷ்மணர், அவள் க்ஷேமத்தை விசாரித்நார்கள். சபரி ஆனந்தபாஷ்யத்தைச் சொரிந்தாள் தன் தவக் கண்களிலிருந்து.

ஆண்டு அவள் அன்பின் ஏத்தி
அழுது இழி அருவிக் கண்ணள்
மாண்டது என் மாயப்பாசம்
வந்தது வரம்பு இக்காலம்
பூண்ட மாதவத்தின் செல்வம்
போயது பிறவி என்பாள்
வேண்டியது கொணர்ந்து நல்கி
விருந்து செய்து இருந்த வேளை

ஆண்டு அவள்-அப்பொழுது அந்தச் சபரியானவள், (இராம-இலட்சுமணர்களை) அன்பின் ஏத்தி-பக்தியோடு புகழ்ந்து, அழுது இழி அருவிக் கண்ணள், (ஆனந்தமிகுதியால், அழுது பெருகுகின்ற நீரருவிகள் போன்ற கண்களுடையவளாய், மாண்டது என் மாயப்பாசம் - உங்கள் வரவால்

Koviloor Digital Library

இந்த மாய உலக பந்தம் எனக்கு நீங்கி விட்டது. வந்தது வரம்பு இல் காலம் பூண்ட மாதவத்தின் செல்வம்-அளவிலாத காலமாக நான் செய்த தவத்தின் பயன் கிடைத்தது. போயது பிறவி-பிறவியும் போயிற்று. (இப்படியெல்லாம் சொன்னுள் சபரி). வேண்டியது கொணர்ந்து நல்கி விருந்து செய்து இருந்த வேளை-அவர்களுக்கென்று பொறுக்கி வைத்திருந்த பழம் முதலியவற்றைக் கொணர்ந்து விருந்து செய்த சமயத்தில்,

சபரி அளித்த கந்த மூலாதிகளை விருப்புடன் உண்டனர் இராமலட்சுமணர்கள். அதற்குப் பின், சபரி "சிவபிரானும் பிரமன் முதலியவர்களும் தங்கள் உலகுக்கு வரும்படி என்னை அழைத்தார்கள். உன் தவம் நிறைவேறி விட்டது. இராமனுக்கு நீ பூசை செய்து எங்கள்பால் வருக என்று சொன்னுர்கள்" என்று தெரிவித்தாள்.

இருந்தவள் எந்தை நீ ஈண்டு
எய்துதி என்னும் தன்மை
பொருந்திட இன்றுதான் என்
புண்ணியம் பூத்த தென்ன
அருந்தவத்து அரசி தன்னை
அன்புற நோக்கி எங்கள்
வருந்துறு துயரந் தீர்த்தாய்
அம்மனை வாழி என்ருன்.

"எந்தையே! நீ இங்கு வருவாயென்று செய்தி தெரிந்ததால் இங்கு காத்திருந்தேன். இன்று தான் எனது புண்ணியம் பலித்தது" என்று கூறிய அருந் தவத்து அரசியை நோக்கி இராமன், "அம்மனை! (அம்மையே) எங்கள் வருத்தம் பொருந்திய வழிநடைத் துயரம் தீர்த்தாய். நீ வாழி" என்று பாராட்டினுன். பிறகு அந்தச் சபரி, தனது தவ மகிமையாலே தனது பூத உடலை நீத்து முத்திஉலகம் போய்ச் சேர்ந்தாள். போகுமுன்பு சுக்ரீவனிருக்குமிடம் போகும் வழியையும் சொன்னுள். அங்கிருந்து கிளம்பிய இராமலட்சுமணர்

Koviloor Digital Library

தாமரைகள் பூத்துள்ள பம்பை என்னும் பொய்கையை அடைந்தார்கள்.

சிவன், பிரம்மா முதலானோர் இராமன் வருவதைப் பற்றிச் சொல்லிச் சென்றதாகக் கம்பராமாயணம் கூறுகின்றது. ஆனால், மதங்க முனிவரின் சிடர்களும், தனது ஆசார்யர்களுமான மகரிஷிகளின் கட்டளை அது என்று சபரி கூறியதாக வால்மீகி கூறுகிறார். 'வேடனான குகன் கொடுத்த ஆகாரத்தை உட்கொள்ளாத இராமபிரான், வேட்டுவச்சியான சபரி அளித்த ஆகாரத்தை மட்டும் எப்படி உட்கொண்டாள்?' என்ற கேள்வி வியாக்கியான கர்த்தாக்களால் எழுப்பப்பட்டு, "ஆசார்யர்களின் நியமனத்தால் கொடுக்கப்பட்ட ஆகாரம் சபரி அளித்த பழங்கள், ஆகையால் ஏற்றான்'' என்று விடையும் கூறப்படுகிறது.

சபரியைக் குறித்து சங்கீத திரிமூர்த்திகளில் ஒருவரான தியாகையர் மெய் சிலிர்க்கிறார்.

''எந்தநின்னே வர்ணிந்துனு
சபரி பாக்யமு......''
''கன்னுலார ஸேவிஞ்சி கம்மனி
பலமுலனுஸகி......''

"இராம லட்சுமணர்களைக் கண்களால் நேரில் சேவித்தாய். ருசியான பழங்களை அவர்களுக்கு அளித்தாய். அப்பேர்ப்பட்ட உன் பாக்கியத்தை எப்படி வர்ணிப்பேன்?'' என்கிறார் தியாகய்யர். மனத்தை உருக்கும், 'முகாரி ராகத்தில் செய்யப் பட்டுள்ள இந்தக் கீர்த்தனை, இன்றும் சரியாகப் பாடுபவர்கள் பாடி, நல்ல செவியுள்ளவர்கள் கேட்டால், ஆத்மாவை உருக்கவே செய்யும்.

இப்படி சபரியின் விருந்தை ஏற்று அவள் மோட்சத்திற்குச் சென்றபின் இராம லட்சுமணர்கள் பம்பா ஸரஸை அடைந்தார்கள்.

(ஆரண்ய காண்டம் முற்றும்)

Koviloor Digital Library

26. தாரை உணர்ந்தாள்

சபரியானவள் பல்லாண்டு காலமாய்ச் சேகரித்து வைத்து தன் தவவலிமையால் அவை கெட்டுப் போகா வண்ணம் பாது காத்து அளித்த பழங்களை உண்ட இராமலக்ஷ்மணர்கள், அவள் சொன்ன வழியைப் பின்பற்றி, பம்பை என்னும் பொய்கை யிருக்குமிடம் வந்து சேர்ந்தார்கள். மதுவுடைய தாமரைப் புஷ்பங்களை உடையதும், மதம் பிடித்த யானைகள் வந்து மத வெப்பம் தீர்த்துக்கொள்ளும் குளிர்ந்த நீரைக் கடல்போல் உடையதும், நிர்மலமாக ஸ்படிகம் போலக் காணப்பட்டது மான பம்பாசரஸில் இராமபிரான் நீராடிச் சந்தியாவந்தனம் செய்து தனது மாலைக் கடன்களை முடித்தான். அந்தப் பொய்கையிலிருந்த தாமரை மலர்களையும் அன்னப்பறவை களையும் கண்டு சீதையை நினைத்து மனம் தளர்ந்தான். நல்லுணர்வு ஒடுங்கிடப் புலம்பலுற்ருன். ஜானகியின் நினைப் பாலே, ஆராய்ச்சிக்குரிய நல்ல உணர்வு ஒடுங்கியதால் புலம்ப வும் முற்பட்டான். "இப்பொழுது என் எதிரிலே வந்து களிப் புடன் திரிகின்ற மயிலே! நீ சீதையின் சாயலுக்கு இணை யாகாததால் அவளிருக்கும் வரை என் பகைவரைப்போல் ஒதுங்கி மறைந்திருந்தாய். இப்பொழுது அவளைத் தேடு கின்ற என் நிலைகண்டும் நீ மகிழ்ந்து ஆட முற்பட்டிருக் கிருய். அப்பேர்ப்பட்ட நீ சீதை போன இடத்தைச் சொல்லக் கூடாதோ? நான் பார்த்தேனில்லை என்பாயாயின் யார் நம்பு வார்? உனக்கு ஆயிரம் கண்கள் தோகையிலே இருக்கின் றனவே" என்று மயிலைப் பார்த்துக் கேட்டான் இராமபிரான். அன்னப் பேடைகளைப் பார்த்து, "உங்கள் நடை சீதையின் நடையை ஒக்குமே என்று நினைக்கும் என்னை வெறுக்கிறீர் களா? அவள் போன வழி சொல்லுங்கள்" என்று வினவினுன்.

இப்படி பக்ஷிகள் செடி கொடி மரங்கள் எல்லாவற்றையும் பார்த்து வினவி, சீதையின் நினைப்பால் ஏற்பட்ட விரகத்தால் பித்தனுகி, அந்த இரவைப் பம்பையின் தீரத்திலேயே கழித்

Koviloor Digital Library

தான். இரவு நீங்கியதும் லக்ஷ்மணனுடன் மேலும் நடந்து சுக்ரீவன் மறைந்து உறையும் ரிச்யமுக பர்வதத்துக்கு வந்தான். இராமலக்ஷ்மணர்கள் வருவதைத் தூரத்திலிருந்து கண்ட சுக்ரீவன் அவர்கள் தேக காந்தியையும் பராக் கிரமத்தை அள்ளி வீசும் அங்கலா வண்யங்களையும் கண்டு, அவர்கள் வாலியால் தன்னைக் கொல்ல அனுப்பப்பட்டவர்க ளென்று நினைத்து, ஒரு குகைக்குள் ஓடி மறைந்து கொள் கிறான். ஆனால் எதையும் சரியாக எடைபோடும் அறிவுள்ள அனுமான், அவர்கள் வாலியைச் சேர்ந்தவர்களல்லவென்று தீர்மானித்து, அஞ்சிய சுக்ரீவனைத் தேற்றி, ஒரு மாணவன் வடிவம் பூண்டு இராமலக்ஷ்மணர்களைச் சந்தித்துப் பேசுகிறான். அனுமான் பேச்சின் அழகைக் கண்ட ராமன் தம்பியை நோக்கிக் கேட்கிறான்:

இல்லாத உலகத்து எங்கும்
　　ஈங்குஇவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
　　கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று இன்றே
　　யார்கொல் இச்சொல்லின் செல்வன்
வில் ஆர்தோள் இளைய வீர
　　விரிஞ்சனோ விடை வல்லானோ?

"வில் ஆர்தோள் இளைய வீர-வில் பொருந்திய தோளை உடைய இளையவனே! வீரனே! இவன் பேசக் கேட்டால் இவன் கல்லாத கலைகளோ வேதங்களோ உலகத்தில் இல்லை யென்று தோன்றுகிறது. 'சொல் இன் செல்வன்'-இனிமை யாகப் பேசுகின்ற இவன் யார்? விரிஞ்சனோ - பிரும்மதேவனோ அல்லது விடை வல்லானோ? - விருஷபத்தை வாகனமாகக் கொண்ட ருத்திரனோ?"

இப்படி அனுமத் பிரபாவத்தை உணர்ந்த இராமன், சுக்ரீவனைக் காட்ட வேண்டுமென்று கேட்க அனுமனும் இராம லக்ஷ்மணர்களின் வரலாற்றை விசாரிக்க, லக்ஷ்மணன்

Koviloor Digital Library

சொல்லுவான்: "இந்த ஆண்தகை தசரத சக்கரவர்த்தியின் மைந்தன். தன்னுடைய உரிமைச் செல்வமான அரசைத் தம்பிக்கு அளித்துக் கானகம் வந்தான். இராமன் எனும் பெயர் கொண்டவன். இந் நெடுஞ்சிலைவலானுக்கு ஏவல் செய் அடியன் நானே. இந்த நீண்ட வில் வல்லனுக்கு குற்றேவல் செய்ய வந்த அடியவன் நான்."

இங்கு கம்பன் வால்மீகியை அப்படியே பின்பற்றுகிறான்:

"அஹம் அஸ்ய அவரோ ப்ராதா
குணை; தாஸ்யம் உபாகத :"

"இவரைக் .கேட்டால் இவருக்குப் பின் பிறந்த தம்பி என்று என்னைச் சொல்லுவார். ஆனால் நான் இவருடைய குணங்களுக்கு ஈடுபட்ட அடியவன்" என்று வால்மீகியின் லக்ஷ்மணன் கூறுகிறான்.

இளையபெருமாளைப் போலவே இராமன் குணங்களுக்கு அடிமைப்பட்ட அனுமனும் அவர்களை சுக்ரீவனிடம் அழைத்துச் சென்றான். அங்கு இராமன் சுக்ரீவனிடம் நட்புக் கொண்டு, அவன் வைத்த பலப் பரீட்சைகளுக்கும் ஆளாகி, வாலியைக் கொல்லச் சபதம் செய்தான். இராமபிரான் நட்பினால் துணிவு கொண்ட சுக்ரீவன் கிஷ்கிந்தை மலையை அடைந்து தோள் களைத் தட்டி ஆர்ப்பரித்து வாலியைப் போருக்கு அழைத்தான். அவன் செய்த பேரொலியைக் கேட்ட வாலி சிரித்தான். "மயக்கங் கொண்ட பெரிய மதயானையின் பிளிறலைக் கேட்ட கொடிய சிங்கம் எப்படிக் கேட்குமோ அப்படி கேட்டான் வாலி" என்று உவமை கூறுகிறான் கம்பன். வாலியின் பலத் துக்குச் சுக்ரீவன் பலம் ஈடுகட்ட முடியாதது என்பது இந்த உவமையால் விளக்கப்படுகிறது.

இப்படிச் சிரித்துச் சீறிய வாலி போருக்குப் புறப் பட்டான். தோள்களை உதறினான். அவன் உடலின் ரோமங் களிலிருந்து எழுந்த கோபத்தின் அனல் பொறிகள் வடவாக் கினியை விடப் பயங்கரமாயிருந்தன. இவ்வண்ணம் போருக்

Koviloor Digital Library

குப் புறப்பட்ட வாலியை அவன் மனைவியான தாரை தடுத்தாள்.

கொற்றவ நின் பெரும் குவவு தோள்வலிக்கு
இற்றையனல்லன் ஈடு உண்டு ஏகுவான்
பெற்றலன் பிறந்திலன் பெயர்த்தும் போர் செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமையால் என்றாள்.

"கொற்றவ! வெற்றியுடையவனே! இற்றையன் அல்லன்-சுக்ரீவன் இத்தனை நாள் இருந்தவன் போன்றவனல்லன் இன்று; நின்பெரும்குவவுதோள் வலிக்கு ஈடு உண்டு ஏகுவான்-(இத்தனை நாளும்) உன் திரண்ட தோள்வலிக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஓடி ஒளிப்பான். அப்பேர்ப்பட்டவன் இன்று, பிறந்திலன்-புதிதாகப் பிறந்தவனுமில்லை; பெற்றிலன்—புதிதாக வலிமை பெற்றவனுமில்லை; பெயர்த்தும் போர் செய்வதற்கு உற்றது- அப்படியிருந்தும் 'போர் செய்வதற்கு வந்தது சுயபலத்தாலல்ல. உற்ற நெடுந்துணை உடைமையால் என்றாள்- பெரிய ஒரு துணைவனைப் பெற்றதால் வந்திருக்கிறான்" என்று சொன்னாள் தாரை.

தாரையின் இந்த நல்லுரையை வாலி கேட்டானில்லை. "பெண்ணே! மூவுலுகத்தோர் வந்து எதிர்த்தாலும் அவர்களெல்லாம் என் வலிமையால் அழிவார்கள். என் முன்னே நிற்க மாட்டாமல் அமரரும் அரக்கரும் எத்தனையோ பேர் தோல்வியுற்றனர்" என்று வாலி தன் பிரதாபத்தைக் கூறினான்.

அன்னது கேட்டு அவள்
அரச ஆயவர்க்கு
இன்உயிர் நட்பு அமைந்து
இராமன் என்பவன்
உன் உயிர் கோடலுக்கு
உடன் வந்தான் எனத்
துன்னிய அன்பினர்
சொல்லினர் என்றாள்.

Koviloor Digital Library

அதைக் கேட்ட தாரை, ''அரசனே! ஆயவர்க்கு-அந்த சுக்ரீவனுக்கு, இனிய உயிர் நண்பனுக அமைந்த இராமன் என்பவன் உன் உயிரைக் கவர்வதற்காக உன் தம்பியுடன், வந்திருப்பதாக, துன்னிய அன்பினர்-நம்மிடம் அன்புள்ள வர்கள், சொல்லினர்—சொன்னர்கள்'' என்ருள்.

அதைக் கேட்ட வாலி சினந்தான். ''அடி பாவி! உலகத் திலுள்ள உயிர்களுக்கெல்லாம் தர்ம மார்க்கத்தைக் காட்டும் அந்தப் பெருமானைப் பற்றி என்ன இழிவான வார்த்தை சொன்னுய்? என்ன அபசாரத்தைச் செய்தாய்? வேறு யாராவது இதைச் சொல்லியிருந்தால் அவர்களைக் கொன் றிருப்பேன். ஆனுல் நீ பெண் ஆனதால் பிழைத்தாய். ''பிழைத்தனை பாவி உன் பெண்மையால்'' என்று கூறினுன்.

இப்படி இராமனிடத்தில் அளவிலாப் பக்தியுடன், தாரை யின் சொல்லை உதறித் தள்ளிப் போர்க்கு வந்தான் மகா வீரனுன வாலி. இராமன் வாலியை நோக்கி, அவன் மேனியை நோக்கி அதிசயித்தான்.

அந்தச் சமயத்தில் சுக்ரீவன் செய்த அக்கிரமத்தை லக்ஷ்மணன் இராமனுக்கு எடுத்துச் சொல்கிருன்: ''அண்ணு, இந்தச் சுக்ரீவனை எப்படி நாம் நம்பலாம்? மாற்ருன் எனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்ருன்-தன் அண்ணனை, மாற்ருன் எனக் கருதி அண்ணனைக் கொல்ல வந்து நின்ருன்; அப்பேர்ப்பட்ட இவன், 'வேற்ருர்கள் திறத்து தஞ்சம் என்?- ''அயலார் விஷயத்தில் துணையாவது எப்படி?'' என்று கேட்டான்.

அதற்கு இராமபிரான் சமாதானம் சொல்கிருன்: ''லக்ஷ்மணு! பின் பிறந்தார்களெல்லாம் உத்தமர்களாகி விட்டால், பரதன் பெரிய உத்தமன் என்ற பெயர் உலகில் எப்படி நிலைக்கும்? உலகத்தில் தவருத நல்லொழுக்கம் பொருந்தியவர் சிலரே; குற்றமுள்ளோரே பலர்! ஆகையால் குற்றம் பார்க்கில் சுற்றமில்லை.''

Koviloor Digital Library

இதற்கிடையே வாலி சுக்ரீவர் போர் தொடங்கியது. வாலி சுக்ரீவனைக் குத்தி நிலைகுலையச் செய்யவே, அஞ்சி ஓடி வந்தான் சுக்ரீவன் இராமனிடம். இராமன் அவனுக்கு அடையாள மாலை சூட்டி, "மீண்டும் போ" என்று சொல்லச் சுக்ரீவன் சென்றான். மறு யுத்தம் மூண்டபோது, வாலி சுக்ரீவனைத் தூக்கித் தரையில் மோத எத்தனிக்கையில் இராமன் அம்பு தொடுத்தான் வாலியை நோக்கி. அந்த அம்பு வாழைக்கனியில் ஊசி நுழைவது போல் மார்பில் நுழைந்து விடவே துடித்துத் தரையில் வீழ்ந்தான் வாலி.

27. சூழ்ந்த பெண்கள்! தாழ்ந்த தாமரை!

வாழைக் கனியில் ஊசி நுழைவதைப் போல் வெகு எளிதாகவும் வேகமாகவும் மார்பில் புகுந்துவிட்ட இராம பாணத்திலுல் துடித்துத் தரையில் வீழ்ந்துவிட்ட வாலி, அந்தப் பாணம் தன் மார்பைவிட்டு ஊடுருவிச் செல்லாமல் அதை இறுக்கப் பிடித்து நிறுத்தினான். கொடுமையான மரணாவஸ்தைக்கு உள்ளான அந்த நேரத்தில், மகாவீரனான வாலி அந்த பாணத்தை எய்தவன் யார் என்று பார்க்க, வாளியை மார்பிலிருந்து பிடுங்கினான். அதில் பொறிக்கப் பட்டிருந்த ராம என்ற எழுத்துக்களிலிருந்து எய்தவன் ராம னென்பதை உணர்ந்ததால் கடுங் கோபாவேசத்துக்கு ஆளானான். கோபத்தால் சிவந்த அவன் முகத்துக்கு இணையாக அம்பைப் பிடுங்கியதால் மார்பிலிருந்து பெருக் கெடுத்த ரத்த வெள்ளம் அவன் மார்பையும் பூமியையும் கூட நனைத்தது. அப்படி ரத்த வெள்ளம் பெருகிய சமயத்திலும், வாளியிலிருந்த ராமநாமத்தைக் கண்களால் வாலி பார்த் தான் மீண்டும் மீண்டும்.

மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே

Koviloor Digital Library

இம்மையே எழுமை நோய்க்கு மருந்தினை இராமனென்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களில் தெரியக்கண்டான்.

"மூவுலகங்களுக்கும் மூலமந்திரமாகவுள்ளதும், தம்மைத் தொழும் அடியார்க்குத் தம்மையே முழுதும் கொடுக்கும் தன்மை வாய்ந்த தனிப்பெரும் பதமாகவுள்ளதும், ஏழுவகைப் பிறப்புக்கள் எனும் நோய்க்கு ஜன்மத்திலேயே மருந்தாக உள்ளதுமான, "ராம" என்னும் சிறப்புப் பொருந்திய தாரக நாமத்தை வாலி கண்களால் கண்டான்."

தன்மேல் பாணமெய்தவன் ராமனென்பதை அறிந்ததும், வாலி மரண வேதனையிலும் முறுவல் கொண்டான்.

இல்லறம் துறந்த நம்பி எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால் வேதநூலில்
சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை
நல்லறம் துறந்ததென்னு நகைவரை நாணுட்கொண்டான்.

"ராமா! சீதையை இழந்ததால் இல்லறம் துறந்தாய். இப்பொழுது எங்களுக்காக வில்லறத்தையும் துறந்து விட்டாயே! வேத சாஸ்திரங்களில் சொல்லப் பட்ட தர்மங்களைத் துறந்திலாத சூரிய குலம், அனுதியாக அனுஷ்டித்துவந்த நல்லறத்தைத் துறந்து அந்தக் குலத்துக்கே இழிவு தேடிவிட்டாயே" என்று நினைத்துச் சிரிப்பு வந்ததால் நாணமும் கொண்டான் இணையிலா வீரனுன வாலி.

அந்த சமயத்தில் இராகவனும் லக்ஷ்மணனுடன் அவனெதிரில் தரிசனம் தந்தான். ராமனைக் கண்ட வாலி அவனைப் பார்த்து மிக இகழ்ச்சியாகப் பேசத் தொடங்கினுன்.

கோ இயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுதவொண்ணு உருவத்தாய் உடமையன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனை போலும் செய்கை.

Koviloor Digital Library

"ஓவியத்தில் வடிக்க முடியாத வடிவழகை உடையவனே! கோ இயல் (அரச தர்மம்) உங்கள் குலத்தில் பிறந்தவர்க்கெல்லாம் சொந்தச் சொத்தல்லவா? அப்படியிருக்க நீ இப்பேர்ப்பட்ட அதர்மமான செய்கையை ஏன் செய்தாய்? ஆவியை-உயிர் போன்றவளும், சனகனுல் பூமியிலிருந்து பெற்று அன்னம் போல் வளர்க்கப் பெற்றவளும், அமிர்தம் போல் அருமையாகக் கிடைத்தவளுமான தேவியைப் (மனைவியை) பிரிந்ததால் பைத்தியம் பிடித்து இத்தகைய செய்கையைச் செய்தாய் போலும்" என்று வாலி தூற்றினுன்.

இதற்குப் பிறகு, தர்மங்களுக்கெல்லாம் இருப்பிடமான இராமனுக்குத் தருமங்களை எடுத்து ஓதி நிந்தித்தான் வாலி. இராமபிரானும் அவற்றுக்கெல்லாம் சமாதானம் சொன்னுன். வாலி ராம சம்வாதம், வாலியை இராமன் மறைவிலிருந்து அடித்தது, இவை இன்னும் தீராத கதையாயிருக்கிறது. இந்தக் கட்டுரைத் தொடரின் வரம்புக்குள் இந்த விவாதம் வராததால், மேற்கொண்டு கதையைக் கவனிப்போம்.

அதற்கு முன்பாக நிகமாந்த மகாதேசிகன் சொன்ன ஒரு சுலோகத்தின் பொருளை மாத்திரம் சொல்கிறேன். பரம் பொருளும், பரம கல்யாண குணங்களுக்கு இருப்பிடமானவனும், எண்ணற்ற நல்ல காரியங்களைச் செய்திருப்பவனும் லட்சிய புருஷனுமான ராமனைப்பற்றி, 'அவன் தாடகை என்ற பெண்ணைக் கொலை செய்தான், கரனிடம் யுத்தம் செய்த போது காலைப் பின்னுக்கு வைத்தான், வாலியை மறைந்து நின்று அடித்தான்' என்ற மூன்று தவறுகளை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறது இந்த உலகம். அப்படியிருக்கும் உலகம், தினம் ஆயிரம் குற்றங்களைப் புரிந்துகொண்டிருக்கும் நம்மைச் சும்மா விடுமா?" என்று ஸ்வாமி தேசிகன் கேட்கிருர். ஆகவே குற்றம் கண்டுபிடிக்கும் வேலையை மற்றவர்களுக்கு விட்டுக் கதையை மேற்கொண்டு ஆராய்வோம்:

சம்வாதத்தின் முடிவில், வாலி தனது குற்றங்களைப் பொறுத்தருளுமாறு இராமனைப் பிரார்த்திக்கிருன், அது மட்டு

Koviloor Digital Library

மன்றி தனக்கு முக்தியை அளிக்குமாறும் வேண்டுகிறுன். சுக்ரீவன் தவறு செய்வாஞனல், அவன் மீது இத்தகைய அம்பை ஏவ வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறுன். பிறகு அங்கதனே வரவழைத்து இராமனிடம் "இவன் உன் அடைக்கலம்" என்று ஒப்புவிக்கிறுன். அத்துடன் மோட்சத்தை அடைந்தான். வாலி இறந்ததை கேட்ட தாரை ஓடி வந்து அவன் மீது விழுந்து புலம்பினுள்.

இராமன் உத்தரவுப்படி லக்ஷ்மணன் சுக்ரீவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்கிறுன். கார்காலம் முடிந்த பின்பு சீதையைத் தேட முயல்வதாக உறுதி கூறிச் சென்றுன் சுக்ரீவன்.

கார்காலம் முடிந்து சரத்காலமும் வந்தது. சுக்ரீவனேக் காணவில்லே. அதனுல் வெகுண்ட ராமன், லக்ஷ்மணனே அழைத்து "லக்ஷ்மணு! நன்றி கொன்றவனேக் கொல்லுதல் தருமமாகையால், நீ போய் சுக்ரீவன் மனநிலே அறிந்துவா. வானரப் பூண்டேயில்லாமல் அழிக்கும் அம்பு என்னிடம் இருக்கிறதென்பதையும் உணர்த்தி வா" என்று கட்டளேயிட, இயற்கையாகவே பாம்பைப் போல் சீறும் குணமுள்ள லக்ஷ்மணன் கையில் வில்லேந்திக் கடுங்கோபத்துடன் கிஷ்கிந்தைக்குள் புகுந்தான்.

அவன் சீற்றத்தைக் கண்டு வானரங்கள் சிதறி ஓடின. இலக்குவன் கடுஞ்சினத்துடன் வருகிறுன் என்ற செய்தியை அங்கதனுக்கு வானரங்கள் சொல்ல, அங்கதன் சுக்ரீவனிடம் சென்றுன், எதிர் நோக்கி வரும் தீமையை எடுத்துணர்த்த. அப்பொழுது சுக்ரீவன் பரமபோகத்திலிருந்தான்.

நளன் இயற்றிய நாயகக் கோயிலுள்
தளம் மலர்தகைப் பள்ளியில் தாழ்குரல்
இள முலேச்சியர் ஏந்து அடி தைவர
விளே துயிற்கு விருந்து விரும்புவான்.

நளன் என்ற வானர வீரஞல் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த அரண்மனேயினுள்ளே, தளம் மலர்தகை பள்ளியில் (இதழ்கள்

Koviloor Digital Library

நிறைந்த மலர்கள் பரப்பப்பட்ட பஞ்சணையில்) தாழ்குழல் இள முலைச்சியர் (தாழ்ந்த குழல்களையும் இளமையான தனங்களையும் உடைய பெண்கள்), ஏந்து அடி தைவர (கால்களை மெல்ல வருட), அதனால் விளைந்த துயிற்கு (தூக்கத்துக்கு) விருந்து விரும்புவான் (விருந்தினனாதலை விரும்புவான்). அதாவது தூக்கத்தை விரும்பிப் படுத்துக் கிடந்தான்.

இலக்குவன் வருவதை அங்கதன் எடுத்துக் கூறியும், இருந்த நிலை காரணமாக அதைச் சுக்ரீவன் காதில் வாங்காததால், மீண்டும் வெளிப்போந்த அங்கதன், அனுமனை அழைத்துக்கொண்டு தாரையிடம் சென்றான்.

இலக்குவனைத் தடுக்கத் தாரைக்கு அனுமன் ஓர்உபாயம் சொன்னான். "சுக்ரீவன் அரண்மனை வாயிலை நீ அடைந்து நின்றால் பெண்களைக் கண்ணெடுத்தும் பாராத லக்ஷ்மணன் சீற்றம் குறைவான்; சிந்திப்பான்" என்ற அனுமன் சொற்களுக்குச் செவிசாய்த்தாள் தாரை. ஆகவே மிக அழகிய பருவப் பெண்களைக் கூட்டினாள்.

வில்லை உயரப் பிடித்த கையுடன் பிரளயத்திரள் போல் வந்து கொண்டிருந்த லக்ஷ்மணன் முன்பு, அந்த அழகிகளின் கூட்டத்தை அனுப்பி வழியைத் தடுத்தாள் தாரை. பெண்களின் அழகைக் கம்பன் வர்ணிக்கிறான்.

விலங்கு மெல்லியல் வெண்ணகை வெண்மதி
இலங்கு நுண்ணிடை ஏந்திள மென்முலை
குலங்கொள் தோகை மகளிர் குழாத்தினால்
வலங்கொள் வீதி நெடுவழி மாற்றினாள்.

விலங்கு மெல்லியல்-பார்த்த மாத்திரத்தில் கை கால்களுக்கு விலங்கு போட்டது போல் ஸ்தம்பித்து நிற்கச் செய்யக்கூடிய மென்மையான அழகை உடையவர்களும், வெண்மதியைப் போல் மயக்கமான சிரிப்பை உடையவர்களும், அசையும் நுண்ணிய இடையினை உள்ளவர்களும், சாதி மயிலைப் போன்றவர்களுமான பெண்களின் கூட்டத்தால் லக்ஷ்மணன் வந்த வழியைத் தாரை தடுத்தாள்.

Koviloor Digital Library

வில்லும் வாளியும் லக்ஷ்மணனிடமிருந்தால், அந்தப் பெண்களிடம் படைக்கலங்கள் பல இருந்தன.

ஆர்க்கும் நூபுரம் பல்பேரி அங்குலாம்
தடந்தேர் சுற்ற
வேல்கண் வெம்புருவம் போர்வில்
மெல்லியர் வளைந்த போது
பேர்க்கரும் சீற்றம் பேர முகம் பெயர்ந்து
ஒதுங்கிற்று அல்லால்
பார்க்கவும் அஞ்சினன் அப்பணையினும்
உயர்ந்த்தோளான்.

ஆர்க்கும் நூபுரம் பல்பேரி-அப்பெண்களின் காற்சிலம்புகள்பல பேரிகைகளைப் போல் சப்தித்தன. அல்குலாகிய தேர்த் தட்டுகள் சுற்றிக்கொள்ள, கண்கள் வேல்களாகவும், புருவங்கள் போர் வில்களாகவும் கொண்டு, அந்தப் பெண்கள் லக்ஷ்மணனை வளைத்துக் கொண்டார்கள். அப்படி அவர்கள் வளைத்துக் கொண்டபோது பேர்க்கரும் சீற்றம் பேர (தகர்க்க முடியாத கோபம் தகர்ந்து போக), அவர்களை, பார்க்கவும் பயப்பட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் முழவுத் தோள்களை உடைய இளைய பெருமான்.

அப்படி ஏற்பட்ட கூச்சத்தால், அவன் கைகள் நடுங்கின. அந்த நிலையில் லக்ஷ்மணன் தலை குனிந்தான்.

தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடுந்தரையில் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தான் ஆம் என மைந்தன் நிற்கப்
பூமியில் அணங்கனுர் தம் பொது விடைப் புகுந்த பொன்தோள்
தூமன நெடுங்கண் ·தாரை நடுங்குவாள் இனைய சொன்னாள்.

தாமரை போன்ற தனது முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான். தன்னை திடப்படுத்திக் கொள்வதற்காக வில்லைத் தரையில் ஊன்றிக் கொண்டான். திருமண நலங்கின் போது, வேட்டகத்து மாமிமார் சூழ்ந்து கொண்டால் புது மாப்பிள்ளை எப்படி வெட்கப்பட்டு நிற்பானோ அப்படி நின்றான்

Koviloor Digital Library

மைந்தன். அந்தச் சமயத்தில் பொன் போன்ற தோள்களையும் நீண்ட விழிகளையும் உடைய தாரை, அந்தப் பெண்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து லக்ஷ்மணனைப் பார்த்து நடுக்கத்துடன் பேசலானாள்.

28. இரண்டு தாரைகள்

வால்மீகி ராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு தாரைகளைப் பார்க்கிறோம். வாலியின் மனைவியும், ஐந்து சிறந்த கன்னிகைகளில் ஒருத்தி என நிர்ணயிக்கப்பட்டவளுமான தாரையை, இரண்டு கவிகளும் வெவ்வேறு விதமாக நமது கண்முன்பு கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். இரண்டிலும் இருவித அழகை நாம் காண்கிறோம். குணங்களில் மாறுபட்ட இரண்டு தாரைகளுமே நமது மனத்தை அள்ளுகிறார்கள். இதிலும் யார் சொன்னது சரி என்று இன்னும் விவாதம் இருக்கிறது. இரு கவிகளையும் எடைபோடத் தகுதியுள்ள யாரும் இன்று இல்லாததால், அவர்கள் குணச் சித்திரத்தைப் பற்றிய விவாதமும் அர்த்தமற்றதாகும். ஒரு முக்கிய விஷயத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது. வால்மீகி, ராம பிரான் காலத்தில் இருந்தவர். ராம காவியத்தை இயற்றி, ராமனுடைய குழந்தைகளான குசலவர்களுக்குச் சொல்லி வைத்தவர். அந்தக் காவியத்தை அசுவமேத மகா மண்டபத்தில் இராமனே கேட்டான். வசிஷ்ட வாமதேவாதிகளும் பொதுமக்களும் கேட்டார்கள். அவர்கள் அனுமதியையும் பெற்றது வால்மீகி காவியம்.

கம்பர் பிற்காலத்தவர். வால்மீகியை அனுபவித்தவர். குசலவர்களுக்கு அடுத்தபடி வால்மீகிக்கு ஏற்பட்ட இணையிலா சீடர் இவர்தான். ஆனால் சீடர் பல இடங்களில் அசல் காவியத்தை மாற்றுகிறார். குருவையும் மிஞ்சுகிறார். காரணம், இக்காலத்திலிருப்பது போன்ற பொறுமையல்ல,

Koviloor Digital Library

வால்மீகி காவியத்திடம் அவருக்கிருந்த ஊற்றம், ஈடுபாடு, பக்தி; அந்தப் பாத்திரங்கள் எதற்கும் மாசு கூடாதென்ற மனேபாவம்...இவைதான் காரணம். தவிர, தாமிருந்த காலத்துக்கு அந்த குணசித்திரங்கள் ஒத்துவராதென்ற தீர்மானமும் ஒரு காரணம். தமிழர் பண்பாட்டை ஒட்டிச் சில மாறுதல்களைச் செய்தார் கம்பநாட்டாழ்வார். அந்த மாறுதல்களில் தாரையின் குணச்சித்திரமும் ஒன்று.

லட்சுமணன் முன்னல் வந்த வால்மீகியின் தாரை எப்படி இருந்தாள்? வாலி இறந்தபின் எப்படி ஆனள்? சுக்ரீவனுடைய மனைவியான ருமையை வாலி வைத்துக் கொண்டது போல், வாலி இறந்ததும் அண்ணன் மனைவியான தாரையைச் சுக்ரீவன் வைத்துக் கொள்கிறன். அவனுடன் இரவெல்லாம் மதுபானத்திலும் மன்மதக் கிரீடையிலும் கழித்த தாரை, அந்த அவஸ்தையின் அடையாளங்களுடன் லட்சுமணன் முன்பு வருகிறள்.

ஸா ப்ரஸ்கலந்தீ மதவிஹ்வலாக்ஷி
ப்ரலம்ப காஞ்சீகுண ஹேமஸூத்ரா
ஸலக்ஷணு லக்ஷ்மண ஸந்நிதானம்
ஜகாம தாரா நமிதாங்க யஷ்டி :

தளர்ந்த நடை, துவண்ட இடை, நெகிழ்ந்த உடை, இப்படி வந்தாள் தாரை லட்சுமணன் முன்பு. இரவு முழுவதும் சம்போகத்திலிருந்ததால், 'மத விஹ்வலாக்ஷி' தூக்கமின்மையாலும் மிஞ்சிய போகத்தாலும் சிவந்தும் சோர்ந்துமிருந்தன அவள் கண்கள். ரதிலீலையால் அவள் அணிந்திருந்த பட்டுச் சேலை அவிழ்ந்து நெகிழ்ந்து கிடந்தது. அப்படி ஆடை நெகிழ்ந்ததால், அதை இழுத்துக்கட்டும் அரை நூல் மாலையும் சின்னச் சின்ன அழகிய சலங்கைகள் உள்ள பொற்சரடும் கலைந்து தொங்கின. மெல்லிய கொடி போன்ற அவள் நுண்ணிய மேனி வளைந்து கிடந்தது. 'ஸலக்ஷணு'-இந்த லக்ஷணத்துடன், 'லக்ஷ்மண ஸந்நிதானம்'-லட்சுமணனிருந்த இடத்துக்கு, 'ஜகாம' -சயனக் கிருகத்திலிருந்த தாரை

Koviloor Digital Library

போனுள். லக்ஷ்மணன் செய்த நாணொலியைக் கேட்டுப் பயந்த சுக்ரீவனே தாரையை முன்னுல் போகச் சொல்கிருன். இத்தனை காமவிகார நிலையில் சுக்ரீவன் ஆக்ஞைப்படி தாரை லட்சுமணன் முன்பு வந்தாள். இது வால்மீகியின் தாரை.

கம்பன் தாரை இருக்கும் நிலை வேறு. இலக்குவனைச் சுற்றிவிட்ட பெண்களின் கூட்டத்தில் புகுந்து நடுங்கிய மேனியுடன் லட்சுமணன் முன் வந்தாள். அவள் எப்படி இருந்தாள்? கணவனுன வாலி இறந்து விட்டதால் விதவைக் கோலத்திலிருந்தாள்.

மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம்முலைகள் பூசுக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்ருன்.

தாரை விதவையாகி விட்டதால் மங்கல அணியான தாலியை நீக்கியிருந்தாள். மற்ற மணி அணி, அதாவது இரத்தினுபரணம் முதலியவற்றையும் துறந்திருந்தாள். அவள் உடலில் சௌபாக்கியத்துக்கான ஆபரணங்கள் எதையும் காணும். 'வாசம் கொங்கு அலர் கோதை மாற்றி-நறுமண முள்ளதும், தேன் பெருகுவதுமான மாலையையும் அணிய வில்லை அவள். குங்குமப் பூவின் குழம்பையும், சந்தனக் குழம்பையும் பூசாத வெம்மையான முலைகளை, கழுத்தை நன்ருகச் சுற்றி வளைத்த சேலையால் நன்ருகப் போர்த்தி மறை தாள். இப்படி வந்த நங்கையைக் கண்ட வள்ளல்-தாரை யைப் பார்த்த லட்சுமணன், நயனங்கள் பனிப்ப நின்ருன்-தனது தாமரை இதழ்க் கண்களில் நீர் திரள நின்ருன். சோகத் திஞல் அவன் கண்கள் நீரைச் சொரிந்தன தாரையின் இந்த விதவைக் கோலத்தைப் பார்த்து.

காரணம், தாரை அவன் தாய் போலத் தோன்றிஞள். இதற்கு முன்னுல் சித்ரகூடத்தில் தன் தாயை விதவைக் கோலத்தில் கண்டான். அடுத்தபடி, அவன் காணும் விதவை

Koviloor Digital Library

தாரைதான். தாயின் நினைப்பால் கண்கள் தாரையைப் பெருக்கின.

இனையராம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த
நினைவினன் அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்றான்
வினவினட்கு எதிர் ஓர் மாற்றம் விளம்பவும் வேண்டும் என்றப்
புனைகுழலாட்கு வந்த காரியம் புகல்வது ஆனான்.

இந்தக்கோலத்தில் வந்து "வந்த காரியம் என்ன?" என்று கேட்ட தாரையை நோக்கிய லட்சுமணன், என்னை ஈன்ற இருவரும் இனையராம்-என்னைப் பெற்றெடுத்த இரு தாய்மார்களும் இப்படித்தானிருப்பார்கள்" என்று எண்ணினான். அதாவது கோசலையையும் சுமித்திரையையும் தன்னை ஈன்ற தாய்மார்களாகவே கருதினான் லட்சுமணன். அவர்களைப் போல் தாரையும் இருக்கிறாள் என்ற நினைப்பினால் (நினைப்பைக் கொண்டவனான இளைய பெருமாள்), அயர்ப்புச் சென்ற நெஞ்சின்—தளர்ச்சி மிக்க நெஞ்சினனாய், நெடிது நின்றான்—நீண்ட பொழுது ஏதும் தோன்றாமல் நின்றான். அப்படி நின்றவன், தன்னை வினவிய தாரைக்கு ஓர் எதிர் மாற்றம்—(ஒரு பதிலை) சொல்ல வேண்டுமென்ற சிந்தையால், அப்புனைகுழலாட்கு-அழகிய கூந்தலையுடைய தாரையை நோக்கிப் பேச முற்பட்டான்.

"சேனையும் யானும் தேவியைத் தேடித் தருவேனென்று கூறிய சுக்ரீவன் இராமனுக்குச் சொன்ன வார்த்தையை மறந்துவிட்டான். அவன் நிலை அறிந்து சொல்க" என்று கேட்டான் இலக்குவன்.

அதற்கு தாரை அழகாகச் சமாதானம் சொல்கிறாள் :

"சீறுவாய் அல்லை ஐய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீயலால் மற்று ஆர் உளர் அயர்ந்தா னல்லன்
வேறு வேறு உலகம் எங்கும் தூதரை விடுத்து அ எல்லை
ஊறும் ஆ நோக்கித் தாழ்த்தான் உதவி மாறுதவி உண்டோ

Koviloor Digital Library

"ஐய-ஐயனே! சிறியவர் தீமை செய்தால் ஆறுவாய் (பொறுத்துக்கொள்); மற்று நீ அலால் ஆர் உளர்-அப்படி பொறுத்துக் கொள்ளக் கூடியவர் உன்னையல்லாமல் வேறு யார் இருக்கிறார்கள்? அயர்ந்தானல்லன்-சுக்ரீவனும் சொன்ன சொல்லை மறந்தானல்லன். உலகம் எங்கும் வேறு வேறு தூதரை விடுத்து, அ எல்லை ஊறும் ஆ நோக்கி - சேனைகள் வரும் வழியை நோக்கி, தாழ்த்தான் - தாமதித்திருக்கின்றான். நீங்கள் அவனுக்குச் செய்துள்ள உதவிக்கு மாற்று உதவி என்பது ஒன்றிருக்கிறதா?" என்றாள் தாரை.

இதனால் தணிந்த கோபத்தை உடையவனை லட்சுமணனை அனுமனும் அணுகினான். அனுமன் அவன் சீற்றத்தை மேலும் தணிக்கவே சுக்ரீவனை லட்சுமணன் சந்தித்தான். அவனைக் கண்டதும் எழுந்த கோபத்தையும் அடக்கிக் கொண்டான் லட்சுமணன். சுக்ரீவன் பரிவாரங்களுடன் சென்று இராமபிரான் திருவடி வணங்கினான். பின்பு வானர சேனைகள் கிஷ்கிந்தையில் திரண்டன. நான்கு திக்குகளிலும் சீதையைத் தேடச் சேனைகளைச் சுக்ரீவன் அனுப்பினான். தெற்கேசேனையுடன் சென்ற அனுமானிடம் மட்டும் இராமபிரான் அடையாளங்களைச் சொல்லிக் கணையாழியையும் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்டு புறப்பட்ட அனுமான், வழியில் சுயம்பிரபையைக் கண்டு, அவளால் உபசரிக்கப் பட்டு, அவள்இருந்த பிலத்துவாரத்தைப் பிளக்க அவள் விண்ணுலகமடைய, அங்கிருந்து சென்ற வானர சேனை சம்பாதியிருக்குமிடத்தை அடைகிறது. சீதை சிறையிருக்கும் விவரத்தைச் சம்பாதி மூலம் அறிந்த வானரப் படை தெற்குச் சமுத்திரக் கரையை அடைய, அங்கு கடலை கடக்கப் பேருருவங் கொண்டு, அனுமான் மகேந்திர மலை மீது ஏறி நின்றான்.

(கிஷ்கிந்தா காண்டம் முற்றும்)

Koviloor Digital Library

29. இலங்கா தேவி

இராம கார்யார்த்தமாக விசுவரூபம் கொண்டு மகேந்திர மலைமீது நின்ற அனுமான் அமரர்கள் வசிக்கும் சுவர்க்க லோகத்தின் மீது கண்களை ஓட்டி, 'இதுதான் இலங்கை போலும், என்று நினைத்தான். நினைத்தவன், அங்கு சீதை இல்லாததைக் கண்டு துயரம் கொண்டான். கீழ்ப்புறம் கண் களைச் செலுத்தி இலங்கையைக் கண்டதும், இங்குதான் பிராட்டி இருக்கவேண்டும் என்று தோள் கொட்டி ஆர்ப்பரித் தான். பிறகு இரண்டு கால்களாலும் கைகளாலும் மகேந்திர மலையை ஓர் அழுத்து அழுத்தி, அமரர் உலாவும் வான வீதி யிலே எழுந்து பறந்தான், கடலுக்கு குறுக்கே. அவன் கால் களும் கைகளும் அழுந்திய வேகத்தால் மகேந்திர மலை கிடுகிடு வென்று ஆடியது. அந்த மலையின் பிலத்வாரங்களில் உறைந்த பாம்புகள் வெளியே ஓடிவந்து படங்களைப் பாறைகளில் அடித்து விஷத்தை கக்கின. பெண்யானைகள் வாலை உயர்த்திக் கொண்டு ஓடி ஆண் யானைகளை அச்சத்தால் தழுவின. மரங் கள் மலையிலிருந்து வேரைப் பிடுங்கிக்கொண்டு எழுந்து அனுமானுடன் சிறிது தூரம் சென்று, பிறகு வேகமிழந்து கடலில் வீழ்ந்தன.

இப்படி வானவீதியில் மகா வேகத்துடன் பாய்ந்து சென்ற அனுமானை வானவர் பார்த்துத் தங்களுக்கு விடிமோட்சம் வந்ததென்று மகிழ்ந்தனர். அப்படிச் செல்லும் வாயுபுத்ரன் சிறிது ஆசுவாசம் செய்து தங்கட்டுமென்று மைநாக பர்வதம் கடலினின்று எழுந்தது. அனுமான் அதைத் தன் மார்பினால் தள்ளிவிட்டு அப்புறம் சென்றதால் மைநாகபர்வதம் மானிட உருக்கொண்டு அனுமானைத் தொடர்ந்து, "ஐயனே! உன் தந்தை வாயுபகவான் எனக்கு முற்காலத்தில் உதவினான். அதற்குக் கைம்மாறு செய்யவே வந்தேன்" எனக்கூறியதும் அனுமான் அம்மலைக்கு உபசார மொழிகள் கூறி மேலே சென்றான்.

Koviloor Digital Library

இப்படிச் சென்ற அனுமானது பலத்தை ஆராய அமரர் எண்ணங்கொண்டு, சுரசை என்ற தேவஸ்திரீயை அனுப்பினர். அவளும் அரக்கி வடிவங்கொண்டு, அனுமானை ஆகாய வீதியில் வழிமறித்துச் சொன்னாள் : "வலிமையுடையவனே! பசித் தீ என்னைத் தீய்க்கின்றது. அதைத் தீர்க்கவே நீ என்னை அணுகிவந்தாய் போலிருக்கிறது! இன்று. நீ என்னிடமிருந்து தப்பிச் செல்வதும் முடியாது" என்று கூறினான்.

அனுமான் அவளை நோக்கி ,"பெண்ணே! நீ பசியினால் வருந்தினால், நான் ராமகாரியம் முடிந்து திரும்பி வரும்போது உனக்கு உணவாகிறேன். வழியை விடு" என்று அனுதாபத்துடன் சொன்னான்.

சுரசை அதற்கு மசியவில்லை. "உன்னைத் தின்பேன்" என்று மிரட்டினாள். "சாமர்த்தியமிருந்தால் விழுங்கு" என்று அனுமான் சொல்ல அவள் தனது வாயைப் பெரியதாகத் திறந்தாள். அனுமான் மேலும் பேருருவங் கொண்டான் அவள் வாய் அவனைவிடப் பெரியதாயிற்று. அனுமான் மேலும் பெருகினான். அவள் அதற்கு மேலும் பெருகி வாயைத் திறந்தாள். அனுமான் திடீரெனச் சிறிய வடிவமெடுத்து அவள் வாயில் புகுந்து வயிற்றுக்குள் பாய்ந்து மூச்சுவிடும் நேரத்திற்குள் மீண்டும் வெளியே வந்துவிட்டான். தேவர்கள் அதைக் கண்டு ஆர்ப்பரித்தனர். சுரசையும் தனது உண்மை வடிவங் கொண்டு அவனை வாழ்த்தி வழியனுப்பினாள்.

மேலும் சென்ற அனுமானைத் தடுக்க அடுத்தபடியாக அங்காரதாரை என்ற அரக்கி கடலிருந்து எழுந்திருந்தாள். இன்னொரு சமுத்திரம் போல் கறுத்த உருவத்துடன் தோன்றிய அங்காரதாரை "என்னைக் கடந்து செல்வது யார்" என்று கூறிக்கொண்டு எழுந்திருந்தாள். காற்சிலம்புகள் அலைகள் போல் ஒலிக்க திருமாலைத் தேடிய மதுகைடவர்போல் எழுந்தவளும், நிழலைப் பிடித்து நிறுத்த வல்லவளாதலால் சாயாக்கிருகிணி என்று பெயர் பெற்றவளுமான அந்த அரக்கி, அனுமான் நிழலைப் பிடித்து அவனை நிறுத்தினாள். "என்னைப் பெண்பால்

Koviloor Digital Library

என்று கருதாதே. கருதினல் உயிர் விடுவது திண்ணம். என் கையிலகப்பட்டவன் யமனே ஆனாலும் தப்ப முடியாது'' என்ருள் சாயாக்கிருகிணி. அப்படிச் சொல்லி வாயைத் திறந்த அங்காரதாரையின் வாயுள் புகுந்து வயிற்றைப் பிளந்து கொண்டு அனுமான் வெளியே வந்தான். அவள் குடல்கள் அவன் கழுத்திலும் தோளிலும் விளங்கின. பாம்புகளைக் கவ்விக் கொண்டு பறக்கும் கருடனைப் போல் அப்பொழுது அனுமான் விளங்கினன். அவள் குடல் பூமியில் தொங்குமாறு வானத்திலே எழுந்த அனுமானுக்குக் கம்பன் மற்ருேர் அழகிய உவமையும் கூறுகிருன்.

மாகால் அசைப்ப வடம் மண்ணின் உற
ஆகாயம் உற்ற கதலிக்கு உவமை ஆனன்.

மாகால் அசைப்ப- பெரும் காற்று வீசியதால், வடம் மண்ணில் உற-வாலோடு ஆகாயத்தில் பறந்த, கதலிக்கு-காற்ருடிக்கு, உவமை ஆனன் - உவமையாக விளங்கினன்.

ஆகாயத்தில் வேகமாகப் போனதால் சாயாகிருகிணியின் குடல் கீழே தொங்கப் பறந்த அனுமான் சிறுவர் கயிறு பிடித்துத் பூமியிலிருந்து விடுகின்ற காற்ருடியைப் போல் விளங்கினன் என்று உவமை சொல்கிருன் கவி. இத்தகைய ஓர் உவமையைத் தமிழ்நாட்டில் பிறந்த கம்பனல்தான் கூற முடியும்!

இவ்வாறு பல தடைகளையும் மீறி, இலங்கைபால் வந்த அனுமான், இலங்கையிலிருந்த தீவில் சற்று ஒதுங்கியிருந்த பவளமலையில் இறங்கி, இலங்கையின் அழகைப் பார்த்துப் பிரமித்தான். மாடமாளிகைகளுடனும் கூடகோபுரங் களுடனும் விளங்கிய அந்த இலங்கையின் மகுடங்கள் ஆகாயத்தை எட்டிக் கொண்டிருந்தன. மாளிகைகளின் மேல் மாடங்களில் உலாவிய அரக்கியரின் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பட்ட கால்கள் சிவந்த நிறமுடையதாய் விளங்கின. அந்நகரின் பெரும் புரவிச்சேனையையும் பரப்பையும் கண்ட

Koviloor Digital Library

அனுமான் பெரிதும் வியந்தான். அவ்விலங்கையின் பொன்னிற மதிலின் ஒளியையும் உயரத்தையும்கண்ட அனுமான், இதைத் தாண்டி சூரியனும் செல்ல முடியாது என்பதை உணர்ந்தான். அங்கு அரக்கர் அரக்கியரிடம் செய்த காதல் விளையாட்டுகளை யும் அனுமான் கண்டான். அரக்கியரின் சிவந்த வாயிலிருந்து அமுதநீரை அரக்கர் பருகுதலையும் கண்டான்.

எறித்த குங்குமத்து இளமுலை எழுதிய தொயில்கள்
கறுத்த மேனியில் பொலிந்தன ஊடலில் கனன்ற
மறிக்கண் நோக்கியர் மலரடி மஞ்சுளப் பஞ்சி
குறித்த கோலங்கள் பொலிந்தன அரக்கர்தம் குஞ்சி

அந்த நகரத்து அரக்கிகளை அரக்கர் தழுவியதால், அவ்விள மங்கையரின் இள முலைகள் கறுத்த மேனியில் பதிந்து குங்குமக் குழம்பாய் தொயில்களை (சித்திரங்களை) எழுதின. ஊடலில் கனன்ற மறிக்கண் நோக்கியர்-ஊடலின் விளைவாக கொதித்த மான்விழி மங்கையர், அரக்கர்களைக் காலால் உதைக்கவே, அவர்கள் மலரடிகளில் இருந்த செம்பஞ்சுக் குழம்புகள் அரக்கர்களின் தலைகளில் கோலமிட்டன.

இப்படி விளையாடிய அரக்கரையும் அரக்கிகளையும் இலங் கையின் இணையிலாச் செல்வத்தையும் சுகத்தையும் களியாட் டங்களையும் கண்ட அனுமான், அம்மாநகரத்தின் மதிலை அணுகி, அதன்மீது தாவி உள்ளே புகுந்துவிட முயன்றான்.

அவனை அந்த இலங்கையின் காவல் தேவியாகிய இலங் கிணி தடுத்தாள்.

எட்டுத் தோளாள் நாலுமுகத்தாள் உலகு ஏழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள் சுழல் கண்ணாள்
முட்டிப் பேரின் மூவுலகத்தை முதலோடும்
கட்டிச் சீறும் காவல் வலத்தாள் கறை இல்லாள்.

அந்த இலங்காதேவி எட்டுத் தோள்களையும், நான்கு முகங்களையும் உடையவள். ஏழு உலகங்களையும் தொட்டு மீளுகின்ற ஒளிபொருந்திய நிறத்தை உடையவள். முட்டிப்

Koviloor Digital Library

போரின்—பகைத்து மோதி வந்தால், மூன்று உலகத்தோரையும் அடியோடு கட்டிவிட்டு, அப்பொழுதும் சினம் குறையாமல் சீறிக் காவல் செய்வதற்கேற்ற வலிமை உள்ளவள். கமை இல்லாள் - பொறுமை என்பது சிறிதும் இல்லாதவள்.

அப்பேர்ப்பட்ட இலங்கா, தேவி ''இம்மதிலைக் கடக்க முயலாதே, போய்விடு'' என்று அதட்டினுள். அதற்கு அனுமான் மிகப் பணிவுடன் பதில் சொன்னுன். "சிறியவனுகிய நான் உள்ளே சென்ருல், உனக்கு என்ன நஷ்டம்?" என்று வினவினுன். அதனுல் வெகுண்ட இலங்கிணி, ''நான் போ என்று சொன்னுல் போகாமல் பதில் சொல்லிக் கொண்டு நிற்கிருயே? நீ யாரடா? சிவபிரானும் இந்த ஊருக்குள் வர அஞ்சுவாரே! அப்படியிருக்க நீ உட்புகும் ஊரா இது?'' என்று கூறி, இடியிடி என நகைத்தாள்.

அதைக் கேட்ட அனுமானும் நகைத்தான். அதனுல் வெகுண்ட இலங்கிணி தனது சூலாயுதத்தை அனுமான்மீது எறிந்தாள். அதைக் கரங்களால் பிடித்து ஒடித்த அனுமான் அவளது மற்ற ஆயுதங்களையும் பறித்து எறிந்தான். அவள் அப்பொழுதும் விடாது, கைகளால் அனுமானை அடிக்க வரவே, அனுமான் அவள் கைகளை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, இன்னெரு கையால் அவள் மார்பில் அறைந்தான். அந்த அறை தாளமாட்டாமல் விழுந்த இலங்கிணி எழுந்தாள். சில வார்த்தைகளைச் சொல்லவும் முற்பட்டாள்: ''ஐயனே கேள். இந்த ஊரை நான் பிரமனது கட்டளையால் காத்து வருகிறேன். 'இதனை எத்தனை நாள் காப்பேன்?' என்று வினவியதற்கு, பிரும்மா சொன்னுர்:

...முரண்வலி குரங்கு ஒன்று உன்னைக்
கைத்தலம் அதனுல் தீண்டிக்
காய்ந்த அன்று என்னைக் காண்டி
சித்திர நகரம் பின்னைச்
சிதைவது திண்ணம் என்ருன்.

''இலங்காதேவி! முரண்ட வலிமையுடைய குரங்கு ஒன்று கைத்தலத்தால் உன்னைத் தீண்டி வருத்தும் நாளில், நீ என்னை

Koviloor Digital Library

வந்து காண்பாய். பிறகு அந்தச் சித்திரநகரம் சிதைந்து போவது திண்ணம் என்று பிரமன் கூறினன்'' என்ருள் இலங்கினி. ''இனி நீ உள்ளே செல். இந்த நகரத்துக்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது'' என்றும் சொல்லி, அனுமானை வணங்கிவிட்டு அவள் பிரும்மலோகம் சென்ருள். அனுமான் சிறிய வடிவங்கொண்டு இலங்கையில் புகுந்தான். பல இடங்களைப் பார்த்துக்கொண்டு மந்தோதரி இருக்குமிடம் வந்தான்.

30. மந்தோதரி

சூட்சும சரீரத்துடன் சிதையைத் தேடிக்கொண்டு, அரக்கியர் வீதியையும், சித்தமாதர் வீதியையும், வித்யாதர மகளிர் வீதியையும் கடந்து, கடைசியாக இராவணன் பட்ட மகிஷியான மந்தோதரியின் மாளிகையைக் கண்டதும், அனு மான் பிரமித்து நின்முன். அந்த மாளிகையில் உறைபவளும், கற்புக்கரசியாதலால், பிராட்டியை இராவணன் கொணர்ந்து ஒளித்துவைத்திருந்தால் அவள் இந்த மாளிகையில்தானிருக்க வேண்டும் என்று அனுமான் முடிவுகட்டினன். அந்த மாளிகையைத் ''தூய மாளிகை'' என்று கம்பன் வர்ணிக்கிருன்.

மயன் மகளும் இராவண பத்தினியுமான மந்தோதரியின் அந்த மாளிகையைப் பார்த்த அனுமான், தான் வந்த காரியம் பூர்த்தியாயிற்று என்று நினைத்தான்.

கண்டு கண்ணெடு கருத்தொடு கடாவினன்
காரணம் கடைநின்றது
உண்டு வேருெரு சிறப்பு எங்கள் நாயகற்கு
உயிரினும் உரியாளைக்
கொண்டு போந்தவன் வைத்ததுஓர் உறையுள்கொல்
குலமணி மனைக்கெல்லாம்
விண்டுவின் தடமார்பினில் மணி ஒத்தது
இது என வியப்புற்ருன்.

Koviloor Digital Library

அந்த மாளிகையைக் கண்ணைக் கொண்டு பார்த்து, கருத்தொடு கடாவினன் (மனதினுல் ஆராய்ந்தான்). அப்படி ஆராய்ந்த அளவில் ''காரணம் கடை நின்றது''-இங்கு நான் வந்த காரணம், அதாவது பிராட்டியைத் தேடுதல் பூர்த்தியாகி விட்டது போலும் என்று எண்ணினன். ''ஏனென்ருல், இந்த மாளிகைக்குத் தனிச்சிறப்பு ஒன்று இருக்கிறது. எங்கள் நாயகஞன இராமபிரானுக்கு உயிரினும் உயிராகிய சீதையைக் கொண்டு வைத்துள்ள இடம் இது. இந்த மாளிகை ''விண்டுவின் தடமார்பின் மணியொத்தது''—திருமாலின் மார்பில் பளிச்சிடும் கௌத்துபமென்ற இரத்தினம் போலிருக்கிறது'' என்று தன்னுள் சொல்லிக்கொண்டே அனுமான், அம் மாளிகையுள் பிரவேசித்தான். அங்கு மந்தோதரி படுத்திருந்த நிலை கண்டு பரவசப்பட்டான்.

பலவித இரத்தின வேலைப்பாடுகள் கொண்ட அம்சதூளிகா மஞ்சத்தின் மேல் படுத்திருந்த மந்தோதரியின் அழகு இணையற்றதாயிருந்தது.

அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி
ஆகியர் மலர்க்காமன்
சரம்பெய் தூணிபோல் தளிர்அடி தாம்தொட
சாமரை பணிமாறக்
கரும்பையும் சுவை கைப்பித்த சொல்லியர்
காமரம் கனியாழில்
நரம்பின் இன்னிசை செவிபுக நாசியில்
கற்பக விரைநாற

இந்திராணியின் அழகையும் தோற்கடித்த எழிலை உடைய மந்தோதரியின், 'காமன் மலர்ச் சரங்களடங்கிய அம்பருத் தூணிபோலும், தளிர்போல் மென்மையாகவுமிருந்த' கால்களை அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய தேவமாதர்கள் வருடினர்; அவளுக்குச் சாமரம் வீசினர். இன்னும் சில தேவமாதர் ''காமரம் கனியாழின் நரம்பில் இன்னிசை செவிபுக''- நாதமினிய வீணையினது நரம்புகளைத் தடவி

Koviloor Digital Library

அவள் செவிகளுக்கு இன்னிசை புகட்டினர். மந்தோதரியின் நாசிகளில் நறுமணம் புகுவதற்காக, மற்றும் சில தேவமாதர் அவள் முகத்துக்கு நேரே கற்பகம் முதலான மலர்களை மெல்ல ஆட்டிக்கொண்டு நின்றனர்.

இத்தனை வைபோகத்துடன் படுத்துக்கொண்டிருந்த மந்தோதரியைப் பார்த்த அனுமான், அவளைச் சீதையென்று மயங்கி வருந்தினன். அப்படி மயங்கினதால் ஏற்பட்ட கோபாக்னி அவன் உடலைத் தகிக்க, சோகித்தான் முதலில். மீண்டும் அவளை நோக்கி ஆராய்ந்தபின், இவள் சீதையா யிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான்.

"என்ன பைத்தியக்காரத்தனம் செய்துவிட்டேன்? பிராட்டி மனித ரூபமாயிருப்பாள். இவளோ மாறுபட்டிருக்கிறள். இவள் யட்ச ஸ்திரீயோ அல்லது ராட்சஸ ஸ்திரீயோ என்று சந்தேகப்படும்படியாக இருக்கிறள். தவிர,

கான் உயர்த்த தார் இராமன்மேல் நோக்கிய
காதல் காரிகையார்க்கு
மீன் உயர்த்தவன் மருங்குதான் மீளுமோ
நினைந்தது மிகை என்றுன்.

காரிகையார்க்கு மான் உயர்த்த தார் இராமன் மேல் நோக்கிய காதல் - நறுமணமுள்ள மலர் மாலைகளைச் சூடும் வடிவழகைக் கண்ணுற்றுக் காதல் கொள்ளும் பெண்களுக்கு, மீன் கொடியை உயர எடுத்தவனுன மன்மதனே வந்தாலும் மனம் இராமனிடத்திலிருந்து மீளுமோ? சே! நான் நினைத்தது மிகை; மீட்டும் இவளைச் சீதையென்று நினைத்தது பெரும் குற்றம் என்று சொல்லிக் கொண்டான் வாயு புத்திரன்.

இந்தத் தெளிவுடன் மந்தோதரியின் அங்கலட்சணங்களையும் நோக்கினுன். "இவளுக்கு உத்தம ஸ்திரீகளின் லட்சணங்

Koviloor Digital Library

கள் எல்லாமிருந்தாலும், இவளுக்குச் சீக்கிரம் நேரவிருக்கும் தீங்கைக் குறிக்கும் லட்சணங்களும் இருக்கின்றன'' என்று தீர்மானித்தான் அனுமான்.

மலர்க் கருங்குழல் சோர்ந்து வாய் வெரீஇச் சில
மாற்றங்கள் பறைகின்ருள்
உலக்கு இங்கு இவள் கணவனும் அழிவும் இவ்
வியநகர்க்கு உளதென்ருன்.

''மலர்களைச் சூடிய இவள் கருங்குழல் அவிழ்ந்து சரிந்து கிடக்கின்றது. இவள் வாய் சில மாறுபட்ட வார்த்தைகளை உறக்கத்தில் உதிர்க்கின்றது. இவள் கணவனும் விரைவில் அழிவான். இந்நகரத்துக்கும் அழிவு உள்ளது'' என்று, அவள் படுத்திருந்த நிலையிலிருந்தும், நித்திரையில் அவள் உதிர்த்த சொற்களிலிருந்தும் அனுமான் தீர்மானித்தான்.

அங்கிருந்து புறப்பட்ட மாருதி, இராவணனுடைய மாளிகையில் புகுந்து, அங்கு நிகழ்ந்த உற்பாதங்களைக் கண்டு, ''ஐயோ! இப்பெரு நகரின் செல்வமெல்லாம் போய்விடுமே'' என்று வருந்தினுன். ஆயிரக்கணக்கான தேவமாதர்கள் கவரி வீசுதலினுல் அருகிலிருந்த கற்பகத்தருவின் மலர்களிலிருந்த தேன் இராவணன் மார்பில் சொட்டியுங்கூடக் காமாவஸ்தை தீராதவனுயிருந்த ராக்ஷஸாதிபதியைக் கண்ட அனுமான், பெருங்கோபம் கொண்டான். இராவணனை அங்கேயே அழித்துவிடவும் துடித்தான். இருந்தாலும், தான் வந்த காரியத்தை உத்தேசித்து இராவணக்கிருகத்தை விட்டு வெளியே வந்து சிந்தை குலைந்து நின்ருன். சீதையை எங்கு தேடுவேன் என்று துயரத்துடனிருந்த அனுமான் கண்ணில் அசோகவனம் தென்பட்டது. அதை நோக்கிச் சென்ருன், மகாவீரனும் மேதையுமான அனுமான்.

இராவணன் பள்ளியறையைப்பற்றியும், மந்தோதரியின் நிலை பற்றியும் வால்மீகி பெரிதாக வர்ணிப்பதையும் சிறிது காண்போம்.

Koviloor Digital Library

இராவணன் பள்ளியறையைக் கண்ட அனுமான் ''குபேர னுடைய ஐசுவரியமே இங்கு வந்து விட்டதோ? அல்லது மஹேந்திரனுடைய வைபவமே இங்கு வந்து விட்டாதோ? அல்லது சுவர்ணம்போல் பளபளக்கிற தேக காந்தியோடு உலகமனைத்தையும் தாங்குகின்ற மகாவிஷ்ணுவையும் தாங்கும் கருடபகவானுடைய தேஜஸே இங்கு வந்துவிட்டதோ?'' என்று வியந்து நின்றான். எந்தப் புஷ்பக விமானத்தைக் குபேர னிடமிருந்து இராவணன் பறித்தானோ, அந்த புஷ்பக விமா னத்தின் நடுவிலிருக்கிற ராக்ஷஸ ராஜவான ராவணன் மாளி கையைப் பார்த்தான் ராமதூதன். அந்த மாளிகையிலிருந்து எழுந்த நறுமணம், பிரியமான பந்துக்கள் அதிதியை வர வேற்பது போல் அனுமானை உள்ளே அழைத்தது. அந்த மாளி கையில் நுழைந்த அனுமான் இராவணனுடைய விசேஷமான செல்வச் சிறப்பைக் கண்டான். மிக அழகான பெண்களால் சூழப்பட்டு நித்திரையிலிருந்த ராக்ஷஸாதிபதி நக்ஷத்திரத் தினால் சூழப்பட்ட சந்திரன்போல் பிரகாசித்தான். அவனைச் சுற்றிப் படுத்துக்கிடந்த ஸ்திரீகள் சிலர் அவனுடன் கூடிக் களித்த காரணத்தால் திலகமழிந்தும், சேலை நெகிழ்ந்தும் காட்சியளித்தார்கள். சில ஸ்திரீகளின் முத்தாரங்கள் தேகத்தைச் சுற்றி கிடந்தன. இன்னும் சில ஸ்திரீகள் ராவண சம்போகத்தால் களைத்துப் பெருங்காட்டில் யானையால் மிதித்துத் துவைக்கப்பட்டும் புஷ்பித்துமிருக்கிற கொடிகளைப் போல் காணப்பட்டனர். சில ஸ்திரீகளுடைய சேலை நுனிகள் அவர்கள் மூச்சுக் காற்றினால் ஆடின. அந்தப் பள்ளியறையின் தங்கத் தூண்களிலிருந்த விளக்குகள் அந்த ஸ்திரீகளை உற்றுப் பார்ப்பவை போல் சலனமின்றி இருந்தன. இராவணனுடைய ஐசுவரியத்தையும் பிரபாவத்தையும் பார்த்த அனுமான், 'ஐயோ! இப்பேர்ப்பட்டவன் சீதாபஹரணமென்ற ஒரு குற்றத் தால் நாசமாகப் போகிறானே'' என்று துக்கத்தின் வசப் பட்டான்.

அப்பேர்ப்பட்ட இராவணன் கிருகத்தில் எல்லா ஸ்திரீகளை யும் தாண்டி, அப்பாலிருந்த ஒரு பஞ்சணையைப் பார்த்தான்.

Koviloor Digital Library

அதில் படுத்திருந்த மந்தோரியின் ரூபலாவண்யத்தைப் பார்த்து, இவள்தான் சீதையாயிருக்க வேண்டுமென்று தீர் மானித்தான். ஏகாந்தத்தில் மெத்தென்ற பஞ்சணைமீது கண் வளர்கின்ற 'அந்த ஸ்திரியானவள் பாதாதிகேச பரியந்தம் வஜ்ர வைடூரிய மரகத மாணிக்க முத்துக்கள் பதித்த திவ்யா பரணங்களை அணிந்திருந்தாள். இராவண பத்தினியும் பட்ட மகிஷியுமான மந்தோதரியைக் கண்ட அனுமான், வந்த காரியம் முடிந்ததென்று அளவுக்கு மீறிய சந்தோஷத்தை அடைந்தான்.

அளவுக்கு மீறிய சந்தோஷமோ துக்கமோ ஏற்படும் போது, எப்பேர்ப்பட்ட மகானும் சுயநிலை இழக்கிருன். அப்படிச் சுயநிலை இழந்த அனுமான் குரங்குகளுக்கு சுபாவ மான பல சேஷ்டைகளையும் செய்தான்.

ஆஸ்போடயாமாஸ சுசும்ப புச்சம்
நநந்த சிக்ரீட ஜகௌ ஜகாம
ஸ்தம்பான் ஆரோஹன் நிபபாத பூமௌ
நிதர்சயன் ஸ்வாம் ப்ரக்ருதிம் கபீனம்

அனுமான் சந்தோஷ மிகுதியால் தனது தோள்களைத் தட்டிக் கொண்டான். வாலை எடுத்து முத்தமிட்டுக் கொண் டான். கர்ணம் அடித்தான். அப்புறமும் இப்புறமும் நடந்தான். பக்கத்திலிருந்து தூண்மீது ஏறித் தொப்பென்று குதித்தான். இப்படிக் குரங்குகளுக்குள்ள பல சேஷ்டைகளையும் காட்டினுன். பிறகு மதி தெளிந்தான் மாருதி. "சீதை இராவணக் கிருகத் தில் எப்படி இருப்பாள்?" என்று தன்னை நொந்து கொண் டான். அவள் சீதையில்லை என்பதை அறிந்து வெளியே வந் தான். அசோகவனத்தைக் கண்டான். இங்காவது சீதை இருக்க வேண்டுமென்று எல்லாத் தெய்வங்களையும் தொழுது அசோகவனத்தை நோக்கிச் சென்ருன்.

Koviloor Digital Library

31. அசோகவனத்தில் சீதை

அசோகவனத்தை நாடிச் சென்ற அனுமான், "சீதையை நான் இங்கு காணக்கூடும். கண்டால் என் துயரெல்லாம் நீங்கும். இங்கு சீதை இல்லாவிட்டால் இங்கிருந்து திரும்ப வேண்டியதுதான். அப்படித் திரும்பிச் சென்ருல், சுக்ரீவனே அடைந்து துன்பத்துக்குள்ளாவதைவிட, இந்த இலங்கையை அழித்துவிட்டுப் பிறகு உயிரை விடுவதே மேல்" என்று எண்ணிக் கொண்டே, அசோகவனத்தில் நுழைந்தான்.

அங்கே வலிய இடையுள்ள அரக்கியர் வாளேந்தி அச்ச முறுத்தி வருத்த, மெல்லிய இடையுள்ள சீதை மிகவும் இளைத்தவளாகக் காணப்பட்டாள். அந்த நிலையில், அவள் ஒரு துளிநீர்கூட மேல் விழாத சஞ்சீவி மருந்தைப் போலத் தோன்றினுள்.

ராமனை விட்டுப் பிரிந்ததனுல் சீதையும் கண்ணுறக்க மின்றி, நீராட்டமின்றி, மேனிநிறம் மழுங்கி, அரக்கியர் கூட்டத்தின் நடுவே புலிக்குழாத்து நடுவே அகப்பட்ட மானைப் போல நடுங்கி நின்ருள்.

விழுதல் விம்முதல் மெய்யுறு
வெதும்புதல் வெருவல்
எழுதல், ஏங்குதல், இரங்குதல்
இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல்,
துயர்உழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றி மற்று அயல் ஒன்றும்
செய்குவது அறியாள்.

சீதாப்பிராட்டி ராமனை எண்ணி, அவனிருந்த திசையை நோக்கி வணங்குதலும், கீழே விழுதலும், விம்முதலும், உடம்பு மிகவும் வெம்மை கொள்ளுவதும், அஞ்சுதலும், எழுந்

Koviloor Digital Library

திருத்தலும், ஏங்குதலும், பரிதவித்தலும், சோர்தலும், துளங்குதலும் (நடுங்குதலும்), துயர் உழந்து (துன்பத்தால் வருந்தி) பெருமூச்சு விடுதலும், அழுதலும், அன்றி மற்று அயல் ஒன்றும் (வேறு யாதொன்றும்) செய்வதறியாதிருந்தாள்.

ராமனைப் பிரிந்த பிராட்டி, அவனுடைய உருவத்துக்குப் போலியான கார்மேகம் அஞ்சனம் இவற்றைக் கண்டபோது, தன் கணவனை எண்ணிக் கண்ணீர் சொரிந்தாள்.

கமையினுள் திருமுகத்து அயல் கதுப்பு உறக் கவ்விச்
சுமை உடைக் கற்றை நிலத்திடைக் கிடந்த தூ மதியை
அமைய வாயில் பெய்து உமிழ்கின்ற அயில்எயிறு அரவின்
குமை உற திரண்ட ஒரு சடை ஆகிய குழலாள்.

கமையினுள்-பொறுமையுடைய சீதை, திருமுகத்து அயல்-அழகிய முகத்தின் பக்கங்களில், கதுப்பு-இரு கன்னங்களையும், உறக்கவ்வி-நன்றாகப் பற்றி, சுமை உடை-பாரத்தை உடைய, கற்றை-மயிர்த்தொகுதி, நிலத்திடை கிடந்த-பூமியில் பொருந்திய, தூமதியை-தூய்மையான முழுச் சந்திரனை, அடைய-நன்றாக அடங்கும்படி, வாயில் பெய்து-வாயில் உட்கொண்டு, உமிழ்கின்ற-மீண்டும் வெளியே விடுகின்ற, அயில் எயிறு அரவின்-கூர்மையான பற்களையுடைய ராகு எனும் கரும் பாம்பின் தோற்றம் கொண்டு, குமைஉற திரண்டு-நெருக்கமாக ஒன்றுகூடி, ஒரு சடை ஆகிய-ஒரே சடையாகத் திரிக்கப் பட்டதுமான, குழலாள்-கூந்தலை உடையவள்.

"சீதையின் தலைக்குழல் நன்றாக இழுத்த ஒரே பின்னலாகப் பின்னப்பட்டிருந்ததால், குழலின் கருமையும், முகத்தில் மென்மையும் சேர்ந்து சந்திரனை ராகு விழுங்கி உமிழ்வது போன்ற தோற்றத்தை அளித்தது" என்று கவி உவமை சொல்கிறான்.

ஒரே தலைப்பின்னலுடனும், அழுக்கடைந்த ஒரே ஆடையுடனும் காட்சியளித்த சீதை, பாற்கடலினின்றும் தோன்றிய

Koviloor Digital Library

சித்திரப்பதுமை, புகை ஏறியதுபோல் காட்சி அளித்தாள். அத்தருணத்தில் சிதை எண்ணுவாள்:

என்னை நாயகன் இளவலை
எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு அறிவிலர்
எனத் துறந்தானே
முன்னை ஊழ்வினை முடிந்ததோ
என்று என்று முறையால்
பன்னவாய் மலர்ந்து உணர்வு தேய்ந்து
ஆர்உயிர் பதைப்பாள்

"என்னுடைய நாயகனான ராமபிரான், முன்வினையால் நான் சிறிதும் யோசிக்காமல் இளையவரான லட்சுமணனைப் பற்றிச் சொன்ன வாத்தைகளைக் கேட்டு 'இவள் அறிவில்லாதவள்' என்று என்னைத் துறந்து விட்டானே? நான் முற்பிறப்பில் செய்த வினையினால் இப்படி நேர்ந்து விட்டதோ? என்று பலவகையாக வாய் உலர்ந்து (நா வறண்டு), உணர்வு தேய்ந்து (அறிவு சோர்ந்து) ஆர் உயிர் பதைப்பாள் (அரிய உயிர் துடிப்பாள்.)

இராமன் என்னை வந்து மீட்காமல் இருக்கக் காரணம் ராட்சதர்கள் மனிதரைத் தினபார்களாகையால், சீதையை இராவணன் தின்று விட்டிருப்பான் என்ற நினைப்பாயிருக்குமோ என்றும் எண்ணினாள். இப்படிச் சீதை பல எண்ண, சுற்றிக் காவல் புரிந்த அரக்கியர் நித்திரை கொண்டனர். திரிசடை ஒருத்தி மட்டும் விழித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது சிதை திரிசடையிடம் தனக்கு நேர்ந்த நற்சகுனங்களை எடுத்துச் சொல்லலானாள். 'திரிசடை! எனது இடது புருவம் இடக்கண் இவை துடிக்கின்றன. ஆகையால் எனக்கினியேனும் நல்ல காலம் பிறக்குமோ? அல்லது ஆசை விளைவித்துப் பிறகு ஏமாற்றித் துன்பத்தை அதிகமாக்குமோ? தெரியவில்லையே!" என்றாள். "முன்பு இராமபிரான் மிதிலைக்கு வந்தபோது இப்படியே என் புருவமும் தோளும் துடித்

Koviloor Digital Library

தன. அப்பொழுது நல்லது விளைந்தது. அப்படியே இப்பொழுதும் விளையுமோ?'' என்றும் வினவினாள்.

இதற்கு மறு உத்தரம் சொன்னாள் திரிசடை: ''அம்மா! உனக்கு உண்டான மங்கலக் குறிகள் இவை. மிகவும் நன்மை தருவன. உன் துணைவரான கணவனை நீ சீக்கிரம் சேர்தல் நிச்சயம். அதுவல்லாமலும் நான் சொல்லுவதை மேலும் கேள்'' என்று இயம்பினாள் திரிசடை.

உன்நிறம் பசப்பு உற உயிர் உயிர்ப்பு உற
இன்னிலத் தேன் இசை இனிய நண்பினன்
மின்னெறு மருங்குலாய் செவியில் மெல்லெனப்
பொன்னிறத் தும்பி வந்து ஊதிப் போயதால்

''மின்னல் போன்ற இடை உடையவளே! உனது திருமேனியின் நிறம் பசுமை பெறும்படியும், உயிர் பிழைக்கும்படியும் பொன்னிறத்தையுடைய வண்டு ஒன்று என்னுடைய செவியில் இனிமையான இசை பாடிச் சென்றது'' என்றாள் திரிசடை.

''இதிலிருந்து உனது பிராணநாதன் அனுப்பிய தூதுவனொருவன் இங்கு வந்து சேர்வான் என்பது உறுதி. தவிர நான் ஒரு கனவும் கண்டேன்; அதையும் கேள்'' என்று மேலும் சொல்லுவாள்:

எண்ணெய் பொன் முடிதொறும் இழிகி ஈறுஇலாத்
திண்நெடும் கழுதை பேய் பூண்ட தேரின் மேல்
அண்ணல் அவ் இராவணன் அரத்த ஆடையன்
நண்ணினன் தென்புலம் நவையில் கற்பினாய்.

''குற்றமில்லாத கற்பையுடையவளே! அண்ணல் ராவணன் அழகிய பத்துத் தலைகளிலும் எண்ணெயை இழிகி (தேய்த்துக்கொண்டு), ஈறுஇலா -அளவில்லாத, திண் நெடும் கழுதை-வலிய பெரிய கழுதைகளும், பேய்களும் பூட்டப்பட்ட தேரின்மேல், சிவந்த வஸ்திரத்தை உடுத்துக்கொண்டவனாய்.

Koviloor Digital Library

தெற்கு நோக்கிச் சென்றான். இப்படி இன்னும் பல உற்பாதங்களையும் கண்டேன் நான்.'' மேலும் தொடர்ந்தாள் திரிசடை, "இவை தவிர இந்த இலங்கையின் மதில்களும் எரியக் கண்டேன். தோரணங்களும் எரியக் கண்டேன். அந்தணர் வேத மந்திரங்களைக் கொண்டு ஜபித்த பூர்ண கும்பங்களிலுள்ள புனித ஜலம் கள்ளாக மாறிப் பொங்கி வழியக் கண்டேன்...... ராவணன் மனைவியும் மயன் மகளுமான மந்தோதரியின் குழல் விரிந்து எரிந்து கருகுவதைக் கண்டேன்.''

இப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கையில், துயில் நீங்கிய அரக்கியர் சீதையைச் சூழ்ந்து விரட்டலாயினர். அப்பொழுது சீதை வருந்தினாள். அப்பொழுது அனுமானும் அங்கிருந்த மரத்தின்மீது ஏறிக்கொண்டான். அப்பொழுதே சீதையைக் கண்ட அனுமான் இவள்தான் பிராட்டி என்று தீர்மானித்தான். "இவளது வடிவும் நல்ல இலக்கணங்கள் யாவும் இராமபிரான் கூறியபடியே இருக்கின்றன. இவளை ராவணன் கொண்டு வைத்ததற்குக் காரணம் அவன் உயிர் இழப்பதற்குத்தான். சந்தேகமில்லை; ஸ்ரீராமர் ஆதிசேஷ சயனத்திலிருந்து இறங்கிவந்த மகாவிஷ்ணுதான். இவள் கமலச் செல்வியான மகாலட்சுமிதான்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் அனுமான். "இந்தச் சீதை தோன்றியதால் உயர்குடிப் பிறப்பும் பெண்மையும் தவம் செய்து சிறந்தன. ஆனால் இவள் இங்கே இருக்கும் கோலத்தைத் தனது கமலக்கண்களால் காண இராமபிரான் தவஞ் செய்தான் இல்லையே'' என்று ஏங்கினான் அனுமான்.

அந்தச் சமயத்தில் இராவணன் அங்கு வந்து சேர்ந்தான். ஊர்வசி உடைவாளை ஏந்தி வர, மேனகை வெற்றிலை மடித்துக்கொடுக்க, திலோத்தமை செருப்பை உடன் எடுத்துக் கொண்டு வர, மற்றத் தேவமாதர்கள் சூழ்ந்து வர, பச்சைக் கற்பூரம் கலந்த சந்தனமும், மலர் மாலைகளும் பரிமள சுகந்தத்தை வெளியிட, ராவணன் சீதையிருக்குமிடம் போந்தான்.

Koviloor Digital Library

32. கற்புக்கு வேந்தன் துரும்பு

"**நா**ல் இருகோடி மங்கையர்" அதாவது எட்டுக் கோடி மங்கையர் இருபுறமும் வரிசையாக புழுகு தைலத்தால் ஏற்றப் பட்ட விளக்குகளைக் கைகளிலேந்தி உடன்வர, ராக்ஷஸ ராஜா வான ராவணன், சீதை இருக்குமிடம் காமத்தால் கொதித்த மனத்துடன் வந்து சேர்ந்தான்.

அந்தரம் புகுந்தது உண்டு என முனிவு உற்று துயில்
நீங்கினன் ஆண்டைச்
சந்திர வதனத்து அருந்ததி இருந்த தண் அறு
சோலையின் தனையோ
மந்திரம் யாதோ யாரொடும் போமோ என்று
மாமனம் மறுக்குறலால்
இந்திரன் முதலோர் இமைப்பு இலா நாட்டம்
முகிழ்த்தனர் உயிர்ப்பு அவிந்து இருப்ப

"தனது கருத்துக்கு இடையூறு நேர்ந்திருக்கிறது என்ற எண்ணத்தால் கோபமுற்று துயில் நீங்கி, சந்திரன் போன்ற வளும் அருந்ததி போல் கற்புவாய்ந்தவளுமான பிராட்டி யிருக்கும் குளிர்ந்த சோலையை அடைந்த ராவணன் கோபம் அத்துடன் நிற்குமோ, அல்லது யார் வரையிலும் சென்று முடியுமோ என்ற மனக்கலக்கத்தால், இந்திராதி தேவர்கள் இமைக்காத தங்கள் கண்களையும் அச்சத்தால் மூடிக் கொண்டனர்."

அப்படி எவரும் அஞ்சும்படியாகவும், நீலமலையில் இருந்து இறங்குகின்ற அருவிபோல் வெண்பட்டை உத்தரியமாகத் தரித்துக் கொண்டும், பசும் பொன்னால் தயாரிக்கப்பட்ட ஆபரணங்களில் பதிக்கப்பெற்ற மணிகள் பளபளவென்று ஒளி வீசவும், மார்பில் மின்னலைப்போல் பூணூல் அசைந்து விளங்கவும் வந்த ராவணன், பிராட்டியை நோக்கிக் காமம் தரும் சொற்களைக் கொட்டலானான்.

Koviloor Digital Library

இன்று இறந்தன நாளை இறந்தன
என் திறம் தரும் தன்மை இது ஆல் எனைக்
கொன்று இறந்த பின் கூடுதியோ குழை
சென்று இறங்கி மறம் தரு செங்கணுய்.

"குழை சென்று இறங்கி மறம் தரு செங்கணுய் - குழையென்னும் காதணி வரை பாய்ந்து (எனக்கு) கொடுமை விளைவிக்கின்ற சிவந்த கண்களையுடையவளே, இன்று இறந்தன— இன்று வரை (நாட்கள் பல) போய்விட்டன; நாளை இறந்தன- இனியும் அவ்வாறே கழிவதாயிருக்கின்றன. என் விஷயத்தில் நீ செய்யும் கொடுமை இப்படிப்பட்டதாயாயிருக்கின்றது. கொன்று இறந்தபின் கூடுதியோ - இப்படி என்னைக்கொன்று நான் இறந்த பின்பு என்னைக் கூடுவதாயிருக்கின்றுயா?" என்று வினவினுன் தசகண்டன்.

"திலகம் போன்றவளே! மூன்று உலகங்களும் நடுங்கும் படி ஆளுகின்ற என்னை, உன் விஷயமாகக் கேவலம் மன்மதனிடம் மட்டும் நான் எளிமைப்பட வேண்டிய நிலைமையை ஏற்படுத்திவிட்டாயே" என்றும் மன்ருடினுன் ராக்ஷஸ சக்ரவர்த்தி.

"புஷ்பங்களை அணியத் தகுந்த நீண்ட குழலை உடையவளே! கீர்த்தி மிகுந்த என் செல்வத்தை அலட்சியப்படுத்தி விட்டாய்! ஒரு வேளை நீ இங்கிருந்து தப்பிச் சென்று உன் கணவனேடு வாழ்வதாயிருந்தாலும் அது கேவலம் மனித வாழ்க்கையல்லவா? கச்சுக்குள் அடங்காத கொங்கைகளை உடையவளே! சரியாக ஆராய்ந்து பார்ப்பாயாளுல் எனது விருப்பத்தை ஏற்று எனது கட்டளையைச் சிரமேற் கொள்ளும் தேவர்களுக்கு ஒப்பாக வசிக்கின்ற பேரின்பத்தை நீ பெற லாகும்" என்று பலவாருக வேண்டிய அரக்கர் பெருமானைத் துரும்பென மதித்துப் பதில் கூறினுள் சீதை.

Koviloor Digital Library

மல் அடு திறன் தோள் வஞ்சன்
　　மனம் பிறிதாகும் வண்ணம்
கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம்
　　கற்பின் மேல் கண்டது உண்டோ
இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு
　　ஏய்வன அல்ல வெய்ய
சொல் இது தெரியக் கேட்டி
　　துரும்பு எனக் கனன்று சொன்னுள்

"அட துரும்பே! வெய்ய சொல் - நீ கூறிய கடும் சொற்கள், இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு ஏய்வன அல்ல - இல்லறத்தோடு கூடி வாழ்கின்ற கற்புடைய மாதர்க்கு ஏற்றவை அல்ல. கல்லே ஒத்த கடினமான மனம் ஏற்படுவதற்கு கற்பைக் காட்டிலும் சிறந்த சாதனம் ஏதாவது இருக்கின்றதா? இனியாவது நான் சொல்வதைக் கேள்" என்று கூறினுள் பிராட்டி.

"அறிவற்றவனே, மேரு மலேயை ஊடுருவ வேண்டுமானுலும், மூவுலகங்களேயும் துளேக்க வேண்டுமானுலும் ஆரியன் பகழி வல்லமையுள்ளது. அப்படியிருக்கத் தகாத வார்த்தைகளேச் சொல்லி உன் பத்துத் தலேகளேயும் இராமபிரான் பாணத்துக்குப் பலி கொடுக்காதே. கிழப்பறவையான சடாயுவுடனேயே போரிட முடியாமல் விழுந்துவிட்ட நீ, இராமபிரான் கணேக்கு முன்பு எப்படி நிற்பாய்? உனது பத்துத் தலேகளும் இருபது கைகளும் என் கணவன் கணேகளுக்கு விசித்திர இலக்குகளாகத்தான் இருக்குமே தவிர வேறெப்படி இருக்கும்? நீ பெற்றுள்ள சந்திரகாசமென்னும் வாளும், தவத்தால் பிரமனிடமிருந்து பெற்ற வரங்களும், சகலமும், இராமன் வில்லில் அம்பைத் தொடுத்துவிட்ட மாத்திரத்தில் விலகிப் போய்விடுமே! அட ராவணு! விளக்கின்முன் இருள் நிற்குமோ?" இப்படிப் பல கேட்டாள்.

சீதையின் உரையைக் கேட்ட இராவணன் சினந்தான். "இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் நீ இசையாவிட்டால் உன்னேக் கொன்று விடுவேன்" என்று கூறிச் சென்முன்.

Koviloor Digital Library

இராவணன் சிதை உரையாடல் கட்டத்தில் வால் மீகியும் வைணவ சமயாசாரியர்களும் பெரிதும் ஈடுபட்டிருக் கிறார்கள். ராவணனைச் சிதை துரும்பென மதித்துப் பேசினாள் என்று கம்பன் கூறுகிறான். ராவணனைப் பார்க்கக்கூடாதென்ற காரணத்தால் ஒரு துரும்பைக் கிள்ளி நடுவில் எறிந்து அதைப் பார்த்துச் சிதை பேசினாள் என்று வால்மீகி கூறுகிறார்.

துக்கார்த்தா ருததீ ஸீதா
வேபமாநா தபஸ்விநீ
சிந்தயந்தீ வராரோஹா
பதிமேவ பதிவ்ருதா
த்ருணம் அந்தர்த க்ருத்வா
ப்ரத்யுவாச சுசிஸ்மிதா

"துக்கார்த்தா -துக்கத்தினால் பீடிக்கப் பட்டவளும், ருததி - அழுது கொண்டிருப்பவளும், வேபமாநா - நடுங்கிக் கொண்டிருப்பவளும், தபஸ்விநீ - தவமுடையவளும், பதி வ்ருதா-பதிவிருதையும், பதிமேவ - பர்த்தாவையே, சிந்தை யந்தி- நினைத்துக்கொண்டிருப்பவளும், வராரோஹா - சிரேஷ் டமான அவயவங்களை உடையவளுமான, ஸீதா - ஸிதை, த்ருணம் - துரும்பை, அந்தரத-மத்தியில், க்ருத்வா - போட்டு, சுசிஸ்மிதா - வெண்மையான சிரிப்பை உடையவளாய், ப்ரத்யு வாச- பதில் சொன்னாள்."

துரும்பை இடையே போட்டாள் என்பதற்கு பலவித மான வியாக்கியானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வியாக்கியானங்கள் முழுமையும் எழுதினால் அவையே தனிப் புத்தகமாகி விடும் என்ற காரணத்தால், சுருக்கமாகச் சில வற்றை மட்டும் சொல்கிறேன்.

1. அந்தப்புர வாசிகளான உத்தம ஜாதி ஸ்திரீகள் பரபுருஷர்களுடன் பேசுவதில்லை. அப்படிப் பேசுவதானால் திரை மறைவிலிருந்து பேசுவது வழக்கம். இவ்விடத்தில் திரைக்குப் பதிலாகத் துரும்பைப் பிராட்டி இட்டுப் பேசினாள்.

Koviloor Digital Library

2. பெருத்த அபராதம் செய்த அந்த அரக்கனை ஒரு பொருட்டாக மதித்துப் பிரதி உத்தரம் சொல்லாமல் திருணத்தைப் பார்த்துப் பேசினுள்.

3. உன்னுடைய செல்வத்தையும், பெருமையையும் பிதற்றுகிற இராவணு, உன் செல்வமும் கீர்த்தியும் இந்தத் துரும்புக்குச் சமானம்.

4. என் நாதன் இந்த மாதிரிப் புல்லைத்தான் காகாசுரன் மீது பிரயோகித்தான். அது பட்ட பாட்டை நீ அறியாயோ!

5. உன் சிம்மாசனப் பெருமையை என்னிடம் சொன்ஞய். சிலநாளில் யுத்த களத்தில் உனக்குப் புல் லாசனம் கிடைக்கப்போகிறது. அதை நினைக்கவில்லையே?

6. போர்க்களத்தில் தோல்வியடைந்து நிற்பவன் ஒரு புல்லைக் கிள்ளி வாயில் வைத்துக் கொண்டால், அவனைக் கொல்லலாகாது என்பது நீதி சாஸ்திரம். அப்படி ஒரு சமயம் இராமபிரானுக்கு எதிரில் நீ போர்புரியும்போது வரும். அப் பொழுது புல்லைக் கிள்ளி வாயில் வைத்துப் பிழைத்துப் போ.

இவை தவிர, தனிச்லோகியில் பெரியவாச்சான் பிள்ளை பல பக்கங்களுக்கு பல கோணங்களில் வியாக்கியானம் செய்திருக்கிருர். பிராட்டி இத்தனையிலும் மந்தகாசத்துடன் பேசினுளென்ருல் அவளுக்கு இயற்கையாயுள்ள கருணையினுல் என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது.

தவிர, வைணவ சமயாசாரியர்கள் துரும்பைப் பார்த்தும் அனுதாபப்படுகிருர்கள். "இந்தத் துரும்பு எந்த அபராதமும் செய்யவில்லையே. அப்படியிருக்க, பிராட்டி இந்தத் துரும்பை ராவணனுக்குச் சமானமாக்கி விட்டாளே!"என்றும் பேசியிருக் கிருர்கள்.

Koviloor Digital Library

இப்படிச் சீதை புத்தி சொன்ன பிறகும் சினம் தணியாத இராவணன் "இரண்டு, மாதத்தில் நீ இணங்கவில்லையானால், உன்னை என் சமையலறைக்கு அனுப்பிப் பாகம் செய்து தின்று விடுவேன்" என்று அச்சுறுத்திப் போனான்.

33. கணையாழி கண்டாள்

"இரண்டு மாதங்களுக்குள் நீ இசையாவிட்டால், உன்னைக் கொன்று தின்று விடுவேன்" என்று இராவணன் சீதையை மிரட்டிச் சென்ற இடத்தில்கூட, கம்பன் தன் கவித்திறமையையும் இலக்கிய பாரம்பரியத்தையும் காட்டுகிறான். அந்த மிரட்டலிலும் தான் பரமபாகவதனென்பதையும், ஆழ்வார்கள் மரபில் வந்தவனென்பதையும் கம்பன் தெளிவுபடப் புலப்படுத்துகிறான். அவன் சீதையை மிரட்டிச் சென்ற பாட்டில் ஆண்டாளின் மிகச் சிறந்த உவமையொன்றைக் கம்ப நாட்டாழ்வார் கையாளுகின்றார்.

போதரிக் கண்ணினாளை
அகத்து வைத்து உரப்பிப் போனான்

என்பது கம்பன் வாக்கியம். போது என்றால் புஷ்பம். அரி என்றால் மான். புஷ்பத்தின் மென்மையும் மானின் மருண்ட பார்வையும் அந்தக் கண்களில் இருக்கின்றன என்பது பொருள். இந்தச் சொல்லில் இரண்டு உவமைகள் (புஷ்பம், மான்) இணைக்கப்பட்டு ஒரே கூட்டுச் சொல்லாகப் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய உவமை தமிழின் தனிச்சொத்து. ஒரு பொருளுக்கு இரண்டு மூன்று உவமைகள் சொல்வது உண்டு. ஆனால் அத்தகைய உவமைகள் ஒரே சொல்லில் இணைக்கப்படுவது ஒரு புதுமை.

இந்தப் புதுமையை ஆண்டாள் 'திருப்பாவை'யில் பதின்மூன்றும் பாட்டில் கையாளுகின்றாள். 'புள்ளின் வாய் கீண்டானை' என்ற பாட்டில்,

Koviloor Digital Library

புள்ளும் சிலம்பின காண்
போதரிக் கண்ணினுய்

என்று ஆண்டாள் பேசுகிருள்.

இப்படிப் பரம்பரையாக வரும் இலக்கியத்துக்குத் தனி மெருகு உண்டு. தனி அழகு உண்டு. புதுமையும் விலக்கல்ல, அதில் அழகும் அறிவும் ஒலிச்சிறப்பும் இருக்குமானுல். எந்தக் கவிதையும் முதலில் பிறக்கும்போது புதுமைதான். அந்தப் புதுமையில் உயிர் இருப்பதால் அது காலத்தால் மடிவதில்லே. அப்பேர்ப்பட்ட ஆண்டாளின் புதுமையைக் கம்பனும் கைப் பற்றியதால் கம்பனுக்குப் பெருமையே தவிரச் சிறுமை ஏது மில்லே. இராமாயணத்தில் பல பகுதிகளில் அவன் ஆதி கவியி லிருந்துகூடச் சிறிது மாறிப் பேசியிருப்பதைப் பார்க்கிருேம்.

இத்தகைய சொற்செறிவால், இராவணன் சீதையை அச்சுறுத்தும்போது கூடக் கவி நயத்தால் நம்மை மயக்கும் கவிச்சக்கரவர்த்தி, இராமகாதைக்குள் நம்மை மேலும் சுவைபட அழைத்துச் செல்கிருன்.

அசோகவனத்தை விட்டுக் கடுங் கோபத்துடன் சென்ற இராவணன், சீதையை எப்படியாவது வசப்படுத்துமாறு சீதை யைக் காவல் செய்த அரக்கிகளுக்கு ஆணேயிட்டுச் சென்ருன். அவன் போனதும் அரக்கியர் சீதையைப் பலவாறு அதட்டத் துவங்கினுர்கள். சில அரக்கிகள் சூலங்களேயும் வேல்களேயும் உயரத் தூக்கிக் கொண்டு, "இவளேக் கொல்லுங்கள்; கண்ட துண்டமாய் வெட்டுங்கள்" என்று கூவினுர்கள் பயங்கரமாக.

வையம் தந்தான் நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்
மெய்யன்பு உன்பால் வைத்துளன் அல்லால் வினே வென்றேன்
செய்யும் புன்மை யாதுசொல் என்ருர் சிலரெல்லாம்

இன்னும் சில அரக்கியர் எல்லாம், "உலகத்தைத் தந்த நான்முகனின் மைந்தன் மகனுக்கு மகனுன இராவணன், ஐயன்- மூவுலகத்துக்கும் தலேவன், வேதம் ஆயிரம் வல்லோன்-ஆயிரம்

Koviloor Digital Library

சாகைகளாகவுள்ள சாமவேதத்தைப் பயின்றவன், அறிவாளன், வினைவென்றேன்-விதியையும் வென்றவன். இப்பேர்ப்பட்டவன் உன்னிடம் மெய்யன்பு வைத்திருக்கிறான். அல்லால் (இல்லாவிட்டால்), செய்யும் புன்மை-உனக்கு அவன் இழைக்கக்கூடிய தீமை, யாது சொல்? (என்ன தெரியுமா?)'' என்று அதட்டினார்கள்.

இன்னும் சிலர், "இராவணன் முனிந்தால் உன்னைச் சேர்ந்த எல்லோரையும் நிர்மூலம் செய்துவிடுவான். ஆகவே ,நீ பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் நெருப்பாக வந்து சேர்ந்தாயே'' என்றும் அதட்டினார்கள்.

சீதையை நெருப்பென அரக்கியர் சொல்லும் உவமையை அருணாசலக் கவிராயரும் ராமநாடகத்தில் எடுத்திருக்கிறார் வேறுவிதமாக.

இராவணன் சீதையை அசோகவனத்தில் சிறைவைத்ததை 'தீயைச் சிறையிலிட்ட' என்கிறார் கவிராயர். "நெருப்பை மரக் கூட்டத்தின் நடுவில் வைத்தான்; ஆகையால்தான் பற்றிக் கொண்டது இலங்கை'' என்பது கவிராயர் உவமை.

இப்படிப் பலவிதமாக அரக்கியர் மிரட்ட, அவர்களைத் திரிசடை அடக்கினாள். அதனால் அவர்கள் அடங்கியபின், துயருற்றிருந்த சீதைக்குத் தன்னைக் காட்ட நினைத்தான் மரத்தின் மீதிருந்த அனுமான். ஆகவே, நவவியாகரண பண்டிதனான மாருதி, அரக்கிகளை மந்திர பலத்தால் தூங்க வைத்தான்.

அரக்கியர் உறங்கிய பின்பு சீதை தனது நிலை குறித்துப் புலம்பினாள்.

கல்லா மதியே கதிர்வாள் நிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லாம் எனையே முனிவீர் நினையா
வில்லாளனை யாதும் விளித்திலிரோ?

Koviloor Digital Library

முட்டாளான சந்திரனே! ஒளியை உடைய நிலவே! சிறிதள வும் செல்லாத (நகராத) இரவே! சிறுகா இருளே - சிறிதும் குறையாத அந்தகாரமே! நீங்களெல்லாம் என்னையே வருத்து கிறீர்களே. வில்லாளியிருக்கிறனே இராமபிரான். அவனை யாரும் வருத்த மாட்டீர்களோ?'' என்று கேட்டாள்.

''பூங்கொடிகளே! நெருப்புபோல் வீசும் வாடைக்காற்றைத் துணை கொண்டு என்னை வருத்துகிறீர்கள். எனது உயிரின் நிலையை நீங்கள் உணரவில்லையா? உணர்ந்தால் இராம பிரானிடம் சொல்ல மாட்டீர்களா?'' என்றும் புலம்பினள். இப்படிப் பலவாறு புலம்பித் தான் இறப்பதே சிறந்ததென்று முடிவு கட்டினள்.

ஒன்று என் உயிர் உண்டுஎனின் உண்டு இடர்யான்
பொன்றும் பொழுதே புகழ் பூணும் என

''என் உயிர் என ஒன்று இருந்தால்தானே இடர் (துன்பமும்) உண்டு? யான் பொன்றும் பொழுதே-நான் இறக்கும் பொழுதுதான், புகழ் பூணும்-எனக்குப் புகழ் உண்டு'' என்று எண்ணினள். இறந்தால்தான் எனக்கு விடிமோட்சம் என்று தீர்மானம் செய்தாள்.

''இராமபிரானிடத்தில் உள்ள வேட்கை மிகுதியால் அவர் என்னை வந்து மீட்பாரென்று மனப்பால் குடித்தேன். ஆனல் அரக்கர் பட்டணத்தில் சிறையிலிருந்த என்னைப் பரிசுத்த குண முள்ள அவர் தீண்டுவாரோ? மாட்டார். என்னைப் பரபுருஷர் விரும்பினரென்பதை அறிந்த பின்பும், இத்தனை நாள் உயிரை வைத்திருந்தேன். என்னிலும் கொடிய ராட்சஸி எங்கிருக் கிருள்?'' என்று பலவாருக நினைத்துப் பிராட்டி உயிர் விடத் துணிந்து, பக்கத்திலிருந்த ஒரு குருக்கத்திப் புதரை எய்தினள். அந்த சமயத்தில்,

கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினன்
கொண்டனன் துணுக்கம் மெய் தீண்டக் கூசுவான்

Koviloor Digital Library

அண்டர் நாயகன் அருள் தூதன் யான் எனுத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

கண்டனன் அனுமனும்-சிதையின் போக்கை அனுமனும் கண்டான். கருத்தும் எண்ணினன்-அவள் எண்ணத்தையும் ஆலோசித்து உணர்ந்து கொண்டான். துணுக்கம் கொண் டனன்-அதனால் அச்சமும் கொண்டான். மெய் தீண்டக் கூசுவான்-பிராட்டியின் உடலைத் தொட்டு அவளை விலக்கவும் கூசினன். அண்டர் நாயகன் அருள்தூதன் யான்-சகல உலகங் களுக்கும் நாயகனுன இராமபிரானின் தூதன் நான் என்று சொல்லிக்கொண்டே, தொண்டை வாய் மயிலினைத் தொழுது-கோவைப்பழம் போன்ற வாயை உடைய மயில் போன்ற சாயலை உடைய சீதையைத் தொழுதுகொண்டே, அவள் முன்பு தோன்றினன்.

உயிரைப் போக்கிக்கொள்ளச் சீதை துணிந்துவிட்டாள் என்பதை உணர்ந்த அனுமான், அவளைத் தொட்டு விலக்க முடியாத காரணத்தால், "இராமபிரானுடைய தூதன் நான்" என்று சொல்லிக்கொண்டும், சீதையைத் தொழுது கொண்டும் அவள் முன்பு தோன்றினன். பிறகு சீதையைக் கிட்டித் தன் வரலாற்றையும் கூறினன்.

"தாயே! நான் செய்த தவத்தால் தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் செய்தேன். லட்சக் கணக்கான வானரர் உன் இருப்பிடம் தேடி அலைகிறுர்கள்." என்று தைரியம் சொன்னுன். "இராமபிரான் வராததற்குக் காரணம் உங்கள் இருப்பிடம் தெரியாததுதான். இத்தனை அரக்கர் இன்னும் உயிருடன் இருப்பதே அதற்கு அத்தாட்சியல்லவா? ' என்றும் கேட்டான்.

முதலில் அனுமனைப் பற்றிச் சந்தேகப்பட்ட சீதை, "இவன் அரக்கனுனுலும் சரி, தேவனே ஆனுலும் சரி, குரங்கேயானுலும் சரி, என் இராமபிரான் நாமத்தைச் சொல்லி என் உயிரைத் தேக்கினுன். இதைக் காட்டிலும் வேறு உதவி என்ன இருக் கிறது? அது மட்டுமல்ல, இவன் விஷயத்தில் என் மனம் இரங்கு

Koviloor Digital Library

கின்றது. இவன் வார்த்தை அரக்கர்கள் வார்த்தை போன்ற தல்ல. இவன் நான் விசாரிப்பதற்கு உரியவன்'' என்று தீர்மானித்தாள். ஆகையால் ''யார் நீ?'' என்று கேட்டாள்.

பிறகு அனுமான், இராம சுக்ரீவ விருத்தாந்தங்களையும், தான் வந்த வரலாற்றையும் சொன்ஞன். இராமபிரான் அங்க லட்சணங்களையெல்லாம் விவரித்தான். பிறகு இராமன் சொல்லியனுப்பிய அடையாளங்களையும் சொன்ஞன்.

''இராமபிரான் வனத்துக்குப் போவதைப்பற்றித் தங்களி டம் சொன்னதும் நீங்கள் கோபித்து உயிரற்றவர்போல் அவர் பக்கத்தில் நின்று விட்டீர்களாமே, அயோத்தியில்! இதைச் சொல்லச் சொன்ஞர்.'' என்று இராமன் சொல்லியனுப்பிய அடையாளச் செய்தியையும் சொன்ஞன். மேலும் சொன்ஞன், ''தாயே! அயோத்தியின் கோட்டை வாயில் கடக்கும் முன்பே காடு எங்கிருக்கிறது என்று கேட்டீர்களாமே. நீங்கள் வளர்த்த கிளிகளையும் நாகணவாய்ப் பறவைகளையும் எப்படி வளர்க்க வேண்டுமென்பதை அயோத்தியிலுள்ள ஊர்மிளை முதலா ஞேர்க்குச் சொல்லும்படி சுமந்திரனிடம் கூறினீர்களாமே!'' என்று.

இதற்கு மேல் பேச அவசியமில்லை என்ற காரணத்தால், கணையாழியை எடுத்துக் காட்டிஞன் ஆஞ்சநேயன்.

மீட்டும் உரைவேண்டுவன இல்லை எனமெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டி இது என நேர்ந்தனன் எஞ நெடியகையால்
காட்டினன் ஓர் ஆழி அது வாள் நுதலி கண்டாள்

மீட்டும் உரை வேண்டுவன இல்லை-மேலும் மேலும் அடையாளம் எதுவும் சொல்ல வேண்டியது இல்லை. மெய்ப்பேர் தீட்டியது-சத்தியமான பெயர் (அதாவது இராமபிரானின் பெயர்) தீட்டப் பெற்றதும், தீட்டு அரிய செய்கை அது-சித்திரிக்க அரிய வேலைப்பாடுடையதுமான, இது-இந்த,

Koviloor Digital Library

மோதிரத்தை நீட்டு-நேராக சீதையின் கையில் கொடு, என்று நேர்ந்தனன்-இராமபிரான் சொன்னுன். எனு-என்று சொல்லி, நெடிய கையால்-நீண்ட தன் கைகளால், ஓர் ஆழி–ஒப்பற்ற கணையாழியை, காட்டினன்-அனுமான் எடுத்துக் காட்டினுன். அது-அதை, வாள்நுதலி-வாளைப்போன்ற ஒளி பொருந்திய நெற்றியை உடைய சீதை, கண்டாள்-பார்த்தாள்.

"இந்த மோதிரத்தைச் சீதையிடம் கொடு என்று இராம பிரான் கூறி இதைக் கொடுத்தார்" என்று, தனது நீண்ட கைகளால் அனுமான் ஒப்புயர்வற்ற இராமபிரானது கணையாழி யைக் காட்டினுன். அதைச் சீதையும் பார்த்தாள்.

வால்மீகியும் 'காட்டினுன்' என்றுதான் சொல்கிருர். கொடுத்ததாகச் சொல்லவில்லை.

வானரோஹம் மஹாபாகே
தூதோ ராமஸ்ய தீமத :
ராமநா மாங்கிதம் சேதம்
பச்யதேவ் யங்குளீயகம்

"பெருத்த பாக்யமுடையவளே! நான் புத்திமானுன இராமனுடைய தூதன், வானரன். ராமன் திருநாமத்தால் அடையாளம் செய்யப்பட்டிருக்கிற இந்த மோதிரத்தைப் பாரும்" என்று அனுமான் மோதிரத்தைக் காட்டினுன் என்பது வால்மீகியின் ஸ்லோகம். "மஹாபாகே" என்பதால், அந்த மோதிரத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிராட்டிக்கு பாக்கியம் வந்துவிட்டது என்பதை வால்மீகி உணர்த்தவே, அப்படி ஒரு சம்போதனத்தை (அழைப்புச் சொல்லை) கையாண்டிருக்கிருர். "பாரும்" என்பதாலே பார்த்த மாத்திரத்திலே நடக்க முடியாததெல்லாம் நடக்கும் என்பதும் வலியுறுத்தப்படுகிற து

சகல சௌபாக்கியங்களையும் அளிக்கும் அந்த மோதி ரத்தைச் சீதையும் கண்டாள்.

Koviloor Digital Library

34. சூடாமணியும் கற்பின் அணியும்

சகல உலகங்களையும் சகல உயிர்களையும் உய்விக்கச் செய்யும் 'ராம' என்ற இரண்டு எழுத்துக்களைக் கொண்ட கணையாழியைச் சீதை பார்த்தாள். 'பார்த்தாள்' என்று கம்பன் வால்மீகி இருவருமே சொல்கிறார்களேயொழிய, அனுமான் கொடுத்ததாக இரு மகா கவிகளுமே சொல்லவில்லை. அப்படிக் கொடுக்காததற்குக் காரணம் வியாக்கியான கர்த்தாக்களால் சொல்லப்படுகின்றது. "நூறு யோசனை அகலமுள்ள கடலைத் தாண்டி வந்தது தனது சக்தியாலல்ல, ராமநாமம் பொறிக்கப் பெற்ற கணையாழிப் பிரபாவத்தால் என்று அனுமான் நம்பினான்; அதைக் கொடுத்துவிட்டால், திரும்பிப் போவது எப்படி என்ற திகைப்பால் மோதிரத்தைக் கொடுக்கத் தயங்கினான்" என்பது வியாக்கியான கர்த்தாக்களின் கருத்து.

ஆகையினால்தான், வால்மீகி சொல்கிறார் சீதையின் துடிப்பை, "அனுமானால் காட்டப்பட்ட அந்த மோதிரத்தை அவன் கையிலிருந்து சீதை தானாகவே எடுத்துக் கொண்டாள்" என்று.

க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணாஸா
பர்த்து ; கரவிபூஷணம்
பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா
ஜானகீ முதிதா அபவத்

"சீதையானவள் பர்த்தாவின் கைக்கு அலங்காரமான அந்த மோதிரத்தை வாங்கிக்கொண்டு, பர்த்தாவையே அடைந்துவிட்டவள்போல் சந்தோஷத்தை அடைந்தாள்" என்று வால்மீகி சொல்கிறார்.

அதே முறையில் கம்பன் நாடனும் பேசுகிறான்:

வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை ஒற்றினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போடு
ஏங்கினள் உயிர்த்தனள் இது இன்னது எனல் ஆமோ

Koviloor Digital Library

சீதை அம்மோதிரத்தை அனுமான் கையிலிருந்து வாங்கினள். வாங்கி முலேக்குவையில் (முலேகளின் முகட்டிலே) வைத்தனள். பிறகு சிரத்தின்மேல் வைத்துக் கொண்டாள். தனது மலர்க்கண்களில் ஒற்றினுள். தடந்தோள் வீங்கினள் (பெரிய தோள்கள் பூரிக்கப் பெற்ருள்). குளிர்ந்தனள் (அகம் குளிர்ந்தாள்). மெலிந்தனள் (உடல் இளைத்தாள்). வெதுப்போடு ஏங்கினள் (வாட்டத்தோடு ஏக்கமும் அடைந் தாள்). உயிர்த்தனள் (பெருமூச்சு விட்டாள்). இது இன்னது எனல் ஆமோ? (சீதை அப்போது அடைந்த நிலே இன்னது என்று விவரிக்க முடியுமா?). இது மட்டுமல்ல.

மோக்கும் முலேவைத்து உற முயங்கும் ஒளிர்நன்னீர்
நீக்கி நிறை கண்ணிணே ததும்ப நெடு நீளம்
நோக்கும் நுவலக்கருதும் ஒன்றும் நுவல்கில்லாள்
மேக்கு நிமிர் விம்மலள் விழுங்கல் உறுகின்ருள்.

(அந்தக் கணேயாழியை) மோக்கும்-மோந்து பார்ப்பாள். முலே வைத்து-தனங்களின் மேல் வைத்துக்கொண்டு, உற முயங்கும்-நன்ருகத் தழுவுவாள். கண் இணே நிறை ஒளி நீர் நீக்கி-இரண்டு கண்களில் நிறைந்திருக்கும் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்து விட்டு, ததும்ப-மீண்டும் நீர் ததும்பும்படி, நெடு நீளம் நோக்கும்-நீண்ட நேரம் பார்ப்பாள். நுவலக் கருதும்-ஏதாவது பேச நினேப்பாள். ஒன்றும் நுவல்கில்லாள்-ஆனுல் ஒன்றும் பேசமாட்டாள். மேக்கு நிமிர் விம்மலள்-அதிகமாக பூரிப்பை உடையவளாய், விழுங்கல் உறுகின்ருள்-வார்த்தைகளே விழுங்கிவிடுவாள்.

அந்த மோதிரத்தைச் சீதை மார்பின்மீது வைத்துத் தழுவினுள், அதைக் கணவனுக நினேத்து. பிறகு கண்களிரண்டிலும் திரண்ட ஆனந்த பாஷ்பத்தைத் துடைத்துக் கொண்டு, மீண்டும் கண்களில் நீர் ததும்ப அதை உற்றுப் பார்ப்பாள். ஏதோ பேச முயல்வாள். ஆனுல் சொல் வராது. வரும் சொல்லே விழுங்கிவிடுவாள். இத்தகைய பரவசத்தையும் பரவசத்தால் ஏற்பட்ட அவஸ்தையையும் அடைந்தாள் ஜானகி.

Koviloor Digital Library

பளபளத்த அந்த மோதிரம் தனது பொன்னிறத்தைச் சீதைக்கும் பூசியது. மற்றப் பொருள்களுக்கும் பூசித் தங்க மயமாக அடித்தது. ஒருவேளை அது ரச குளிகையாய் இருக்குமோவென்ற சந்தேகத்தையும் விளைவித்தது. பிராட்டிக்கு அந்தக் கணையாழி, பசியால் துன்பப்படுபவனுக்கு கிடைத்த அமுது போலும், இறந்த உடலைத் திரும்ப அடைந்து உயிர் கொடுத்த மருந்து போலும் ஆயிற்று. ஆகையால் அனுமனை நோக்கி, "உத்தமனே! நீ எனக்கு உயிர் தந்தாய்" என்று உணர்ச்சி மீறிய குளறிய சொற்களால் தனது நன்றியைத் தெரிவித்தாள் பிராட்டி. "அப்பா! மூவுலகங்களையும் படைத்த பிரமதேவனைப் படைத்த திருமாலின் தூதனாய் வந்து உயிரைக் கொடுத்த உனக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறும் உலகத்தில் இருக்கிறதா? எனக்குத் தாயுமாகி, தந்தையுமாகி, கடவுளும் ஆனவனே! எனக்கு இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கும் இன்பத்தையும், கீர்த்தியையும் கொடுத்தாய்" என்றும் பாராட்டினாள் பிராட்டி. அத்துடன் அனுமனுக்கு சிரஞ்சீவிப் பட்டத்தையும் வழங்கினாள்.

"வலிமை பொருந்திய பருத்த தோள்களையுடைய வீரனே! நான் கற்பு நிலையில் களங்கமில்லாத மனத்தை உடையவளானால், பதினான்கு உலகங்களும் அழிவடைந்த போதும், நீ இன்று இருப்பது போலவே சிரஞ்சீவியாய் வாழ்ந்திருப்பாயாக" என்றும் வரம் கொடுத்தாள்.

அதற்குமேல், இராமபிரானது வரலாற்றைச் சீதை கேட்க அனுமனும் சகல விவரங்களையும் சொன்னான். "சடாயுவின் நிலைகண்டு மூவுலகங்களையும் அழித்துவிடுகிறேன் என்று கோபித்து, தனது கோதண்டத்தைப் பார்த்த இராமபிரானைச் சடாயு அடக்கினார். "ராமா! ஓர் அற்பன் செய்த குற்றத்திற்காக எல்லா உலகங்களையும் அழிக்கலாமா? மனம் கனிவாயாக!" என்று சாந்தப்படுத்தினார் சடாயு" என்று அனுமான் கூறினான். மற்ற விவரங்களையும் சொன்னான்.

Koviloor Digital Library

இதையெல்லாம் கேட்ட, சீதை அனுமானை நோக்கி, "ஐயனே! நீ இந்தப் பெரிய கடலை எப்படித் தாண்டி வந்தாய்?" என்று வினவினுள்.

அதற்கு அனுமான் கூறினுன்: "தாயே! இராமபிரானது திருவடிகளைத் தியானித்தேன். அவற்றின் பலத்தால் வந்து சேர்ந்தேன்" என்று.

சிதை விடவில்லை. "இந்தச் சிறிய உருவத்துடன் எப்படி வந்தாய்?" என்று கேட்டாள். அப்பொழுது அனுமான் விசுவ ரூபம் எடுத்தான். கடலைக் கடந்த தனது பெரிய உருவத்தைக் காட்டினுன். அந்த உருவத்துடன் இரு கைகளாலும் பிராட்டியைத் தொழுது நின்றுன்.

அனுமானின் பேருருவத்தைக் கண்ட சிதை "இனி அரக்கரெல்லாம் அழிந்தனர்" என்று மகிழ்ந்தாள். அந்தப் பேருருவத்தை அடக்கிக்கொள்ளும்படி அனுமனை ·வேண்டவும் செய்தாள். அனுமனும் பழைய சிறிய உருவம் கொண்டான். அந்தச் சிறிய உருவத்துடன் "அம்மா! தங்களை இராமபிரானுடன் இக்கணமே கொண்டு போய்ச் சேர்ப்பேன். அப்படிச் சொல்கிறேனே என்று கோபிக்காதீர்கள். அனுமதி தாருங்கள்" என்று வேண்டினுன்.

அந்த வேண்டுகோளை மறுத்த சீதை, இராமபிரான் போரில் தன்னை வென்று அழைத்துப்போவதே முறையென்று கூறினுள். "என் கொற்றவன் போரில் இராவணனைக் கொன்று, அந்த இராவணனின் இருபது கண்களையும் காக்கைகள் கொத்தித் தின்பதைக் காணுவிட்டால், என் மனம் ஆறுமோ?" என்று கேட்டாள் அனுமனை நோக்கி. மேலும் சொன்னுள்:

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
எல்லை தீர்த்த உலகங்கள் யாவும் என்
சொல்லினுல் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்

"அப்பா அனுமனே! அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ-அசுரர்களைக் கொண்ட இலங்கை மட்டுமல்ல, எல்லை நீத்த உலகங்கள் யாவும் என் சொல்லினுல் சுடுவேன்-கணக்கி

Koviloor Digital Library

லடங்காத எல்லா உலகங்களையும் என் ஒரு சொல்லால் அழித்திருப்பேன். அப்படிச் செய்தால் தூயவனுன இராம பிரானது வில்லின் ஆற்றலுக்கு இழிவு என்றுதான் அவ்வாறு செய்யாமல் விட்டொழித்தேன்'' என்று, தனது சக்தியையும் தெரிவித்தாள் பிராட்டி.

''சொல்லால் சுடுவேன்'' என்று சீதை வாயிலாக இங்கு கூறியதற்குக் காரணம், அவள் கருணைக் கண்கள் பாக்கியத்தை அளிக்குமே தவிர அழிவை அளிக்காது என்பது கருத்தாத லால். சொல்லால் சுடும் சக்தியிருந்தும், அதையும் செய்யாதது பிராட்டியின் கருணை எல்லையற்றது என்பதை நிரூபிக்கிறது.

சீதை சொன்ன சொல் கேட்ட அனுமான், அவள் தன்மை யைத் தன்னுள் பாராட்டிக் கொண்டான். ''நான் இராம பிரானிடம் என்ன சொல்லட்டும்?'' என்று வினவினுன் அடுத்த படியாக.

சீதை அதற்குக் கூறுகிருள், ''நான் அவருக்குத் தகுந்த மனைவியல்ல என்று இராமபிரான் கருதினுலும், என்னைப்பற்றித் தயை இல்லையானுலும், அவர் வீரத்துக்கு மாசு வராதிருப்பதற் காகவாவது என்னைச் சிறை மீட்கட்டும். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் என்னைச் சிறை மீட்காவிட்டால், அவர் எனக்கு அடுத்தபடி செய்யவேண்டியது ஈமக் கடன்தானென்று சொல்'' என்று.

இந்த நிஷ்டூர வார்த்தைகளைக் கேட்ட அனுமான் சீதையின் உள்ளத்துயரை உணர்ந்து கொண்டான். ஆகையால் அவளைத் தேற்றப் பல வார்த்தைகளைச் சொன்னுன். ''இராம லட்சுமணர்கள் உம்மை ஒருக்காலும் கைவிடார்கள். இராவணன் இனி உயிர் வாழ மாட்டான். அரக்கர் எல்லோருமே அழிந்து போவது திண்ணம்'' என்ருன் அனுமான்.

அனுமான் வார்த்தைகளைக் கேட்டு சீதை மனம் தேறினுள். இராமனுக்கு அடையாளமாகச் சொல்லக் காகாசுரன்

Koviloor Digital Library

விருத்தாந்தத்தையும் விவரமாகக் கூறினுள். "சித்திரகூட பருவதத்திலே நாங்களிருக்கும்போது காகமொன்று என் மார்பைக் குத்த என் நாயகன் அருகில் கிடந்த புல்லை எடுத்து பிரும்மாஸ்திரமாக விட்ட நிகழ்ச்சியை நான் கூறிய அடையாளமாகச் சொல்வாய்" என்ருள் சீதை. "இந்திரன் மைந்தனை அந்தக் காகம் மூவுலகமும் சென்று பிரும்மாஸ் திரத்துக்குத் தப்ப முடியாமல் மீண்டும் இராமபிரானையே சரணடைந்ததைத் தெரியப்படுத்து அனுமானே. பிறகு எம்பிரான் ஜயந்தனென்னும் இந்திர புத்திரனின் ஒரு கண்ணை வாங்கிக் கொண்டு அவனை மன்னித்தான். இதை என் அடையாளமாகச் சொல்" என்றும் சொன்னுள் சீதை.

இந்தக் காகாசுர விருத்தாந்தத்தைச் சற்று விரிவாகவும், அதிகமாகவும் வால்மீகி சொல்கிருர். கம்பன் சீதையின் மார்பை ஜயந்தன் கொத்திய விவரங்களைச் சொல்லவில்லை. ஆனுல் வால்மீகி இதில் சிருங்காரத்தையும் கலக்கிருர்.

"அனுமானே! இந்த அடையாளத்தை இராமனிடம் சொல்லும். சித்ரகூட பர்வதத்தில் நான் விளையாடிக் களைத்து அவருடைய மடியில் உட்கார்ந்தேன். அப்பொழுது காக்கை மாமிச ஆசையால் என் ஸ்தன மத்தியில் குத்திற்று. நான் அந்தக் காக்கையை ஓட்டை எடுத்து ஓட்டினேன். அந்தக் காக்கை அதற்கு மசியாமல் அங்கேயே ஒளிந்திருந்தது. அப்பொழுது என் சேலை நழுவியதால் ஒட்டியாணத்தை இழுத்தேன். வஸ்திரம் நழுவின என்னைப் பார்த்து ராமன் பரிகசித்தார். அதனுல் நாணமும் கோபமும் அடைந்த நான் அவரது மடியை மறுபடியும் அடைந்தேன். பிறகு என் பிராண நாயகர் எனது மடியில் படுத்தார். அப்பொழுது காகம் என்னை மீண்டும் எனது ஸ்தனத்தில் குத்தியது. சுகமாக என் மடியில் தூங்கிக் கொண்டிருந்த ராமன் காக்கை என்னைக் கொத்திய தால் பாதிக்கப்பட்டவராகக் கோபத்துடன் எழுந்தார். அந்த வாயஸத்தைப் பார்த்தார். அதைக் கண்டதும் கோபத் திஞல் தர்ப்பையை எடுத்து பிரம்மாஸ்திரமாக்கி அந்த ஜயந்தன் மீது ஏவினுர்" என்று காகாசுரன் அபராதத்தைச்

Koviloor Digital Library

சொன்னுள்'' என்று வால்மீகி சிருங்காரம் நிறைந்த விருத்தாந்தமாகக் காகத்தின் கதையை விவரிக்கிருர்.

இதில் வைணவ ஆசார்யர்கள் பெரிதும் ஈடுபட்டிருக்கிருர் கள். ''சீதையை முதலில் கொத்தினபோது ஸ்ரீராமன் பரிகசித்த தற்குக் காரணம் அவளே காகத்தை ஒட்டை எடுத்து ஒட்டித் தன்னைக் காத்துக் கொள்ள முயன்றதுதான்'' என்று கூறுகிருர் கள். ''காக்கும் விஷயத்தை ஆண்டவன் பொறுப்பில் போடுவதே பரதந்திரம். பிராட்டி ஸ்வதந்திரையாக நடந்து கொண்டதால் இராமன் தலையிடவில்லை; பரிகசித்தான்'' என்றும் வியாக்கியானம் செய்கிருர்கள்.

இந்தக் காகாசுர விருத்தாந்தத்தைச் சொன்ன பிராட்டி, கடைசியாகத் தனது சேலையில் முடியப்பட்டிருந்த சூடாமணியை எடுத்து, ''இதோ பேரடையாளம்'' என்று சொல்லி அதை அனுமனிடம் கொடுத்தாள்.

அந்தச் சூடாமணியின் ஒளியால் இருள் மறைந்தது. கதிரவன் முளைத்து விட்டதுபோல் பிரகாசித்தது பிராட்டி தலையில் சூடும் அந்த மணி. அதைக் கையில் வாங்கிக்கொண்டு சிரமேல் வைத்துக்கொண்ட அனுமான், சீதையிடம் விடை பெற்றுச் சென்ருன்.

பிறகு இராவணனைக் காணவேண்டி அசோகவனத்தை முறித்தான். இராவணனுல் அனுப்பப்பட்ட சேனுதிபதிகள் ஜம்புமாலி, இராவண குமாரனுன அட்சய குமாரன் ஆகியோரைப் போரில் கொன்ருன். பின்பு இந்திரசித்தன் பிரம்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு, இராவணன் சந்நிதானத்தை அடைந்தான். அங்கும் தூதுசொல்லி வாலில் நெருப்பு வைக்கப்படவே அதைக் கொண்டே இலங்கையைச் சுட்டெரித்து, இக்கரை வந்து, சீதையைக் கண்டதை அங்கதன் முதலானேர்க்குத் தெரிவித்தான். அதனுல் களிப்படைந்த வானரர் கிஷ்கிந்தையை அடைந்து, நடுவே மகிழ்ச்சியால் மது வனத்தை அழித்தனர். பிறகு தங்கள் தாமதத்தை உணர்ந்து

Koviloor Digital Library

சுக்ரீவ ஆக்ஞைக்குப் பயந்து, அனுமனை முன்னதாக அனுப்பினர்.

அனுமனும் இராம சந்நிதானத்தை எய்தினன். அப்படி எய்தியும் இராமபிரானது திருவடியைத் தொழவில்லை.

... ...முளரி நீங்கிய
தையலை நோக்கிய கையினன்
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வைகினன்.

கமலப் பூவிலிருந்து நீங்கி வந்த தையலான சீதையின் இருப்பிடத்தை நோக்கிக் கையைத் தலைமேல் வைத்துக் கொண்டு தரையில் வீழ்ந்து நமஸ்கரித்தான்.

இப்படிக் குறிப்பால் சீதையின் புனிதத் தன்மையை உணர்த்திய அனுமான் எழுந்து இராமபிரானை நோக்கி,

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தென்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர் நாயக இனித்தவிர்தி ஐயமும்
பண்டு உள துயரும் என்று அனுமன் பன்னுவான்

அண்டர்நாயக-தேவருக்கெல்லாம் தலைவனே! தென்திரை அலைகடல் இலங்கை தென்னகர்-தெள்ளிய அலைகளை வீசுகின்ற கடலால் சூழப்பட்டதும், தெற்கிலுள்ளதுமான இலங்கையில், கற்பினுக்கு அணியை-கற்பினுக்கு ஆபரணம் போன்ற பிராட்டியை, கண்களால் கண்டனென்-கண்களால் பார்த்தேன். இனி சிதை கற்புடனிருக்கிருளோ என்ற உமது ஐயத்தையும் இதுவரை உள்ள துயரத்தையும் தவிர்தி-நீக்கிக் கொள்ளுங்கள்; என்று அனுமன் பன்னுவான்-என்று அனுமான் சொல்லி, மேலும் பேசினன்.

இதற்கு மேல் பிராட்டியைக் கண்ட விவரங்களைச் சொல்லிச் சூடாமணியையும் கொடுத்தான். அதனல் இராமன் தாபம் தணிந்தான்.

சுக்ரீவன் ஆக்ஞையால் வானர சேனையும் தெற்கு நோக்கிப் புறப்பட்டது.

(சுந்தரகாண்டம் முற்றும்)

Koviloor Digital Library

35. மாயா சனகன்

சீதா தேவியைத் தான் கண்டதையும், அவள் கற்பின் சிறப்பையும் இராமபிரானிடம் ஆஞ்சநேயன் உரைத்த பின்பு, சுக்ரீவ ஆக்ஞையால் வானரசேனை திரண்டெழுந்து தெற்குக் கடலை அடைந்தது. எழுபது வெள்ளம் எண்ணுடைய அம் மாபெரும் சேனை அக் கடற்கரையில் தங்கியபோது, அந்தச் சேனையின் பாரத்தைத் தாங்கமாட்டாமல், ஊழிக்காலத்தில் கூட அழியாத இமயமலையும் வடகடலும் எழுந்து வானைத் தோட்டன. தென்திசையோ பெரிதும் சாய்ந்தது. இத்தகைய நிலையில் அந்த வானரசேனை கடலுக்கருகே இன்னொரு கடல் போலத் தோன்றியது. அந்தப் படைக்கடலின் புறத்தே நின்று எதிரேயிருந்த தென்கடலை இராமபிரான் நோக்கினான்.

அக்கடல் தென்றலால் அலையைப் பரப்பியது. அலைகளின் வெள்ளையான நுரைகள் உருண்டு மடிந்தன. திருப்பாற்கடல் மகாவிஷ்ணுவின் படுக்கையை, தனது அலைகளைக் கொண்டு உதறி விரிப்பதுபோல இருந்தது அக்காட்சி. திரைகளின் திவலைகள்இராமபிரானின் தோளிற்பட்டுச் சுட்டன. தென்றல் அள்ளிவந்த புன்னைமர மகரந்தத்தைத் தென்றல் அவன் திருமேனியில் சந்தனமெனப் பூசிச் சீதையைப் பிரிந்ததா லுண்டான வேதனையை அதிகப்படுத்தியது.

இப்படிக் கடலை இராமபிரான் இக்கரையில் ஆராய்ந்து நிற்க, இராமபிரான் வருகையை அறிந்த இராவணன், அக் கரையிலிருந்த இலங்கையில் மந்திராலோசனை சபையைக் கூட்டினான். அந்தச் சபையில் அவனது சேனைக் காவலரும் மந்திரிமாரும் கும்பகர்ணனும் தத்தம் யோசனைகளைக் கூறினர்.

கும்பகர்ணன் தன் கருத்தைத் திட்டமாகச் சொன்னான்: "அண்ணா! பிரும்ம தேவனை முதலாகக்கொண்ட இக்குலத்தில் நீ ஒப்பற்றவனாயிருந்தாய். ஆயிரம் கிளைகளுள்ள சாமவேதம் கற்றாய். ஆனால் நெருப்பை விரும்பி அணைத்தால் சுடுமென்று அறியாமல் அதன் செந்நிறத்தைப் பார்த்து விரும்பினாய்.

Koviloor Digital Library

பிறன் மனைவியைக் கவர்வது போன்ற பெரும் பாதகத்தைச் செய்து, அக்கற்புக்கரசியின் கால்களில் விழுகின்றாய். இப்பொழுது என் பெருமை போய்விட்டதே என்று அலறுகின்றாய். இவை ஒன்றுக்கொன்று எத்தனை முரண்பட்ட செய்கைகள்?'' என்றான் கும்பகர்ணன்.

பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை நன்று நம் கொற்றம்!

''நாம் பேசுவது மானத்தைப் பற்றி. இடையில் அடைவதோ காமப்பித்து. எந்த மானிடரை நாம் தின்போமோ அந்த மானிடரைக் கண்டு கூசுகிறோம் (பயப்படுகிறோம்). நமது கொற்றம் (வெற்றி) மிக நன்று'' என்று நகைத்தான் தம்பி கும்பகர்ணன். ''இனிமேல் நாம் போரிடாது போனால் இப்பொழுதுள்ளதைவிட அதிகப் பழியே உண்டாகும். ஆகவே நரர்களையும் வானரர்களையும் மடக்கி அழிப்பதே இப்பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழி'' என்றும் முடிவாகச் சொன்னான்.

இந்திரஜித்து தானே போருக்குச் செல்வதாகக் கூறினான். விபீஷணனும் குலத்தின் அழிவையும் இலங்கையின் அழிவையும் தடுப்பதற்குப் பிராட்டியை இராமன்பால் சேர்ப்பதே வழி என்றான். அதற்கிணங்காத இராவணன் தம்பியைக் கடிந்து பேச, நான்கு அரக்கர்களுடன் விபீஷணன் இலங்கையிலிருந்து கிளம்பி இராமனிடம் சரண் புகுந்தான். வானரசேனை சேதுவைக் கட்ட, கடலைத்தாண்டிய இராமபிரான் போர் துவக்கினான். முதற்போரில் இராவணனை இராமபிரான் நிராயுதபாணியாக்கி, ''இன்று போய் போர்க்கு நாளை வா'' என்றான். அதைக் கேட்டுக்கொண்டு படைக்கலங்களை மட்டுமின்றி ''வீரமும் களத்தே போட்டு'' மீண்டும் இலங்கை வந்த இராவணன் பெரும் துயரத்துக்கு உள்ளானான். அத் துயரத்தைப் போக்கக் கும்பகர்ணன் போருக்குச் செல்ல, அவனும் இராம பாணத்தால் மாண்டு போனான்.

Koviloor Digital Library

இதனால் நிலைகலங்கிய இராவணனுக்கு சீதையை இணங்க வைக்க மகோதரன் சூழ்ச்சியொன்று சொன்னான். "மாயா சனகன் ஒருவனை ஏற்படுத்திஅவனைக் கொல்வதாகச் சீதையை மிரட்டினால் அவள் அஞ்சி இணங்குவாள்" என்றான்.

இங்கு கம்பன் வால்மீகியிலிருந்து அடியோடு மாறு படுகின்றான். மாயா இராமனுடைய சிரத்தைத் துண்டித்த நிலையில் காட்டி சீதையின் மனத்தைத் திருப்ப வேண்டுமென்பது வால்மீகியில் காணப்படும் சூழ்ச்சி. ஆனால் இராமனுடைய சிரத்தைத் துண்டிக்க மனமில்லாமலோ என்னவோ, கம்பன், மாயா சனகனைத் தனது காவியத்தில் சிருஷ்டிக்கிறான்.

சீதையை இணங்க வைக்க இராவணன் உபாயங் கேட்க, மகோதரன் மருத்தனென்னும் அரக்கனைச் சனகனுக்குகிறான். "இனி நீங்கள் போய்ச் சீதையிடம் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று ஊக்குவிக்க, இராவணன் சீதையிருக்குமிடம் சென்றான். அவள் முன்பு ஒரு பொன்மயமான பீடத்திலிருந்து கொண்டு மீண்டும் பிதற்றலுற்றான்.

"சீதே! அடியவனுன என்னிடம் இரக்கங்கொள்வது என்றுதான்? மன்மதன் அம்புகளுக்கு இலக்காகாதிருக்கும் நாள் என்றுதான்? விஷம் தோய்ந்த அமுதம் என்று தெரிந்தும் வஞ்சகனாகிய நான் அந்த அமுதத்தை உண்ண விரும்பினேன். அமுதத்தில் வந்தவளே! அடியவன் உனது அடைக்கலப் பொருள்"என்றான். இப்படிச் சொல்லி நிலத்தில் நெடுஞ்சாண் கட்டையாக வீழ்ந்து வீழ்ந்து அவளை வணங்கவும் செய்தான்.

இதைக் கண்ட சீதை கீழே கிடந்த துரும்பை இராவணனாகப் பாவித்து அதை நோக்கிக் கூறுவாள்:

பழியது பாவம் என்று
பார்க்கிலை பகரத்தக்க
மொழி இவையல்ல என்பது
உணர்கிலை முறைமை நோக்காய்

Koviloor Digital Library

கிழிகிலே நெஞ்சம் வஞ்சக்
கிளை யொடும் இன்று காலும்
அழிகிலே என்ற போது என்
கற்பு என்னும் அறந்தான் என்னும்.

"இராவணு! நீ விரும்பிய இச்செயல் பழியானது பாவம் மிகுந்தது என்று பார்க்கவில்லே. நீ பேசும் மொழி பேசத் தக்கதல்ல என்பதையும் உணரவில்லே. யாரிடத்து எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற முறைமையையும் நீ பார்க்க வில்லே. இப்படியுள்ள உன் நெஞ்சம் கிழியவில்லே. உன் சுற்றத்தார் அழியவில்லே. இப்படியிருக்கும்போது உன்னேயும் உன் வஞ்சக்கிளேகளேயும் மாய்க்காத என் கற்புதான் என்ன கற்பு? தருமந்தான் என்ன தருமம்?" என்று நொந்து கொண் டாள் தேவி.

"இன்னும் நான் உயிரை வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம்:

......குணங்களென்னும்
பூணெலாம் பொறுத்த மேனிப்
புண்ணிய மூர்த்தி தன்னேக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன் கண்டாய்

குணங்களேயே பூஷணமாகவுடைய புண்ணியமூர்த்தியான இராமபிரானே இன்னும் காணலாம் என்ற காதலால் உயிரு டன் இருக்கின்றேன்" என்ருள் பிராட்டி.

இதனுல் சினங்கொண்ட இராவணன் சீதையை நோக்கிப் பரிகாசமாக இடியென நகைத்தான்: "இராமன் உன்னே மீட்ட பின்பு இருவரும் ஒன்ருய் வாழலாமென்று நினேக்கின் ருய் போலும்" என்ருன் அந்த யமச்சிரிப்பின் ஊடே.

"அயோத்தியிலுள்ள உன் புக்ககத்தாரின் தலேகளேக் கொண்டு வருமாறு வீரர்களே ஏவி இருக்கிறேன். உன் தந்தை

Koviloor Digital Library

மீதும் என் வீரரை ஏவியிருக்கிறேன்'' என்றுஇராவணன் கூற, ''என்னை வஞ்சனையால் கவர்ந்தது போல இன்னும் என்ன வஞ்சனை செய்யப் போகிருனே இப்பாவி'' என்று சீதை வருந்தினுள்.

அந்தச் சமயத்தில் மாயா சனகன் உருவமெடுத்த மருத்தனை மகோதரன் சீதை முன்பு கொண்டு நிறுத்தினுன். அதுகண்ட சீதை வாய்விட்டி அரற்றினுள்.

எந்தையே எந்தையே என் பொருட்டினுல்
உனக்கும் இக்கோள்
வந்ததே என்னைப் பெற்று வாழ்ந்தவாறு
இதுவோ மண்ணேர்
தந்தையே தாயே செய்த தருமமே
தவமே என்னும்
வெந்துயர் வீங்கித் தீவீழ் விறகு என
வெந்து வீழ்வாள்

''என் தந்தையே! என் தந்தையே! என் பொருட்டு உனக்கும் இந்தத் தீயவர்பால் சிக்கும் நிலை நேர்ந்ததே. நீ என்னைப் பெற்று வாழ்ந்தது இப்படித்தானே! மண்ணுலகத்தார்க்கெல்லாம் தந்தை போன்றவரே! தருமத்தின் இருப்பிடமே! தவத்தால் உயர்ந்தவரே!'' என்று பிரலாபித்து, தீயில் விழும் விறகு அத்தீயினுல் விழுங்கப்படுவது போல் துயரத்தினுல் விழுங்கப் பட்டுக் கீழே விழுந்தாள். மறுபடியும் பலபடி புலம்பினுள்.

அப்பொழுது மீண்டும் இராவணன் கூறினுன்: ''அன்னப் பறவை போன்றவளே! உள்ளைப் பெறவேணுமென்ற விருப்பத்தினுல் செய்யத்தகாத இக்கொடிய செயலைச் செய்தேன். சனகனைக் கொல்ல மாட்டேன். என்னுடைய அரசாட்சி செல்வம் அனைத்தையும் உனக்குக் கொடுத்து விடுகிறேன். எனக்கு இணங்கி விடு'' என்று. அதற்கும் சீதை மறுத்துக் கொடிய சொற்களால் இராவணனைச் சுட, மாயா சனகன் மன்றுடலானுன்.

Koviloor Digital Library

இன்று இது நேராயென்னில்
என்னை என் குலத்திறேடும்
கொன்றனை யாதி என்ற
இனையன கூறலுற்றான்

"இன்று நீ இராவணனுடைய வேண்டு கோளுக்கு இசையா விட்டால், என்னை என் குலத்தோடு கொன்றவளா வாய்" என்ற மாயா சனகன் மேலும் சொன்னான்:

பூவின்மேல் இருந்த தெய்வத் தையலும்
பொதுமை யுற்றாள்
பாவியான் பயந்து நங்கை நின்பொருட்
டாகப் பட்டேன்
ஆவிபோய் அழிதல் நன்றே அமரர்க்கும்
அரசனுவான்
தேவியாயிருத்தல் தீதோ சிறையிடைத்
தேம்புகின்றாய்

"பூவின் மேலிருந்த தெய்வமகளான லட்சுமியும் பலபேரி டம் பொதுவாக இருக்கிறாள். பாவி! நான் பெற்ற பெண்ணே! சிறையில் இருப்பவளே! நீ இணங்காமையால் நான் அழிந்து போவது நல்லதா? அமரர்க்கும் அரசனான இராவணனுக்கும் நீ தேவியாயிருத்தல் தீதா?"

இதைக் கேட்ட சீதா மாயாசனகனைப் பற்றிச் சந்தேகம் கொண்டாள். முனிந்து பேசவும் செய்தாள்... "தருமம் அழியவும், தொன்று தொட்டு வந்த முறைகள் அழியவும், அரசவம்சத்தின் சிறந்த வீரம் சிதையவும், சத்தியம் குறைய வும், பழி பொருந்தவும், வேதத்தின் கொள்கை தவறவும், நல்லொழுக்கம் குன்றவும், எத்தனை இழிவான வார்த்தை களைச் சொன்னாய்? இதை நோக்கும் போது நீ என் தந்தை தானே என்ற ஐயம் ஏற்படுகிறது" என்றாள் பிராட்டி, "நீயும் உன் சுற்றத்தார்களும் இந்தப் பூமியிலுள்ள அத்தனை பேரும் என் கண்முன்னே மாய்ந்தாலும் ஒழுக்கம் தவறி வாழ்வேனா?

Koviloor Digital Library

இராமபிரானுக்கு அடிமை செய்பவளாகிய நான் நாய் போன்ற இராவணனைக் கண்ணெடுத்தும் பார்ப்பேனா?'' என்றும் கூறினாள். ''ஆண் சிங்கத்துடனே வாழ்ந்த பெண் சிங்கம் நரியுடன் வாழ்வதென்பது நடக்கக்கூடிய காரியமா?'' என்றும் ஏசினாள்.

இதைக் கேட்டு வெகுண்ட இராவணன் மாயாசனகனை வெட்டும்படி உத்தரவிட்டான். அதற்கும் சளைக்காத சீதை, ''நீ என்னையும் கொல்ல முடியாது. என் தந்தையென்று கூறுகிறானே இவனையும் கொல்ல முடியாது. உன்னையும் கொன்று கொள்ள மாட்டாய். இராமன் வாளியால் சுற்றத்தாருடனே அழியப் போகிறாய்'' என்றாள்.

சீதையின் சுடு சொற்களால் கோபம் தலைக்கேற, மாயா சனகனை வெட்ட இராவணன் சொல்ல, மகோதரன் அவனைத் தடுத்து விலக்கினான். அப்போது கோட்டைக்கு வெளியே வானரர்களின் ஆரவாரம் கேட்டது. இதைக் கேட்ட இராவணன் கும்பகர்ணன் அழிந்தானென்பதை உணர்ந்து பூமியில் விழுந்து அலறினான். சீதை மகிழ்ந்தாள்.

வீங்கினாள் கொங்கை மெலிந்த மெலிவு அகல
ஓங்கினாள் உள்ளம் உவந்தாள் உயிர் புகுந்தாள்
தீங்கிலாக் கற்பின் திருமடந்தை சேடியாம்
பாங்கினாள் உற்றதனை யாரே பகர்வார்

இராவணன் கதறியதால் மகிழ்ச்சியடைந்த சீதை அத்தனை நாள் மெலிந்திருந்த உடல் மெலிவு மாறினாள். அவள் கொங்கை விம்மியது. உவந்தாள் (குதூகலப் பட்டாள்), உயிர்புகுந்தாள் (யிர் மீண்டும் வரப்பெற்றாள்). திருமடந்தையான இலக்குமியும் வேலைக்காரியா யிருக்கக்கூடிய தகுதி வாய்ந்த அந்தச் சீதை அப்பொழுது அடைந்த நிலையை யாரே பகர்வர்? (யாரால் விவரித்துச் சொல்ல முடியும்) என்று வியக்கிறான் கவி.

Koviloor Digital Library

36. தந்தை களியாட்டம் தனயன் பேயாட்டம்

கும்பகர்ணன் அழிந்ததைக் கேட்டதால் மிகவும் மனத் தளர்ச்சியும் சோகமும் அடைந்த இராவணன் அடுத்தபடி தனது படைத் தலைவர்களைப் போருக்கனுப்பினான். இராம லக்ஷ்மணர்களின் பாணங்களுக்கு அவர்களும் இரையாகவே, இந்திரஜித்தை வரவழைத்து நடந்த விபரீதத்தை எடுத்துச் சொன்னான் இராவணன். இந்திரஜித்து இராவணனைத் தேற்றி விட்டுச் சேனையோடும் படைக்களம் புகுந்தான். அங்கிருந்த நிலை நோக்கி வியந்தான். அறுபது வெள்ளம் அரக்கர் மாய்ந்து கிடப்பதை அவன் ரணகளத்திலே கண்டான்; அம்பு மழையைக் கண்டான் ; உதிரத்தினாலான நதியைக் கண்டான்; வானம் வரை ஓங்கி நின்ற பிணக்குவியலைக் கண்டான்; இவ்வளவுக் கும் காரண பூதர்களான ராம லக்ஷ்மணர்களையும் அவர்கள் வலிய தோள்களையும் கண்டான். அப்படி அவன் களத்தை நோக்கி நிற்கையில் அனுமான் தோள்கொட்டி வீரமுழக்கம் செய்ய அரக்கர் அஞ்சிச் சிதறினார்கள். அவர்களைச் சினந்து நிறுத்தி இராமலக்ஷ்மணர்மீது போருக்கு வந்தான் இராவண குமாரன். நேர் யுத்தமும் மேகத்தில் மறைந்து மாயாயுத்தமும் செய்தான். கடைசியாக பிரும்மாஸ்திரத்தால் லக்ஷ்மணனைக் கட்டிப்போட, தம்பி நிலைகண்டு இராமனும் மூர்ச்சையானான். இதனால் இராமலக்ஷ்மணர்கள் இறந்துவிட்டனரென்று எண்ணி இராவணனுக்குத் தூதர்கள் செய்தி அறிவிக்க, இராவணன் சீதைக்கு அவர்கள் இறந்ததைக் காட்டுமாறு அரக்கிகளுக்குப் பணித்தான்.

அரக்கிகளும் சீதையை புஷ்பக விமானத்தில் ஏற்றிக் களத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவள் இராம லக்ஷ்மணர் நிலைகண்டு வெதும்பினாள்.

கண்டாள் கண்ணால் கணவன்உரு
அன்றி ஒன்றும் காணாதாள்

Koviloor Digital Library

உண்டாள் விடத்தை எனஉடலும்
உணர்வும், உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்
தண்தா மரைப்பூ நெருப்புற்ற
தன்மை யுற்ருள் தரியாதாள்
பெண்டால் உற்ற பெரும்பீழை
உலகுக் கெல்லாம் பெரிதன்ரே

(போர்க்களத்திலே உயிர்நீங்கி விழுந்து கிடந்தது போலிருந்த) இராமபிரானது உருவத்தைக் கண்ணுல் கண்டாள், கணவன் உருவத்தைத் தவிர வேறெதையும் காணுத சிதை. கண்டதும் உடம்பும் உணர்வும், உயிரும் போனதுபோல் ஒடுங்கினுள். நெருப்புப்பட்ட தாமரைப்பூவின் தன்மையை அடைந்தாள். பெண் அடையும் பெரும் பீழை (துன்பம்) உலகுக்கெல்லாம் பெரிதல்லவா?

உத்தமியான ஒரு பெண் அடையும் துன்பத்தால் உலகமே பாதிக்கப்படுகிறது என்ற கருத்தை இங்கு கவி தெரியப்படுத்து கிருன்.

கணவன் கோலம் கண்ட சிதை பெரியதாக அலறவும் தொடங்கினுள்.

மங்கை அழுதாள் வானுட்டு
மயில்களழுதார் மழவிடையோன்
பங்கில் உறையும் குயில் அழுதாள்
பதுமத்து இருந்த மாது அழுதாள்
கங்கை அழுதாள் நாமடந்தை
அழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள் இரங்காத
அரக்கிமாரும் தளர்ந்து அழுதார்

மங்கை சிதை அழுதாள். அது கண்டு மயில்கள் போலச் சாயலுள்ள வானுட்டு (தேவலோகத்து)ப் பெண்கள் அழுதார் கள். மழவிடையோன் (இளமை தோன்றும் ரிஷபவாகனத்தை

Koviloor Digital Library

யுடைய) சிவபிரானது உடலில் பாதிப் பங்கு பெற்ற பார்வதி அழுதாள். பதுமத்திருந்த (கமலத்தில் வீற்றிருந்த) இலக்குமி அழுதாள். பிரமன் நாவிலிருக்கும் மடந்தை கலைமகள் அழுதாள். சிவபிரான் சடையிலிருந்த கங்கை அழுதாள். கமலத் தடங் கண்ணனான திருமாலின் தங்கையான துர்க்கையும் அழுதாள்.

இப்படிக் கலங்கி வீழ்ந்த சீதாபிராட்டியை அரக்கியர் சைத்தியோபசரஞ் செய்து எழுப்பினர். எழுந்த சீதை மார்பின்மேல் அடித்துக் கொண்டாள். வயிற்றிலும் அறைந்து கொண்டாள். நெருப்பில் வீழ்ந்த கொடி போலானாள். இப்படிப் புலம்பிய சிதை புஷ்பக விமானத்திலிருந்து இராமன்மேல் விழப்போக, அதை விபீஷணன் குமாரியான திரிசடை தடுத்தாள். அரக்கியரை விலக்கிய திரிசடை சீதையின் காதோடு சில வார்த்தைகள் சொல்லலானாள்.

மாயமான் விடுத்தவாறும் சனகனை வகுத்தவாறும்
போயநாள் நாக பாசம் பிணித்தது போனவாறும்
நீயமா நினையாய் மாள நினைதியோ நெறியிலாரால்
ஆயமா மாயமென்று அறிந்திலை போலும் அன்னாய்

"அன்னாய் - தாயே! போய நாள் - கழிந்த முன்னாள்களில், இராவணன் மாயமானை அனுப்பிய வகையையும், மாயாசனகனை ஏற்படுத்திய வகையையும், நாகபாசத்தால் இராமலக்ஷ்மணர் கட்டுண்டதையும், நீயமா நினையாய் - நீசமான மாயத் தொழிலாக நினையாதவளாய் இருக்கிறாயே! அவைபோல் இதுவும், நெறியிலாரால் - நெறியில்லாத அரக்கரால், ஆய மாயமென்று அறிந்திலைபோலும் - ஆன மாயமென்று அறிந்திலைபோலும்?" என்று கேட்டாள் திரிசடை.

"தருமத்தை நிலை நாட்டுவதற்காக அவதரித்த திருமாலான இராமபிரானைப் புல்லரான அரக்கர் கொல்லப் போமோ?" என்றும் திரிசடை வினவினாள்.

Koviloor Digital Library

மாருதிக்கு இல்லை அன்றே
　　மங்கைநின் வரத்தி னாலே
ஆருயிர் நீங்கல் நின்பால்
　　கற்புக்கும் அழிவுண் டாமே
சீரியது அன்றிது ஒன்றும்
　　திசைமுகன் படையின் செய்கை
பேரும்இப் பொழுதே தேவர்
　　எண்ணமும் பிழைப்பது உண்டோ?

''பெண்ணே! மங்கை நீ கொடுத்த வரத்தினால் மாருதிக்கு மரணம் இல்லை. அப்படி அவன் உயிர் நீங்கினால் உன் கற்புக்கு மாசு உண்டாகுமே. நீ நினைக்கிறபடி இது ஒன்றும் அப்படிக் கெடுதலான நிகழ்ச்சி அல்ல. திசைமுகன் படையின் செய்கை- இவர்கள் மறைந்திருப்பதுபோல் தோன்றுதல் பிரும்மாஸ்திரத்தின் செய்கை'' என்று விளக்கினாள் திரிசடை.

இப்படி அவள் தேற்றியதால் தேறிய சீதை, ''உன் பேச்சின் நம்பிக்கையால் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னாள் திரிசடையை நோக்கி. இதன்பின் சீதை மீண்டும் அசோகாவனம் கொண்டு செல்லப்பட்டாள்.

பிரும்மாஸ்திரத்தால் கட்டுண்டவர்களை அனுமான் மருந்துமலையைக் கொண்டு வந்து பிழைப்பித்தான். இராம பிரான் அனுமானை வாழ்த்தினான்.

இப்படி எதிரி சேனையில் நிகழ்ந்ததை அறியாத இராவணன், எதிரிகள் பிரும்மாஸ்திரத்தால் மாய்ந்தனரென்று கருதி களியாட்டத்தில் இறங்கினான். அரக்க மகளிர் கள்ளையுண்டு பலவிதக் கோலமாய் இராவணன்முன்பு வந்தனர். தேவமாதரும் அவனைக் களிப்பிக்க வந்தனர். மேனகையும் அரம்பையும் ஊர்வசியும் நர்த்தனமாடிக் கொண்டு வந்தனர். கள் உண்டமையால் அவர்கள் செந்நிற வானம்போல் சிவந்து கிடந்தனர். சிரிப்பு அதிகமாக வந்தது அவர்களுக்கு. இலவமலர் போன்ற அதரங்கள் துடித்தன. குழல்கள் சோர்ந்தன. உடையும்

Koviloor Digital Library

மேகலேயும் நெகிழ்ந்து வீழ்ந்தன. இந்த நிலே எப்படியிருந்த தென்பதற்கு ஒரு சிறந்த உவமையைக் கவி கூறுகிருன்.

ராஜசபையிலே தாழ்ந்த நிலேயிலிருப்பவர்கள் கீழ்மை யான தொழிலேச் செய்வார்கள். மேன்மை பெற்றவர் சிறந்த செயலேயே செய்வர். அதுபோல கள்ளுண்ட மாதரின் சேலே நெழுகித் தொடையை அடையவே, அவர்கள் மானம் காக்கத் தலேக்குழல் விரிந்து சோர்ந்து அவர்கள் அவயம் பிறர்க்குத் தெரியாதவாறு மறைத்துக் காத்தது என்று கம்பன் கூறு கிருன்.

இப்படி இராவணன் களியாட்டத்தில் திளேத்திருந்த சமயத்தில், களத்தில் இராம லக்ஷ்மணர்கள் எழுந்ததால் வானரர் பேராரவாரஞ் செய்தனர். அதன் ஒலி தசமுகன் காதில் விழ, கள்ளுண்ட மாதரைத் தள்ளி எழுந்திருந்தான் இராவணன். எழுந்தவன் மந்திராலோசனே மண்டபத்துக்குச் சென்ருன். அங்கு இந்திரஜித்து தான் நிகும்பலே வேள்வி முடித்தால்தான் எதிரிகளே மாய்க்கமுடியும் என்று கூறி, அந்த வேள்விக்கு இடையூறு இல்லாமலிருக்க மாயா சீதையைச் சிருஷ்டித்து வெட்டிப் பகைவரை திகைக்கச் செய்வதே வழி யென்றும் சொன்ஞன்.

மாயா சீதையை சிருஷ்டித்து அவளே மயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு போர்க்களம் வந்து, அவளே அனுமன் கண் காண நிறுத்தி, அவளே வெட்டத் தனது வாளேயும் ஓங்கிஞன்.

37 அரக்கமாதர் அலர்விழி நீரருவி

கொடிய இந்திரஜித்தன் மாயாசீதையின் குழலேப் பற்றி இழுத்துக்கொண்டு, போர்க்களத்தே புகுந்து, 'இவளே வெட்டு வேன்' என முழக்கம் செய்து, வாளே ஓங்கியதும், அனுமான் அச்சத்தின் வசப்பட்டவஞய் சீதையை வெட்ட வேண்டா மென்று கெஞ்சி, இராவண குமாரனேப் புகழவும் செய்தான்.

Koviloor Digital Library

நான் முகனுக்கோர் நால்வரின் வந்தாய்.
நூன்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய்
பான் முகம் உற்ற பெரும்பழி யன்ரு
மான்முக மற்ருெரு மாதை வதைத்தல்

''நான் முகனுன பிரம்மாவின் நாலாந் தலைமுறையாய்ப் பிறந்தாய். எல்லா நூல்களின் நுட்பங்களையும் உணர்ந்தாய். அப்பேர்ப்பட்ட நீ மான் போன்ற முகமுள்ள பெண்ணை வதைத்தல் பெரும்பழியல்லவா?'' என்று அனுமான் சொன்னுன்.

எந்தையும் இந்த இலங்கை உளோரும்
உய்ந்திட வானவர் யாவரும் ஓடச்
சிந்துவென் வாள் இனியென்று செறுத்தான்
இந்திர சித்தவன் இன்ன இசைத்தான்.

அனுமான் புகழ்ச்சியை அசட்டை செய்த இந்திரஜித்து' ''என் தந்தையும் இலங்கையிலுள்ள மற்ருேரும் உய்யவும் வானவர் ஓடவும் என் வாளினுல் இவளை வெட்டுவேன்'' என்று பதில் கூறினுன். அத்துடன் சீதையை இரக்கமின்றி வெட்டிப் போட்டுப் பெரும் சேனையுடன் புட்பக விமானத்திலேறி வட திசை நோக்கிச் சென்ருன். வடதிசை போவதாகப் போக்குக் காட்டித் திரும்பி நிகும்பலை யாகம் செய்யுமிடத்திற்குச் சென்ருன்.

அவன் மாயா சீதையை வெட்டியதையும் வடக்கு நோக்கிச் சென்றதையும் கண்ட அனுமான் பெரிதாகப் புலம்பலுற்ருன்.

அன்னமே என்னும் பெண்ணின் அருங்குலமே என்னும்
என்னமே என்னும் தெய்வமில்லையோ யாதும் என்னும்
சின்னமே செய்யக்கண்டும் தீவினை நெஞ்சம் ஆவி
பின்னமே ஆயதில்லை என்னும் பேராற்றல் பேர்ந்தான்.

பெரிய வல்லமையும் துயரத்தினுல் குழையப் பெற்ற அனுமான், சீதை வெட்டப்பட்டதைக் கண்டு, ''அன்னமே என்பான், பெண்ணின் அருங்குலமே என்பான், என அம்மே என்

Koviloor Digital Library

பான். "இந்திரஜித்தன் வெட்டுதலைக் கண்டும் பாவியான எனது நெஞ்சமும் ஆவியும் பிரியவில்லையே" என்று அலறுவான்.

இப்படி அலறிக்கொண்டே இராம சந்நிதானம் அடைந்த மாருதி துயரத்தால் மூர்ச்சித்துப் பெரிய மலைபோல் பூமியில் விழுந்தான். செய்தியையும் துக்கமடைந்த நெஞ்சத்துடன் சொன்னான். அதைக் கேட்ட இராமன் துடித்தான். வானரர் துடித்து அவனடி வீழ்ந்தனர். பகைவரை ஒழிப்பதே இனிக் கடமையென இலக்குவன் கொதித்தெழுந்தான். அரக்கரை வேரோடு அறுப்போம் எனக் கூறிச் சுக்ரீவன் இலங்கைமீது பாய்ந்தான்.

ஆனால் அரக்கர் வழிகளை அறிந்த விபீஷணன், எதற்கும் சீதை கொல்லப்பட்டாளா என்பதை அறிந்துவர வண்டின் உருவம் கொண்டு இலங்கையுள் புகுந்தான். சீதை நலமே இருப்பதைக் கண்ட வீபீஷணன், அரக்கர் சேனை நிகும்பலையை நோக்கிச்செல்வதைப்பார்த்து, உண்மையை உணர்ந்து, இராம பிரானிடம் வந்து இந்திரஜித்தன் சூழ்ச்சியைத் தெரிவிக்க, நிகும்பலையாகத்தைத் தடைசெய்யவும் இந்திரஜித்தை ஒழிக்கவும் லக்ஷ்மணனை அனுப்பினன் இராமபிரான். வானரசேனையுடன் நிகும்பலை யாகசாலையை அடைந்த லக்ஷ்மணன் பெரும் போர் புரிந்து இராவண குமாரனைக் கொன்றான். அவன் தலையைக் கொய்து கொண்டு வந்து இராமன் தாளில் சமர்ப்பித்தான். இராமன் தம்பியைத் தழுவி அவன் உடற்புண்களைத் தடவிக் கொடுத்தான் இதமாக.

இங்கு இப்படியிருக்க, இந்திரஜித்து இறந்த விஷயத்தை இராவணனுக்கு தூதர் ஓடித் தெரிவித்தனர். செய்தி சொன்ன தூதர்களை இராவணன் வெட்டிப்போட்டுத் துக்கமிகுதியால் தானும் தரணியில் வீழ்ந்து புலம்பினன். அவன் பத்துச் சிரங்களும் பத்து விதமாய் ஓலமிட்டன. அவன் ஓலத்தால் மூவுலகமும் திகில் கொண்டன. வானவர் அஞ்சினர். பிறகு இந்திரஜித்தன் சடலத்தை எடுத்துவர இராவணனே ரணகளம்

Koviloor Digital Library

சென்று, அங்கு மைந்தன் தலைகாணுது போகவே முண்டத்துடன் உடலைத் தூக்கி வந்தான் அரண்மனைக்கு.

அவன் சடலத்தை இராவணன் தாங்கி வந்த போது, இலங்கை மாதர்கள் கோவெனப் புலம்பினர். மண்டோதரியும் வந்தாள். மைந்தன் சடலத்தைக் கண்டாள். தாமரைப் பூவினுல் குரும்பையைப் புடைக்கின்றவளைப் போலத் தன் மலர்க் கைகளால் முலைகள்மீது அடித்துக் கொண்டாள்.

கலையினுல் திங்கள் போல
வளர்கின்ற காலத்தே உன்
சிலையினுல் அரியை வெல்லக்
காண்பதோர் தவம் முன் செய்தேன்
தலையிலா ஆக்கை காண
எத்தவம் செய்தேன் அந்தோ
நிலையிலா வாழ்வை இன்னும்
நினைவனே நினைவிலாதேன்

"சந்திரன் கலையினுல் நாள்தோறும் வளர்வது போல் வளர்கின்ற இளம்பருவத்திலேயே இந்திரனையும் உன் சிலை வலியால் வெல்வதைப் பார்க்கும் தவத்தை முன்பு செய்தேன். இப்பொழுது தலையில்லா உன் உடலைப் பார்க்க என்ன தவம் செய்தனேடா மகனே! நிலையில்லாத இந்த வாழ்வை இன்னும் நினைப்பேனு நான்" என்று கதறினுள் மண்டோதரி.

ஐயனே அழகனே என் அரும்பெறல் அமிழ்தே ஆழிக்
கையனே மழுவனே என்று இவர் வலிகடந்த கால
மொய்யனே முளரி என்ன நின்முகம் கண்டிலாதேன்
உய்வனே உலக மூன்றுக்கும் ஒருவனே செருவலோனே.

"திருவாழியென்னும் சக்கிரத்தை ஏந்திய திருமாலும், மழுவை ஏந்திய சிவபிரானும் ஆகிய இவர்கள் வலிமையையும் வெல்லக்கூடியவனே! உலக மூன்றுக்கும் ஒப்பற்ற ஒரே

Koviloor Digital Library

வீரனே! உன் முகம் காணுத நான் இனி உய்வேனு (உயிர் வாழ்வனே)'' என்று வண்டுவிழி மண்டோதரி அரற்றினுள்.

இப்படிப் பலரும் புலம்பக் கண்டு சோகமேலிட்ட இராவணன், இவற்றுக்கெல்லாம் மூலகாரணமான சீதையை வெட்டத் தனது சந்திரஹாஸமென்னும் வாளை உருவிக் கொண்டு, அசோக வனத்தை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது இராவணன் அடிகளில் வீழ்ந்து மகோதரன் சீதையை வெட்டுதல் பெரும் பழியைத் தரும் என்று கூறித் தடுத்தான்.

தெள்ளரும் காலகேயர்
சிரத்தொடும் திசைக்கண் யானை
வெள்ளிய மருப்புச்சிந்த
வீசிய விசயத் தொள்வாள்
வள்ளியம் மருங்குல் செவ்வாய்
மாதர்மேல் வைத்த போது
கொள்ளுமே ஆவிதானே
நாணத்தால் குறைவதல்லால்

''ஐயனே! (இவ்வளவு வலிமையுடையவர்களென்று) தெள்ளரும் - தெளிந்து சொல்ல முடியாத, காலகேயர் சிரத்துடன் திக்கஜங்களின் வெள்ளிய (வெண்மையான) தந்தங்கள் சிந்த வீசிய (உடைந்து கீழே விழும்படி வீசிய), விசயத் தொள் வாள் (உன் வெற்றி வாளே), வள்ளியம் மருங்குல் செவ்வாய் மாதர் மேல் வைத்த போது (கொடி போன்ற இடையையும் செவ்விய அதரத்தையுமுடையே மாதர் மேல் வைத்தாடானுல்)அந்த வாள் தானுகவே நாணத்தால் இற்றுப்போகுமேயல்லாது மாதர் ஆவியைக் கொள்ளுமோ?'' என்முன் மகோதரன். ''இராவணு! நீ இவளைக் கொன்ருல் கங்கையைத் தலையில் கொண்ட சிவபிரானும் திருமாலும் பிரமனும் கைகொட்டிச் சிரிப்பார்கள்'' என்ருன்.

Koviloor Digital Library

இன்று நீ இவனை வாளால்
எறிந்து போய் இராமன் தன்னை
வென்று மீண்டு இலங்கை மூதூர்
எய்தினை வெதும்பு வாயோ
பொன்றினள் சீதை என்றே
போவர்கள் அவர்தாம் அல்லால்
வென்றிட முடியாதென்னும்
வீரமோ விளம்பல் என்றான்

"இன்று நீ இவனை வாளால் கொன்றுவிட்டு, இராமனை வென்று இலங்கையெனும் பழமையான ஊரை அடைந்து சீதையை இழந்துவிட்டோமே என்று வெதும்புவாய். அல்லது பொன்றினள் சீதை என்று (சீதை போய்விட்டாளென்று) அவர்கள் (இராம லஷ்மணர்) திரும்பிச் சென்று விட்டால், அவர்களை நீ வெல்ல முடியவில்லை என்ற பெயர் கிடைக்குமே, அது வீரமோ?" என்றும் வினவினான் மகோதரன்.

மகோதரன் சொற்களில் உண்மை இருப்பதைக் கண்டும், காமமும் கண்ணும் அறிவுமில்லாதது என்ற காரணத்தாலும், சானகியை மனச்சிறையில் கரந்த காதலாலும், மைந்தன் இறந்ததையும் பொருட்படுத்தாது, போர்க்களம் நண்ண எண்ணினான் இலங்கை வேந்தன். சீதையைக் கொல்லும் கொடுந் தொழிலிலிருந்து மீண்டான். மூலபல சைன்னியத்தை இராமன்மீது ஏவினான்.

மூல பலத்தை ஒருவனாகவே எதிர்த்த இராமபிரான் கோதண்டத்திலிருந்த மணி கணகணவென்று ஒலித்தது.

படுமத கரிபரி சிந்தின
பனிமலை இரதம் அவிந்தன
விடுதிசை செவிடு பிளந்தன
விரிகடல் அளறது எழுந்தன

Koviloor Digital Library

அடுபுலி அவுணர்தம் மங்கையர்
அலர்விழி அரும்புகள் சிந்தின
கடுமணி நெடியவெனும் சிலை
கண கண கண எனுந்தொறும்

ஸ்ரீ ராமபிரானுடைய நெடியது எனப்படும் கோதண்டத்திலுள்ள மணிகள் வில்லின் அசைவினுல் கணகணவென்று ஒலிக்குந்தோறும், படுமதகரி (மதம் பிடித்த யானைகளும்), பரி-புரவிகளும், சிந்தின (மடிந்து வீழ்ந்தன). இமயமலை போன்ற தேர்கள் அழிந்தன. பரந்த திக்குகள் பிளந்தன. பரந்த கடல்கள் சேறுபட்டுக் கலங்கி எழுந்தன. அடுபுலி (கொல்லுகின்ற புலியைப் போன்ற), அரக்கருடைய மங்கையரின் பரந்த விழிகளிலிருந்து தமது கணவன்மார் இறக்கப் போகிறுர் என்ற எண்ணத்தால் அவலக் கண்ணீர் ஆருகப் பெருகியது.

38. கற்பு நிலையின் உச்சி

இந்திரனையே வெற்றிகொண்ட புதல்வன், எழுந்து நடந்தாலே அண்ட சராசரங்கள் அச்சமுறும் தம்பி கும்பகர்ணன், இருவரும் மாண்டுபோய், யாராலும் அழிக்க முடியாத மூலபல சைன்னியமும் நாசமடைந்து விடவே, இராவணன் இனி யுத்தத்தின் இறுதிக் கட்டம் வந்து விட்டது என்பதை உணர்ந்தான். அந்த உணர்வுடன் போர்க்களம் புகத் தேரும் ஏறினுன்.

மன்றலங்குழல் சானகி தன்
மலர்க்கையால் வயிறு
கொன்று அலந்தலைக் கொடுநெடும்
துயரிடைக் குளித்தல்

Koviloor Digital Library

அன்றிது என்றிடின் மயன்மகள்
அத்தொழில் உறுதல்
இன்று இரண்டில் ஒன்று ஆக்குவன்
தலைப்படின் என்றான்.

"இன்றைய போரின் முடிவில் நறுமணமுள்ள அழகிய கூந்தலை உடைய சானகி தனது மலர்க்கையால் வயிற்றை வருத்தி நெடிய துன்பக் கடலில் மூழ்குதல், அல்லது மயன் மகளான மண்டோதரி அந்தத் தொழிலை மேற்கொள்ளல் இரண்டில் ஒன்று நடக்கும்படி செய்வேன்" என்று கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

அதாவது, "இன்று நானோ இராமனோ இருவரில் ஒருவர் முடிந்து போவோம்" என்ற தீர்மானத்துடன் போர்க்களம் புகுந்தான், பௌலஸ்தியனான பத்துத் தலையோன்.

இதே கருத்தை ரகுவம்ச மகா காவியத்தில் காளிதாஸனும் கூறுகிறான்.

நிர்யயௌ அத பௌலஸ்த்ய :
புனர் யுத்தாய மந்திராத்
அராவணம் அராமம் வா ஜகத்
அத்ய இதிநிச்சித:

அத - பிறகு, பௌலஸ்த்ய : - ராவணன், அத்ய - இன்று, ஜகத் - உலகமானது, அராவணம் - ராவணனற்றதாகவோ, அராமம் வா - ராமனற்றதாகவோ (ஆகும்), இதி - என்று, நிச்சித - நிச்சயித்தவனாக, புன - மறுபடியும், யுத்தாய-யுத்தம் செய்யும் பொருட்டு, மந்திராத் - தனது அரண்மனையிலிருந்து, நிர்யயௌ - வெளியே வந்தான்.

இன்றைய போரில் ஒன்று ராவணன் முடிவான் அல்லது ராமன் முடிவான் என்ற நிச்சயத்துடன் போருக்கு இராவணன் புறப்பட்டான் என்று மேற்படி சுலோகம் கூறுகிறது.

Koviloor Digital Library

இப்படித் தீர்மானத்துடன் புறப்பட்ட இராவணன் இராமனைப் போர்க்களத்தில் சந்தித்தான். கடுமையான போர் மூண்டது. போரின் முடிவு என்ன ஆகும் என்று வானவரும் முனிவரும் திகைக்கும்படியாக, ஜயா ஜயம் எப்படி என்பதை நிர்ணயிக்கமுடியாத வகையில் போர் நடந்தது. அந்தப் போரைப் பற்றி வால்மீகி பன்னிரண்டு சர்க்கங்கள் எழுதியிருக்கிறார். அது எத்தன்மையது என்பது பற்றி உவமை கூற முடியாது என்ற காரணத்தால் சுருக்கமாக ஒன்று சொல்கிறார் வால்மீகி.

ராமராவணயோர் யுத்தம்
ராமராவண யோரிவ

என்பது வால்மீகி பகவான் வாக்கியம். ராம ராவண யுத்தத்திற்கு நிகராயிருப்பது ராம ராவண யுத்தமே என்று கூறுகிறார் வால்மீகி.

"ஆகாயத்தை நிகர்த்தது ஆகாயமே. சமுத்திரத்தைப் போன்றது சமுத்திரமே. அப்படியே ராம ராவண யுத்தத்திற்கு உவமை ராம ராவண யுத்தமே" என்று, சிலவற்றுக்கு உவமை கிடையாது என்பதை ரிஷி சுட்டிக் காட்டுகிறார்.

ஈடு இணையற்ற உவமை சொல்ல முடியாத இந்தக் கடும் போரில், இராமனுடைய பிரம்மாஸ்திரத்தால் இராவணன் தேவர்கள் குதூகலிக்க, முனிவர் மகிழ, அரக்கர் புலம்ப மாண்டு மகிதலத்தில் வீழ்ந்தான்.

இச் செய்தி கேட்ட மண்டோதரி, இராவணன் இறந்து கிடக்கும் இடம் வந்தாள்.

அனந்த நூறுயிரம்
அரக்கர் மங்கைமார்
புனைந்த பூங்குழல் விரித்து
அரற்றும் பூசலார்

Koviloor Digital Library

ளம் தொடர்ந்து உடன்வர
ஏகினள் என்ப
நினைந்ததும் மறந்ததும்
இலாத நெஞ்சினள்

பல லட்ச அரக்கர் மாதர்கள் தங்கள் பூங்குழலை விரித்துப் போட்டுக்கொண்டு அலறி உடன்வர, நினைப்பதும் மறப்பதும் இலாத நெஞ்சினளான மண்டோதரி, இராவணன் விழுந்து கிடக்கும் இடத்துக்கு வந்தாள்.

"நினைப்பதும் மறப்பதும் இலாத நெஞ்சினள்" என்பதால் இங்கு மண்டோதரியின் நிகரிலாக் கற்பு சொல்லப்படுகிறது. கணவனை சில வேளைகளில் நினைப்பது சில வேளைகளில் மறப்பது என்பதில்லாது, சதா அவன் நினைவாகவே இருக்கும் கற்புக் கரசி என்று கம்பன் மண்டோதரியை வர்ணிக்கிறான்.

வால்மீகியும் இதே அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதை சுந்தரகாண்டத்தில் பார்க்கிறோம். "மண்டோதரியைப் பார்த்து சீதையென்றே அனுமான் மயங்கிவிட்டான்; கவியின்சேஷ்டைகளையும் அதன் விளைவாகக்காட்டினான்" என்ற கட்டம் விளக்கு கிறது.

இத்தகைய மகா பதிவிரதையான மண்டோதரி, இராவணன் உடல் இராம பாணத்தினால் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துப் புலம்பினாள்.

வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பு எடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்க இடமின்றி உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்தவாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி

Koviloor Digital Library

"வெள்ளெருக்கம் பூவைச் சூடுகின்ற சடாதாரியான சிவபிரானின் வெற்பு (கைலாச மலையை) எடுத்து ஆட்டிய உன் திருமேனியை, மேலும் கீழும், ஒரு காயத்திற்கும் இன்னொரு காயத்திற்கும் எள்ளிருக்கக்கூட இடமின்றி இராமபாணம் துளைத்திருக்கிறதே. கள்ளிருக்கும் (மது இருக்கும்) மலர்களைச் சூடுகின்ற குழலையுடைய சானகியை நீ மனச்சிறையில் கரந்த காதல் (மனத்திற்குள் பூட்டிய காதல்) உன் உடலுக்குள் வேறெங்காவது இருக்கும் என்று எண்ணி ஒருவனான இராமன் வாளி தடவிப் பார்த்ததோ!'' என்று இராவணன் மகிமையையும், செய்த பாவத்தையும் ஒருங்கே கூறிப் புலம்பினாள் மண்டோதரி.

இங்கு கம்பன் எள்ளிருக்க இடமின்றி என்று கூறியதற்குக் காரணம் இராவணன் சவமாய்க் கிடப்பதால், எள் அமங்கலப் பொருள் ஆதலால், ஈமக் கடனுக்கே அது உபயோகப் படுவதால்.

இங்கு காயத்துக்குக் காயம் இடமின்மையைக் குறிப்பிட இந்த உவமை கூறப்பட்டது. சீதை திருமணக் காலத்தில் பால காண்டத்தில் ஜனநெருக்கத்தைக் குறிப்பிட, ''உழுந்திட இடமில்லை உலகம் எங்கணும்'' என்று மங்கலப் பொருளான உளுந்தைக் கூறியிருக்கிறான் கம்பன்.

கம்பனைப் போன்ற மகா கவிகளின் இதயத்தை அறியக் காவிய முழுமையையும் ஒத்துப் பார்க்க வேண்டும். பால காண்டத்திற்கு பதில் யுத்தகாண்டத்திலிருப்பதைப் பார்க்கிறோம்.

'ராம ராவண யுத்தம், ராம ராவண யுத்தத்தைப் போன்றது' என்று வால்மீகி சொன்னபடி, 'கம்பன் உவமை கம்பன் உவமை போன்றது' என்று சொல்வதே பொருந்தும். கவிகளின் சிறப்பைப் பற்றிச் சொல்லும் கவிதையிலும்,

வெண்பாவில் புகழேந்தி விருத்தமெனும்
ஒண்பாவில் உயர் கம்பன்

எனக் கம்பனுக்கே உயர்வு கூறப்படுகிறது.

Koviloor Digital Library

மண்டோதரி புலம்பல் வாயிலாகச் சிறந்தஉவமைகளேயும் இலக்கியச் சிறப்பையும் காட்டுகிருன் கம்பன்.

மண்டோதரியின் கற்பு நிலேக்குப் பெரும் முத்திரையும் வைக்கிருன் இறுதியில்.

என்று அழைத்தனள் ஏங்கி எழுந்து அவன்
பொன்றழைத்த பொருவரு மார்பினைத்
தன் தழைக் கைகளால் தழுவித் தனி
நின்று அழைத்து உயிர்த்தாள் உயிர் நீங்கினுள்.

என்று இவ்வாருகப் பலபடி புலம்பிய மண்டோதரி ஏங்கி எழுந்து பொன் அணிகலம் தழைந்து கிடந்த இராவண னுடைய மார்பைத் தன் தளிர்க்கரங்களால் தழுவித் தனித்து நின்று உரக்கக் கூவிப் பெருமூச்சு விட்டாள். அத்துடன் அவள் மூச்சும் நின்றது. மரணமடைந்து அவன் மார்பிலேயே விழுந்தாள். மண்ணில் அவனேத் தொடர்ந்த மண்டோதரி விண்ணுக்கும் தொடர்ந்து சென்ருள்.

சீதையைப் பற்றி வால்மீகி சொல்லுகையில்...

''சாயவே அனுகதா சதா''

''இராம! இந்த சீதை எப்பொழுதும் நிழல் உடலேத் தொடருவது போல் தொடர்வாள்'' என்று ஜனகன் கூறினுன். அந்த உவமை கற்புக்கரசியான மண்டோதரிக்கும் பொருந் தியது.

39. உலகத் தாய்

மண்ணில் வாழ்ந்தபோது கணவனேத் தவிர வேறு யாரையும் மனத்திஞல்கூட நினையாதவளான மண்டோதரி, இராவணன் இறந்ததும் தானும் மாண்டு அவனே விண்ணுக் கும் தொடர்ந்தாள் என்பது கம்ப காவியம். வால்மீகியில்

Koviloor Digital Library

இது காணப்படவில்லை. மண்டோதரி இராவணன் மேல் மூர்ச்சித்து விழுந்து விட்டதாகவும், பிறகு ராமனது ஆக்ஞை யின்மேல் மற்ற இராவண பத்தினிகளுடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டாளென்றும்தான் வால்மீகி காவியம் கூறுகிறது. மண்டோதரியின் கற்பின் உச்சியைக் காட்டவே கம்பன் இப்படி மாறுபடுகிறான். அதற்குப் பிறகு, இராமன் கட்டளைப்படி விபீஷணன் அண்ணனுக்கு அக்னிமூட்டி ஈமக் கடன்களைச் செய்கிறான். இதற்குப்பின் கம்பராமாயணம் வால்மீகியைத் தழுவியே செல்கிறது.

இராவண வதம் ஆனதும், விபீஷணனுக்கு மகுடா பிஷேகம் செய்ய இராமபிரான் லட்சுமணனை ஏவுகிறான், சீதைக்குத் தனது வெற்றியை அறிவிக்க அனுமனை ஏவுகிறான். சீதையை அலங்காரம் செய்து அனுப்பும்படி விபீஷணனுக்கு உத்தரவிடுகிறான். அந்தந்தப் பணிகளைச் செய்ய அவரவர் விரைகிறார்கள்.

அனுமான் மிகுந்த களிப்புடன் சீதாப் பிராட்டியின்முன் சென்று வெற்றிச் செய்தியை குதித்து ஆடிப்பாடிக் கூறினான். களியாட்டம் ஆடினான். சோபனமும் பாடினான்.

ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழியான அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம்

"ஏழை-மகளிர்க்குடைய பேதைமை உடையவளே சோபனம்; ஏந்திழை சோபனம்-தரித்த ஆபரணங்களை உடைய வளே சோபனம்; மங்கல சோபனம்-மிக்க மங்களம்; ஆழியான அரக்கனை-தீய குணங்களின் எல்லையான இராவணனை, ஆரியச் சூழி யானை-பட்டம் கட்டப்பட்ட முகத்தை உடைய இராம னை யானை, துகைத்தது சோபனம் துகைத்துவிட்டது, உனக்கு மங்கள முண்டாகட்டும்" என்று அனுமான் குதூகலித் துக் கூறினான்.

Koviloor Digital Library

இந்தச் செய்தியைக் கேட்ட உடனே பிராட்டி உடல் பூரித்தாள். அவள் அகத்தே தோன்றிய மகிழ்ச்சியால் ராகு கேதுக்களால் பற்றப்பட்டு பிறகு வெளிவந்த சந்திரன் போலானுள்.

ஆம்பல் வாயும் முகமும் மலர்ந்திடத்
தேம்பு நுண்ணிடை தேயத் திரண்முலே
ஏம்பல் ஆசைக்கு இரட்டி வந்து எய்திஞள்
பாம்புகான்றப் பணிமதிப் பான்மையாள்.

பாம்பு கான்றப் பணிமதிப் பான்மையாள்-இராகு கேதுக் களென்ற பாம்புகளால் விழுங்கப்பட்டு பிறகு மிகுந்த ஒளி யுடன் வெளிவரும் சந்திரனையொத்த சீதாப் பிராட்டி, ஆம்பல் வாயும் முகமும் மலர்ந்திட-ஆம்பல் மலரையொத்த வாயும் முகமும் மகிழ்ச்சியால் விகசித்திட, திரண் முலே-அந்த மகிழ்ச் சியால் அவள் முலேகள் இரண்டும், இரட்டி வந்து (இரட்டிப் பாகப் பருத்து), (அதன் விளேவாக) தேம்பு நுண்ணிடை தேய-ஏற்கனவே சிறுத்த இடை இன்னும் அதிகமாகத் தேய்ந்து விடச் சிறந்து விளங்கிஞள்.

இப்படி களிப்பேறிய காரணத்தால், பிராட்டி ஏதும் சொல்லமாட்டாமல் மௌனமாக நின்ருள். மிதமிஞ்சிய மகிழ்ச்சி அவள் மலர் உதடுகளேக் கட்டிவிட்டது. அந்த நிலேயி லிருந்த பிராட்டியைப் பார்த்து, "ஏன் ஒன்றும் சொல்ல வில்லே?" என்று அனுமன் கேட்க, பிராட்டி சொல்லுவாள்:

மேக்கு நீங்கிட வெள்ள உவகையால்
ஏக்கமுற்று ஒன்று இயம்புவது யாதென
நோக்கி நோக்கி அரிதென நொந்துளேன்
பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ?

"அப்பா அனுமானே! இதற்குமேல் ஒன்று கிடையாது எனத்தக்க வெள்ளமான உவகையால், ஏக்கமுற்று (திகைப் படைந்து), என்ன சொல்வது யாது சொல்வது என நோக்கி

Koviloor Digital Library

நோக்கிப் பார்க்கிறேன். இதற்குப் பதில் சொல்வது அரிது என நொந்திருக்கிறேன். அனுமானே! ஒருவர்க்கு பாக்கியம் நேர்ந்தால் அது பைத்தியம் பிடிக்கவும் வைக்குமோ?'' என்று பிராட்டி பதில் பகன்றாள்.

மேலும் பிராட்டி கூறினாள்: ''ஆஞ்சநேயா! நீ செய்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்று தெரியவில்லை எனக்கு. மூன்று உலகங்களையும் கொடுக்கலாமென்றாலோ அவை நிலையில்லாதவை; அழியுந் தன்மை வாய்ந்தவை. ஆகையால் உன்னை என் தலையால் வணங்குதலே தகுதியாம்'' என்று.

இந்தப் பாட்டில் கம்பன் பிராட்டியின் ஏற்றத்தையும் சொல்கிறான்: பக்தன் ஏற்றத்தையும் சொல்கிறான். ''மூன்று உலகங்களையும் கொடுக்கலாமென்றால் அவை அழியும் தன்மையுள்ளவை'' என்பதால் மூன்று உலகங்களையும் தரத்தக்க வல்லமை பிராட்டிக்கு உண்டு என்பதோடு, அவற்றின் அழியும் தன்மையையும் பிராட்டியின் அழியாத் தன்மையையும் கம்பன் எடுத்துக் காட்டுகிறான். அது மட்டுமல்ல, ''உனக்குத் தலைவணங்குதலே கைம்மாறு'' என்பதால், பக்தனிடம் பிராட்டிக்குள்ள மகத்தான பரிவும் பக்தன் உயர்வும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஜகன்மாதா இப்படி உரைத்ததால் குன்றிப்போன அனுமான், பிராட்டியை வதைத்த அரக்கிகளை வதைக்க பிராட்டியினிடம் அனுமதி கேட்டான், ''தாயே! நல்ல இரத்தினம் போல் களங்கமற்று விளங்கும் திரிசடையைத்தவிர மற்ற அரக்கிகளை வதைக்க அனுமதி கொடுங்கள்'' என்று வேண்டினான். இது கேட்ட அரக்கியர் சீதையைச் சரணடைய, சீதை ''பெற்ற தாய்போல் என்னிடம் பாசமுடைய அனுமானே! யான் செய்த தீவினையால் இத்துன்பம் எனக்கு நேர்ந்தது. இதற்குக் காரணமான கூனியைவிட இவர்கள் கொடியவர்களல்லரே! ஆகவே கடந்து போன இவர்கள் செயலை நீ பாராட்ட வேண்டாம்'' என்றனள்.

Koviloor Digital Library

அதற்கு அனுமான் இசையவே, இராமன் கட்டளைப்படி பிராட்டியை அழைத்துச் செல்ல விபீஷணன் அங்கு வந்தான். பிராட்டியை வணங்கினான். "தாயே! தாங்கள் அலங்கரித்துக் கொண்டு இராமன் பக்கல் வரவேண்டும்" என்று விண்ணப் பித்துக்கொண்டான்.

"அலங்காரமின்றி நான் இப்படியே வருதல்தான் தகுதி" என்றாள் பிராட்டி. 'ஆனால் இராமன் கட்டளை அலங்கரித்துக் கொண்டு வரவேண்டுமென்பது' எனக் கூறினான் விபீஷணன். பிராட்டியை அலங்கரிக்கத் தேவ மாதர்களை ஏவினான்.

தேவ மாதர்கள் பிராட்டியின் நீராட்டத்திற்கான வாசனைப் பண்டங்களைக் கொண்டு வந்தார்கள்.

காணியைப் பெண்மைக் கெல்லாம்
கற்பினுக்கு அணியைப் பொற்பின்
ஆணியை அமிழ்தின் வந்த
அமிழ்தினை அறத்தின் தாயை
சேணுயர் மறையை யெல்லாம்
முறை செய்த செல்வனென்ன
வேணியை அரம்பை மெல்ல
வரன்முறை சுகிர்ந்து விட்டாள்.

பிராட்டியின் குழலை அரம்பை வாரிச் சிக்கெடுத்துச் சீர் செய்ததைக் கம்பன் வர்ணிக்கிறான் இப்பாட்டில்.

பெண் இலக்கணங்களுக்கெல்லாம் விளைநிலமானவளும், கற்புக்கு ஆபரணம் போன்றவளும், மாற்று மதிப்பரிய உரைக் கப்படும் பசும்பொன் போன்றவளும், திருப்பாற்கடலில் அமிழ் தம் தோன்றியபோது உடனே தோன்றியவளுமான பிராட்டி யின் தலைச்சடையை அரம்பையெனும் தேவமாது, மிகச் சிறந்த வேதம் முழுவதையும் ஒழுங்குபடுத்தும் திருமாலைப்

Koviloor Digital Library

போல, ஒழுங்காகச் சிக்கெடுத்து வகைப்படுத்தி வாரி விட்டாள்.

மற்றும் சில தேவமாதர் சீதைக்குப் பல் விளக்கி நீராட்டினார்கள். மற்றும் சிலர் கலவைச்சாந்து பூசிக் குங்குமம் அப்பினார்கள். பட்டாடை அணிவித்து மேகலை பூட்டினார்கள். ஆபரணங்களைப் பூட்டி எடுத்து திருஷ்டி கழித்தார்கள்.

இப்படிச் சர்வாலங்கார பூஷிதையான பிராட்டியை விமானத்திலேற்றி விபீஷணன் இராம சந்நிதானத்துக்கு அழைத்து வந்தான். அப்படி வந்த சீதை இராமனைக் கண்ணுற்றாள்.

எச்சில் என் உடல் உயிர் ஏகிற்றே-இனி
நச்சிலை என்பதோர் நவையிலாள் எதிர்
பச்சிலை வண்ணமும் பவள வாயுமாய்க்
கச்சிலை ஏந்தி நின்றதனைக் கண்ணுற்றாள்.

“இந்த என் உடல் இராவணக் கிரகத்திலிருந்ததால் எச்சில் போல் அசுத்தமுடையது. என்உயிரே போன மாதிரிதான்' என்று, நவையிலாள் (குற்றமொன்று மில்லாத பிராட்டி), நச்சிலை (இனி எனக்கு ஆசை ஏதுமில்லை) என்று நினைத்தாள். இந்த நினைப்புடன் பச்சை இலை போன்ற நிறத்துடனும், பவளம் போன்ற வாயுடனும், சிலையேந்திய கையுடனும் நின்ற இராமபிரானைக் கண்ணுற்றாள். அப்படி நின்ற கணவனைத் தொழுது வணங்கினாள்.

கற்பின் தலைவியும், நாணம் முதலிய பெண்மைக் குணங்களுக்கு பாதுகாவலாக உள்ளவளும், அழகுக்கும் அழகு செய்பவளுமான பிராட்டியை இராமனும் நோக்கினான்.

வணங்கிய மயிலினைக் கற்பின் வாழ்வினை
பணங்கிளர் அரவென்று எழுந்து பார்ப்புரு

Koviloor Digital Library

வணங்கிய அந்தப் பிராட்டியை, மயிலை நோக்கிச் சீறும் படமெடுத்த பாம்பு போல ஸ்ரீராமன் சீற்றத்துடன் பார்த்தான். பிறகு, கடிந்து பல கூறவும் முற்பட்டான்.

"இராவணக் கிரகத்தில் பல நாள் அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்திருந்தாய். அவனுக்கு அடங்கி இருந்தாய். இருப்பினும் அச்சமின்றி என் முன்வந்து நிற்கிறாய். இத்தகைய உன்னை நான் விரும்புவேனென்று எதிர்பார்க்கிறாயா? உன்னை மீட்பதற்காக நான் கடலில் அணைகட்டி அரக்கரை வேரோடு அழியச் செய்தேனில்லை. 'மனையாளைக் கவர்ந்து சென்றவனைக் கொல்லத் திறனில்லாதவன்' என்ற பழியினின்று மீளவே பகை வென்றேன்" என்றான் இராமன். "என்னிடம் அன்பு நீங்கியவளே! பெரிய மாமிசங்களை அமிருதத்தினின்றும் பெரிதாகமதித்துப் புசித்தனையே! மதுவைக் குடித்தனையே! இனி எனக்குத் தகுதியோ நீ?" என்றும் வினவினான்.

இப்படி இராமன் கூறிய கடுஞ்சொற்களைக் கேட்டுப் பலரும் கலங்கினர். சீதாபிராட்டியோ அக் கொடிய சொற்களைக் கேட்டதும்,

புண்ணினைக் கோல் உறுத்தனைய பொம்மலால்
உண்ணினைப் போவி நின்று உயிர்ப்பு நீங்கினாள்

புண்களைக் கோல் கொண்டு கிளறினாற் போன்ற பெரும் துன்பத்தால், இரண்டு கண்களினின்றும் இரத்தமும் நீரும் மிகுதியாகச் சிந்தப் பிரக்ஞை தவறி நின்றாள். பிறகு சில சொன்னாள்:

"வரையாது அருளும் தன்மையுள்ள பிரபுவே! மாருதி இலங்கை வந்து, "நான் இராமதூதன்; உன்னைச் சிறை மீட்க இராமன் வருவான்" என்று தேறுதல் சொல்லிப் போனானே. அவன் உனக்கு நானிருந்த நிலையை சரியாகச் சொல்லவில்லையா? தூது லட்சணம் தவறிவிட்டானா?" என்று கூறி, இலக்குவனை நோக்கி, அக்கினிப்பிரவேசம் செய்யச் சிதை மூட்டச்

Koviloor Digital Library

சொன்னுள். இலக்குவன் தீ முட்டிட சீதை அதை அணுகினுள். அதைக் கண்டு உலகங்கள் தடுமாறின. தருமமும் அனைத்து உயிர்களும் வாயைத் திறந்து கதறின.

சீதை அக்னியை நோக்கி

கனத்தினுல் கடந்த பூண் முலையகைவளே
மனத்தினுல் வாக்கினுல் மறுவுற்றேன் எனின்
சினத்தினுல் சுடுதியால் தீச்செல்வா என்ருள்
புனத்துழாய் கணவற்கும் வணக்கம்போக்கினுள்

"தீச் செல்வா - அக்னிபகவானே! நான் மனம் மொழி மெய் (மனேவாக்கு காயம்) ஆகியவற்ருல் மாசு பட்டேனென்ருல் என்னைச் சுடுவாயாக" என்ருள். பெருமையினுல் மிக்குள்ளவையும் பூண் அணிந்தவையுமான தனங்களே உடைய சீதாப் பிராட்டி இப்படிச் சொல்லி புனத்துழாய் மலேயை உடையவனுன மகாவிஷ்ணுவின் திருவவதாரமான கணவனேயும் நமஸ் கரித்தாள்."

பிறகு தீயில் இறங்கினுள். அவள் கற்புத் தீயினுல் அனற்கடவுள் வெந்து துன்பத்திற்குள்ளானுன். அப்படிக் தவிப்படைந்த அக்னிதேவன் சீதாப்பிராட்டியைக் கையிலேந்திக் கொண்டு இராமபிரானே நோக்கி அபயம் வேண்டிக் கதறிக் கொண்டே எழுந்தான். அக்னிப் பரீட்சையில் தேறியவளும், திக்குளித்ததால் மேனி சிறிதும் வாடாதவளுமான பிராட்டியை இராமபிரான் ஏற்ருன். தேவர்கள் மகிழ்ந்தனர். பிரமன் இராமனுக்கு அவன் யார் என்பதை எடுத்துச் சொன்னுன். "நீதான் நாராயணன்" எனப் பிரும்மா சொல்லியும் இராமன் தனது அவதார ரகசியத்தை விடாமல், "நான் என்னே மனிதனென்றே எண்ணுகிறேன்" என்ருன்.

"ஆத்மானம் மானுஷம்மன்யே" என்பது வால்மீகி வாக்கியம்.

Koviloor Digital Library

அப்பொழுது தசரதன் பூமியில் வர, அவனை இராமன் வணங்கினான். தசரதன் இராமனை மார்புறத் தழுவி, ''ராமா! அன்று கேகயன் மகள் என் மார்பில் பாய்ச்சிய வேல் நான் இறந்த பின்பும் மார்பை விட்டு அகலவில்லை. இன்று உன் மார்பை அணைத்த பின்பே அகன்றது'' என்று கூறி, அப்பொழுதும் புத்ர வாத்சல்யத்தைக் காட்டினான்.

சீதையும் தசரதனை வணங்கினாள். ''அம்மா! உன் கற்பு நிலையை உலகுக்குக் காட்டவே இராமன் உன்னை அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்னான். உன்மீது சந்தேகத்தால் சொல்லவில்லை. ஆகையால் அவன்மீது கோபிக்காதே'' என்று கேட்டுக் கொண்டான் தசரதன். இலக்குவனையும் தசரதன் தழுவினான். பிறகு இராமனை, ''உனக்கு வேண்டிய வரம் கேள்'' என்றான். ''தந்தையே! தீயவள் என்று நீ கை விட்டவளும் எனக்கு தெய்வம் போன்றவளுமான கைகேயியையும், பரதனையும் எனக்குத் தாயும் தம்பியுமாக வரம் தர வேண்டும்'' என்று கேட்டான். அப்படியே வரம் தந்து, தசரதன் தேவர்களுடன் செல்ல, இராமபிரான் புட்பக விமானமேறி, விபீஷண சுக்ரீவர்களுடன் அயோத்திக்கு விரைந்தான்.

விமானம் வானவெளியில் ஊர்ந்தபோது கீழே பூமியில் தங்கள் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட பலஇடங்களை இராமன் சீதைக்குக் காட்டிச் சொன்னான். கிஷ்கிந்தையைக் காட்டிய போது சீதையின் விருப்பப்படி வானர மகளிரையும் அழைத்துச் சென்றான்.

கைகயன் தனயை முந்தக்
காலுறப் பணிந்துமற்றை
மொய்குழல் இருவர்தாளும்
முறைமையின் வணங்கும் செங்கண்
ஐயனை அவர்கள் தாமும்
அன்புறத் தழுவித் தத்தம்

Koviloor Digital Library

செய்யதா மரைக் கண்ணீரால்
மஞ்சனத் தொழிலும் செய்தார்

பரத்வாஜர் ஆசிரமத்தில் இறங்கி, அவரால் உபசரிக்கப் பட்டு, பரதனுக்கு அனுமான் மூலம் செய்தி அனுப்பி, அவன் அக்கினிப் பிரவேசத்தை நிறுத்தி, அவனுடனும் மற்ருேருட னும் அயோத்திக்கு வந்தான். வந்ததும்...

இராமன் இத்தனை பெருமையைத் தனக்குத்தந்த, கைகே யன் தனயை முந்தக் காலுறப் பணிந்தான் (கைகேயியின் தாளை முதலில் விழுந்து பணிந்தான்). பிறகு மற்ற இரு தாய் மார்கள் கால்களிலும் விழுந்து பணிந்தான். அவர்களும் சிவந்த கண்களையுடைய இராமனை அழுந்தத் தழுவி, தங்கள் மலர்க்கண்களின் நீரால் மஞ்சன நீராட்டுதலையும் செய் தார்கள்.

இதற்குப் பிறகு, அயோத்தி மாநகரம் அலங்கரிக்கப்பட்டு, பட்டாபிஷேக ஏற்பாடுகள் பிருமாண்டமாக நடந்தன. பிரும் மாவின் கட்டளையால் மயன் மகுடாபிஷேக மண்டபம் அமைத் தான். அனுமான் நாற்கடல் நீர் கொணர்ந்தான்.

இராமபிரான் சீதையோடு பளிங்கு மாடத்திட்டப் பீடத் தில் விளங்கினன். தேவர்கள் எம்பிரானுக்கு அபிஷேகம் நடத்தினர்கள். முனிவரும் சுக்ரீவாதியரும் அபிஷேகம் செய் தார்கள். வசிஷ்டன் திருமுடி சூட்டினன்.

அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் பற்ற
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி கமலத்தாள் சேர்
வெண்ணெய்மன் சடையன்தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி

Koviloor Digital Library

அரியணை அனுமன் தாங்க- சிங்காதனத்தை அனுமான் தாங்கவும், அங்கதன் உடைவாள் பற்ற-வாலி குமாரனுன அங்கதன் உடைவாள் ஏந்தி நிற்கவும், பரதன் வெண்குடை கவிக்க - பரதன் வெண்கொற்றக் குடை பிடிக்கவும், இருவரும் கவரிவீச - லட்சுமண சத்ருக்கனர்கள் கவரி வீசவும், விரை செறி கமலத்தாள் சேர்-வாசனை பொருந்திய தாமரை மலரில் வசிப்பவளான லட்சுமி சேர்ந்திருக்கப்பெற்ற, வெண்ணெய் மன் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க - திரு வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் முன்னோர் கொடுக்க, வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி-கிரீடத்தை வாங்கி வசிஷ்ட முனிவனே சூட்டினுன்.

இப்படி இராம பட்டாபிஷேகத்தில் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலிடம் தனது நன்றியையும் கம்பன் காட்டுகிருன்.

இந்தப் பட்டாபிஷேகப் பாட்டில், "அரியணை அனுமன் தாங்க" என்று இருப்பது பற்றி ஆட்சேபணை சிலரால் கிளப்பப்படுகிறது. "அடியணை அனுமன் தாங்க" என்றிருக்க வேண்டும். இராமபிரான் திருவடியில் வைக்கப்பட்ட அணையை இரு கைகளாலும் அனுமான் தாங்கினுன் என்பதே பொருந்தும்" என்று சிலர் பாடபேதம் சொல்கிருர்கள். சிங்காதனத்தை அனுமான் தூக்கிக் கொண்டா இருந்தான் என்றும் கேட்கப்படுகிறது.

அதல்ல பொருள். இராம லட்சுமணர்களைப் போரில் தன் தோள்கள்மீது தூக்கிக் கொண்டான் அனுமான். சுந்தர காண்டத்தில் பிராட்டியைத் தன் தோளில் தூக்கிக் கொண்டு இராமனிடம் சேர்ப்பிக்க அனுமதி கேட்டான். சீதை மறுத்து விடவே, பிராட்டியையும் பெருமாளையும் சேர்த்து வகிக்க ஆவலுற்ற அனுமன் சமயம் பார்த்திருந்தான். பிராட்டியின் புருஷாகாரம் இல்லாவிட்டால் பெருமாள் அனுக்கிரகம் கிட்டாது என்பது வைஷ்ணவ சம்பிரதாயம். அதை அடையப் பெருமாளும் பிராட்டியும் சேர்ந்து அமர்ந்திருந்த அரியணையில்

Koviloor Digital Library

தன் தோளைக்கொடுத்து அனுமன் தாங்கினான். இதனால் அவனுக்குப் பிராட்டியின் கடாட்சமும் தாஸத்துவமும் நிலைத்தது.

உலகத் தாய் அவனைக் கருணைக் கண்களால் நோக்கினாள். அந்தக் கண்கள் இந்தக் கட்டுரைத் தொடரைப் படிக்கும் உங்களையும் நோக்கட்டும். உங்கள் வாழ்வும் சிறக்கட்டும். உங்கள் இல்லங்களில் லட்சுமி தாண்டவமாடட்டும். மகிழ்ச்சி பொங்கட்டும். வாழ்க கம்பன்! வாழ்க நற்றமிழ்!



(முற்றும்)